

புஷ்பாதங்கதுரை

மனத்தை உருக்கும் விதத்தில் ஏராளமான சிறுகதைகளும், நாவல்களும் எழுதி வரும் புஷ்பா தங்கதுரை, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பட்டதாரி. இவரது முதல் கதை 1949-ல் தினமணிகதிரில் பிரசுரமாகியது. அது முதல் இருபத்தெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருகிறார் இவர்.


இவரது தொன்மை வாய்ந்த நாடகமான அமைச்சர் மதுரகவி யைப் புகழ்பெற்ற டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்திருக்கிறார்கள். இவருடைய பல கதைகள் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இவருடைய "ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது", "நந்தா என் நிலா" ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வந்துள்ளன.


பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 5267543


ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது
புஷ்பாதங்கதுரை

புஷ்பாதங்கதுரை



# ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது

# ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது

புஷ்பா தங்கதுரை

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 5267543

36391
5384216

விலை ரூ. 55.00

பூம்புகார் வெளியீட்டு எண் : 013
முதற் பதிப்பு : ஜூன், 1976
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1976
மூன்றாம் பதிப்பு : ஜூன், 1983
நான்காம் பதிப்பு : ஏப்ரல், 2002
உரிமை : ஆசிரியருக்கு
P.C. : 9810T212

அச்சிட்டோர் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

## பூம்புகார் பதிப்பகம் பற்றி ஒரு சில வாக்கியங்கள். . .

தமிழ் மக்களின் அன்பால் அரவணைப்பால் வளர்ந்து வரும் எங்கள் பூம்புகார் பதிப்பகம் கால் நூற்றாண்டைத் தாண்டி கன்னித் தமிழ் வளர்ச்சிக்குத் தனது எளிய பங்கை இனிதே வழங்கி வருகிறது.

1975ஆம் ஆண்டு தோற்றம் கண்ட பூம்புகார் பதிப்பகம் 'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலை முதல் வெளியீடாக்கித் தனது வரலாற்றைத் தொடங்கியது.

முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் திருமிகு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் கரங்களால் வெளியிடப் பட்டு டாக்டர் சிவாஜிகணேசன், கவிஞர் கண்ணதாசன், தமிழ்வாணன் ஆகியோரால் பெற்றுக்கொள்ளப்பட்ட 'காமராஜ் ஒரு சரித்திரம்' பூம்புகாரின் முதல் வெளியீட்டு விழாவாகும்.

புகழ்மிக்க அம் மனித மாமணி பற்றிய ஓர் நூல் பத்துப் பதிப்புகள் கண்டது; ஐம்பதாயிரம் படிகளை விற்பனையில் தாண்டியது என்பது சாதனை நாயகருக்கும் பெருமை, எங்களுக்கும் பெருமை. வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறி வகுத்த வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் நூலுக்கு எங்கள் பதிப்பக புதிய உரை இப்போது பதினோராவது பதிப்பு வெளிவந்துள்ளது. ஒரு இலட்சத்துப் பதினோராயிரம் படிகள் தமிழ் மக்கள் கரங்களுக்குச் சென்று சேர்ந்துள்ளன.

தரத்தில் சிறந்த எங்கள் வெளியீடுகளில் பல, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசுகளைப் பெற்றுள்ளன.

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்து வேந்தர்களின் படைப்புக்களை வெளியிடும் பெரும் பேறு பெற்றிருக்கிறது எங்கள் பூம்புகார்.

மகாகவி பாரதி, திரு. வி. க., பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கல்கி, நாமக்கல் கவிஞர், க. திரவியம், கலைஞர் மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், டாக்டர். கா. காளிமுத்து, ஏ. பத்மநாபன், ஈரோடு தமிழன்பன், பொன். பரமகுரு, சௌந்தரா கைலாசம், கவிஞர் இ. முத்துராமலிங்கம், சொ. பொ. சொக்கலிங்கம், ஸ்ரீ வேணுகோபால், பட்டுக்கோட்டை பிரபாகர், அனுராதா ரமணன், ராஜேஷ்குமார் என்று நீளும் பட்டியலில் பெருமைக்குரிய எழுத்தாளர்களின் பெயர் களால் பூம்புகார் பதிப்பகம் பளிச்சிட்டு மின்னுகிறது.

கவிதை, நாவல், சிறுகதை, தத்துவம், ஆன்மீகம், அறிவியல், நுண்கலை எனத் துறைதோறும் பயனளிக்கிற, பண்பை வளர்க்கிற, படிப்பவர் சுவையுணர்வைப் பேணுகிற படைப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வள்ளுவப் பெருந்தகை வரையிறுத்துக் கூறும் **'இலங்கு நூல்! நவில்தொறும் நயம் பயக்கும் நூல் – நுண்ணிய நூல்'** என்பன எங்கள் இதய தாகமாகவும், இலட்சிய வெறியாகவும் உள்ளன.

அவ்வப்போது வாசகப் பெருமக்களைத் திரளாகக் காணும் வகையிலும் – படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையிலும் பூம்புகார் பதிப்பகம் வெளியீட்டு விழாக் களைத் தனது குடும்ப நிகழ்ச்சிபோல் குதூகலத்துடன் கொண்டாடி வருகிறது.



பேரறிஞர் அண்ணாவின் சீரிய எழுத்துச் செல்வம் இதுவரை பதின்மூன்று பெரும் தொகுதிகளாக எங்கள் பூம்புகார் வாயிலாக வெளிவந்துள்ளது.

பூம்புகார் பதிப்பகத்து நூல்கள் அச்சுக் கலையின் உச்சத்தை முத்தமிட்டு ஒளிர்வன. கட்டமைப்புக்கும், கண்கவர் கலை நேர்த்திக்கும் கட்டியங்கூறி மிளிர்வன. கண்களில் பட்டாலும், கைகளில் தொட்டாலும், தாங்கள் பொலிவுமிக்க பூம்புகார்ச் செல்வங்கள் என்பதைத் தவறாமல் சொல்லவல்லன. கவனத்தை வெல்லவல்லன.

தமிழகத்தில் பதிப்புத்துறையில் தனக்கென ஒரு தடம் போட்டு, புடம்போட்ட தங்கமாய் விளங்கிவரும் எங்கள் பூம்புகார் பதிப்பகத்தின் 013-வது வெளியீடாக புஷ்பா தங்கதுரை அவர்கள் எழுதிய புகழ்மிக்க நாவலான ஒரு **ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது** – என்ற புத்தகத்தை நான்காம் பதிப்பாக வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

– பூம்புகார் பதிப்பகத்தார்

## பதிப்புரை

"ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது" தினமணிகதிரில் தொடர்ச்சியாக வந்த-புதுமை எழுத்தாளர் புஷ்பா தங்கதுரை எழுதிய நாவலாகும்.

லட்சியக் காதலுக்காகவே லட்சிய வாழ்வு வாழ்ந்த ஒரு இளைஞனின் சோக காவியம் இந்நாவல்.

உணர்ச்சிச் சூழலில் சிக்கித் தவிக்கும் இரு உள்ளங்களை, உணர்ச்சி ததும்ப புதுமை வேகத்துடன் சித்தரித்திருக்கிறார் புஷ்பா தங்கதுரை. இப்புதினத்தைப் படிப்பவர்கள் அந்த இரு உள்ளங்களின் சோக கீதத்தைக் கேட்பார்கள். வாழ்க்கையில் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்து, படக்கூடாத துன்பங்களை எல்லாம் பட்டுத், தன் வாழ்வையே காதலுக்காகப் பயணம் வைத்த கதாநாயகன் நரேனுக்காகக் 'காதல் தெய்வம்' என்று ஒரு தெய்வமிருந்தால், அத்தெய்வமே கண்ணீர் வடிக்கும்.

– பூம்புகார் பதிப்பகத்தார்

## முன்னுரை

இந்தக் கதையின் தலைப்பைத் திடீர் என்று தாமே அறிவித்துவிட்டு என்னை உடனே கதை எழுதச் சொன்னவர் தினமணி கதிர் ஆசிரியர் திரு. சாவிதான். இது போன்ற திடீர் அறிவிப்பினைக் கொடுத்துவிட்டு, என்னைச் சிறிது திண்டாட வைப்பது அவர் வழக்கம்.

ஆனால், இந்தத் திண்டாட்டம் எல்லாம் முடிவில் எனக்கே நன்மையில் முடிவதுண்டு. அதைப் பலமுறை அனுபவத்தில் கண்டவன் நான்.

இந்தக் கதைக்கும் ஆரம்பத்தில் திண்டாடினேன். கதைக்கருவே அகப்படவில்லை. இவ்வளவுக்கும் முதல் அத்தியாயம் எழுதிக் கொடுக்க இரண்டு நாட்கள்தான் பாக்கி! எதை எழுதுவேன்?

யோசித்தேன். திடீரென்று ஒரு நினைவு வந்தது. சிறைச்சாலைக் கைதிகளை நேரில் பார்க்கச் சென்றிருந்த போது சிறையிலுள்ள அதிகாரி ஒருவர் என்னிடம் ஒரு கைதியின் கதையைக் கூறியிருந்தார். அந்தக் கதை என்னை மிகவும் கவர்ந்தது. அதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒரு நாவலாக இதைப் பின்னர் எழுதலாம் என்று நினைத்திருந்தேன். அதையே இப்போது எழுதலாம் என்று தீர்மானித்தேன்.

எழுதத் தொடங்கினேன். இருபத்தைந்து வாரங்களாகக் கதிரில் எழுதி முடித்தேன். அப்படி முடிக்கும் போது ரசிகர்கள் மனங்களை அது பெரிதும் கவர்ந்து

திருப்தி அளித்தது. இந்தக் கதை திரைப்படமாகவும் வந்து தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்தக் கதையின் வெற்றியை நினைக்கும்போது எனக்கு மீண்டும் திரு. சாவியை நினைவு கூறாமல் இருக்க முடியாது. கதையை ஆரம்பித்து வைத்ததுமின்றி வாராவாரம் வேறு உற்சாகப்படுத்திக்கொண்டே வந்தார் அவர். ஒருவரிடம் திறன் ஒரு சிறு பொறியாக இருந்தால் அதை மிகுதியாக வளர்க்கும் தனித்திறமை வாய்ந்தவர் திரு. 'சாவி'. அவரிடம் உள்ள அந்த அரிய பண்பாட்டினால் நான் பெரிதும் பயன் அடைந்திருக்கிறேன். எனவே அவருக்கு என் இதயங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாவலை பூம்புகார் பிரசுரத்தார் வெளியிடுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்படுகிறது. உயர்ந்த லட்சியங்களோடு ஆரம்பித்திருக்கும் இந்த நிறுவனத்துடன் எனக்கு ஒரு புதுத்தொடர்பு தொடங்கியிருப்பதைப் பெரிதும் வரவேற்கிறேன். புத்தக வெளியீட்டுத் துறையில் ஒரு புது சகாப்தத்தை உருவாக்க ஒரு லட்சிய வேகத்தோடு முனைந்திருக்கும் பூம்புகார் பிரசுரத்தாருக்கு என் நன்றி.

புஷ்பா தங்கதுரை

# ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது

## 1

**ச**த்தியமாகச் சொல்கிறேன். ஐயா, இதோ ஆரம்பிக்கிறேனே, இந்த நேரத்தில் இந்த கதையின் கதாநாயகனும் தெரியாது. கதாநாயகியும் தெரியாது. (கவலை விட்டது போ.)

இந்த நீளத் தலைப்பை எடுத்துக் கொடுத்தது தங்கதுரைதான். எனக்கு இப்போதெல்லாம் நீளத் தலைப்புக்களை உடுத்திப் பழக்கமில்லை. என் மினித் தலைப்புகள் தோளோடு நின்று விடும். ஆகவே தலைப்பைப் பார்த்து பயந்து விட்டேன். எப்படி ஐயா கட்டிக்கொள்வது? எங்கேயாவது ஊதாப்பூ கண் சிமிட்டுமா? பூவுக்கு ஏது ஐயா கண்? இப்படி ஒரு தலைப்புக் கொடுப்பார்களா? என்னை திண்டாட வைப்பார்களா?

(மிஸ் தாம்ஸன், தயவு செய்து இதில் குறுக்கிடாதீங்க உங்களாலே என் பேர் கெட்டுப் போச்சு இது ஒரு சீரியஸ் ஸ்டோரி. இதிலே போய் விளையாடாதீங்க)

. . . . . . . .

நோ இட்ஸ் நாட் பாஸிபிள். இந்தக் கதையிலே யாரும் நீச்சல் குளத்திலே குளிக்க மாட்டாங்க. ஆமாம் ஏற்கனவே உங்களுக்கு வயசு அம்பது. இதிலே கதாநாயகியா வர்றதுக்கு சான்ஸ் இல்லை. ப்ளீஸ் லீவ் மி இன் பீஸ். . .

இஸிட் ரீடா? கமின் ப்ளீஸ்.

எக்ஸ்கியூஸ் மீ ரீடா. ஐ நோ யூ ஆர் கிளாமரஸ். அழகிப் போட்டியில் பங்கெடுத்ததும் தெரியும். ஆனா இந்தக் கதையை நான் ப்ளான் பண்ணற விதமே வேறே. அடுத்த தடவை பார்க்கலாமே? பெஸ்ட் ஆஃப் லக்.

ஓ. . ஸோனா. . . மை ஸைகடேலிக் கேர்ல்! எப்படி இங்கே வந்தாய்? பேராசிரியர் விஷ் சௌக்கியமா?. . . ஸாரி, ஸோனா.

இந்தக் கதை வேறே மாதிரி. யா, யா, உன்னை அப்புறம் பார்க்கிறேனே, பை, பை.)

விளம்பரத்தைப் பார்த்துக் கதாநாயகி சான்ஸுக்கு நிறையப் பேர் வந்துவிட்டார்கள். எனக்கு யாரையும் பிடிக்கவில்லை. மூலையில் போய் உட்கார்ந்தேன். மூளை மரத்துவிட்டது.

இப்படிப்பட்ட சமயத்தில்தான் என்னுடைய EPVPயை உபயோகிப்பது வழக்கம் (எலக்ட்ரானிக் ஸைகோவிஷனரி ப்ரொஜக்டர்) உலகத்தில் இந்த மிஷின் மொத்தம் இரண்டுதான் இருக்கிறது. அமெரிக்காவில் ப்ளேபாய் ஆபிஸில் ஃபிக்ஷன் பகுதி ஆசிரியராக இருக்கும் ரோபிமெகாலேயிடம் ஒன்று இருக்கிறது. மற்றொன்று என்னிடம்.

இந்த மிஷினைச் சரியான கோணத்தில் வைத்துத் திருகிவிட்டால் தூரத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் யார், யார் இருக்கிறார்கள் என்று பார்க்க முடியும். அவர்கள் பேசுவதைக் கேட்க முடியும். அவர்கள் நினைப்பதையும் அறிய முடியும். இந்த மிஷின் புழக்கத்துக்கு வந்தால் மனிதனது அந்தரங்கம் (ப்ரைவஸி) போய்விடும் என்று இதற்கு எதிராக ஒரு குழு அமெரிக்கக் கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருக்கிறது. (அது வேறு விஷயம்.)



EPVPயைத் திருகினேன் கர்கர் என்று சப்தம். எலெக்டிரிக் கார்டைச் சரி செய்தேன். பிரெயின் டிஸ்க் சுழலாமல் சிக்கிக் கொண்டிருந்தது. லூப்ரிகன்ட் ஊற்றிச் சரி செய்தேன். கொட கொட கொட, ப்ளாப் ப்ளாப் ப்ளாப்.

உதயமாகியது ஒரு காட்சி எங்கேயோ ஓர் இடத்தின் காட்சியை மிஷின் கிரகித்து இருந்தது. படம் அசைந்து கொண்டே இருப்பதைப் பார்த்து எக்ஸைட்டர் லாப்பைச் சரிசெய்தேன். படம் இன்னும் அசைந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒரு சந்தேகம். காட்சியில் தெரிவது ஓடும் ரயிலின் உட்புறமோ? அதனால்தான் அப்படி ஆடுகிறதோ? சவுண்டு சுவிட்சை அழுத்தி விட்டு வால்யூமை ஏற்றினேன்.

டடக் டடக்

டடக் டடக்

ரயிலேதான். இரண்டு பெஞ்சுகள் தெரிகின்றன. ஒரு வரிசையில் நாலு பேர். மற்றொன்றில் மூன்று பேர்.

மூன்று பேரில் ஒருத்தி பெண். இருபத்தைந்து வயதிருக்கும். தோற்றத்தில் அரிஸ்டோக்ராட் பாவனை. ஓ, மை. . . என்று ஆச்சரியத்தில் சொல்லிச் செருகுவதுபோல் கண்கள். கிக்கிக் என்று சிரித்துக்கொண்டிருந்தாள். சின்ன இடையும் வயிறும் குலுங்கிக் கொண்டிருந்தன.

- ஸோ, ஸ்வப்நா. ஸெப்டம்பரில் ஊட்டிக்குத் திரும்பி வரலாமா? அவளருகே உட்கார்ந்திருந்த 'டை' பேர்வழி கேட்டார். அவருக்கு ஐம்பது வயதிருக்கும்.

- ஷ்யூர்.

- அந்த ஸ்கவுண்டரலை அழைத்துக்கொண்டு வராதே.

- நோ. ஐ வோண்ட்.

- நமது விடுமுறையைக் கெடுத்து விட்டான்.

- ஆமாம்.

- சென்னையில் போய் வதந்தியைப் பரப்புவானோ?

- எனக்கென்ன பயம்?

- உனக்கில்லை, எனக்கு?

அவருடைய மனைவி அப்பளக் குழவியைத் தூக்கிக்கொண்டு அடிக்க வருவதுபோல் காட்சி! பல்லைக் கடித்துக்கொண்டு அதை எரிச்சலுடன் பார்த்தார்.

- அடுத்த தடவை முதல் வகுப்பை ரிஸர்வ் செய்து விட வேண்டும். இடம் கிடைக்காமல் மூன்றாவது வகுப்பில் போகக் கூடாது. (அவர்)

- எனக்கு இந்த வகுப்பு பிடிக்கிறது.

- ஏன்?

- இதில்தான் நிறையப் பேரோடு பிரயாணம் செய்ய முடிகிறது.

அவர் அதை ரசிக்கவில்லை. எதிர்ப்புற வரிசையைப் பார்த்தார். அந்த இளைஞனைப் பார்த்தார். அவன் சன்னலுக்கு வெளியே ஒரே பார்வையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனை லேசாக, மிக லேசாக - ரகசியமாக - மிக ரகசியமாக அவளது கண்கள் பார்ப்பதை அவர் கவனித்திருந்தார். அவரால் மட்டுந்தான் அதை உணர முடியும். இந்தத் தரித்திரங்களையெல்லாம் கவனிக்கிறாளே என்று நினைத்தார். ஆனால் மனத்தில் ஒரு சமாதானம். அந்த இளைஞன் உள்ளே திரும்பவேயில்லை. திரும்பினாலும் ஸ்வப்நாவைப் பார்க்கவே இல்லை. அங்குள்ள யாரையுமே அவன் பார்க்கவில்லை. ஒரே யோசனையோ? அல்லது பைத்தியமோ? பாண்ட்டும்



ஷர்ட்டும் பழசாகத் தெரிகின்றன. சாதாரணக் குடும்பமாக இருக்க வேண்டும். ஆனால் முகத்தில் நல்ல கவர்ச்சி. உதட்டிலும் கண்ணிலும் நல்ல இளமை!

ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அவன் இறங்கிக் கொண்டிருந்தான். பிளாட்பாரத்தில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். அப்போதுகூட யோசனையா அல்லது கனவா? ஸ்வப்நா அவனைக் கவனித்துக்கொண்டு வந்தாள். ஸ்டேஷன் வந்தால் 'டை' மனிதருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வாஷ் பேஷினை நோக்கிப் போவாள். கையைக் கழுவுவது போல் கழுவிவிட்டுக் கதவருகே வந்து பிளாட்பாரத்தைக் கவனிப்பாள். தூரத்தில் மனிதர்களிடையே அவன் அதே பார்வையுடன் நடந்து கொண்டிருப்பான். யாரிடமும் பேச மாட்டான். எதையும் உன்னிப்பாகப் பார்க்கவும் மாட்டான். ஒரு விஷயத்தை ஸ்வப்நா கவனித்தாள், காலையிலிருந்து அவன் எதுவும் சாப்பிட வில்லை. ஒரு டம்ளர் காப்பிகூட அருந்தவில்லை. ஆச்சரியமாக இருந்தது. கையில் பணம் இருக்கிறதோ, இல்லையோ! நாமே வாங்கிக் கொடுக்கலாம். இந்த 'டை' நம்மோடு வந்திராவிட்டால் சுதந்திரமாக. . . ரயில் ஒரு பெரிய பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. இளைஞன் எழுந்தான். அவர்களைத் தாண்டிச் சென்றான். இன்னும் சிறிது நேரத்தில் அவன் திரும்புவான் என்று அவள் நினைத்தாள் ஒரு யோசனை. வேண்டுமென்றே கால்களைக் குறுக்கே நீட்டினாள். வரும்போது - எக்ஸ்கியூஸ் மீ என்று வாய் திறந்து சொல்வானா பார்ப்போம் - அப்போது அவன் கண்களை நேரில் பார்க்கலாம். அவன் கண்களைப் பார்த்தால் ஓர் ஆஸ்ட்ரல் உலகத்தில் பறப்பதுபோல் இருக்கிறது. அப்படி ஒரு கலர் - ஒரு கவர்ச்சி.

- இந்தத் தடவை எங்கள் பிக்னிக்கில் நடந்தது என்ன தெரியுமா?. . .

அவன் 'டை' மனிதருடன் பேச ஆரம்பித்தாள். ஒரு கண் மாத்திரம் அவன் வரும் வழியைப் பார்த்துக் கொண்டே இருந்தது.

ஐந்து நிமிடங்கள் சென்றன. அவன் வருவது தெரிந்தது. அவள் தன் முகத்தை நன்றாகத் திருப்பி 'டை'யிடம் சுவராசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் அருகில் அவன் வந்ததும் நெஞ்சு படபடத்தது. எந்த நிமிடமும் அவனது - எக்ஸ்கியூஸ்மியை எதிர்பார்த்தாள். செகண்டுகள் ஓடின. என்ன நேர்ந்து விட்டது? அவன் எங்கே?

திரும்பிப் பார்த்தாள். அவன் மீண்டும் போய் விட்டான். அவளை தொந்தரவு செய்ய வேண்டாமென்று நினைத்தானோ?

ஒரு கணத்தில் அவள் மௌனமானாள். 'டை'க்காரர் இரண்டு தரம் பேசப்பார்த்தும் ஒரு வார்த்தையோடு அவள் நிறுத்திக் கொண்டாள். அவள் மனத்தில் ஓர் ஏக்கம் பொங்கி எழுந்தது. ஆத்திரமும் சேர்ந்தது. இதுவரை இப்படி ஓர் இளைஞன் அவளை உதாசீனம் செய்ததில்லை.

ஸ்டேஷன் வந்தது, வண்டி நின்றது. நீங்கள் இருங்கள் நான் போய் ஏதாவது வாங்கி வருகிறேன் என்று கூறிவிட்டு அவர் பதிலை எதிர் பாராமல் சட்டென்று அவள் எழுந்து போய்விட்டாள்.

அவனைத் தேடினாள், எங்கே நிற்கிறான் என்பதைக் காண அரை நிமிடம் பிடித்தது. ஒரு புக்-ஸ்டாலில் நின்று கொண்டிருந்தான். மெள்ளக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவன் அருகில் போய் நின்றாள்.

பத்திரிக்கைகள் கலர் கலராகப் பரந்து கிடந்தன. அவற்றைப் பார்ப்பது போல் அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள். அவன் பார்வை புத்தகங்கள் மீது விழுந்திருந்தது. எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.



கடைசியில் ஒரு புத்தகத்தை உருவினான். ஆவலோடு பார்த்தான். அவளும் கவனித்தாள். புத்தகத்தின் பெயர் - மனம் உங்கள் நண்பன், உங்கள் எதிரி.

ஓகோ, இவனிடம் பணம் இருக்கிறதா? நோட்டுக் களை எடுத்து அவன் கொடுத்தான். கடைக்காரர் நாலணா சில்லறை வேண்டும் என்றார். அவன் இல்லை என்றான் ஒரு தயக்கம்.

- எக்ஸ்கியூஸ் மி ப்ளீஸ்! ஷேல் ஐ கிவ்? என்றாள்.

- . . வ. . வ. . . திக்கினான் அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான் அதற்குள், அவள் பையிலிருந்து சில்லறையை எடுத்து விட்டாள்.

- தேங்க் யூ! ஐ'ல் ரிடர்ன் இட்.

புத்தகத்தை வாங்கிக்கொண்டு நடந்தான். அவனை அவள் தொடர்ந்தாள்.

- ஓ! உங்களுக்கு மன இயல்பைப் பற்றிப் படிக்கப் பிடிக்குமோ?

அவன் திரும்பவில்லை.

- யா! (யோசித்தான்) இன் எ வே ஐ'ம் இன்டரெஸ்டட்.

- எனக்கும் பிடிக்கும்.

- ஐ'ம் கிளாட்.

காப்பி - ஸ்டால் அருகில் இருவரும் வந்தார்கள்.

- ஒரு காப்பி அருந்துங்கள்.

- தேங்க்யூ பட் . . . ஐ'ம்

- ப்ளீஸ் டு டேக் ஸம்திங். காலையிலிருந்து பார்க்கிறேன். நீங்கள் எதுவும் சாப்பிடவில்லை.

முதல் தடவையாகத் திரும்பி அவன் அவளைப் பார்த்தான். ஆவலோடு தன் கண்களை முழுதுமாக விரித்து அவள் அவனைப் பார்த்தாள்.

- நீங்கள் என்னைக் கவனித்து வந்தீர்களா?

- யா. . ப்ளீஸ் டேக்.

காப்பி அருந்தினார்கள்.

- நீங்கள் மெட்ராஸுக்குத்தானே வருகிறீர்கள்? (ஸ்வப்நா)

- இல்லை. அடுத்த சந்திப்பில் இறங்குகிறேன். என் கிராமத்திற்குப் போகிறேன்.

- ஓ. உங்கள் பெற்றோர்களைப் பார்க்கப் போகிறீர்களா?

- யா.

- ஒரு வேளை உங்கள் மனைவியும் காத்திருப்பாளோ?

- எனக்கு மணமாகவில்லை.

- எங்கிருந்து வருகிறீர்கள்?

ஊர்ப்பெயரைச் சொன்னான்.

- வேலையாயிருக்கிறீர்களா?

- இல்லை;. . . வேலை பார்த்தேன்.

எங்கே?

- சிறையில். .

- சிறையில் என்ன வேலை?

- எத்தனையோ வேலை கொடுத்தார்கள். எதையும் செய்தேன். அவள் தயங்கினாள். அவனை அழுத்தமாகப் பார்த்தாள்.



- சிறை அதிகாரியா நீங்கள்?

- இல்லை.

- அப்படியானால்?

- ஒரு கைதி!

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

- கைதியா!

- ஆமாம்; நேற்றுப் பகல் வரை.

- நம்ப முடியவில்லையே!

- நம்புங்கள்.

- என்ன குற்றம் செய்தீர்கள்?

- நானா (தயக்கம்) என் துக்கங்களையெல்லாம் ஓர் இரும்புப் பெட்டியில் போட்டு இறுகப் பூட்டி வைத்திருக்கிறேன். தயவு செய்து அதைத் திறக்கச் சொல்லாதீர்கள்.

இருட்டும் சமயத்தில் பெரிய பாட்டையிலிருந்து கிராமத்தை நோக்கிப் பிரியும் குறுகலான பாதையில் அந்த வாலிபன் நடந்து கொண்டிருந்தான். கையில் ஒரு சின்ன பெட்டியும் பையும்.

பாதையில் யாரும் தென்படவில்லை. ஓர் ஓடையும் அதன்மீது பாலமும் வந்தன. தயங்கி நின்றான். சிலுசிலு என்று நீரின் சலசலப்பு வயல் வெளியெல்லாம் இருட்டு. தூரத்தில் ஒரு வண்டி மாட்டின் சதங்கை ஒலி.

இரண்டு நிமிடம் நின்றான். களைப்பாறினான். ஹேய் என்று பரந்த வெளியை நோக்கி மெதுவாகக் கூவினான். - நான் இந்த ஊர்க்காரன் தெரியுமா?

கிராமத்தில் மூன்று தெருக்கள். தெரு வழியாக அவன் போக விரும்பவில்லை. பின்புறத்திலுள்ள

தோட்டங்கள் வழியாகப் போனான். சில இடங்கள் புதிதாகத் தோன்றின.

இருட்டில் எதுவும் புரியவில்லை. கடைசியில் அந்த வண்டிப் பரை வந்தது. ஓ! இதுதானே நம் வீடு.

தோட்டத்தின் வழியாகப் போனான். பழைய தென்னை மரங்கள் அப்படியே இருந்தன. இருட்டில் பார்க்கும்போது மனம் சிலிர்த்தது.

கொல்லைப்புறக் கதவு, அதன் தாழ்ப்பாள், அவனுக்குப் பழக்கமானது. மெள்ள நெம்பித் திறந்தான்.

ஏதோ ஓர் உணர்ச்சி குபீர் என்று தாக்கியது. தடுமாற்றத்துடன் நின்றான். கொட்டிலில் இருந்த மாடு அவனைத் திரும்பிப் பார்த்தது.

நிதானத்துக்கு வந்தான். மாட்டின்மீது பார்வை விழுந்தது ஓ! லட்சுமியா இது? அப்போது சின்னக் கன்றுக் குட்டியாக இருந்தது. ஆறு வருடத்தில் இப்படிப் பெரிய பசுவாக வளர்ந்துவிட்டது!

- லட்சுமி! என்னை நினைவு இருக்கிறதா? நான்தான் நரேன்! சௌக்கியமா? உங்க அம்மா எங்கே?

அடுத்தக் கட்டைத் தாண்டினான். முற்றங்களைத் தாண்டினான். தாழ்வாரம் வந்ததும் நின்றான்,

- அம்மா. . . .

- அம்மா. . . .

- யாரு?

- நான்தான் அம்மா. . . . .

விளக்கு அழுத்தப்பட்டது. திடீர் வெளிச்சத்தில் உடம்பு கூசியது. வீட்டில் மின்சாரம் வந்துவிட்டதா?



எதிரே வருவது யார்? அம்மாவா? தலையெல்லாம் எப்படி நரைத்துவிட்டது?

- அம்மா, நான்தான் நரேன்.

அவள் முகத்தில் ஒரு துள்ளல்! ஓடிவந்தாள். கையைத் தொட்டாள். முகத்தைத் தொட்டாள். கப்பென்று கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். கண்ணீர் வந்தது.

ஐந்து நிமிடம் பேசவில்லை.

- அம்மா! அம்மா என்றான் அவன்.

மேலே பேச முடியவில்லை.

நிதானம் வந்ததும் பேசினான்.

- அம்மா! பெத்தவங்க. எத்தனை பேர் ஜெயிலுக்கு வந்து தங்கள் பிள்ளைகளைப் பார்த்துவிட்டுப் போனாங்க? என்னைப் பார்க்கறதுக்கு நீங்க யாரும் வரலையம்மா! அது எனக்குக் குறை அம்மா! பெரிய குறை அம்மா!

அவன் அழுதான்,

அவள் விசித்தான்.

- நரேன்! உன்னைப் பார்க்கணும்னு ஆசைதான். உங்க அப்பா தீவிரமாக நின்னுட்டார், பார்க்கப் போகக் கூடாதுன்னு பிடிவாதம் பிடிச்சார். நான் என்ன செய்வேன்?

டக் டக் என்று வீடு முழுவதும் வெளிச்சம் போடப் பட்டது எங்கும் பிரகாசமாகியது. வீடே புதுக் களையுடன் துள்ளி எழுந்தது.

சமயலறையில் முதல் தடவை உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அம்மா உணர்ச்சி வசமாய் இருந்தாள். குழம்புக் கரண்டியை நீட்டியிருந்தாள்.

வாசலில் சரக்சரக் என்று சப்தம் - அப்பா! என்றாள். தாயார் பரபரப்புடன் முகத்தில் பயம்.

- என்னம்மா? கையில் கவளத்தை வைத்துக் கொண்டு அவன் கேட்டான்.

- நரேன், உடனே இலையை எடுத்துட்டுப் பின்புறம் போடா, போடா! அவள் பரபரத்தாள்.

- ஏம்மா!

- போடா, கொல்லைப்புறம். அப்பா பார்த்துடப் போறார்.

- அம்மா! இலையுடன் அவன் எழுந்தான். அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

- போடா. கொல்லைப்புறம் போய் நில்லு. அவள் பீதியுடன் கத்தினாள்.

ஆத்திரத்துடன் அவன் நடந்தான். கையில் இலை. அதில் நிறைய சோறும் கறியும். இத்தனை நாளும் அவன் சாப்பிட ஏங்கிய வீட்டுச் சோறு அது.

தென்னை மரத்தடியில் நின்றான். அழுகை வந்தது. கோபமும் வந்தது.

* * *

## 2

கண்ணீரைத் துடைத்தவாறு நரேன் கொல்லைப் புறத்து மரத்தடியில் நின்றான். அப்பாவிடம் வெகுநேரம் பேசிவிட்டு அம்மா வந்தாள்.

- சாப்பிட்டியா? என்றாள்.

- ஆயிடுத்து என்றான். - அப்பா என்ன சொன்னார்?



- சொல்றதென்ன? அவர் கோபம் என்னிக்குத் தீரப் போறதோ? என்றாள். பிறகு குரலை உயர்த்தி, நரேன் என்றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

- ஜெயிலேர்ந்து முறையாத்தானே வெளியே வந்தே?

- ஆமாம்.

- தப்பிச்சுக் கிப்பிச்சு வர்லையே!

- இல்லேம்மா!. . . ஏன்?

- சும்மா கேட்டேன். . .

நரேன் யோசனையில் ஆழ்ந்தான். இருட்டின் கிள்ளிரைச்சல் காதைப் பிளந்தது.

- அம்மா

- என்ன?

- வண்டிப் பரையிலேயே நான் படுத்துக்கிறேன்.

அம்மா மௌனமானாள்.

அவள் விசிப்பது கேட்டது.

- ஏம்மா?

அம்மா கண்களைத் துடைத்தாள்.

- உங்கப்பாவும் அதைத்தான் சொல்றார்.

- சொன்னாரா?

- ஆமாம். நீ உள்ளே வரக்கூடாது என்கிறார். அவள் மீண்டும் முகத்தைத் துடைத்தாள். அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

இரவில் வண்டிப் பரையில் படுத்தான். பழைய வில் வண்டியில் ஒரு வைக்கோல் மெத்தை. அதன்மீது

படுத்தான். தூக்கம் வரவில்லை. ஏதோ பூச்சி கடித்துக் கொண்டேயிருந்தது.

காலை ஒன்பது மணி. வண்டியின் ஒட்டடைகளை அடித்துக் கொண்டிருந்தபோது அப்பா வருவது தெரிந்தது. முண்டாசு கட்டியவாறு வந்து கொண்டிருந்தார். அவன் மீது பார்வை படக்கூடாது என்று வேறு பக்கம் முகத்தைத் திருப்பியவாறு வந்தார். பரை அருகில் வந்ததும், மேல் சுவருக்கு அப்பால் நின்று கொண்டு ஒரு தரம் கனைத்தார்.

- நீ செஞ்சதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. ஊரிலே தலை காட்ட முடியவில்லை. அநியாயம் பண்ணிட்டே, பாவி என்றார்.

நரேன் பதில் பேசவில்லை.

- வீட்டுக்குள்ளே வரக்கூடாது. தெரிஞ்சுதா?

பதிலில்லை.

- தெரிஞ்சுதாடா?

- சரிப்பா.

எங்கேயேனும் ஒரு வேலை தேடிக்க. ஊரை விட்டு ஓடிப் போய்டு. என் கண் முன்னாலேயே நிக்காதே. பிளட் பிரஷர் அதிகமாகுது என்றார்.

இரண்டு தினங்கள் சென்றன. மூன்றாம் நாள் மத்தியானம். அம்மா சாப்பாடு கொண்டு வந்தாள். அதை அளைந்து கொண்டே சாப்பிட்டான். அடிக்கடி அவன் யோசனையில் ஆழ்ந்ததை அம்மா கவனித்தாள்.

- சரியாகச் சாப்பிடு என்றாள்.

- அம்மா. . . என்றான்.

- அவளைப்பத்தி ஏதாவது தெரிஞ்சுதா? முகத்தில் உணர்ச்சி வந்துவிட்டது.



- எவளைப் பத்தி?

- அவளைப் பத்திதான்.

- தெரியலைடா?

அவன் சோகத்தில் கீழே குனிந்தான். பிறகு - அம்மா நான் ராம்நகர் போய்ட்டு வரேன்! என்றான்.

அவள் கலவரம் அடைந்தாள்.

- ஆமாம்மா! ராம்நகர்வரை போய்ட்டு வரேன், அவள் அங்கே இருந்தால் பார்க்க வேண்டும்.

- நரேன் என்றாள் அம்மா - உனக்குப் பைத்தியமா? அங்கே போனா உன்னைக் கொன்னு போட்டுடுவாங்க.

- ஏம்மா அப்படி? நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?

- எனக்குப் பயமா இருங்கு அங்கெல்லாம் போகாதே நரேன். . . .

அவன் போன பிறகு நரேன் கண்களைத் திருப்பினான். தென்னஞ்சோலையின் பசுமையும், குளுமையும் ஒரு மாயமான காட்சிபோல எதிரே தெரிந்தது. தென்னங்கீற்று மீது மதிய வெய்யில் பளீர் என்று பட்டுச் சிலிர்க்கும்போது அவள் எங்கேயோ சிரித்துக் கொண்டிருப்பது போலிருந்தது.

எங்கே அவள்?

இப்போது எப்படி இருக்கிறாள்?

நெஞ்சை அழுத்தினான். கண்களை மூடிக்கொண்டு - அம்மா என்றான். வேதனை பொறுக்காமல் தரையில் சாய்ந்தான்.

அடுத்த ஞாயிறு ராம்நகர் நோக்கிப்போகும் 5-30 பஸ் ஒரு பெரிய ஆற்றுப் பாலத்தைத் தாண்டிக்கொண்டிருந்தது.

உள்ளே இருந்த நரேன் இந்த நகரம் இருக்கும் திசையைப் பார்த்தான். அது இருட்டில் மூழ்கியிருந்தது. அதன் மேல் கருமையான மேகங்கள் கவிந்திருந்தன. அவற்றிலிருந்து நேர்க்கோடுகளாக மழைத் தூறல்கள் நகர் மீது விழுந்து கொண்டிருந்தன.

- டு யூ நோ, நரேன்?

அவன் திடுக்கிட்டான். வெளியே பார்த்தான். அடிவானத்திலிருந்து ஒரு கறுப்பு மேகம் சீறிக்கொண்டு மேலே எழுந்து கொண்டிருந்தது. அதன் உருவம் ஒரு பெரிய பூதம் போல் தோன்றியது. கூர்ந்து பார்த்தால், தாடியும் ஜிப்பாவும் தரித்துள்ள ஒரு சந்நியாசி போல் தோன்றியது. அந்த உருவம் அவனைப் பார்த்து ஒரு விரலைக் காட்டிக் கொண்டிருந்தது.

- டு யூ நோ நரேன்? உன் வாழ்க்கை ஒரு கதையாக மாறி வருகிறது. அந்த உருவம் அவனைப் பார்த்துக் கேட்டது.

நரேன் வெலவெலத்துப் போனான். திடீரென்று வீசிய மழைக் காற்று அவன் உடம்பை நடுங்க வைத்தது.

- எல்லோர் வாழ்க்கையும் கதை ஆகாது. உன் வாழ்க்கை ஒரு கதை ஆகிறது.

- அப்படியா?

- ஆமாம். நான் ஒரு கதை சொல்கிறேன் கேட்கிறாயா?

- சொல்லுங்கள்.

அவர் ஆரம்பித்தார். 'ஒரு மாடியில் மூன்று மாணவர்கள் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்கள். மூவரும் நெருங்கிய நண்பர்கள். இருவர் இஞ்சினியரிங் கல்லூரியிலும், ஒருவன் கலைக் கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். மூவரும் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். படிப்பிற்காக நகரத்தில் கூடியிருந்தார்கள்.



இஞ்சினியரிங் மாணவர்களான இந்தரும், சசியும் நெருங்கிப் பழகினார்கள். ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய மாட்டார்கள். எங்கே போனாலும் சேர்ந்தே போவார்கள். சேர்ந்தே சாப்பிடுவார்கள். சேர்ந்தே தூங்குவார்கள்.

இவர்கள் வாடகைக்கு தங்கியிருந்த வீட்டுக்கு அடுத்த காம்பவுண்டில் ஒரு பெரிய பங்களா. சின்னசாமி என்ற காண்ட்ராக்டருடையது. பணக்காரர். செல்வாக்கு உள்ளவர்,

அவருக்கு ஒரே பெண் ரம்யா. (ரமி) முதல் வருட பி. எஸ்ஸி. படித்துக் கொண்டிருந்தாள். நல்ல அழகி, நாகரிகம் வாய்ந்தவள். பட்டணத்திலுள்ள மாமா வீட்டுக்கு அடிக்கடி போய் வருவாள். வரும்போது புதிய நாகரிகங் களைக் கொண்டு வருவாள்.

ரமியின் அழகு அநேகமாக அவளைக் காண நேர்ந்த இளைஞர்களிடையே ஒரு பேச்சாக இருந்தது. அவளை எங்கேயாவது பார்த்துவிட்டால் போதும். அவளது மறக்க முடியாத தோற்றம் அவர்களது நெஞ்சங்களில் பதிந்து விடும்.

அப்படிப்பட்ட ரமியைப் பற்றி மூவரும் அடிக்கடி பேசியது ஆச்சரியம் அல்ல. இரவில் புத்தகங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, மொட்டை மாடியில் காற்றாட அமர்ந்து இளைப்பாறும்போது ரமியைப் பற்றிப் பேசுவது ஒரு பொழுது போக்காக இருந்தது. நேரம் போவதே தெரியாமல் பேசுவார்கள். தனித்தனியே அவளோடு இல்லறம் நடத்துவது போல் கனவு காண்பார்கள்.

ஒரு நாள் மழை.

- (இப்போதும்) அதைப் போல் ஒரு மழை வரப் போகிறது. நீ திணறப் போகிறாய் என்றார் பெரியவர்.

- நீங்கள் ஒரு ஜோஸ்யரா? (நரேன்)

- இல்லை. எனக்கு ஒரு தனி சக்தி இருக்கிறது. அதன் மூலம் எதிர்காலத்தை உணர்வேன் என்று கூறி ஹஹஹஹஹ ஹஹஹா என்று சிரித்தார்.

நரேன் திடுக்கிட்டு வானத்தைப் பார்த்தான்.

அந்த மேகத்தின் உருவம் கையைத் தூக்கிச் சிரிப்பது போலிருந்தது. உண்மையில் அதன் தோற்றம் ஒரு ராட்சத மனிதனைப் போல் இருந்தது.

- சரி சொல்லுங்கள் என்றான். (நரேன்)

ஒரு நாள் மழை. நல்ல மழை. பெரிய மழை. ரேடியோ நிலையத்தில் பத்து மாணவ மாணவிகள் சிக்கி யிருந்தார்கள். அவற்றில் இந்தரும் ரமியும் இருந்தார்கள். இன்றைய இளந் தலைமுறையினர் என்ற தலைப்பில் ஒரு விவாதம் அன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டது. அதில் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே விவாதம் நடந்தபோது ஆப்ரஹாம் ஐ.ஏ.எஸ். கேட்ட கேள்விக்கு ஒரே சமயத்தில் இந்தரும் ரமியும் பதில் சொல்ல எழுந்தார்கள். ரமி எழுந்திருப்பதைப் பார்த்ததும் இந்தர் - இல்லை நீங்கள் சொல்லுங்கள் என்று உட்கார்ந்தான். ரமி உடனே - நீங்கள் சொல்லுங்கள் என்று உட்கார்ந்தாள். ஒரே சமயத்தில் இருவர் பார்வைகளும் வெட்டிக்கொண்டன.

அந்த உணர்விலிருந்து இந்தர் இன்னும் விடுபட வில்லை. ரேடியோ நிலைய வராந்தாவில் நின்றவாறு யோசித்துக் கொண்டிருந்தான். வெளியே மழை. பெரிய மழை.



சிறிது நேரத்தில் ரமியை அழைத்துப் போக அவள் வீட்டுக் கார் வந்தது. தலையில் கர்ச்சிப்பைப் போட்டு மூடியவாறு ஓடிப் போய் ஏறிக் கொண்டாள். அடுத்த கணத்தில் கதவைத் திறந்து கொண்டு திரும்ப ஓடி வந்தாள். வராந்தாவில் நிற்கும் அவனிடம் ஓடி வந்து - நீங்களும் வருகிறீர்களா?

மழை. நல்ல மழை. காரின் கண்ணாடியில் ஓடை ஓடையாக நீர்.

- உங்கள் வீட்டருகில் நான் இருப்பது தெரியுமா? என்றான்.

- ஓ, தெரியுமே உங்களைப் பார்த்திருக்கிறேன் என்றாள்.

மழை இப்போது அவன் மனத்தில் பொழிந்தது. என்னைப் பார்த்திருக்கிறாளா? ரமி என்னைப் பார்த்திருக் கிறாளா?

வீட்டு முன்னால் வண்டி நின்றது.

- பை, பை என்றாள் அவள். கண்கள் ஒரு ஸர்ச் லைட் போல் மினுமினுத்து அவன் மீது விழுந்தன.

தூறலில் துள்ளியவாறு ஓடினான். மாடியில் ஏறினான். நண்பர்கள் இன்னும் வரவில்லை. கதவைத் திறந்து உள்ளே போனான். மூச்சு இரைத்தது. மனம் இரைந்தது கலுங் கலுங் என்ற சப்தங்களுடன். ஆனந்த மயமான ஒரு தபலா மனத்தில் ஆர்ப்பரித்தது.

மறுநாள் கல்லூரியிலிருந்து சீக்கிரமாக வந்தான். நண்பர்கள் இன்னும் வரவில்லை. வாசலுக்கு வந்தான். அதே நேரத்தில் ரமி காருக்காகத் தன் வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தாள். காரேஜிலிருந்து கார் வந்ததும் அதில் ஏறப் போனவள் அவனைப் பார்த்தாள். லேசாகப்

புன்னகை புரிந்துவிட்டுக் கதவைத் திறந்தாள். ஏறிக் கொண்டாள். அந்தப் புன்னகை உள்ளத்தைத் தொட்டது. மெய்மறந்து நின்றான். உள்ளே போக மனம் இல்லை, அங்கேயே நின்றான்.

அன்று முதல் கல்லூரியிலிருந்து சீக்கிரமாக திரும்பினான். அவள் 5-05-க்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள். கல்லூரியிலிருந்து அவன் ஓட்டமும் நடையுமாக வந்தால்தான் 5-06க்கு வீட்டு வாசலில் இருக்க முடியும். வாரத்தில் இரு தினங்கள் ஓடிவந்தான். தலை தெறிக்க ஓடி வந்தான். தெரு முனையில் வந்ததும் நிதானித்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். வீட்டு வாசலை அவன் மிதிப்பதற்கும் ரமி வெளியே வருவதற்கும் சரியாக இருக்கும். அவனைப் பார்த்து அவள் புன்னகை புரிவாள். போய் விடுவாள்.

புன்னகையிலிருந்து எவ்வளவோ அர்த்தங்கள் எழுந்தன. அவைகளைப் பற்றி நினைப்பதில் காலமும் ஓடியது. முன்பு போல் நண்பர்களிடம் அதிகம் பேசுவ தில்லை, வெளியே ஒன்றாகப் போவதும் இல்லை.

ஒரு நாள் அவன் மனத்தில் ஒரு தாபம்! தரிக்க முடியாத தாபம்! பேப்பரை எடுத்தான் எழுத ஆரம்பித்தான்.

உன் புன்னகை ஒரு மாடிப்படி. ஏறி ஏறி வானத்தில் நிற்கிறேன். சொர்க்கம் இதோ என் அருகில் - என் கையில் அது பிடிபடுமா?

அதைக் கவரில் மடித்து அவள் பெயரை எழுதி விலாசமிட்டுப் போட்டுவிட்டான். நான்காவது தினம் ஒரு கடிதம் வந்தது.

உங்கள் கண் ஒரு சுரங்கம்.

பார்வை அதன் படிக்கல்.



இறங்கி இறங்கி அந்தரங்கத்தின்

வாயிலில் நிற்கிறேன்.

திறக்குமா வாயில்?

இதுபோல் கவிதை மயமான சொற்களில் கடிதங்கள் மாறிக் கொண்டன. மனத்தை அப்பட்டமாக வெளிப் படுத்தாமல் ஒரு மூடு திரையிட்ட காதலை இருவரும் பரிமாறிக் கொண்டார்கள்.

அன்று ஒரு நாள் இந்தர் மாட்னிஷோவுக்குப் போயிருந்தான். அதே ஷோவுக்கு ரமி தன் சினேகிதியுடன் வந்திருந்தாள். இருட்டில் தடுமாறி அவனது பக்கத்து சீட்டிலேயே வந்து உட்கார்ந்தாள். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தபோது திடுக்கிட்டார்கள். புன்னகை புரிந்து கொண்டார்கள்.

இண்டர்மிஷன் வந்தபோது சினேகிதி எழுந்து வெளியே போனாள் - ரமி என்றான் அவன்.

- நீங்கள் போகவில்லையா?

- இல்லை.

ஏன்?

- உங்களுக்குத் தெரியாதா?

மௌனம்.

- இது ஆச்சரியந்தானே ரமி?

- எது?

- நீங்கள் என் அருகில் உட்கார்ந்திருப்பது?

- ஆச்சரியமென்ன! மனம் மனத்தை நாடுகிறது.

- என் மனத்தை திறந்து வைத்திருக்கிறேன் ரமி.

நானும் அப்படித்தான்!

- நீங்கள் என் மனத்தில் புகுந்துவிடுங்கள். நான் உங்கள் மனத்தில் புகுந்து விடுகிறேன்.

- ஏன் இந்தர், நாம் மாறிக் கொள்வதைவிட நம் மனங்களையே மாற்றிக்கொண்டால் என்ன?

- நல்ல யோசனை.

- என் மனம் உங்களிடம்; உங்கள் மனம் என்னிடம்!

- மகிழ்ச்சி ரமி!

- நான் உங்கள் மூலமாய் நினைக்கிறேன். நீங்கள் என் மூலமாய் நினையுங்கள்.

- மிக்க மகிழ்ச்சி.

- என் நினைவு நீங்கள், உங்கள் நினைவு நான்!

சடசடவென்று சப்தம். நரேன் திடுக்கிட்டான். மழை தொடங்கியது. எங்கும் மூட்டம். வானத்தைப் பார்த்தான். பெரியவரின் தோற்றம் சிதைந்து போயிருந்தது. தாடியும் உடம்பும் எங்கேயோ பறந்துவிட்டன, முகம் மட்டும் அல்லாடிக் கொண்டிருந்தது.

. . . என் நினைவு நீங்கள்! உங்கள் நினைவு நான் - அதை நினைக்கும்போது கண்ணீர் வந்தது. இரு புறங்களிலும் படுதாக்கள் பறக்க, பஸ் மழையை ஊடுருவிக் கொண்டிருந்தது.

அரை மணி சென்றது. அடுத்த ஊர் பஸ் நிலையம் வந்தது. மழை நொறுக்கி அடித்துக்கொண்டிருந்தது. பத்து நிமிடம் அங்கே பஸ் நிற்கும் என்று கண்டக்டர் அறிவித்தார்.

எல்லோரும் இறங்கினார்கள். காப்பிக் கடையில் நுழைந்தார்கள். பிரயாணிகளின் கொட்டகையில் நரேன்



மெதுவாக நடந்தான். பார்வை ஓர் இடத்தில் திடீரெனப் பதிந்தது.

யார் அது?

இவள் இங்கே எப்படி வந்தாள்?

உடம்பு வெலவெலத்தது. ஒரு திருடனைப் போல் பதுங்கி வேறுபுறம் செல்ல ஆரம்பித்தான்.

- அடபாவி! என்ற குரல் சீறியது. திடுக்கிட்டு நின்றான்.

* * *

## 3

மீனுதான் அவள். இருபத்தைந்து வயதிருக்கும் நரேனைப் பார்த்துச் சிறி வந்தாள்.

அவன் விக்கித்து நின்றான்; என்ன செய்வதென்று தெரியவில்லை, நிற்கவா? போகவா?

மேடையிலிருந்து இறங்கி அவள் ஓடிவந்தாள். ஈரத் தரையில் கால் வழுக்கியது. கீழே விழுந்தாள். எழுந்திருக்க முயன்றாள். அதற்குள் அவனுக்கு யோசனை. ஓடிவிட்டால் என்ன?

திரும்பினான். அடுத்தாற்போல் ஒரு சுவர். சுவரைத் தாண்டி ஒரு சின்னச் சந்து. சிறுநீர் நெடி அடித்தது. குப்பைக் கூளங்கள் மிதந்தன. இங்கொரு காலும் அங்கொரு காலுமாக வைத்துதான் ஓடினான்.

மழை நிற்கவில்லை. தூறல் பெரிதாக விழுந்தது. நனைந்து கொண்டே ஓடினான்.

ஒரு பர்லாங் ஓடியதும் நின்றான். ஊர் எல்லை முடிந்தது. சாலை அங்கிருந்து விருட்டென்று ஒரு பரந்த வெளியில் பாய்ந்து ஓடியது.

திரும்பிப் பார்த்தான். யாரும் இல்லை, ஓரத்தில் ஒதுங்கினான். மூச்சு இழைத்தது. மெதுவாக நடந்தான். மழை இன்னும் அடித்துக் கொண்டிருந்தது.

நல்ல வேளை தப்பித்தோம் அகப்பட்டிருந்தால்...

திட்டுவாள். சபிப்பாள். கையை ஓங்கி அடிக்க வருவாள். அவள் துக்கம் அவளுக்கு.

மீனு! அருமை மீனு! நான் வேண்டுமென்றே உனக்குத் துக்கம் தரவில்லை, மீனு!

இனிமேல் திரும்பிப் போய் பஸ்ஸில் ஏற முடியாது. மீனு இன்னும் அங்கே நிற்பாள். ராம்நகர் இங்கிருந்து ஐந்து மைல்; நடந்தே போய்விடலாம்.

மழை நீர் முகத்தில் கிளைகளாக ஓடியது. எதையும் பொருட்படுத்தவில்லை. நடந்தான்.

பதினைந்து நிமிடம் சென்றது. வானம் வெளி வாங்கியது. தூறல் பிசுபிசுத்தது. மேலே பார்த்தான். ஆட்டு மந்தை போல் மேகங்கள் கலைந்து ஓடிக் கொண்டிருந்தன.

- நரேன், ஓ, நரேன்!

கீழை வானத்தில் ஒரு பெரிய மேகம் வீறிட்டு எழுந்து கொண்டிருந்தது. அந்தப் பெரியவரின் உருவம் அதில் மெதுவாக உருவாகிக்கொண்டிருந்தது. அதன் உக்கிரத்தைப் பார்க்கும்போது அவன் வெலவெலத்துப் போனான்.

- மேலே சொல்லட்டுமா. நரேன்?

- ம்

ஒரு நாள் ரமி தனது சக மாணவர்களுடன் பிக்னிக் போனாள். பிக்னிக் போகும் இடத்தை இந்தருக்கு அறிவித்தாள்.



இந்தருக்கு தவிப்பு. அவள் போய்விட்டால் பகல் முழுதும் அவளைப் பார்க்க முடியாது. என்ன செய்வது? அவனும் அவள் போகுமிடம் போகலாமா?

போகலாம் என்று தீர்மானித்தான். புறப்படுவது எளிதாக இல்லை. சசி (நண்பன்) அவனைச் சுற்றிக் கொண்டே இருந்தான், அவனைப் புறக்கணிப்பது கஷ்டமாக இருந்தது.

அவனை நைஸாக விலக்கி விட்டு பிக்னிக் பகுதிக்குப் போனபோது மணி இரண்டு. ரமியும் சினேகிதிகளும் சாப்பிட்டுவிட்டார்கள். தனித்தனி குழுவாகப் பிரிந்திருந் தார்கள். மரத்தடியில் நிற்கும் ரமிக்கு மாத்திரம் தெரியும்படி தன்னைக் காட்டிவிட்டு இந்தர் மறைந்து கொண்டான். வெகு நாழிகை மறைவிடத்திலேயே இருந்தான்.

அரை மணி சென்றது. ரமி வந்தாள்.

- ஹாய் இந்தர் என்றாள். இருவரும் புறப்பட்டார்கள்.

- என்ன தைரியம், இங்கே வந்துவிட்டீர்கள்? என்றாள்.

- உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை ரமி.

- எனக்கு இது மகிழ்ச்சி அளிக்கிறது, இந்தர்.

நடந்தார்கள். மரங்களை ஊடுருவி நடந்தார்கள். இலைகளின் நிழல்கள் அவர்கள்மீது வருடிக் கொண்டு ஓடின. ரமியின் மேக்-அப்பிலிருந்து எழுந்த மயக்கமான அரோமா அவனைச் சூழ்ந்து கொண்டது.

இருவரும் மௌனம். சவுக்குத் தோப்பின் உய்ய்ய்ய்ய்.... தூரத்தில் அலைகளின் சன்னமான ஹோராரார.... அவன் அவள் கைகளைப் பற்றினான்.

- ரமி!

பசுமையான நிழலில் அமர்ந்தார்கள்.

- ரமி!

அவள் கழுத்தின் மீது கையை மெதுவாகப் பதித்தான்; அவனது லேசான உதட்டில் முறுவல். வெட்கத்துடன் ஓர விழிகளை அவன் மீது படியவிட்டாள். காற்றில் மடியும் கவுனைக் காலின் மேல் பகுதி மீது நீவி விட்டாள், அப்போது தெரிந்த அவளது கால்களின் ஸிக்-ஸாக் பின்னலை அவன் ரசித்தான்.

- ரமி! (குரல் மிக ரகசியமாக வந்தது).

- இந்தர் (,, ,,)

அந்தக் குரலின் பரிவிலேயே உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் ஹூக் இருந்தது. இடையின் வளைவுகளில் அவன் கை அணைந்தது. அவள் மெதுவாக அவன் மீது சரிந்தாள்.

முகவாயை நிமிர்த்தி அவளது கண்களை அவன் பார்த்தான்.

- ரமி! (அவன் கண் பேசியது.)

- இந்தர்! (அவள் கண் பேசியது.)

சுவாசங்கள் அலை மோதின. இருவரது இதழ்களும் ஒன்றை ஒன்று பார்த்து புன்னகை புரிந்தன. ஒன்றை ஒன்று அழைத்துக் கொண்டன. ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டன.

... ... ... ... ...

அந்த இணைவில் அவன் கண்கள் செருகின. மனம் குவிந்து ஒருமையாகி எங்கேயோ பறந்தது.

ஊருக்குத் திரும்பும்போது மாலை ஆறு மணி. அறைக்குப் போக விருப்பமில்லை. தேசபந்து பார்க் இருந்தது. அதில் உட்கார்ந்து கொண்டான். மனத்தில் ரம்யங்கள் வழிந்தன. ஏழு மணிக்கு அறை, சசி அங்கே இருந்தான். அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். வந்ததும் கையை அழுத்திப் பிடித்தான். - லக்கி ஃபெல்லோ! என்றான் ஒன்றும் தெரியாமல் இந்தர் விழித்தான்.



- வா மாடிக்கு.

மொட்டை மாடிக்கு போனார்கள். இருட்டு கரு கரு என்று விழுந்தது. அவனைக் கீழே அழுத்தி உட்கார வைத்தான் சசி.

- டேய் எப்படிடா உனக்குக் கிடைச்சது? (சசி)

- எதுடா?

- ரமி!

திடுக்கிட்டு இந்தர் நிமிர்ந்து பார்த்தான்.

- எனக்கு எல்லாம் தெரியும். காலையிலேர்ந்து உன்னைக் கவனிச்சிட்டு வரேன், உன்னுடைய பரபரப்பெல்லாம் எனக்கு ஒண்ணும் புரியலை. அதனாலே உன்னை ஃபாலோ பண்ணினேன் - (வியப்புடன்) அப்படியா?

- ஆமாம் புல்தரைக் காட்சியை எல்லாம் பார்த்தேன். எல்லாம் முடிஞ்சி போச்சின்னு நினைக்கிறேன், அவன் சிரித்தான்.

இந்தர் மௌனமாயிருந்தான்.

- டேய் நீ அதிர்ஷ்டசாலிடா என்று கையை அவன் கழுத்தின்மீது வளைத்து இறுக்கினான் சசி. பிறகு சட்டென்று எதையோ உணர்ந்து கையை விடுத்து - டேய், உன் மேலே ரோஸ் வாசனை அடிக்கிறதே? அவள் தலையிலே ரோஸ் வச்சிருந்தாளா, அந்த வாசனையா? எங்கே, எங்கே என்று இந்தரின் சட்டையை முகர ஆரம்பித்தான். இடது மார்புப் பகுதியில் அந்த வாசனை எழுவதைப் பார்த்ததும் அதை நோக்கி உதடுகளை குவித்துக் கொண்டு நெருங்கினான். அவனைச் சட்டென்று பிடித்துத் தள்ளினான் இந்தர்.

- முகராதே!

- ஏண்டா!

- எனக்கு அது பிடிக்கவில்லை.

சிரித்துக் கொண்டே சசி மீண்டும் அதை நுகரப் போனான். இந்தத் தடவை அவனை அழுத்தித் தள்ளினான் இந்தர்.

- சசி! என்றான் கடுமையாக.

- விளையாடாதே.

- ஏண்டா?

- அவளது வாசனைக்கூட எனக்குச் சொந்தம்.

- டேய் என்று கூறி விழித்தான் சசி. பிறகு இந்தரின் கைகளைப் பிடித்தான் - இந்தர், நம் உடன்படிக்கையை மறந்து விடாதேடா.

- என்ன உடன்படிக்கை?

- கிடைத்ததையெல்லாம் பங்கு போட்டுக் கொள்வோம்னு பேசினோமே, ஞாபகமிருக்கா!

- ஓகோ; ரமியை ஷேர் பண்ணிக்கச் சொல்றியா?

- வொய் நாட்?

- ரபிஷ். அவள் என்ன மார்க்கெட் பொருளா நாம் ஷேர் பண்ணிக் கொள்ள? ஷி இஸ் மை ஸ்வீட்டி.

- ஏண்டா பொய் சொல்றே! அவ உடம்பு மேலே தானே உனக்கு இண்டரஸ்ட்?

- நான் சென்ஸ்? ஐ லவ் ஹர்.

- யு லவ் ஹர்?

- யா?

- கல்யாணம் பண்ணிப்பியா?

- பண்ணிக்கத்தான் போறேன்.



- உனக்கு அவங்க வீட்டிலே கொடுப்பாங்களா?

- ஏன் மாட்டாங்க?

- அவங்க பணக்காரங்க.

- அதனால் என்ன? நாங்க லவ் பண்ணறோம் கல்யாணம் பண்ணிப்போம்.

- ரமி உன்னை லவ் பண்றான்னு நினைக்கிறியா?

- உறுதியா நினைக்கிறேன்.

- இது வெறும் ஃப்ளாட்டிங்டா! இந்த மாதிரி எத்தனை பேர் கிட்ட பழகினாளோ அவள் பணக்காரி.

- டோண்ட் டாக் நான்சென்ஸ். சசி, நாங்க லவ் பண்ணறோம். அது உறுதியான லவ்.

- அவளை நான் திருப்பிவிட்டுமா?

- செய்வதானால் செய்!

பெரியவர் திடீரென மௌனமானார். நரேன் நிமிர்ந்து பார்த்தான். கீழே வானத்தின் மேகம் கலைந்து கொண்டிருந்தது.

- அப்புறம் என்ன என்று கேட்டான் நரேன்.

ஒரே மௌனம்.

நரேன் மேலே நடக்க ஆரம்பித்தான். குளிர் காற்று ஒரே சீராக வீசியது. தூரத்தில் ராம்நகர்ப் பகுதி இருட்டில் ஆழ்ந்துவிட்டது.

சட்டையும் பாண்டும் நனைந்திருந்தன. தலையி லிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டேயிருந்தது. எதையும் பொருட்படுத்தவில்லை. வேகமாக அவன் நடந்தான். -

மணி ஏழு. ராம்நகரில் பஸ் நிலையத்திற்கு வந்து விட்டான். அங்கிருந்துதான் நகரமே தொடங்குகிறது.

நிலையத்தின் கடிகாரத்தைப் பார்த்தான். ஆறு வருடங்களுக்கு முன் பார்த்தது. தான் பார்க்கும்போதே ஒரு பழகிய உணர்ச்சி.

மழை நின்று விட்டதால் தெருவில் ஜனங்கள் நடமாட ஆரம்பித்தார்கள். தெருக்களில் ஜீவன் ததும்பி ஓடியது. வேறு உலகத்தைச் சேர்ந்த சூப்பர் மேன் அதை கவனிப்பது போல் அவன் கவனித்தான்.

ஆறு வருடம் சிறைவாசம்! அது என்னை எவ்வளவு மாற்றிவிட்டது! ஊரையும் எவ்வளவு மாற்றிவிட்டது?

பஜாரில் நடந்தான். விளக்குகளும், நியான் விளம்பரங்களும் மழையில் நனைந்து சுத்தமாகியிருந்தன. பளிச்சென்று எரிந்தன. ஊரே புதுமையாகத் தெரிந்தது.

யாராவது கவனிக்கிறார்களா? ஏன் இந்த பயம்? இனிமேல் பயப்படவேண்டியது என்ன இருக்கிறது.

இப்போது எங்கே போவது? உமேஷைப் பார்க்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஜெயில் முகவரிக்குக் கடிதம் எழுதினான். இப்போது அதே வீட்டில் இருப்பானா? வீட்டைக் கண்டுபிடிக்க அரை மணி ஆகியது. வாசல் கதவு சாத்தியிருந்தது தட்டினான்.

ஒரு பெரிய அம்மாள் வந்தாள். அவனை நிதானித்துப் பார்த்தாள். திடுக்கிட்டாள்.

- என்னைத் தெரிகிறதா? என்றான்.

- தெரிகிறது.

- உமேஷ்?

- வெளியில் போயிருக்கிறான்.

- சீக்கிரம் வருவானா?

- தெரியாது.



- நான் இங்கே இருக்கட்டுமா?

அம்மாள் பதில் பேசவில்லை. தயங்கினாள்.

அவனுக்குப் புரிந்துவிட்டது - சரி நான் அப்புறம் வருகிறேன். தெருவில் மீண்டும் நடந்தான்.

தெரு முனைக்குப் போனதும் கண்ணைத் துடைத்தான் - இதென்ன என்னைக் கண்டு எல்லோரும் வெறுக்கிறார்கள்?

விளக்கின் அடியில் நின்றான். கண்ணில் அந்த வெறுமையான பார்வை வந்துவிட்டது. ஒன்றிரண்டு பேர் அவனை உற்றுப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

ஒரு மணி சென்றது. கையை யாரோ பிடித்தார்கள். திடுக்கிட்டுத் திரும்பினான்.

எதிரே உமேஷ்.

ஒருகணம் மகிழ்ச்சி. கண்ணில் ஈரம். உமேஷ் அவன் கைகளை இறுகப் பிடித்தான். தழுவினான்.

- பாவி, உனக்கு இப்படியெல்லாம் நேருமா? என்றான். கண்கள் பொங்கிவிட்டன.

நரேன் அவனை விசாரித்தான். அவன் குரலும் தழதழத்தது.

- வா போகலாம் என்றான் உமேஷ்.

- எங்கே?

- ஓட்டலுக்கு. சாப்பிடலாம். இரவு இங்கேதானே தங்கப் போகிறாய்?

- ஆமாம்.

- வீட்டுக்கு அழைத்துப் போவேன். அம்மாவுக்கு ஒரே கிலி. உன்னைப் பார்த்ததிலிருந்து மார்பு படபடப்பு. உன்னைச் சந்திக்கப் போகாதேடா என்றாள் என்னிடம். பேசாமல் வந்துவிட்டேன்.

இருவரும் ஒட்டலில் அமர்ந்தார்கள். பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் அந்த ஒட்டல். மேசையில் உட்கார்ந்ததும் அடிக்கடி வெளியே பார்த்தான்.

இலை போட்டார்கள். கறி வைத்தார்கள் சோறு வந்தபோது நரேனின் பார்வை வாசலை நோக்கி ஓடியது.

ஒரு கையில் பையுடனும் ஒரு கையில் கூஜாவுடனும் மீனு உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள். அவள் பார்வை சுற்றி வர ஓடியது.

சட்டென்று அவன் எழுந்தான் - என்ன இது? என்று உமேஷ் அவன் கையைப் பிடித்தான்.

- வா வா சொல்கிறேன் என்றான். பரபரப்புடன் அடுத்த அறைக்குப் போனான், அங்கே தெரிந்த வாசல் வழியாக அவசரமாக வெளியேறினான்,

திகைத்துப்போய் உமேஷ் அவனைப் பின் தொடர்ந்தான். சாலையைக் கடந்து நரேன் நின்றதும், - இதெல்லாம் என்ன நரேன்? என்றான்.

★ ★ ★

## 4

மீனுவை இரண்டாவது தடவை பார்த்ததில் ஏற்பட்ட திகில் நரேனுக்கு அடங்கவில்லை. உமேஷை நிமிர்ந்து பார்த்தான். - ஒன்றுமில்லை. மீனு. . . . அவளைப் பார்த்தால் பயமாக இருக்கிறது.

- மீனு இந்த ஊரில்தான் இருக்கிறாள்.

- அப்படியா?

கஷ்டப்படுகிறாள்.

பாவம்!



- அவளுக்கு ஏன் பயப்படுகிறாய்?

- என்ன இருந்தாலும் மனசு கேட்கவில்லை.

இருவரும் இன்னொரு ஒட்டலுக்குச் சென்றார்கள். உணவு அருந்தினார்கள். வீட்டுக்குத் திரும்பினார்கள்.

மாடியில் அறை, நரேன் களைத்துப் போய் உட்கார்ந்தான். உமேஷ் அவனுக்கு வேட்டி, துண்டுகளைக் கொடுத்தான். நரேனின் மனம் பதட்டத்திலேயே இருந்தது. அடிக்கடி யோசித்துக் கொண்டிருந்தான். சரியாகவே பேசவில்லை. அதை உணர்ந்த உமேஷ் எதுவும் கேட்கவில்லை. அவனைப் படுத்துக்கொள்ளும்படி சொன்னான்.

நரேன் வெளி மாடியின் தாழ்வாரத்துக்குப் போனான்.

- அங்கே ஏன் போகிறாய்? ராத்திரியில் குளிரும் என்றான் உமேஷ்.

- பரவாயில்லை. நான்கு சுவருக்குள் படுத்துப் படுத்து அலுத்துவிட்டது என்றான் நரேன்.

பதினொரு மணி. தூக்கம் வரவில்லை, இந்த ஊருக்கு வந்ததுதான். அதற்குக் காரணம். என் பழைய நினைவுகள் என்னை வாட்டுகின்றன என்று நினைத்தான்.

- நரேன்.

- அவன் நிமிர்ந்து பார்த்தான். மாடிக் கைப்பிடிச் சுவரில் அந்தப் பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

- இந்தருக்கும் சசிக்கும் என்ன நடந்தது என்று தெரிய வேண்டாமா?

(நரேன் எழுந்து சுவரில் சாய்ந்தான்.)

- சொல்கிறேன், கேள். இரு வாரங்கள் சென்றன. ரமியும் இந்தரும் மீண்டும் ரகசியமாகச் சந்தித்தார்கள்.

- இந்தர் உங்கள் நண்பன் சசியைப் பற்றி ஒன்று சொல்லவேண்டும் என்று ஆரம்பித்தாள் ரமி.

- என்ன? என்று கேட்டான் இந்தர்.

- கொஞ்ச நாளாக அவன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறான்.

- அப்படியா?

- ஆமாம். ஒரு நாள் என்னை வழிமறித்தான். முறைத்துப் பார்த்தான்.

- அவன் ஒரு ராஸ்கல்!

- அவனை எச்சரியுங்கள்.

மறுநாள் இந்தர், சசியை எச்சரித்தான். சசி அதைப் பொருட்படுத்தவில்லை. பதிலுக்கு முறைத்தான். - ஓர் அந்நியப்பெண்ணிடம் நடந்து கொள்வதைப் பற்றி நீ கேட்கவேண்டிய அவசியமில்லை என்றான்.

- அவள் அந்நியப்பெண் இல்லை என் காதலி என்றான் இந்தர்.

- உன் காதலி என்று எழுதியா ஒட்டியிருக்கிறது?

- சசி, என் நண்பன் என்று உன்னை இப்போது விடுகிறேன். எச்சரிக்கை என்றான்.

ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் மாலை ரமி திரும்பிக் கொண்டிருந்தாள். அவளை சசி வழிமறித்தான்.

- ரமி, நீ எனக்கும் காதலியாக இரு. இல்லாவிட்டால் ஜாக்கிரதை உனக்கும் இந்தருக்கும் உள்ள தொடர்பை ஊர் பூராவும் பறை சாற்றிவிடுவேன் என்றான்.

ரமி அவனை முறைத்துப் பார்த்தாள். 'சீ' என்று கூறிவிட்டு விடுவிடென்று நடந்தாள்.



இந்தருக்கு இந்தச் செய்தி சென்றது. அவனுக்குக் கோபம் பொங்கியது. சசி வரும் வரை காத்திருந்தான். வந்ததும் - சசி, இதெல்லாம் என்ன? என்று இரைந்தான்.

- என்ன விஷயம்?

- ரமியை வழிமறித்துப் பேசியிருக்கிறாய்.

- இல்லை; பேசவில்லை. நீ எச்சரித்த பிறகு அவளிடம் பேசுவதேயில்லை.

- அவளே சொன்னாள்!

- அவள் என்ன வேண்டுமானாலும் சொல்லுவாள். வாய் வார்த்தைக்கு அளவு ஏது?

நொடித்துவிட்டு சசி உள்ளே போனான். இந்தர் கையைக் கசக்கியவாறு உட்கார்ந்தான்.

ஒரு நாள் மாலை.

பெண்கள் - கல்லூரி பஸ்ஸுக்காக சசி காத்திருந்தான். மாலைகளில் மாத்திரம் ரமி கல்லூரி பஸ்ஸை உபயோகித்துக் கொண்டிருந்தாள்.

பஸ் வந்தது. ரமி இறங்கினாள். சசி அவளைப் பின் தொடர்ந்தான். சிறிது தூரம் சென்றதும் முன்னால் போய் வழி மறித்தான். அப்போது திடீரென அவனது சட்டையைப் பிடித்தான் இந்தர். சசிக்குத் தெரியாமல் அவன் அவனைப் பின்தொடர்ந்திருக்கிறான்.

வாக்கு வாதம் ஆரம்பித்தது. அது முற்றியதும் கை கலப்பு ஏற்பட்டது. இருவரும் அடித்துக் கொண்டார்கள். இந்தருக்குப் பலமான அடி. தெருவில் உள்ளோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். கறுவிக் கொண்டே நடந்து போனான் இந்தர்.

அதற்குப் பிறகு இருவரும் பேசவதில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதில்லை. எதிரிகள் போல நடந்தார்கள்.

ஒரு லீவு நாள். அன்று ரமி தன் சினேகிதியுடன் மாட்னி ஷோவுக்குப் புறப்பட்டாள். மாடியிலிருந்து, அதை இந்தர் கவனித்தான்.

வழக்கமாக இந்தரும் சினிமாவுக்குப் போயிருப்பான். ஆனால் மறுநாள் பரீட்சை ஆதலால் போகவில்லை.

ஐந்து நிமிடம் சென்றது. டீக்காக டிரஸ் செய்து கொண்டு, சசி அறையிலிருந்து வெளியே போய்க் கொண்டிருந்தான். அதைக் கவனித்த இந்தருக்குச் சுரீர் என்றது, ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். சசியின் பின்னால் போக ஆரம்பித்தான்.

அவன் நினைத்தது சரியாக இருந்தது. சசி தியேட்டரை நோக்கித்தான் போனான். ஒரு புதுப்படம் அதில் ஓடிக்கொண்டிருந்தது.

தியேட்டரில் ரமியின் கார் நின்றது. சசி உயர்ந்த வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போனான்.

இந்தரின் கண்கள் சிவந்து போயின. அரை மணி அங்கேயே நின்றான்? உள்ளே போகவில்லை.

பிறகு ஏதோ நினைத்து அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான் - ஆமாம் இதுக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று முனகிக் கொண்டான்.

இரவு ஏழு மணி சினிமா விட்டு, சசி அறைக்கு வந்தான். அறை திறந்திருந்தது விளக்கும் எரிந்தது. யாருமில்லை. மொட்டை மாடியில் இந்தர் உலாவிக் கொண்டிருந்தான். கால் மணி சென்றது - டேய் என்று ஒரு குரல். இந்தர் உள்ளே வந்தான். அவன் கண்கள் சிவு சிவு என்று இருந்தன. கை உதறிக் கொண்டிருந்தது.

சசி அலட்சியமாகத் தலையை நிமிர்த்தினான்.

- நீ ரமியை ஃபாலோ செய்தாய்? என்றான் இந்தர்.



- நான் ஏன் செய்ய வேண்டும்? அவள்தான் என்னை ஃபாலோ செய்தாள்.

- பொய் சொல்லாதே, ராஸ்கல். நீ என் வாழ்க்கையில் அநாவசியமாய்க் குறுக்கிடுகிறாய்.

- ராஸ்கல் என்றெல்லாம் பேசாதே! அன்றைக்குப் பட்ட அடி போதாதா?

பேச்சுத் தடித்தது. முடிவில் கை கலக்க ஆரம்பித்தார்கள். இந்தர் இதை எதிர்பார்த்திருந்தான். ஆனால், முன் தடவை போல் சசியிடம் உதை வாங்கத் தயாராயில்லை. எனவே பையில் ஒரு பேனாக் கத்தியைத் தயாராக வைத்திருந்தான்.

சண்டை நடந்தது. தன் வலு குறைந்துவிட்டது என்று நினைத்த தருணத்தில் இந்தர் சட்டென்று கத்தியை எடுத்தான். அங்கும் இங்கும் ஐந்து குத்துக்கள் விழுந்தன. சசியின் பலம் வாடிவிட்டது. கை சோர்ந்துவிட்டது. உடம்பிலிருந்து ரத்தம் பீறிட்டது.

இந்தர் வெறியோடு நின்றான். சசியின் கண்களில் ஜீவ களை மழுங்கிக் கொண்டிருக்கும்போதுகூட அவனது வெறி தணியவில்லை. எங்கேயாவது எழுந்துவிடுவானோ என்பதுதான் அவன் கவலை. எழுந்தால் மீண்டும் குத்த வேண்டும்.

சசியின் கண்கள் மெதுவாகச் செருகின. அரை இமை மூடாமல் நின்றது. அப்போதுகூட இந்தரால் எதையும் அனுமானிக்க முடியவில்லை.

ஐந்து நிமிடங்கள் சென்றன. நாற்காலியில் இந்தர் உட்கார்ந்தான். சசி எழுந்து அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்தான். அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலும் ஐந்து நிமிடம் சென்றது. சசி எழுந்திருக்க வில்லை. இந்தர் எழுந்தான். அவனருகே வந்தான். குனிந்து

பார்த்தான். ஒரு சந்தேகம். இருதயத்தைத் தொட்டுப் பார்த்தான். பிறகு சுவாசத்தைத் தொட்டுப் பார்த்தான். இரண்டும் நிசப்தமாயிருந்தன.

- சசி என்றான். மெள்ள உலுப்பினான். புரட்டினான். நிமிர்த்தி உட்கார வைத்தான். உடல் துவண்டு விழுந்தது. பயம் வந்தது. தண்ணீரைக் கொண்டு வந்தான். சசியின் முகத்தில் தெளித்தான். மீண்டும் - சசி, சசி என்றான். சசி அசையவில்லை. அவன் கண்கள் பாதி செருகியபடியே இருந்தன.

இந்தருக்கு அழுகை வந்தது. உடம்பு வியர்த்தது. கை கால்கள் உதறின, ஐயோ! கொலை செய்துவிட்டேனா என்று தவித்தான்.

கீழே சத்தங்கள் கேட்டன. யாராவது வருகிறார்களோ?

ஒரு கணம் யோசித்தான், எதுவும் ஓடவில்லை. கொடியிலிருந்த வேட்டியை எடுத்தான். சசியின் உடல்மீது மூடினான். சட்டையை மாட்டிக் கொண்டான். வெளியே புறப்பட்டான். மணி எட்டரை.

மாடிப் படியில் இறங்க முடியவில்லை தள்ளாட்டம். கொலை, கொலை என்று மனம் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. இந்தர்! நீ கொலை செய்துவிட்டாய்! வாழ்வில் ஒரு பாதகத்தைச் செய்துவிட்டாய்? நீ ஒரு பாவி! மனம் கூறிக்கொண்டே இருந்தது.

தெருவில் இறங்கினான். எதிரே மூன்றாவது நண்பன் வந்தான் - இந்தர், எங்கே போகிறாய்? என்றான் - இதோ பங்க் கடை வரை என்று சொன்னான். நடையை வேகப் படுத்தினான்.

தெரு முனை வந்தது. ஓட ஆடம்பித்தான். அநேகர் திரும்பிப் பார்த்தார்கள் கவலைப்படவில்லை. யாரையும் கவனிக்கவில்லை. எங்கேயும் நிற்கவில்லை. ஒரே ஓட்டம்.



நகர எல்லை வந்தது. வேகம் குறைந்தது, கடைசியில் ஜன நடமாட்டமே இல்லை என்று தெரிந்ததும் நின்றான்.

- இந்தர், நீ ஓர் உயிரை மாய்த்துவிட்டாய் என்று மனம் கூவியது.

முகத்தை கர்ச்சீப்பால் மூடினான். அழ ஆரம்பித்தான்.

பெரியவர் திடீரென்று மௌனமானார். நரேன் திடுக்கிட்டு விழித்தான்.

- ஏன் நிறுத்திவிட்டீர்கள்?

பெரியவர் சிரித்தார் - அப்புறம் என்ன இருக்கிறது? மறுநாள் காலையில் அவன் போலிசில் சரணடைந்தான். வழக்குப் பதிவு செய்யப்பட்டது. விசாரணை நடந்தது. கோர்ட்டுக்கு வழக்கு வந்தது.

- அங்கே என்ன நடந்தது?

- இந்தர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டான். ஆனால் கொலை செய்த காரணத்தை மட்டும் மறைத்து விட்டான்.

. . . ஏன்?

. . . ரமியைப் பற்றி எது சொன்னாலும் அது அவள் வாழ்க்கையைப் பாதித்து விடும் என்று நினைத்தான். அதனால் அவளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. போலீசாரும் அவன் சொல்வதற்கு இணங்கிப் போனார்கள்.

- அப்படியா?

- ரமியின் அப்பா சின்னசாமி செல்வாக்கு மிக்கவர். தனது பெண்ணின் பெயர் வழக்கில் அடிப்படுவதை அவர் விரும்பவில்லை.

இதற்காகத் தனது செல்வாக்கை உபயோகித்தார், போலீசாரும் அவர் கூறியதற்கு இணங்கினார்கள்;

பெண்ணின் பெயரைக் கொண்டு வரவில்லை. வழக்கில் சகிக்கும் இந்தருக்கும் பல விதங்களில் போட்டி; பகை. அதன் காரணமாகத்தான் இந்தக் கொலை நிகழ்ந்தது என்று வழக்கு ஜோடித்தனர்.

- தீர்ப்பு என்ன?

- நீதிபதி உண்மை ஒளிக்கப்படுகிறது என்பதை உணர்ந்தார். எனினும் தமக்குக் கிடைத்த ருசுக்களை வைத்துக் கொண்டு இந்தரைக் குற்றவாளி என்று தீர்மானித்தார். அவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கினார். அவன் சிறையில் தள்ளப்பட்டான்.

மழை நின்றுவிட்டது. தூறல்தான் வீசியது. நரேன் கண்களைத் துடைத்தான், வெளியே பெரியவரைக் காண வில்லை. அவர் உருவம் இப்போது தனது மனமாகக் கரைந்திருப்பதை உணர்ந்தான். அது ஆச்சரியமாக இருந்தது. அவன் மனம் பலவித உருவங்களாக மாறி அவனுக்கே கதை சொல்லிக் கொண்டிருந்தது. இந்தக் கதையை அவனிடம் எத்தனை தடவை சொல்லிவிட்டது? அவனும் எத்தனை தடவை கேட்டுவிட்டான்? அலுக்கவே யில்லை.

மறுநாள் காலை எழுந்தபோது ஏழு மணி. அறையில் நரேன் எட்டிப் பார்த்தான். உமேஷைக் காணவில்லை.

சட்டையைப் போட்டுக் கொண்டான். பட்டன் களைப் பொருத்தியவாறே கீழே இறங்கினான்.

உமேஷ் எதிரே வந்தான். நரேனைப் பார்த்ததும் சட்டென்று நின்றான்; அவன் முகத்தில் ஒரு பிரமிப்பு.

- நீ இப்போது என்ன நினைக்கிறாய் என்று தெரியும்! என்றான் நரேன்.

- என்ன நினைக்கிறேன்?



- இதே மாதிரிதானே அன்றைக்கும் நான் மாடியி லிருந்து இறங்கி உன் முன் வந்தேன்.

- ஓ அதுவா! என்றான் உமேஷ்.

- அதை ஏன் நினைக்கிறாய்? அதை இப்போது நினைத்தாலும் என் உடம்பு நடுங்குகிறது. எவ்வளவு பயங்கரமான இரவு அது?

- வருந்துகிறேன் உமேஷ்! அப்படிப்பட்ட அனுபவத்தை உனக்குத் தந்ததற்கு வருந்துகிறேன்.

இருவரும் வெளியே நடந்தார்கள். உமேஷ் வெகு தூரம் வரை பேசவில்லை.

இரண்டு பர்லாங் நடந்திருப்பார்கள். கடைசியில் உமேஷ் - இந்தர் என்று அழைத்தான்.

- இந்தர் என்று கூப்பிடாதே, உமேஷ்! அந்தப் பெயர் வெறுத்துவிட்டது. நரேன் என்றுதான் வீட்டில் அழைப்பார்கள். அந்தப் பெயரிலேயே அழை. நான் புது ஜன்மம் எடுத்துவிட்டேன்.

- அப்படியா?

- ஆமாம். எனக்கு இப்போது ஒன்று தோன்றுகிறது. நரேந்தர் என்ற பெயரிலுள்ள இந்தரை நிரந்தரமாக வெட்டி விடலாம் என்று தோன்றுகிறது. இந்தர்தான் கொலை செய்தான். நரேன் செய்யவில்லை. நரேன் புதியவன். புதிய ஜன்மம் எடுத்தவன்.

இருவரும் மேலே நடந்தார்கள். பிறகு உமேஷ் திடீரென்று திரும்பி - இந்தர். . . ஐ'ம் ஸாரி. . . நரேன். . . உன்னிடம் ஒன்று கேட்கலாமா? .

- கேள்.

- உனக்கு ஆயுள் தண்டனை கொடுத்தார்களே, அதற்குள் எப்படி வெளியே வந்தாய்? தப்பித்து வந்து விட்டாயா?

நரேன் அவனை ஆழ்ந்து பார்த்தான்.

- சொல்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்.

- கேள்.

- அவள் இந்த ஊரில் இருக்கிறாளா?

- ரமிதானே?

- ஆமாம்!

- அவளைப் பற்றிய விஷயமே உனக்குத் தெரியாதா?

நரேன் திடுக்கிட்டு நின்றான்.

* * *

## 5

சிறிது நேரம் நரேன் உமேஷைப் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன சொல்லப் போகிறான் என்று ஆவல், பயம்.

உமேஷ் ஆரம்பித்தான். . . ரமிக்கு என்ன நடந்தது தெரியுமா . . . உமேஷ் நிறுத்து. அதற்குள் சொல்லி விடாதே, நரேன் மார்பை அழுத்தினான். கண்ணை இறுக மூடினான்.

சில கணங்களுக்குப் பிறகு அவனே ஆரம்பித்தான்.

. . . உமேஷ்; அவளுக்கு என்ன நடந்தது என்பதை எனக்குத் தெரிந்தவரையில் முதலில் சொல்லுகிறேன். அதற்குப் பிறகு நீ சொல்லு என்றான்.

. . . சரி சொல்லு.

இருவரும் ஜூபிலி பார்க்குக்குள் நுழைந்து ஒரு பெஞ்சில் அமர்ந்தார்கள்.



. . . ஆயுள் தண்டனை பெற்று நான் ஜெயிலுக்குப் போனேன். ஒரு மாதம் வரை தனி அறையில் இருந்தேன். பிறகு பொது அறைக்கு என்னைக் கொண்டு வந்தார்கள்.

தனி அறைதான் எனக்குத் தேவை என்று கூறினேன். அவர்களுக்கே ஆச்சரியம். யாரும் தனி அறையை விரும்புவதில்லை அது ஒரு நரகம்.

அறையுள்ளே யோசித்துக் கொண்டேயிருப்பேன். அழுவேன். ரமி - ரமி என்று கம்பிகளில் தலையை இடித்துக் கொள்வேன். சிறையில் இருப்பது கஷ்டமல்ல. ரமியைப் பார்க்காமல் இருப்பதுதான் கஷ்டம். என்னால் வேறு எதையும் நினைக்க முடியவில்லை. அவளைத்தான் நினைத்தேன்.

ஒரு நாள் இரவு. வெகுநேரம் அழுதேன். உடம்பு எரிந்தது. மனத்தில் ஒரே பரபரப்பு. அந்தக் கணத்தில் ரமியைப் பார்க்க வேண்டுமென்று துடிப்பு.

கதவின் கம்பிகளை உலுக்கினேன்; தலையை இடித்தேன். ரமி ரமி என்று கத்தினேன், நெற்றியிலிருந்து ரத்தம் வடிந்தது. வெறியோடு இடித்துக் கொண்டே இருந்தேன்.

சத்தம் கேட்டு வார்டர் ஓடி வந்தார்; அதட்டினார். அமைதியாக இருக்கச் சொன்னார்.

மறுநாள் வெல்ஃபேர் ஆபீசர் முன் கொண்டுவிடப் பட்டேன்.

அவர் பெயர் ராமிரெட்டி. மிகவும் நல்லவர். என்னை விசாரித்தார். நான் சிறிது நேரம் அழுதேன். பிறகு கதை முழுவதையும் சொன்னேன். ரமியைப் பார்க்க வேண்டும் என்று கூறினேன்.

அவர் என்னைச் சமாதானம் செய்தார். சொந்த முயற்சி எடுத்து ரமியின் போட்டோவை வாங்கித் தருவதாக கூறினார்.

நான் அரெஸ்ட் ஆவதற்கு முன் என் அறையிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் போலீசார் கைப்பற்றினார்கள். அதில் ரமியின் போட்டோவும் இருந்தது. ஊரில் உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு எழுதி அந்தப் போட்டோவை ராமிரெட்டி தருவித்தார்.

போட்டோ வந்த தினத்தை மறக்க முடியாது. போட்டோவை இதயத்தோடு அணைத்துக் கொண்டேன். சாப்பிடவில்லை. உறங்கவில்லை. 'ரமி ரமி ரமி' என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

மெள்ள மெள்ள சிறை வாழ்க்கை பழக்கமாகியது. மற்றவர்களுடன் பழகினேன்; பேசினேன்; பொழுது மெதுவாக ஊர்ந்தது.

ஒரு வருடம் சென்றது.

ஒரு நாள் ராமிரெட்டி ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தார். திறந்து பார்த்தேன். பார்வை நடுங்கியது. கண்ணில் நீர் ததும்பியது.

ரமி எழுதியிருந்தாள்.

'நீங்கள் ஒரு சிறையில்.
நானும் ஒரு சிறையில்,
நீங்கள் இல்லை எனில்
இந்த உலகமும் ஒரு சிறை,
உண்கிறேன், உறங்குகிறேன்.
நினைவை மட்டும் சிறையில்
துயில் கொள்ள விடுத்துள்ளேன் - ரமி'

நான் பதில் எழுதினேன்.

'சிதை உயிரற்றதைத்தான் எரிக்கிறது.
ஆனால்
உன் சிந்தனை உயிருள்ளதையே எரிக்கிறது.



36391
6384246

உன் நினைவு மட்டும்
என்னுடன் துயில் கொள்ளுமானால்
சிறையும் சிறையல்ல
நிலவு வீசும் ஒரு மனை.
- இந்தர்.

மாதம் ஒரு முறை கடிதங்கள் மாறிக் கொண்டன. அவள் முகவரிக்கு நான் நேரிடையாக எழுதவில்லை. சினேகிதி முகவரிக்கு எழுதச் சொன்னாள். எழுதினேன்.

கடிதங்கள் மூலம் எங்களிடையே ஒரு உடன்பாடு. அதன்படி பௌர்ணமி நாட்களில் இரவு ஒன்பதிலிருந்து பத்து வரை நிலவை அவள் பார்த்திருக்க வேண்டும். அதே நிலவை நானும் பார்த்திருக்க வேண்டும்.

நிலா நாளில் சிறை மணி ஒன்பது அடிக்கும் வரை காத்திருப்பேன். பிறது சிறைக் கொட்டடியில் இடுக்கிக் கொண்டு முகத்தை மட்டும் கஷ்டப்பட்டு வெளியே நீட்டுவேன்; நிலவை ஆர்வத்துடன் பார்ப்பேன். ரமி நீ பார்க்கும் நிலவை நானும் பார்க்கிறேன். நம் இதயங்கள் ஒன்று கூடுகின்றன என்பேன். கண்ணீர் விடுவேன்.

கடிதங்கள் இரண்டு வருடங்கள் தொடர்ந்தன. பிறகு திடீரென்று நின்றுவிட்டன.

அவள் எழுதவில்லை.

நான் எழுதிய கடிதங்களும் திரும்பிவிட்டன. தவித்து விட்டேன். அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும்?

எதையெல்லாமோ நினைத்து வருந்தினேன். நாட்களை யுகங்களாகக் கழித்தேன். மேலும் இரு வருடங்கள் சென்றுவிட்டன. நான் ஒரு யந்திர - கதி வாழ்வுக்கு வந்துவிட்டேன்.

ஒரு நாள் ராமிரெட்டி வந்தார். அவர் கையில் கடிதத்தைப் பார்த்ததும் துள்ளி எழுந்தேன்.

அவர் போன பிறகு படிக்க ஆரம்பித்தேன்.

"அன்புள்ள இந்தர்.

கடிதங்கள் நின்றாலும் மனம் உங்களைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. என் தந்தைக்கு நம் கடிதத் தொடர்பு தெரிந்துவிட்டதன் காரணத்தால் நான் எழுதுவது துண்டிக்கப்பட்டுவிட்டது. விஷயம் தெரிந்தது முதல் அவர் என்னை மணம் செய்விப்பதில் ஈடுபட்டு விட்டார். தீவிரமாக ஈடுபட்டுவிட்டார்.

எவ்வளவோ எதிர்க்கிறேன். காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறேன். ஆனால் எவ்வளவு நாள் முடியும்? நான் ஒரு பெண். நீங்கள் இல்லாததால் அபலை. நீங்கள் இருந்திருந்தால் உங்களோடு ஓடி வந்திருப்பேன். என் துரதிர்ஷ்டம். நீங்கள் இல்லை. அபலையாக நிற்கிறேன்.

இப்போது ஒரு வரனைப் பிடித்து வந்திருக்கிறார். எப்படியும் மணத்தை முடித்து விடவேண்டுமென்கிறார். நான் என்ன செய்வேன்?

இந்தர்! என் முழு மனமும் நீங்கள். எனக்காகச் சிறை சென்றீர்கள். எனக்காகத் துன்பப்படுகிறீர்கள். எனக்காகத் தனிமையில் அல்லல் படுகிறீர்கள். எதையும் நான் மறக்க முடியாது. நீங்கள்தான் என் ஒரே நினைவு.

எனக்கு மட்டும் சிறை வந்து உங்களோடு வாழ அனுமதி கிடைத்தால் இதோ ஓடி வந்து விடுவேன். உங்களுடன் சிறை வாழ்வை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன். ஆனால் அதற்கு வழியில்லை. என்ன செய்வேன்?

இந்தர்! நீங்கள் ஆயுள் தண்டனை பெற்றவர். வெளியே நீங்கள் வர இன்னும் இருபது ஆண்டுகளாவது ஆகும். அது வரை என்னால் உங்களுக்காகக் காத்திருக்க முடியும். இன்பமுடன் காத்திருப்பேன். ஆனால் உலகம் என்னைக் காத்திருக்க விடுவதில்லை. அதுதான் என் துக்கம்



என்னை உலகம் நெரிக்கிறது. ஊரார் நெரிக்கிறார்கள். உற்றார் நெரிக்கிறார்கள்.

நான் தவிக்கிறேன். எந்த முடிவுக்கும் வர முடிய வில்லை. கடைசியில் உங்களுக்கே எழுதிவிடுவதென்று எண்ணினேன். எழுதுகிறேன். இப்போது இருக்கும் சூழ்நிலையில் என்னால் வெகு நாட்கள் வரை எதிர்த்து நிற்க முடியாது என்று தோன்றுகிறது.

அப்படி ஒரு நிலை வந்தால். . . என் மணம் நிச்சய மாகிறது என்று ஒரு நிலை வந்தால், அதை நீங்கள் பூரணமாக, மனப்பூர்வமாக, இதய பூர்வமாக ஒத்துக் கொள்வீர்களா, இந்தர்? அழாதீர்கள். நான் உங்கள் அடிமை. உங்களுக்கு இது பிடிக்கவில்லை என்றால் சொல்லுங்கள். நான் உயிர் துறந்து விடுகிறேன். அதற்கு நான் எப்போதும் சம்மதம்.

எனவே இசைவு கொடுப்பதானால், இதய பூர்வமாக ஆசியோடு கொடுங்கள்.

உங்களை மறவாத,

- ரமி."

கடிதத்தை முடித்தேன். கண் மறைத்தது.

வெகு நாழிகைக்குப் பிறகு எழுந்தேன். எதுவும் ஓடவில்லை. இரண்டு நாள் கண்ணீரில் ஓடியது. மூன்றாம் நாள் கடிதம் எழுதினேன்.

"அன்புமிக்க ரமி,

வாழ்வு இருவருக்கும் மலராவிட்டால் ஒருவருக்காவது மலரட்டும். நீ எங்கேயாவது வாழ்கிறாய் என்ற நினைவே எனக்குப் போதுமானது. நீ மறைந்துவிட்டால் என்னால் வாழ முடியாது. ரமி. ஆகவே, நீ வாழ வேண்டும். உனக்கு மனப்பூர்வமாக ஆசி தருகிறேன்.

- இந்தர்."

கண்ணீரோடு எழுதிக் கடிதத்தை அனுப்பினேன். நாட்கள் ஓடின. வாரங்கள் ஓடின. மாதங்கள் ஓடின. அவளிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

ஒரு வருடம் ஓடிவிட்டது. திடீரென ஒரு நாள் சிறைச்சாலை முழுதும் மகிழ்ச்சி புரண்டோடியது - கைதிகள் ஒருவரை ஒருவர் அழைத்துப் பேசிக் கொண்டார்கள்.

எனக்கும் விஷயம் தெரிய வந்தது. மகாத்மா காந்தியின் நூறாவது பிறந்த தினவிழா நெருங்கியதால் அரசாங்கம் ஒரு முடிவு எடுத்திருந்தது. கைதிகள் தங்கள் தண்டனையில் மூன்றில் ஒரு பங்கை ஏற்கனவே அனுபவித்திருந்தால் அவர்களை விடுதலை செய்யப் போவதாக அறிவித்தார்கள். எனது நன்னடத்தைக்கான குறைப்புகளையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் நானும் மூன்றிலொரு பங்கை அனுபவித்திருந்தேன். இன்னும் ஒரு வாரத்தில் என் விடுதலை.

மனம் துள்ளியது. ஆனந்தத்தில் கண்ணீர் சிந்தினேன். திடீரென்று ஒரு துக்கமும் பிறந்தது. ரமியின் திருமணத்திற்கு நான் அனுமதி கொடுத்து ஒரு வருடத்திற்குப் பிறகு எனக்கு இந்த விடுதலை கிடைக்கிறது. முந்திய வருடமே இந்த விடுதலை கிடைத்திருக்கக் கூடாதா?

விடுதலை கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் நான் ரமிக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டேனே?

மனம் தவித்தது. இருதயம் வேதனையோடு துவண்டது. திக்பிரமையோடு நின்றேன். கடவுளே, ரமிக்குத் திருமணம் ஆகாமல் இருக்கக் கூடாதா என்று பிரார்த்தனை செய்தேன்.

கடைசி நாள் வந்தது. என்னை விடுதலை செய்தார்கள். வெளியே வரும்போது மகிழ்ச்சி இல்லை.



ஏன் என்னை விடுதலை செய்கிறார்கள் என்றுதான் நினைத்தேன். இன்பமே இல்லை; துன்பந்தான். ராமி ரெட்டி என்னை வழியனுப்ப வந்தார். அவர் கையைப் பிடித்துக்கொண்டு அழுதேன்.

வீட்டுக்கு வந்து ஒரு வாரம் கூடத் தங்கவில்லை. ரமியைப் பார்ப்பதற்கு இதோ வந்துவிட்டேன் என்றான் நரேன். அவன் குரல் உடைந்துவிட்டது. பேச்சை முடித்து விட்டுக் கலக்கத்துடன் உமேஷைப் பார்த்தான் நரேன்.

பெரிய மௌனம் சூழ்ந்தது. உமேஷ் நிமிர்ந்தான். அவன் கண்ணில் நீர் நிறைந்தது.

சில நிமிடங்களுக்குப் பிறகு அவன் - நரேன் என்றான், குரல் கம்மியிருந்தது.

- ரமி என்ன ஆனாள் என்று தெரிய வேண்டாமா?

- தெரிய வேண்டும்.

உமேஷ் நிமிர்ந்து பார்த்தான்.

- நீ நினைத்தது நடந்துவிட்டது, நரேன்.

- திருமணமா?

- ஆமாம்.

நரேன் சிலையாக நின்றான். அவன் கைகளை உமேஷ் இறுகப் பிடித்துக்கொண்டான்.

- எப்போது?

- ஒன்பது மாதமாகிவிட்டது.

- யாரைப் பண்ணிக்கொண்டாள்?

- நல்ல குடும்பந்தான். அவள் கணவன் ஒரு கம்பெனியில் எக்ஸிகியூடிவ் பதவியில் இருக்கிறார்.

- பார்க்க எப்படி இருக்கிறார்.

- நன்றாக இருக்கிறார்.

- கல்யாணத்திற்குப் போயிருந்தாயா?

- இல்லை.

- எங்கே பார்த்தாய்?

- தெருவில் நடந்து போகும்போது இருமுறை பார்த்தேன்.

- ரமி சந்தோஷமாக இருந்தாளா?

- அது எப்படித் தெரியும்? வெளித்தோற்றத்தில் ஒன்றும் தெரியவில்லை.

- நரேன் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு - இப்போது அவள் எங்கிருக்கிறாள்?

- சென்னையில், புருஷனுடன்.

- அட்ரஸ் தெரியுமா?

- தெரியாது. தெரிந்துதான் என்ன பிரயோசனம்?

- உமேஷ், அவளை நான் தரிசிக்கவேண்டும் என்றான் நரேன்.

- தரிசிக்கவா?

- ஆமாம்! தரிசிக்கத்தான். அவள் தெய்வீகமானவள். தெய்வம்தான். சிறையில் இருந்தபோது நான் என்ன செய்வேன் தெரியுமா? - அவளது படத்தைத் தினமும் தொட்டுக் கும்பிட்டேன். என் காதலியாக இருப்பது தவிர எனது வழிகாட்டியாகவும் அவள் இருந்தாள். தெய்வம் போல் அவளை வழிபட்டேன். அவளை நான் தரிசிக்க வேண்டும்.



இரவு - பத்து மணி உமேஷ் உறங்கிவிட்டான். நரேன் மெள்ள எழுந்தான். மாடிப்படி இறங்கி, கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். ஒன்பதாவது நிலா காய்ந்து கொண்டிருந்தது. பிரமை பிடித்தது போல் விரைவாக அவன் நடந்தான். ரமியின் பங்களா முன் அவன் நின்றான். மேல் மாடியில் விளக்கு எரிந்தது. வீட்டை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள்; வேறு யாரோ இருந்தார்கள்.

அதோ வாசலில் அந்த இடம் இருக்கிறதே, அங்கே தான் மாலை 5-05க்கு ரமி நிற்பாள்; புன்னகை புரிவாள். ஒவ்வொரு புன்னகையும் ஒரு மாடிப்படி . . .

அது போர்டிகோ. அந்த நிழலில் ஒருநாள் நின்று ஜாடை காட்டி இருக்கிறாள்.

வெகு நேரம் பங்களா முன் நின்றான்.

பிறகு அடுத்த வீட்டின் மீது பார்வை விழுந்தது. வீடு ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. பார்ப்பதற்குப் பயமாக இருந்தது. மனம் நடுங்கியது.

அந்தச் சம்பவம் எல்லாம் நினைவுக்கு வந்தது.

மாடியில் சசி நிற்பது போல் திடீரென்று தோன்றியது. உடல் பதறியது.

- சசி, சசி வேண்டுமென்றே உன்னைக் கொல்ல வில்லை. அது ஒரு விபத்து ஆமாம் விபத்து என்னை மன்னித்து விடு. உரிய தண்டனையை நான் பெற்று விட்டேன் என்றான்.

அவன் மீது யாரோ கை வைத்தார்கள் திரும்பிப் பார்த்தான். திடுக்கிட்டான்.

★ ★ ★

## 6

எதிரே நின்று கொண்டிருந்தவன் அசலம். ரமி வீட்டின் கார் டிரைவராய் இருந்தவன்.

அவனைக் கண்ட திக்பிரமையிலிருந்து மீளுவதற்குச் சிறிது நேரம் ஆகியது.

- என்ன தம்பி?

கைகளைப் பிடித்துக் கொண்டு அசலம் தழ தழுத்தான்.

- எப்படியிருக்கிறீர்கள்? சௌக்கியமா? என்றான் நரேன்.

- சௌக்கியம்தான் தம்பி! வாழ்க்கையைப் பாழாக்கிக்கிட்டாயே! என்றான் அசலம்.

பழைய நாட்களைப்பற்றிப் பேசினார்கள் தனக்கு நேர்ந்ததைச் சுருக்கமாக விளக்கினான் நரேன்.

- இப்போது சின்னசாமி எங்கேயிருக்கிறார் என்றான் நரேன்.

- பங்களாவைக் குடக்கூலிக்கு விட்டுவிட்டு மெட்ராஸ் போயிட்டார் அங்கே ஒரு வீடு வாங்கி வாழ்க்கை நடத்துறாரு நான் இங்கே வேறு ஒருத்தர் கிட்டே வேலை செய்யறேன். நீ செஞ்சது எல்லாரையும் பாதிச்சிட்டது தம்பி.

- வருந்துகிறேன் அசலம்.

- உனக்கு ஒரு விஷயம் வச்சிருக்கேன்.

என்னது?

- எப்போதாவது உன்னைப் பார்த்தால் கொடுத்துடுன்னு ஒரு கவரை எங்கிட்டே ரமி கொடுத்தது.



- ரமியா? (அவன் மன எல்லையில் பெரிய கடல் ஒன்று தோன்றி அலைகளை வாரி இறைத்தது.)

- ஆமாம் வீட்டுப் பக்கம் வா!

போனார்கள். வீட்டுக்குள்ளிருந்து அசலம் திரும்பி வர ஐந்து நிமிடமாகியது. நரேன் துடித்துக் கொண்டிருந்தான்.

- இவ்வளவு சீக்கிரம் உன்னைச் சந்திப்பேன்னு எதிர் பார்க்கலை, தம்பி! என்று சொல்லிக் கவரை அவன் கொடுத்தான்.

- எப்போ கொடுத்தா?

- கல்யாணமாகி புருஷன் வீடு புறப்பட்ற டயத்திலே கொடுத்தது. அவசர அவசரமாகக் கொடுத்தது.

(ஏன் இவனிடம் கொடுத்தாள். அவளே எனக்கு அனுப்பியிருக்கக்கூடாதா?)

- அவள் விலாசம் தெரியுமா?

- தெரியாதுங்களே?

- சின்னசாமி விலாசம்?

- அதுவும் தெரியாதுங்க, கேட்டுக்கலீங்க,

விடை பெற்றுவிட்டு நரேன் விறு விறு என்று நடந்தான். அரை மைல் நடந்த பிறகு நின்றான். கை அரித்தது.

கவரைக் கிழித்தான்.

ஒரு சின்ன டைரி,

அவளுக்கு அவன் கொடுத்தது.

புரட்டிப் பார்த்தான் முதல் பக்கத்தில் அவன் எழுதிய பிஸிக்ஸ் பார்முலா அப்படியே இருந்தது. அதன்

பிறகு எல்லாம் காலிப் பக்கங்கள். ஓர் எழுத்துக்கூட இல்லை.

டைரியின் பிளாஸ்டிக் கவரில் ஒரு சின்ன கவர். அதைத் திறந்தான், அதற்குள் அவனது போட்டோ, அவளிடம் அவன் கொடுத்திருந்தது,

கண் நிறைந்தது; திருப்பிப் பார்த்தான். ஓர் ஓரத்தில் பென்சிலில் சில எழுத்துக்கள் உற்றுப் பார்த்தான்.

- விடை பெறுகிறேன்.

இந்த இரண்டு வார்த்தைகள்தான்.

கையெழுத்துக்கூட இல்லை.

கண்களைத் துடைத்தான். பிரமை பிடித்தவன் போல் மேலே நடந்தான்.

இவைகளை ஏன் திருப்பித் தந்தாள். அதன் காரணம் என்ன மனம் குமைந்தது.

உமேஷின் வீட்டை அடைய பத்து நிமிடமாகியது. வாசலில் கண்ணைக் கசக்கிக் கொண்டு உமேஷ் நின்று கொண்டிருந்தான்.

- எங்கே போய்விட்டாய். நரேன்? என்று கூறி அவனை உள்ளே அழைத்துச் சென்றான்.

மறுநாள் அவன் தன் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான். ஊரை அடையும்போது மணி பதினொன்று. வண்டிப் பரையில் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

- நல்ல வேளை. வந்துட்டே தவிச்சுப் போயிட்டேன்.

- ஏம்மா!

- உங்கப்பா குதிக்கிறார்டா! இன்னிக்குப் பெண் பார்க்கப் போகனும்.

- பெண்ணா?



தயங்கி நின்றான். அம்மா அவனைக் கூர்ந்து கவனித்தாள்.

- ஏண்டா?

அவன் திரும்பினான்.

- ஏம்மா இதெல்லாம்?

- நான் என்ன பண்ணுவேன்? உங்கப்பாதான் - ஏற்பாடு பண்ணறார். காலத்தில் கல்யாணம் பண்ணி வைக்காததினாலேதான் நீ இம்மாதிரி செஞ்சேன்னு சொல்றார்.

அவன் பதில் பேசவில்லை.

- அவளைப் பார்த்தியாடா?

- யாரை?

- ராம் நகர் போனயே, அவளை!

- பா-ர்-க்-கலை-மா. (குரல் உடைந்தது).

- ஏன்?

- அவ ஊரிலே இல்லை. கல்யாணமாயிடுத்து.

- போ! கவலைவிட்டது. இனிமே அவளை மறந்துடு.

(மனத்தில் ஒரு நீலக்கடல் விரிந்து காட்சி அளித்தது. அதன் அடிவானத்தில் அவள் முகம் ஒரு சந்திரிகையாகத் தோன்றியது. அவளை மறக்கவா?)

. . . நான் சொல்றது காதிலே விழறதாடா? அவளை மறந்திடு. இவ்வளவாவது முழுசா ஊர் திரும்பினியே? அதுவே போதும். எங்கே உன்னை அடிச்சுக் கொன்னுடப் போறாங்களோன்னு பயந்தேன்.

அடியநல்லூரில் பெண் பார்த்துவிட்டு மாலையில் திரும்பினார்கள்.

ஊருக்குத் திரும்பிய அரை மணியில் அம்மா வந்து அவனிடம் கேட்டாள்.

- பெண் பிடிச்சிருக்காடா?

அவன் பதில் பேசவில்லை.

சொல்லுடா.

பேச்சில்லை.

அம்மா உள்ளே போனாள். அரை மணி ஆகியது. அப்பா வந்தார். கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு வரும்போதே அவரை அவன் ஏறிட்டுப் பார்த்தான். அவனை நேரில் பார்க்க விரும்பாமல் முண்டாசு கட்டும் பாவனையில் அவர் குனிந்து கொண்டே வந்தார்.

அருகில் வந்து நின்ற பிறகுகூட அவன் உற்றுப் பார்த்தான். அவர் வேறுபுறம் பார்த்தார்.

- ம். ஹூம். பெண் பிடிச்சுதாடா?

பதிலில்லை.

- என்னடா பதில் சொல்ல மாட்டேங்கறே? பெண் பிடிச்சுதா?

பதிலில்லை.

- அவ்வளவு திமிரா? அவளைத்தாண்டா நீ கட்டிக்கணும். ஓங்கிப் பேசிவிட்டு ஓர் அடி எடுத்து நகர்ந்தார்.

- அப்பா! என்றான் அவன் மெதுவாக.

அவர் திரும்பவில்லை. நின்றார்.

- நீங்க ஆறு வருஷத்துக்கு முன்னாலே என்னைப் பார்த்தீங்களே! அந்த மாதிரி சின்னப்பையன் இல்லையப்பா நான் . இப்போ இருபத்தாறு வயசாகுது. நான் ஒரு



மனிதனாயிட்டேன்! உங்க பையன் மாறியிருக்கிறதை நீங்கள் கண்ணாலே பார்க்க வேண்டாமா? ஒரு முறை யாவது பார்க்க வேண்டாமா? ஆறு வருஷத்துக்கப்புறம் எப்படி இருக்கிறேன்னு பார்க்க வேண்டாமா?

அவன் குரலில் இருந்த ஒரு கனிவு அவரை இழுத்தது. இதுவரை இதுபோல் மகன் பேசிக் கேட்டதில்லை. திரும்பிப் பார்க்க விரும்பினார், முடியவில்லை.

- திரும்பிப் பாரப்பா. மேலும் அவன் குரல் கரைந்தது.

திரும்பினார். மாலை மஞ்சளின் தகதகப்பு நரேனின் மீது விழுந்தது. ஒரு வீரனைப் போல் அவன் நின்றான். கண்கள் இரண்டும் பளீர் என்று ஒளி வீசின. பார்வையும் தோற்றமும் அந்தக் கணத்தில் ஒரு ஞானியைப் பார்ப்பது போல் பிரமையை உண்டாக்கின. சித்தத்தை ஒருமுனை நிலையில் நிறுத்திய மகா புருடன் நிற்பது போல் நின்றான். அவனைச் சுற்றிலும் மஞ்சளின் ஜோதி அடித்துக் கொண்டிருந்தது. அப்பா திகைத்து நின்றார். நரேன் இப்படி வளர்ந்திருக்கிறான் என்று அவருக்குத் தெரியாது. ஆறு வருடங்களில் எவ்வளவு வித்தியாசம்.

நரேன் என்றார். நா தழதழத்தது.

அவன் நெருங்கி வந்தான். அருகில் நின்றான். நடுங்கும் கண்ணீரிடையே அவர் அவனைப் பார்த்தார்.

- நரேன் மீண்டும் தழதழத்தார். மேலே பேசவில்லை. அவன் அவர் கைகளை மட்டும் பிடித்தான்.

- நீ வாடா வீட்டுக்குள்ளே வாடா! என்று நடுங்கும் குரலில் கூறி அவனைப் பரபரவென்று இழுத்தார். உள்ளே அழைத்துப் போனார். அவரது உடலெல்லாம் சிலிர்த்து எழுந்தது.

அன்று இரவு மனைவியிடம் அவர் - அவன் விவேகானந்தனடீ! ராஜகளை அவனுக்கு வந்திருக்கு! நரேந்தரன்னு பேர் வச்சது சரியாய்ப் போச்சு என்று பெருமையோடு கூறிக்கொண்டிருந்தார்.

ஒரு வாரம் சென்றது. தந்தைக்கும் நரேனுக்கு மிடையே ஒரு பிணைப்பு எழுந்துவிட்டது.

ஒரு நாள் குளித்துவிட்டு வரும்போது நரேனை அவர் எதிரே சந்தித்தார்.

- அப்புறம் கல்யாண விஷயம் என்னடா? என்று பேச்சை ஆரம்பித்தார்.

நரேன் தயங்கினான்.

- என்னன்னு சொல்லேன்.

- எனக்கு இப்போ வேண்டாம்பா. வேலை தேடிக்கப் போறேன்.

- செய்.

- பட்டணத்திலே போய்தான் தேடிக்கனும்.

- செய்! நான் இரண்டு பேருக்கு சிபாரிசுக் கடிதம் எழுதித் தரேன். போய் வேலையைத் தேடு! சீக்கிரம் உன் மனசை மாத்திக்கப் பார்! பழசையே நினைக்காதே என்றார் அப்பா.

ஒரு குளிர் மாதத்தில் மாலை நேரம் சென்னையில் ஒரு தியேட்டர் முகப்பில் நரேன் நின்று கொண்டிருந்தான்.

சென்னைக்கு வந்து ஒரு மாதமாகிவிட்டது. தனியாக ஒரு ஃப்ளாட் எடுத்துக்கொண்டு அதில் தங்கியிருந்தான்.

இன்னும் ஒரு வாரத்தில் ட்வாடில் பிரதர்ஸ் நிறுவனத்தில் டெக்னிகல் பகுதியில் அசிஸ்டெண்டாகப்



பதவி ஏற்றுக் கொள்ள இருந்தான். தந்தை கொடுத்திருந்த அறிமுகக் கடிதத்தின் மூலம் இந்த வேலை கிடைத்திருக்கிறது.

சனி, ஞாயிறுகளில் நகரின் முக்கிய தியேட்டர்களின் முகப்பில் நின்றுகொண்டு போவோர் வருவோரைக் கவனிப்பது அவனது முக்கியத் தொழிலாகிவிட்டது - ரமி, உன்னைத்தான் தேடுகிறேன். உன்னைத்தான் - அடிக்கடி கூறிக் கொண்டான்.

அன்று அந்தத் தியேட்டரில் கூட்டம் நெருக்கி வழிந்தது. ஆங்கிலப்படம் அதில் ஓடிக்கொண்டிருந்தது.

பகல் காட்சி விட்டு வெளியே வந்த கூட்டமும் அடுத்த காட்சிக்குக் காத்திருக்கும் கூட்டமும் மோதிக் கொண்டிருந்தன.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டு அவன் ஜனங்களை அலசிக் கொண்டிருந்தான்.

அரை மணி ஓடியது. கூட்டம் உள்ளே பாதியும், வெளியே பாதியும் ஓடிவிட்டது. காட்சி ஆரம்பமாகி விட்டது.

- இன்றும் உன்னைக் காணவில்லை. ரமி என்று கூறியவாறு நரேன் அருகில் உள்ள சோடா ஃபௌண்டனை நோக்கிச் சென்றான். ஒரு பானத்தை வாங்கிப் பருகியவாறு நிற்கும்போது அவனை யாரோ உற்றுக் கவனிப்பது தெரிந்தது.

திரும்பிப் பார்த்தான். ஒரு வியப்பு ஓடியது. இவளை எங்கே பார்த்திருக்கிறோம்?

- ஓ! நினைவில்லையா? என்று புன்னகையோடு அருகே வந்தான் அவள்.

- நான் ஸ்வப்நா (லல்லாலா).

- உங்களுடன் ரயில் பிரயாணம் செய்த ஸ்வப்நா நினைவிருக்கிறதா?

கனவுதான். அவள் கனவிலிருந்து உரிந்து வரும் கனவு. தோற்றம் அப்படி ஒரு மாயமாய் விகசித்தது. குர்தா அணிந்திருந்தாள். அதில் உள்ள பூக்கள் எல்லாம் தாரகைகள்போலக் கண் சிமிட்டின.

(ஏம்மா புஷ்பா! டைட்டிலை ஜஸ்டிஃபை பண்ணறியா?

- நோ. ப்ளீஸ். இது ஆக்ஸிடெண்டல்.)

பெல்பாட்டம் அணிந்திருந்தாள். செவிகளின் இரு வளையங்கள்கூட கனவின் சுழல்கள் போல ஆடின.

- என்னைத் தெரிகிறதா?

- தெரிகிறது.

- டிக்கெட் கிடைக்கவில்லையா?

- ஆமாம்.

பையை எடுத்தாள். திறந்தாள். வெளியே இரண்டு டிக்கெட்டுகளை எடுத்தாள்.

- வாருங்கள். போகலாம்.

அவன் திகைத்தான். ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்தான். தவிப்பு ஏற்பட்டது.

- எக்ஸ்க்யூஸ் மீ! முதலில் சினிமா போகனும் என்று நினைத்தேன். இப்போது விருப்பமில்லை. உடம்பு சரியில்லை.

- ஐ டு டோண்ட் வாண்ட் டு கோ. வாருங்கள். டிரைவ் இன் போகலாம். உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்.



- என்னிடமா?

- ஆமாம்.

- என்ன பேச இருக்கிறது?

எவ்வளவோ பேசத் தோன்றுகிறது! இஃப் யு லைக் ஐ'ல் டெல் யு த ரீஸன்.

- சொல்லுங்கள்.

- ஒரு காட்டில் நுழைகிறோம், இரைச்சல்! என்ன வெல்லாமோ இரைச்சல்! அப்போ திடீர்னு ஒரு குயிலின் குரல் கேட்கிறது. அரண்ய சப்தங்களைச் சீவிக்கொண்டு தனித்து, அழகாக, ரம்யமாகக் கேட்கிறது. அது நம்மைக் கவர்கிறது. அதுபோல எத்தனையோ மனிதர்கள். எத்தனையோ பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். எல்லா வற்றையும் விட உங்களை நான் பார்த்ததும் பேசியதும் ஒரு தனி அனுபவமாக எனக்குத் தோன்றுகிறது. மிஸ்டர்...... மே ஐ நோ யுவர் நேம்?

- நரேன்!

- நரேன்! அவள் குரல் குழைந்து நின்றது.

எங்கேயோ அவனது இதயத்தில் ஆழத்திலிருந்து எதுவோ நகர்வது போலிருந்தது. அதிலிருந்து உணர்வுகள் பொங்கி மேலே நகர்ந்து வருவது போலிருந்தது.

* * *

## 7

நரேனுக்கு ரமியின் நினைவுதான் வந்தது. இவ்வளவு அருகில் நின்று இவ்வளவு சகஜமாக அவன் ஒருத்தியிடம் தான் பேசியிருக்கிறான்.

தவிர ஸ்வப்நாவின் கண் - சாயலில் ரமியின் ஏதோ ஒரு அம்சம் ஒளிந்திருப்பது தெரிந்தது.

- வாருங்கள் என்றாள்.

நடந்தான்.

வெளியே மெரூன் நிறக் கார் ஒன்று க்ளீம் அடித்துக் கொண்டிருந்தது. அதன் கதவைத் திறந்து விட்டு அவள் புன்னகை புரிந்தாள். முகத்தில் ஒரு சாண்டிலியர் மின்னியது. ஏறி உட்கார்ந்தான்.

டிரைவ்-இன்னில் போய் அமர்ந்தார்கள், காபி வரவழைத்தார்கள்.

- நீங்கள் சிறையிலிருந்து வந்தேன் என்றீர்கள்.

- ஆமாம்.

- எனக்கு வருத்தமாக இருந்தது.

- ஏன்?

- உங்களைப்போல கண்ணியமிக்க ஒருவர் சிறையிலிருந்தார் என்றால் அது வருத்தப்பட வேண்டிய விஷயந்தானே!

- கண்ணியமிக்கவர் என்று யார் சொன்னார்கள்?

- நான் சொல்கிறேன்.

- ஊஹூம். இல்லவே இல்லை.

- என்னால் நம்ப முடியாது. நான் சிலரைப் பார்த்துச் சிலதை அனுமானிப்பேன். அது சரியாகவே இருக்கும்.

- என்னைப் பார்த்து என்ன நினைத்தீர்கள்?

- உங்கள் மனம் தரையை விட்டுச் சில அடி உயரத்திலேயே இருக்கிறது.



- அப்படியென்றால்?

- பலருக்கு மனம் தரைக்கடியில் ஆழ்ந்திருக்கிறது. சிலருக்கு தரைமீது ஊன்றியிருக்கிறது. சிலருக்குத் தரைக்கு மேலே பறந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு மிதக்கும் மனம். மனிதர்களிடையே அது உங்களை உயர்ந்தவராகக் காட்டுகிறது.

லேசாகச் சிரித்தான்.

- நான் உயர்ந்தவனல்ல.

- நான் நம்பவில்லை.

- நான் கொலை செய்தவன்.

அவளது முகத்தை அவன் தீவிரமாகப் பார்த்தான்.

- கொலை? என்றாள்.

- ஆமாம். ஒருவனைக் கொன்றிருக்கிறேன், அதனால் சிறை போயிருக்கிறேன்.

- நம்ப முடியவில்லையே.

அவன் மௌனமானாள்.

. . . ஏன் மௌனம்! நான் ஒரு கொலையாளி. இதை நம்புங்கள்! இப்போது நான் தரைக்கடியில் அதல பாதாளத்திற்குப் போய்விட்டேனா?

நிமிர்ந்தாள். காதின் வளையங்கள் ட்விங்கிலாயின. சலனமிடும் விழி நிதானமாகியது.

- இல்லை. இன்னும் நீங்கள் பூமிக்கு மேலேயே இருக்கிறீர்கள். எனது முதல் இம்ப்ரஷனை மாற்ற முடியாது.

நரேன் சிரித்தான். திடீரென்று அவனின் பார்வை வலது புறம் திரும்பியது. அடுத்த கணம் எழுந்தான்.

உடம்பு பரபரப்பாகியது. சூழ்நிலை மறந்து, பிரமை பிடித்தவன் போல் காலடி எடுத்து வைத்தான். வாய் ஏதோ முணகியது. தொலைவில் ஒரு கார்.

அதில் ஒரு புறமாக முன் சீட்டில் ஒரு ஆடவன் ஏறிக் கொண்டிருந்தான். மறு புறமாக ஒரு பெண் ஏறிக் கொண்டிருந்தாள்.

நிழலான மரங்களிடையே அவளது ஸில்லௌட் தனியாகத் தெரிந்தது. தோகைபோல் தழையும் வயலெட் சாரியை அணிந்திருந்தாள். தலையின் இடது பாகத்தில் ஒரு வயலட் பூ. ஸாரியின் பார்டரில் வர்ண பீட்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

பத்தடிகூட நடக்கவில்லை. அந்தக் கார் சட்டென்று புறப்பட்டது. ஒரே வேகத்தில் பறந்து வெளி வாசலை நோக்கி ஓடியது.

நரேன். நிற்கவில்லை. ஸ்வப்நாவைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. ஓட்டமும் நடையுமாக வெளியே வந்தான். சாலையோரமாக ஒரு டாக்ஸி நின்றது. விரைந்து போய் அதில் ஏறினான், - போ! அந்த மெஜண்டா காரைப் பின் தொடரு என்றான்.

டாக்ஸி பறந்தது. மெஜண்டா தூரத்தில் ஐந்தாறு கார்களுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தது.

அவன் இதயம் படபடத்தது. ரமி ரமி என்று முனகினான் கார் வழுக்கி ஓடியது.

எத்தனை கார்கள். லாரிகள், வண்டிகள் குறுக்கே எத்தனை சிக்கல்கள்?

அவன் நெஞ்சு துடித்தது. மெஜண்டா சமயங்களில் கண்ணில் பட்டும் படாமலும் இருந்தது. சீட்டின் இரு புறங்களிலும் அவன் மாறி மாறி நகர்ந்தான்.



கடைசியில் அந்த சிக்னல் வந்தது. மனம் துடித்தது. சரியாக அவனது முன் - வண்டியுடன் சிவப்பு விளக்கு விழுந்தது. மெஜண்டா தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டது.

திரும்பிப் பச்சை விழ மூன்று நிமிடங்களாயின. அவன் பரபரத்தான். டாக்ஸி டிரைவர் குறுக்கும் நெடுக்கும் புகுந்து ஓட்டினான். ஒரு லாரியோடு மோதுவதை மயிரிழையில் தடுத்தான். கார்களும் லாரிகளும் அவனை வழி மறித்துக் கொண்டிருந்தன.

எங்கே அந்தக் கார்? கண்ணுக்கே தெரியவில்லை. எங்கே போய்விட்டது?

டிரைவர் இன்னும் பரபரப்புடன் ஓட்டினான். நரேனின் மனம் விழுந்துவிட்டது. கண்களில் ஈரம் தோன்றியது அவளைப் பார்த்தோம்; நழுவி விட்டாளே என்று நினைத்தான்.

அது அவள்தானா?

அதில் என்ன சந்தேகம்? நடக்கும் நடையிலேயே புரிந்து கொள்ள முடியும். அது அவள்தான்!

ஒரு வேளை ஸ்வப்நா இங்கே பேச இல்லாமல் இருந்தால் அவளைப் பிடித்திருப்பேனோ?

அதெப்படி சொல்லமுடியும்? இந்த ட்ரைவ் - இன்னுக்கு வந்ததே ஸ்வப்நா அழைத்ததால்தானே?

அடாடா! அவளை மறந்துவிட்டோமோ; அவளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!

என்ன பண்பு இது? ஒரு நிமிட நேரத்தில் எல்லா வற்றையும் மறந்து கீழ்த்தரமாக நடந்துகொண்டோமே!

- டிரைவர்! காரைத் திருப்பு.

- எங்கே சார்?

- டிரைவ்-இன்னுக்கு!

கார் திரும்பியது. பதினைந்து நிமிடத்தில் ஓட்டலை அடைந்தார்கள். பணத்தைக் கொடுத்துவிட்டு விறு விறுவென்று உள்ளே போனான்.

எங்கே ஸ்வப்நா?

முன்பு உட்கார்ந்திருந்த இடத்தில் அவளைக் காண வில்லை. சுற்றிவரப் பார்த்தான். எங்கும் தென்படவில்லை. மனத்தில் மீண்டும் வருத்தம். இப்படிப் பண்பில்லாமல் எழுந்து போய்விட்டோமே என்று தோன்றியது.

அதன் பின் ஒரு வாரம் வரை தினமும் அவன் டிரைவ் இன்னுக்குச் சென்றான். ரமியையும் காணவில்லை. ஸ்வப்நாவையும் காணவில்லை. கையில் அகப்பட்டது ஏதோ நழுவிவிட்டதுபோல் இருந்தது.

மறு வாரத்தில் ட்வாடில் நிறுவனத்தில் அவன் வேலை ஏற்றுக் கொண்டான். அதன் பிறகு மாலையில் அதே நேரத்தில் அங்கே போவது கஷ்டமாக இருந்தது. எனினும் அவன் முயற்சியை விடவில்லை. எப்படியும் ரமியைப் பார்த்துவிட வேண்டுமென்று மனம் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு புதன் கிழமை. மாலை நான்கு மணி இருக்கும். ஆபீஸ் மேஜைமீது ஒரு டிரேட் லிஸ்டைப் பார்த்துக் கொண்டிருந்த நரேன் தலை நிமிர்ந்தான். ஹாலுக்கு ஓரமாய்ச் சென்ற நடைபாதை மீது சட்டென்று அவன் கண் பதிந்தது - அங்கே ஸ்வப்நா யாரோ ஒருவருடன் மானேஜர் அறையை நோக்கி போய்க் கொண்டிருந்தாள். எதிர்ப்பட்டவர்களிடம் ஹௌ டு யூ டு என்று விசாரித்தவாறு போனாள். ஆபீசில் உள்ளவர்கள் அவளிடம் பேசுவதற்கு அதிக ஆர்வம் காட்டினார்கள்.

- இவள் யார்? என்று அருகில் உள்ள ரகோஜியிடம் கேட்டான்.



- இவளா? ஸ்வப்நா; சொப்பனம் போல இல்லே என்று சொல்லி அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார் ரகோஜி.

பிறகு - ஸ்வின் ப்ரதர்ஸிலே செக்ரடரியா இருக்கா. பெரிய ஜாலக்காரி. சிரிச்சே மயக்கிடுவா! இங்கே ஒரு தரம் வந்துட்டுப் போனாள்னா ஸ்வின் ப்ரதர்சுக்கு ஒரு ஆர்டர் கிடைச்சுடுத்துன்னு அர்த்தம்.

- ஸேல்ஸ் ஸ்பெஷலிஸ்டா? என்றான் நரேன்;

- ஸ்பெஷலிஸ்டாவது மண்ணாங்கட்டியாவது. உடம்பைக் காட்டற ஸ்பெஷலிஸ்ட் - ஒரு கால் கேர்ல்னுடைய வேலையைப் பண்ணறா. இன்னும் கொஞ்ச நேரத்திலே பாரேன். நம்ப மானேஜர் பரசு இருக்காரே. . அவள் பின்னாலே குழைஞ்சுண்டே வெளியிலே போவார், இன்னிக்கு பேமண்டுக்கு உள்ளே போன வவுச்சரெல்லாம் அம்போ.

அரை மணி சென்றது. ஸ்வப்நா வெளியே வந்தாள். அதே புன்னகை அதே குழைவு கழுத்தை ஸ்டைலாகத் தாழ்த்தும்போது மேலே டெரீன் ஷர்ட்டில் ஒரு அழகான மடிப்பு நடு மார்பில் விழுந்தது. என்ன அழகான ஸில்ஹௌலட்? இடையில் இளம் பச்சை லுங்கி கட்டியிருந்தாள்.

ரகோஜி சொன்ன விதமே ஆபீஸ் மானேஜர் பரசு அவள் பின்னால் குழைந்து கொண்டே வந்தார். வெளியே வந்த ஸ்வப்நா சுற்றிவரப் பார்த்தாள். பிறகு சட்டென்று நரேன் இருக்கும் திசையை நோக்கினாள். அவள் முகத்தில் ஆச்சரியம் தோன்றியது - ஒன் ஸெகண்ட் ப்ளீஸ் என்று பரசுவிடம் கூறிவிட்டு நரேனை நோக்கி விரைந்து வந்தாள். . . . நரேன் யு ஆர் ஹியர்; ஹௌ ஹேப்பி டு பைண்ட் யு! என்றாள். எதிரே மேஜை மீது கைகளை ஊன்றி, பத்து டிகிரியில் சாய்ந்தாள்.

. . . ஸ்வப்நா! அன்றைக்கு உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல், அவசரமாகப் போய்விட்டேன்.

. . . அதனாலென்ன? மெய்மறந்து எழுந்து போனீர்கள்! போன காரியம் வெற்றிதானே?

நரேன் பேசவில்லை.

... அப்புறம் உங்களைச் சந்திக்கிறேன். நீங்கள் இங்கே இருப்பது எவ்வளவோ நல்லது என்று கூறி அவள் விடை பெற்றாள்.

ஐந்து மணி ஆகியது. ரகோஜி எழுந்து போனார். நரேன் டிராயரை மூடினான். டெலிபோன் மணி அடித்தது. எழுந்தான்.

- ஸ்வப்நா ஹியர் என்றது குரல்.

- எஸ் ப்ளீஸ். ஐ'ம் நரேன்.

- ட்ரைவ்-இன் வருகிறீர்களா?

- இப்போதா?

- ஆமாம். நீங்கள்தான் தினம் வருகிறீர்களே?

- உண்மைதான். தினமும் வருகிறேன்.

- இன்றைக்கு?

தயங்கினான்.

- வேறு எங்கேயாவது போகலாமா என்று நினைத்தேன்.

- அந்த வயலட் பூவைத் தேடுவதற்குத்தானே?

திடுக்கிட்டான்.

- ஏன் மௌனம்? ஊதாப் பூவைத்தானே தேடுகிறீர்கள்.



- ஆமாம். (நாத் தழ தழத்தது)

- அவளைப் பற்றி எனக்கு ஒரு விஷயம் தெரியும்.

- தெரியுமா?

- டிரைவ் இன் வாருங்கள். சொல்கிறேன்.

ஆறு மணிக்கு டிரைவ் இன்னில் இருந்தான். - ஹலோ நரேன் என்று எழுந்து வரவேற்றாள் ஸ்வப்நா.

இப்போது டைட்ஸ் போட்டிருந்தாள். துள்ளி எழுந்து அவள் வந்தது ஒரு காட்சியாக இருந்தது. முகத்தின் குறுகுறுப்பும் கண்ணின் வெட்டுகளும் ஏதோ ஒரு துடிதுடிப்பான ஜீவனைப் பார்ப்பது போலிருந்தது.

அவளது டேபிளில் ஏற்கெனவே ஒருவர் உட்கார்ந் திருந்தார். அவரருகில் நரேன் உட்கார்ந்தான்.

அவர் டை கட்டியிருந்தார். நரேனை ஒரு மாதிரி யாகப் பார்த்தார். இவரை எங்கேயோ பார்த்திருக்கிறோமே என்று நரேன் நினைத்தான்.

- இவர் மிஸ்டர் காந்தன். இவரை நீங்கள் ரயிலில் பார்த்திருப்பீர்கள்.

நரேனுக்கு அவரை அறிமுகம் செய்தாள். அவர் முகம் மாறாமல் அப்படியே இருந்தது.

- அப்புறம் நரேன் என்ன சாப்பிடுகிறீர்கள்? புன்னகை வீச ஒரே ஆர்வத்தில் கேட்டாள் ஸ்வப்நா.

அந்த இனிமையான உபசரிப்பையும் திறந்த மனப் பேச்சையும் அவன் மிகவும் ரசித்தான். யாரோ முன்பின் தெரியாத ஒருத்தி அவனுக்கு இவ்வளவு மதிப்புக் கொடுத்துப் பேசுவதைக் காண ஆச்சரியமாக இருந்தது.

- ஸ்வப்நா என்னை மன்னியுங்கள்! என்றான்.

அதுதான் அப்போதே சொல்லிவிட்டீர்களே! ஊதாப் பூவைப் பார்க்க அவசரமாகப் போய்விட்டீர்கள்.

ஒரு கணம் அவன் மௌனமானான். பிறகு பேசினான்.

- அப்புறம் திரும்பி வந்து உங்களைப் பார்த்தேன். உங்களைக் காணவில்லை.

- ஓகோ! அவ்வளவுக்கு நினைவு இருந்ததா?

அவள் சிரிப்பும் சலசலப்பும் சதங்கைகள் போல் நாதங்களை எழுப்பின.

பிறகு அவர்கள் மூவரும் பொதுப்படையாகப் பேசினார்கள். போகப் போக நரேனுக்கு மனம் துடித்தது. ஊதாப் பூவைப் பற்றி விஷயம் தெரியும் என்றாளே. ஏன் சொல்லவில்லை?

ஒரு வேளை என்னை இங்கே வரவழைக்க இந்த மாதிரி சூழ்ச்சி செய்தாளோ?

ஸ்வப்நா! உனது மாயங்களைக் கண்டு நான் எளிதில் மயங்கிவிடமாட்டேன். எனது அந்தரங்கம், ஒரு நங்கூரமாக ஒரு இடத்தில் விழுந்திருக்கிறது. அதை உன்னால் அசைத்து நகர்த்த முடியாது.

ஒரு வேளை அவளுக்கு உண்மையாகவே ஏதாவது தெரிந்திருக்குமோ? தெரிந்திருக்கலாம். அவளைப் பார்த்தால் ஏமாற்றுவதாகத் தோன்றவில்லை!

வாய்விட்டு அவளிடம் ரமியைப் பற்றிக் கேட்பதா?

நேரம் ஓடியது. கடைசியில் எழுந்திருக்க வேண்டியது தான் என்று தோன்றியது. விடைபெற்று எழுந்தான்.

கூடவே சட்டென்று ஸ்வப்நா எழுந்தாள். காந்தன் பக்கம் திரும்பி ஜஸ்ட் எ மினிட் என்றாள். நரேனுடன்



நடந்தாள். காந்தன் அரை வெறுப்புடன் அவர்கள் இருவரையும் பார்த்தார்.

சிறிது தூரம் அவர்கள் நடந்தார்கள்.

- உங்களுடன் நடந்து போவதுகூட எனக்குப் பிடிக்கிறது என்றாள் அவள். அவன் அவளைப் பார்த்தான். அவள் முகத்தில் தோன்றிய அசாதாரணப் புன்னகை அவளை ஒரு குழந்தைபோல் காட்டியது.

(இவள் என்னை மயக்குகிறாளா? ஏன் என்னிடம் இப்படிப் பேசுகிறாள்?)

- உங்களோடு வந்திருப்பவர் யார்? என்றான் அவன்.

- எங்கள் கம்பெனியில் வேலை பார்ப்பவர். என்னைச் சுற்றி வட்டமிடுபவர்களில் அவரும் ஒருவர்.

நரேன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

- ஆமாம் நரேன்! மனிதனின் சபலங்களுக்கு ஏது முடிவு? என்றாள். மீண்டும் குழந்தை போல் அந்தக் குழைவு அவளிடம் தோன்றியது.

இதற்குள் அவன் மனத்தில் உள்ள ஆவல் பெரிதாக வளர்ந்துவிட்டது.

- ஸ்வப்நா என்றான்.

அவள் பேர் முதன் முதல் உச்சரிக்கப்படுவதைப் பார்த்ததும் கண்களைக் கொட்டியவாறே அவள் நிமிர்ந்தாள்.

சாண்டிலியர் விளக்கு முகமெங்கும் மின்னியது.

- அவளைப் பற்றிச் சொல்கிறேன் என்றீர்களே!

- ஆ! கேட்டுவிட்டீர்களா! உங்களுக்குப் பொறுமை எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்க்க நினைத்தேன். ஊதாப்பூ பற்றிச் சொல்லவா?

அவன் கண்கள் ஆவலோடு விரிந்தன?

- அந்தப் பெண்ணைப் பல தடவைப் பார்த்திருக்கிறேன்.

- எங்கே?

- பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் கட்டடத்தில். அங்கே எதற்கு வருகிறாள் என்று எனக்குத் தெரியாது.

அவன் மௌனமாக இருந்தான். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு அவளைப் பார்த்துத் திரும்பி ரொம்ப நன்றி, அவளைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் என்றான்.

- அவள் யார்?

- ஸ்வப்நா (தயக்கம்) நீங்கள் வெளிப்படையாக இருக்கும் அளவுக்கு என்னால் இருக்க முடியவில்லை. பின்னால் சந்தர்ப்பம் வரும்போது கூறுகிறேன்.

- ஒகே, விஷ் யு ஸக்ஸஸ் என்றான் அவன்.

அவன் மேலே நடந்தான்.

- நரேன் என்று அழைத்தாள் அவள். அவன் நின்றான்.

- உங்களுக்கு எதற்காவது தேவையிருந்தால் எனது போன் நம்பர் தருகிறேன். எழுதிக் கொள்கிறீர்களா?

பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவன் எழுதிக் கொண்டான். ஆபீஸ் நம்பரையும் வீட்டு நம்பரையும் அவள் கொடுத்தாள்.

மறுநாள். மாலை ஆறு மணி பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் கட்டடத்தின் வாசலில் நரேன் நின்று கொண்டிருந்தான்.



அந்த வாசலில் வாழைத் தோரணமும் அலங்கார வளைவும் தென்பட்டன. அன்று கலை விழா என்று வாசலில் அறிக்கை வைக்கப்பட்டிருந்தது.

உள்ளே கூட்டம் நடந்து கொண்டிருந்தது. வாசலில் கார்கள் நிறைய நின்றன. விழா ஹாலில் ஒலிக்கும் ஒலி பெருக்கியின் சப்தம் வெளியே சன்னமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

ஒரு மணி நேரமாக நரேன் காத்திருந்தான். முகத்தில் அந்தத் தீவிரம். மனத்தில் அதே ஆவல்.

கடைசியில் ஜனகணமன சப்தம் கேட்டது. கூட்டம் வெளியே வர ஆரம்பித்தது.

முகப்பின் அருகில் நரேன் ஒரு எடுப்பான இடத்தில் நின்று கொண்டான்.

மாடிப்படிகளில் கூட்டம் இறங்கி வந்தது. வருபவர்களைக் கூர்ந்து கவனித்தான் அவன்.

முதலில் ஆண்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவன் பார்வை தீவிரமாக எரிந்தது.

ஒவ்வொரு பெண்ணாகப் பார்த்தான். கடைசியில் ஒரு கணத்தில் அவன் பார்வை மாடியின் திருப்பத்தில் லயித்தபோது நினைவு ஒரு கணம் சுழன்று விட்டுத் திரும்பியது.

அவள் வந்து கொண்டிருந்தாள்; அவள்தான்.

(ரமி! உன்னைத் தரிசிக்கிறேன். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு உன்னைத் தரிசிக்கிறேன்.)

அவள் வதனத்தில் ஒரு முழுமை தெரிந்தது. கண்கள் விசாலமாய்ப் பெருகியிருந்தன. உதடுகளையும்

கன்னத்தையும் பார்க்கும்போது அழகு அவளிடம் இப்போது பூரணமாக நிறைந்துவிட்டது என்று தோன்றியது.

உடல் பதறியது கால்கள் நடுங்கின. பார்வையில் நீர் ஊறியது. அவளை விட்டுக் கண்களை அகற்றினான்.

வாசலை நோக்கிப் போகும் திசையில் திரும்பினான். அவன் மனத்தில் ஒரு ஆவல். மாடிப்படி திரும்பும்போது அவன் இருக்கும் இடத்தை அவளால் பார்க்க முடியும். அப்படி ஒரு எடுப்பான பகுதியில் இருந்தான்.

அவள் அவனைப் பார்த்தால் அவளாகக் கூப்பிடுவாளா? அல்லது அருகில் வருவாளா? அவளது செய்கையைக் கவனிக்க வேண்டும். நாமாக அவள் முன்னால் போய் நிற்கக் கூடாது. கணங்கள் சென்றன. நகரும் கூட்டத்தின் சருசருவென்ற காலோசைகள் மெதுவாகக் கேட்டன. பேச்சுக்களுடன் சப்தம் முனகலான சுருதிபோல கேட்டது. அவன் நெஞ்சம் படபடத்தது முகத்தில் வியர்வை அரும்பியது.

ரமி இப்போது பார்த்திருப்பாள். ஆமாம். பார்த்திருப்பாள் திடுக்கிட்டிருப்பாள். நிற்பது நான்தானா அது என்று கண்களைக் கொட்டிக் கொட்டிப் பார்த்திருப்பாள்.

பிறகு. . . .

கணங்கள் சென்றன. அவன் இதயம் பறந்தது. இதற்குள் ரமி அவன் இருக்கும் இடத்தைத் தாண்டிச் சென்றிருக்க வேண்டும். அவனைப் பார்த்தாளா, இல்லையா?

ஆவல் தாங்காது திரும்பினான். ரமியின் ஸைட் உருவம் தெரிந்தது. அவள் நிற்காமல் மேலே போய்க் கொண்டிருந்தாள். அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.



ரமியையே வெறித்து நோக்கினான். அவள் மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். அவளையே அவன் விழிகளால் தொடர்ந்தான். அப்போது திடீரென்று ஒரு கணம் லேசாக அவளது ஓரவிழிகள் அவன் இருக்கும் பக்கம் சாய்ந்தன. மறுகணம் சட்டென்று தன்னிலைக்குத் திரும்பின. எதுவும் நடக்காதது போலவும் எதையும் பார்க்காதது போலவும் அவள் போய்க் கொண்டிருந்தாள் . . . . . .

அவனது இதயத்தில் சிவ் என ஒரு இருள் சூழ்ந்தது.

* * *

## 8

கூட்டத்தில் ரமி போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சினேகிதியுடன் அவள் சிரித்தவாறு போனாள். நரேன் மேடையை விட்டு இறங்கினான்.

பிரமை பிடித்ததுபோல கூட்டத்தின் பின்னால் போனான். மெயின் சாலை வந்த பிறகு கூட்டம் பிரிந்தது. ஒரு டாக்ஸியை நோக்கி ரமி நடந்து போனாள். ஏறி உட்கார்ந்ததும் டாக்ஸி போக ஆரம்பித்தது.

மனம் சுற்றியது, பார்வை வெறுமையாகியது. சிலை போல் நின்றான்.

இரவு பத்துக்கு வீடு திரும்பினான். சாப்பிடவில்லை. கதவை அடைத்தான். படுக்கையில் சாய்ந்தான்,

ரமி! நீ என் ரமிதானா? உண்மையிலேயே நீ என்னைப் பார்க்கவில்லையா? அல்லது பார்த்துவிட்டுப் பார்க்காததுபோல் போனாயா?

ஓரக் கண்ணால் நீ பார்த்ததை நான் பார்த்தேன். ஒரு வேளை என்னை அடையாளம் தெரியவில்லையா? இருக்கலாம். விடுதலை அடைந்து நான் வந்திருப்பது உனக்குத் தெரிந்திருக்காது. நான்தான் இந்தர். உன்னுடன் பேசிப் பழகிய இந்தர். உன் ஒவ்வொரு அங்குல அழகையும் ரசித்த இந்தர் ரமி ரமி என்னை மறந்துவிட்டாயா?

மறுநாள் காலையில் எழுந்தபோது அந்த துக்கம் அப்படியே இருந்தது.

பகலில் ஆபீசில் எதுவும் ஓடவில்லை. எப்போது மாலை ஆகும் என்று காத்திருந்தான்.

ஐந்து ஆனதும் வெளியே வந்தான். டிபன் சாப்பிட்டு விட்டுச் சரியாக ஆறரைக்கு பிரஞ்சு இன்ஸ்டிடியூட் அருகில் போய் நின்றான்.

அன்று அவள் தென்படவில்லை.

அதற்கு அடுத்த நாளும் தென்படவில்லை.

மூன்று தினங்களாக அவளைக் காணவில்லை.

நான்காவது தினம் மாலை. அதே ஆறரைக்கு இன்ஸ்டிடியூட் வாசலில் நின்றான் அப்போது லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. அதைப் பொருட்படுத்த வில்லை. காம்பவுண்டுச் சுவருடன் ஒதுங்கியவாறு நின்றான்.

சிறிது நேரத்தில் வகுப்பு முடிந்தது ஒரு கூட்டம் வந்தது. வருபவர்களை அவன் கவனித்தான். அநேகமாக எல்லாரும் வெளியே வந்துவிட்டார்கள்.

சட்டென்று அவன் பார்வை கடைசியில் உதிரியாக வரும் ஒருவர் மீது விழுந்தது.

அவள்தானா?



அவள்தான் என்று தெரிந்ததும் உடல் நடுங்கியது. ஓடிப்போய் - ரமி என்று அழைக்க ஆவல். எனினும் ஒரு தயக்கம். ஒரு வைராக்கியமும் கூட அவனைப் பார்த்து விட்டு அவளே ஓடி வருகிறாளா என்று பார்க்க வேண்டும். அப்படி வந்தால் மனம் சமாதானமாகும். முந்திய நிகழ்ச்சியால் மனத்தில் எழுந்த வேதனை மறைந்து போகும். காத்திருந்தான்.

கணங்கள் ஓடின. நிமிடங்கள் ஓடின. மேலே பொறுக்க முடியவில்லை. அவ்வளவு ஆவல், திரும்பிப் பார்த்தான். மனம் சூன்யமாகியது. எதையும் கவனியாதது போல் அவள் சாலையில் போய்க்கொண்டிருந்தாள் அவங்கே நின்று கொண்டிருந்த டாக்ஸியில் ஏறினாள். அதில் ஒரு அவசரம்கூடத் தெரிந்தது. அடுத்த கணம் டாக்ஸி விரைவாக நகர்ந்தது.

ஒரே அதிர்ச்சி, கலங்கிப் போய் நின்றான்.

அது நடந்துவிட்டதா? என் வாழ்வில் ஒரு டிராஜடி நடந்துவிட்டதா?

(யாரோ மனத்தில் சிரித்தார்கள். எல்லோர் வாழ்க்கையும் கதை ஆகாது நரேன். உன் வாழ்க்கை ஆகிறது. அந்தப் பெரியவரின் குரல்.)

அவன் கண்கள் வியப்பில் விரிந்தன.

உண்மையில் ரமி என்னை மறந்துவிட்டாளா?

நெஞ்சு அடைத்தது. திரும்பினான். மெயின் சாலையின் விளக்குகள் நெக்லஸ் அணி போல் தூரத்தில் வளைந்து போய்க்கொண்டிருந்தன. குனிந்தவாறு நடந்தான்.

மறுநாள் அங்கே வந்து நின்றான்.

அதற்கு மறுநாளும்.

மறுநாளும்.

ஒரு வாரமாக நின்றான். இடைவிட்ட மூன்று நாட்களில் அவள் வந்தாள். அவனைப் பார்க்காமலே போனாள்.

மனம் துக்கத்தில் இறுகியது. எதுவும் ஓடவில்லை. ஆபீஸ் போனால் வெறிச்சென்றிருந்தது. மனிதர்கள் வெறும் நிழல்களாகத் தோன்றினார்கள். யாருடைய பேச்சும் ரசிக்கவில்லை.

ஒரு சனிக்கிழமை.

மாலை மூன்று மணிக்கு வீட்டுக்கு வந்தான்.

ஐந்தரை ஆனதும் அந்த நினைவு. அவளைப் பார்க்க வேண்டுமா? வேண்டாமா?

வேண்டாம் என்று ஒரு மனம் கூறியது.

அவள் எப்படி இருந்தால் என்ன? அவளது தரிசனம் ஒரு அமைதியைத் தருகிறது. அதற்காவது போய்ப் பார்க்க வேண்டும் என்றது ஒரு மனம்.

அவளது முன்னால் நின்றால் மனச்சாட்சி அவனை நிச்சயமாக உறுத்தும். உனக்குத் துக்கம் தருபவளுக்கு நீயும் துக்கம் தரவேண்டும் என்றது ஒரு மனம்.

ரமி உனக்கு எந்தத் துக்கமும் தரமாட்டேன். உன்னை மனத்தில் வைத்துப் போற்றுகிறவன் நான் என்று முணுமுணுத்தான் அவன்.

ஆறரை மணிக்கு இன்ஸ்டிடியூட் வாசலில் நின்றான். குளிர் காலம் ஆதலால் இருட்டியிருந்தது. மூன்றாவது மாடியின் கண்ணாடி சன்னல்கள் வெளிச்சமாயிருந்தன.

- மிஸ்டர் நரேன்.



திரும்பினான். ஆபீஸ் நண்பன் ஸ்டீபன் நின்று கொண்டிருந்தான்.

தடுமாறிக்கொண்டு புன்னகையை வரவழைத்தான் - இங்கே ஒரு நண்பனுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். நீ-ங்-க-ள். . . . . என்று இழுத்தான்.

- சினிமாவுக்குப் போய் டிக்கெட் கிடைக்காமல் திரும்புகிறேன் என்றான் ஸ்டீபன். பிறகு ஒரு கணம் தயங்கியவன் - மிஸ்டர் நரேன்! உங்களுக்கு உடம்பு சரியில்லையா?

- ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?

- நீங்கள் வந்ததுக்கு இப்போ ரொம்ப இளைத்திருக் கிறீர்கள்! நரேன் பதில் பேசவில்லை.

- உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் பட்டணத்துக்குப் புதுசுதானே?

- ஆமாம்.

- எச்சரிக்கையாக இருங்கள். எதிலாவது ஈடுபட்டு விடாதீர்கள்.

சொல்லிக்கொண்டே ஸ்டீபன் நகர்ந்தான், அவன் அப்படி திடுதிப் என்று புத்திமதி சொன்னது ஆச்சரியமாக இருந்தது. அதை உரிமையோடு வேறு சொல்லிவிட்டுப் போனான்.

ஐந்து நிமிடம் சென்றது.

இன்ஸ்டிடியூட்டின் மாடிப்படிகளில் ஓசைகள். அவர்கள் இறங்கிக்கொண்டிருந்தார்கள். அவன் நிமிர்ந்து நின்றான். ஆண்களும், பெண்களும், வெளியே வந்தார்கள்.

ரமியைப் பார்த்ததும் உடல் நடுங்கியது. நினைவுகள் படபடவென்று ஓடின. ரமி என்ற வார்த்தை நுனி நாவு வரை வந்து நின்றது.

மறுகணமே அந்த வைராக்கியமும் தோன்றியது. நான் ஏன் அவளை அழைக்க வேண்டும்? எங்கள் காதல் உண்மையானால் அவளே என்னைப் பார்த்துவிட்டு ஓடி வரவேண்டுமென்று நினைத்தான்.

ஒன்று, இரண்டு நிமிடங்கள் ஓடின. திரும்பிப் பார்த்தான். அவள் டாக்ஸியில் ஏறிக்கொண்டிருந்தாள்.

பெரிய அதிர்ச்சி. மனம் சில்லிட்டது.

ரமி. இது என்ன? மறந்துவிட்டாயா? அல்லது புறக்கணிக்கிறாயா?

பிளாட்பாரத்தில் பிரமித்தபடி நின்றான். கணங்கள் சென்றன.

சட்டென்று பார்வை வேறுபுறம் இழுபட்டது. மிருதுவான வெளிச்சத்தோடு ஒரு கார் அங்கே வந்தது. ஓரமாக நெருங்கி அவன் அருகில் நின்றது.

ட்விங்கிளோடு ஸ்வப்நா இறங்கினாள். (லல்லாலாலா)

- ஓ என்று நிறைய அர்த்தங்கள் தொனிக்க அவனைப் பார்த்தாள்.

அதற்குள் அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். விளக்கின் வெளிச்சம் முகத்தில் விழாதவாறு திரும்பிக் கொண்டான்.

- யூ ஆர் ஹியர் என்றாள். (வார்த்தை மிருதுவாக உதிர்ந்தது.)

மெள்ளத் திரும்பினான்.

-கமான். லெட்'ஸ் கோ.

ஒரு கணம் தயங்கினான். மனம் குமைந்தது. சிறிது நேரத்துக்கு முன் ஸ்டீபன் பார்த்தான். இப்போது இவன் பார்க்கிறான். இங்கே இந்த வேளையில் தனியாக நிற்பது ஒரு அவமானமாகத் தோன்றியது.



- கமான் என்றாள்.

அந்த வேளையில் அவளை எதிர்த்துச் சொல்லும் திடம் இல்லை. காரில் ஏறினான்.

உள்ளே பாரிஸ் செண்டின் வாசனை இழைந்தது. ரேடியோவில் ஒரு கிடார் முனகிக் கொண்டிருந்தது. இருட்டில் அவளது பால் - வதனம் சன்னமாகத் தெரிந்தது.

கார் மிக மெதுவாகத் தட தடத்தது. எல்லாம் சொப்பனம் போல இருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

- நீங்கள் இங்கே நின்று கொண்டிருந்த காரணம் தெரியும்.

- என்ன காரணம்?

- உங்கள் மனத்தில் அந்த ஊதாப்பூ கண் சிமிட்டிக் கொண்டிருக்கிறது.

(அம்மா! பிழைத்தேனம்மா. டைட்டிலை எப்படியோ வார்த்தையில் புகுத்திவிட்டேன்.)

பதில் இல்லை.

அவளுக்கு லேசாகப் புன்னகை வந்தது.

காரை பீச் வழியாகத் திருப்பினாள். பிறகு தனிப் பாதையில் இறக்கி ஒரு ஓரத்தில் நிறுத்தினாள். கதவைத் திறந்துவிட்டதும் குளிர் காற்று குப்பென்று அடித்தது. தூரத்தில் கரும்-பச்சையாகக் கடல் மின்னியது.

- டூ யு நோ ஹர்? (அவள்)

அவன் திரும்பினான்.

- யா.

- அப்படியானால் சந்தித்துப் பேசுவதுதானே?

அவன் தலையைக் குனிந்தான். பதில் சொல்லத் தெரியவில்லை.

- அவ்வளவு பழக்கமில்லையா?

- பழக்கந்தான்.

- அவளாக உங்களைக் கவனிக்கிறாளா என்று பார்க்கிறீர்களா?

பதிலில்லை. முகத்தை அவன் மறுபுறம் திருப்பினான்.

- நரேன்.

- நரேன்.

மெதுவாக அவனது கைகளைத் தொட்டாள். அவன் திரும்பினான். கண்கள் மின்னின.

- நரேன் (குரல் கீதம் போல் இழைந்தது.) நரேன், டு யு லவ் ஹர்?

- ஸ்வப்னா, என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. மனம் நிரம்பியிருக்கிறது. பேச முடியவில்லை என்றான்.

சிறிது நேரம் நிசப்தம். பிறகு அவள் ஆரம்பித்தாள்.

- லவ் பண்ணினால் இந்த அவஸ்தையெல்லாம் வரும்.

பண்ணிவிட்டு நான் பட்டபாடு அப்பப்பா....

- லவ் பண்ணியிருக்கிறீர்களா?

பண்ணியிருக்கிறேன். பல தடவை.



ஆச்சரியத்துடன் திரும்பினான்.

பல தடவையா?

- ஆமாம். பல தடவை. நான் பட்ட அனுபவம் போதும். எனக்கு லவ் மீது நம்பிக்கை கிடையாது. லவ் என்று ஒன்றும் கிடையாது. அப்படியிருந்தாலும் அதைத் தெய்வீகம், கிவ்வீகம் என்று சொல்வதெல்லாம் பொய். இட்ஸ் எ கைண்ட் ஆஃப் நெர்வல் டிஸ்ஸார்டர், ஆர் ஈவன் எ மெண்டல் டிஸ்ஸார்டர்.

நரேன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

- நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்வது கஷ்டமாக இருக்கிறது என்றான்.

- ஸாரி. மிஸ்டர் நரேன்! உங்கள் நம்பிக்கைகளை நான் சிதைக்க விரும்பவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு காரை மீண்டும் கிளப்பினாள் ஸ்வப்நா. மௌனமாக இருவரும் பிரயாணம் செய்தார்கள். நகரச் சாலைகளில் புகுந்து ஒரு ரெஸ்டாரண்ட் முன்னால் அவள் காரை நிறுத்தினாள்.

உள்ளே போனார்கள். மேஜைகளிலிருந்த பலர் ஸ்வப்நாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள்.

ஒரு மேஜையில் அமர்ந்து காப்பி ஆர்டர் செய்தார்கள் வந்ததும் பருக ஆரம்பித்தார்கள்.

வெளிச்சத்தில் நரேனின் வெளிறிய முகத்தை அவள் நன்றாகக் கவனித்தாள். அவளது மனம் கனிந்தது.

- நரேன் என்றாள்.

அவன் திரும்பினான்.

- சுகத்தைவிட காதலில் துக்கந்தான் அதிகம் நரேன். நீங்கள் ஏன் ஒன்று செய்யக் கூடாது?

- என்ன?

- நீங்கள் பிரெஞ்சு வகுப்பில் ஏன் சேரக் கூடாது?

எதற்காக?

- வெளியில் நிற்பதைவிட உள்ளே போயிருப்பது மேல் இல்லையா?

அவனுக்குப் பிடிபட்டது.

- நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்று தெரியாது. நீங்கள் அவளைப் பார்க்க விரும்புகிறீர்களா, அல்லது உங்களை அவள் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா, உங்கள் இருவருக்கும் உள்ள உறவு இதற்குமுன் எப்படி இருந்தது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் நீங்கள் அவளைப் பார்க்க ஆவல் காட்டுகிறீர்கள் என்பதுதான். இந்த அனுமானத்தின் பேரில் நான் இந்த யோசனையைக் கூறினேன் என்றாள்.

இரு வாரங்களாக நரேன் பிரெஞ்சு இன்ஸ்டிடியூட்டுக்குப் போய் வந்தான். மாலை ஆறரைக்குத் துவங்கும் வகுப்பில் அவனுக்கு இடம் கிடைத்தது.

அது அவனுக்கு வசதியாக இருந்தது. ரமியின் வகுப்பு முடிந்து, அவள் வெளிவரும்போது நரேன் வெளி ஹாலில் காத்திருப்பது வசதியாயிற்று.

முதல் நாள் ஹாலில் நரேனைப் பார்த்ததும் ரமி திடுக்கிட்டாள். அன்று முதல் வெளிவரும்போது அவள் குனிந்து கொண்டே வந்தாள். சினேகிதிகளிடம் சிரித்துப் பேசுவது கூட நின்றுவிட்டது.

ஒரு புதன்கிழமை.

அன்று அவன் ஹாலில் நிற்கவில்லை. இரண்டாவது ஃப்ளோரின் மாடிப்படியில் நின்று கொண்டிருந்தான்.



வகுப்பு முடிந்து கூட்டம் வருவது தெரிந்தது. மறுபுறம் திரும்பிக் கீழே பார்த்தவாறு நின்றான்.

காலடியோசைகள் யாவும் மறைந்துவிட்டன. மனத்தில் சட்டென்று ஒரே ஒரு ஒற்றைக் காலடி மட்டும் கேட்டது. அவன் கண்களை துடைத்தவாறு நின்றான்.

- இந்தர் என்று குரல். அது கேட்ட கணத்திலேயே உணர்வு பொங்கி எழுந்தது. நெஞ்சு அடைத்தது. கண்கள் கலகலத்தன. கைப்பிடிச் சுவரை இறுகப் பற்றினான்.

அந்தக் குரலை அவன் அறிவான். அதன் இனிமையை அறிவான். அதன் கனிவையும் அறிவான்.

அது அவளது குரல்தான்.

* * *

## 9

நரேனிடமிருந்து பதில் வரவில்லை. ரமி ஓர் அடி முன் வந்தாள்.

- இந்தர்.

- இந்தர்.

திரும்பினான். பார்வை சரியில்லை. கண்ணீரைச் சொரிந்தது.

- இந்தர்! (அவசரம் தொனித்தது).

கண்களைத் துடைத்தான்.

- நான் இந்தர் இல்லை, ரமி, நரேன்! புது ஜன்மம் எடுத்துவிட்டேன்.

- நரேன் என்றாள் அவள் - ஒரு வேண்டுகோள். என் வாழ்க்கையில் குறுக்கிடாதீர்கள்.

அதற்கு மேல் அவள் நிற்கவில்லை, படிகளில் அவசரமாக இறங்கினாள்.

பிரமிப்போடு நின்றான். அவள் போவதையே பார்த்தான். கடைசிப் படியில் இறங்கும் வரை அவள் காலடிகள் கேட்டன.

என்ன நடந்தது என்று நினைக்கும்போது மனம் அதிர்ந்தது. ரமியா இப்படிச் சொன்னாள்?

ரமி! நீ கூட இப்படி மாற முடியுமா?

மெதுவாக இறங்கினான். படிகளில் இரு தடவை தடுமாறினான். பார்வை கலங்கியிருந்தது. எதுவும் தெரியவில்லை. பிளாட்பாரத்தில் நடந்தான்.

எங்கே போவது?

வீட்டுக்குப் போனால் துக்கம் குமுறி வரும்.

எங்கே போவது?

எதிரே டெலிபோன் பூத் தெரிந்தது.

அதை நோக்கிச் சென்றான். பையிலுள்ள டைரியை எடுத்துப் பார்த்தான். டயல் பண்ணினான். சிறிது நேரம் காத்திருந்தான்.

- ஸ்வப்நா ஹியர். (லல்லாலாலா)

- ஸ்வப்நா, நான்தான் பேசுகிறேன். நரேன்.

ஓ! வெரி க்ளாட் எங்கே இருக்கிறீர்கள்? உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமா?

- ஒன்றுமில்லை ஸ்வப்நா. நான் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.



- இங்கே வாருங்களேன். என் வீட்டுக்கு.

- வரலாமா?

- ஓ! ஐ'ல் பி க்ளாட் டு ரிஸிவ் யு. (குரல் மிகவும் தணிந்தது) நீங்க.... கொஞ்சம்.... ஓர் அரை மணி கழித்து வரமுடியுமா? இங்கே.... கொஞ்சம்....

- எஸ்.

- வருத்தம் இல்லையே!

- இல்லை.

அவளது முகவரியை வாங்கிக் கொண்டான். அரை மணி நேரத்தைப் போக்குவது கஷ்டமாக இருந்தது. மணியைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

எட்டு மணிக்கு அவள் வீட்டு வாசலில் நின்றான். பஸ்ஸரை அழுத்தியதும் கதவு திறந்தது.

எதிரே நின்றது ஸ்வப்நா. அவள் கண்கள் ட்விங்கிளடித்தன. வயலட் ஸாரியை அணிந்திருந்தாள். கூந்தலின் இடது புறத்தில் ஒரு ஊதாப்பூ. செவியில் ஒரு வயலட் - ஸ்டட். எல்லாம் சேர்ந்து உடல் முழுவதும் ஒரு க்ளீம் அடித்தது.

- ஏன் பிரமிப்பு, நரேன்?

அவன் பேசவில்லை. பிரமிப்பும் அடங்கவில்லை. இவள் ஏன் இது மாதிரி டிரஸ் அணிந்திருக்கிறாள்?

உட்கார்ந்தார்கள்.

- நரேன்! பேசுங்கள். குரல் குழைந்தது. உடல் முன்புறமாகத் தழைந்தது.

- இதென்ன மேக்அப் ஸ்வப்நா?

- எப்படியிருக்கிறது?

- திடீரென்று பார்த்தபோது ஒரு ஊதா மலர் நிற்பது போல் நின்றீர்கள்! என் மனத்தின் ஆழங்களை அது அசைத்துவிட்டது.

- ஏன், நரேன்? (முறுவலித்தாள்)

- தலையைக்கூட அதே ஹேர்-டு செய்திருக்கிறீர்கள்.

- அதே என்றால்?

- அவள் செய்திருந்தாளே...

- அவளா... ஓ... அவளை நினைவு படுத்துகிறேனா?

(இவள் ரமி போல் மேக்-அப் செய்து என்னை மயக்கப் பார்க்கிறாளா?)

- ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள் நரேன்?

(வேலைக்காரி காப்பியை வைத்தாள்.)

- ஸ்வப்நா!

(காப்பியை எடுத்து அவனது கையில் கொடுத்தாள். ஸாரியின் மெல்லிய அசைவும் அதிலிருந்து எழுகிற பியேர் செண்டின் மென்மையும் அவன் கவனத்தைக் கவர்ந்தன.)

- ஸ்வப்நா! மறக்க வேண்டும் என்று நினைப்பதை ஏன் நினைவுபடுத்துகிறீர்கள்?

திடுக்கிட்டாள்.

- எதை மறக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

- ரமியைத்தான்.

- யார் ரமி?

- அந்த வயலட் பூக்காரி. அவளைத்தான் மறக்க வேண்டும் என்று நினைத்தேன்.



கொளத்தூர், சென்னை - 99.
36391
23/8/12

- ஏன் என்ன நடந்தது?

நரேன் சட்டென்று பேசவில்லை. எழுந்தான். நேராக சன்னல் அருகே சென்றான். வெளிப்புறத்தைப் பார்த்து விட்டுத் திரும்பினான்.

- ஸ்வப்நா!

அவள் ஆவலுடன் பார்த்தாள்.

- உலகத்தில் பெரிய துக்கம் எது தெரியுமா?

- தெரியாது.

- ஒரு காதலியால் உதாசீனப் படுத்தப்படுவதுதான். அதைவிடப் பெரிய துக்கம் எதுவும் இல்லை.

அவள் பேசவில்லை.

- அந்த துக்கத்தில் நான் இருக்கிறேன்.

- ரமியை நீங்கள் காதலித்தீர்களா?

- காதலித்தேனா? உயிரைக் கொடுத்தேன்! அவளுக்காக ஒரு உயிரை மாய்த்தேன், சிறைக்குப் போனேன்.

- காதலுக்காக ஒருவரை ஏன் கொன்றீர்கள்?

- அதுவா? என்று நரேன் ஆரம்பித்தான். ஒரு நாற்காலி முனையில் அமர்ந்தான். சிறிது நேரம் யோசனையில் இருந்தான். பிறகு தனது கதை முழுவதையும் விளக்கமாகக் கூற ஆரம்பித்தான்.

கதையை முடிக்கும்போது அவன் கண்கள் நனைந்திருந்தன. பல நிமிடங்கள் வரை பேசவில்லை.

அவன் கூறியதில் ஏதோ ஒன்று அவளது உள்ளத்தைத் தொட்டுவிட்டது. எப்போதுமே விழியிலும் உள்ளத்திலும்

துள்ளலோடு இருக்கும் ஸ்வப்நா நினைவில் ஆழ்ந்து விட்டாள்.

கண்களை அவன் துடைத்தான். பிறகு நிமிர்ந்து பார்த்தான் - ஸ்வப்நா! உங்களிடம் ஒரு தைரியமும் தன்னம்பிக்கையும் இருப்பதைப் பார்த்தேன். அதனால்தான் வந்தேன். உங்களிடம் பேசுவதால் அமைதி காண முடியும் என்று வந்தேன் என்றான்.

ஸ்வப்நா இன்னும் யோசித்துக் கொண்டிருந்தாள். அவளை அத்தகைய தோற்றத்தில் இதுவரை பார்த்த தில்லை.

- நரேன்! என்றாள் அவள் - இவ்வளவு தூரம் அவளுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து வாழ்ந் திருக்கிறீர்கள். அவளும் உங்களை மனதார நேசித்திருக் கிறாள், ஆனால் இப்போது அவள் உங்களை உதாசீனப் படுத்துவது ஆச்சரியமாய் இருக்கிறது! அதில் ஏதாவது காரணம் இருக்க வேண்டும்.

- என்ன காரணம் இருந்தால் என்ன? என்னிடம் ஒரு கணம் பேசக்கூட அவளுக்குப் பொறுமையில்லையா? எப்படி இருக்கிறீர்கள் என்று ஒரு வார்த்தை என்னிடம் கேட்கவேண்டாமா? அதை நினைத்தால்தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை வெளியே உருவினான்.

வாசலில் பஸ்ஸர் ஒலித்தது. ஸ்வப்நா எழுந்து போனாள். கதவைத் திறந்ததும் காந்தன் நின்று கொண்டிருந்தார். . . என் பை? என்றார்.

ஒரு மணி முன்பாக அவர் அந்த வீட்டில் இருந்தார். போகும்போது அவர் விட்டு விட்டுப் போன ஹேண்ட்-பேக் அது. ஸ்வப்நா எடுத்து வந்து கொடுத்தாள்.



கையில் வாங்கிக்கொண்டு அவர் அவளை உற்றுப் பார்த்தார். ஸ்வப்நாவின் தோற்றம் மின்னியது.

. . . யு ஆர் க்ளாமரஸ் என்றார் அவர். அவளது கைகளைப் பற்றினார்.

- ஓ! ப்ளீஸ் டோண்ட்!

. . . நோ! நோ! ஸ்வப்நா! ஐ வாண்ட்டு கிவ் யு. . . .

அவளது கைகளை இறுகப் பற்றினார்.

. . . நோ மிஸ்டர் காந்த். உள்ளே ஒருவர் இருக்கிறார். அவள் திமிறினாள்.

. . . ஐ நோ தட்.

அவர் விடவில்லை. அவளை இழுத்துத் தள்ளி இடது புறம் இருந்த அறைக்குள் நுழைந்தார், அது ஸ்வப்நாவின் ஸ்டடி - ரூம். கதவை டடக் என்று மூடினார்.

திரும்பி வரும்போது ஸ்வப்நாவின் முகம் கலைந் திருந்தது. காந்தனை வெளியே விட்டாள்.

இரண்டு முறை உதட்டைத் தடவி உள்ளங் கைகளைப் பார்த்துக் கொண்டாள். பிறகு ஒன்றும் நடவாததுபோல் ஹாலுக்குள் போனாள்.

நரேன் அவளைக் கூர்ந்து கவனித்தான்.

. . . யார் அது?

. . . மிஸ்டர் காந்த்.

அவளை அவன் இன்னும் நிதானமாகக் கவனித்தான்.

(ஸ்வப்நா! உன் முகம் மாறியிருப்பது எனக்குத் தெரிகிறது. இப்போது என்ன நடந்தது?)

அவன் கண்களில் தோன்றிய கேள்வியை அவள் உணர்ந்து கொண்டாள். நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

- இவரை அன்றைக்கு அறிமுகம் செய்து வைத்தேனே நினைவிருக்கிறதா? என்றாள்.

- இருக்கிறது.

- இவருக்கு ஓர் அழகான மனைவியும் நான்கு குழந்தைகளும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் என்னை நாடுகிறார்.

அவன் பதில் பேசவில்லை.

- நானும் அதற்கு இடம் கொடுக்கிறேன் என்றாள். பார்வையை மட்டும் தாழ்த்தினாள்.

நரேன் தன் விரல்களைத் திருகினான். யோசித்துக் கொண்டேயிருந்தான்.

ஸ்வப்நா அவனைக் கவனித்தாள். அவன் முகத்தில் இன்னும் தெரிந்த யௌவனமான அழகு அவளைக் கவர்ந்தது. மனதுக்குள் முறுவலித்தாள்.

- நான் வருகிறேன், ஸ்வப்நா. அவன் எழுந்தான். அவள் அவனைத் தொடர்ந்தாள்.

- ஸ்வப்நா!

- ம்

- நீங்கள் என்ன வாழ்வு வாழ்கிறீர்கள்.

- விழியை மட்டும் தூக்கினாள்.

- சொல்லலாமா?

- சொல்லுங்கள்.

- எங்கள் கம்பெனியில் நான் செக்ரடரி.

- ம்.

- அதற்கு எத்தனையோ அர்த்தங்கள்.



- ம்.

- கம்பெனிக்கு மிகவும் அழகான கெஸ்ட் ஹவுஸ் அடையாறில் இருக்கிறது. அங்கே வரும் விருந்தாளி களைக் கவனிப்பது என் வேலை. விருந்தாளிகளுக்கு விருந்தளிக்கிறேன். எல்லா விதத்திலும்.

அவன் புருவங்கள் நெரிந்தன. அருவருப்போடு அவளைப் பார்த்தான்.

- இதை நீங்களே விரும்பிச் செய்கிறீர்களா?

- கம்பெனி விரும்புகிறது. செய்கிறேன் நானும் ஓரளவு விரும்புகிறேன்.

அவன் தயங்கினான்.

- நீங்கள் படித்திருக்கிறீர்கள்?

- படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் நரேன்?

அவன் பேசவில்லை. அவள் ஆழ்ந்து பார்த்தாள்.

- உங்கள் மதிப்பிலிருந்து கீழே விழுந்துவிட்டேனா, நரேன்?

அவன் திரும்பினான்.

- எனக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை?

- உங்களிடம் எதையும் ஒளிக்க விரும்பவில்லை. உண்மையைச் சொன்னேன்.

- அதனால்தான் இன்னும் உங்கள் மீது மதிப்பு இருக்கிறது.

- என்னிடம் முன் போலவே பழகுவீர்களா?

அவன் நிதானமாக அவளைப் பார்த்தான். பதில் பேசவில்லை. கீழே படியில் இறங்கினான். சிறிது நின்றான்.

- நரேன்!

திரும்பினான்.

- எனக்குப் பயமாக இருக்கிறது. (அவள்)

- ஏன்?

- இனிமேல் இங்கே வரமாட்டீர்களோ?

- பதில் இல்லை. அவள் தவித்துக் கொண்டு நின்றாள்.

- உங்களைப் பற்றி ஆபீசிலேயே வதந்திகளைக் கேள்விப்பட்டேன்.

- என்ன சொன்னார்கள்?

- என்னவெல்லாமோ சொன்னார்கள். ஓர் அழகான பெண் இருந்தால் அவளைச் சுற்றி எப்போதும் வதந்தி இருக்கும் என்று எண்ணி அவைகளை ஒதுக்கிவிட்டேன். இப்போது இங்கே பார்த்தால். . .

- வருந்துகிறேன் நரேன். இப்படி இருப்பதற்கு வருந்துகிறேன்.

தலையைத் தாழ்த்தினாள்.

அவன் மேலே போக காலடி எடுத்து வைத்தான்.

- நரேன்!

நின்றான்.

- என்னிடம் முன்போலப் பழகமாட்டீர்களா!

அவன் நிதானித்து அவளைப் பார்த்தான்.

பழக முடியும் ஆனால் ஒரு நிபந்தனை.

- என்ன?



- என்னைக் களங்கப்படுத்த மாட்டீர்களே?

அவள் கண்கள் பளபளத்தன.

- நிச்சயமாக மாட்டேன். இது சத்தியம்.

இரு வாரம் சென்றது.

ஒரு நாள் ஆபீசை விட்டுப் புறப்படும்போது போன் வந்தது ஸ்வப்நா பேசினாள். . . . என்ன மறந்து விட்டீர்களா?

. . . இல்லையே? என்றான் நரேன்.

. . . என்னை கிங்ஸ் ரெஸ்டாரெண்டில் சந்திக்க முடியுமா?

. . . ஓ! என்றான் நரேன்.

நேராக ரெஸ்டாரண்டுக்குப் போனான். வாசலிலேயே ஸ்வப்நா காத்திருந்தாள் . . . ஒன்றுமில்லை. சும்மாதான் கூப்பிட்டேன் என்றாள்.

உள்ளே போய் டிபன் சாப்பிட்டார்கள். அரை மணி நேரம் சிதார் இசையைக் (ரிக்கார்ட்) கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வெளியே வந்தபோது அவள் ஒரு கவரை எடுத்தாள். - மிஸ்டர் நரேன்! எனக்கு ஓர் உதவி செய்யமுடியுமா? என் நண்பர் ஒருவர். பெயர் மிஸ்டர் சியாம். அவரிடம் நாளைக் காலை இதைச் சேர்ப்பிக்க முடியுமா? நான் காலையில் பெங்களூர் வரை ஆபீஸ் காரியமாகப் போகிறேன் என்றாள். நரேன் கவரை வாங்கி முகவரியைப் படித்தான்.

- இந்த சியாம் மூலம் கூட உங்களுக்கு ஏதாவது நடந்தாலும் நடக்கும்.

- என்ன நடக்கும்?

- அதை அப்புறம் சொல்கிறேன். முதலில் அவரைப் பார்த்துவிட்டு வாருங்களேன். எனக்காகத் தயவு செய்து செய்வீர்களா?

. . . ஓ!

மறுநாள் காலை. சியாமின் வீட்டு வாசலில் நரேன் நின்று கொண்டு வீட்டை உற்றுப் பார்த்தான். அழகான பங்களா அது. வாசலில் ஒரு பசுமையான தோட்டம் இருந்தது.

. . . . . மிஸ்டர் சியாம் இருக்கிறாரா? என்றான் வேலைக்காரனிடம். அவன் நரேனை அழைத்துப்போய் உள்ளே ரிஸப்ஷன் ஹாலில் உட்கார வைத்தான்.

சுற்றி வர அந்த ஹாலைப் பார்த்தான் நரேன் திடீரென்று ஏதோ பரபரப்பு ஏற்பட்டது. திடுக்கிட்டுப் போய், சுவர்களையும் விதானங்களையும் பார்த்தான், சுற்றி வரப் போட்டிருக்கும் பர்னிச்சர்களையும் கவனித்தான். அவனுக்கு ஒரு யோசனை; ஏதோ ஏற்கனவே பழக்கப்பட்ட ஒரு பின்னணியில் இருப்பது போல் தோன்றியது.

கணங்கள் ஓடின. அடுத்த அறையின் திரை ஆடியது. ஆவலுடன் பார்த்தான். வெளியே வருபவரைப் பார்த்ததும் மீண்டும் திடுக்கிட்டான்.

இவளா? மனம் நினைத்தது.

* * *

## 10

நின்றவள் ரமி. விர்ரென்று உள்ளே வந்தாள். எட்டி நின்று கொண்டு விறைத்துப் பார்த்தாள்.

. . . . நரேன்.



பதில் பேசவில்லை.

. . . . நரேன். (கடுமை தொனித்தது) நீங்கள் என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறீர்கள். எனக்குப் பிடிக்கவில்லை.

நரேன் நிமிர்ந்தான். முகத்தில் ஆச்சரியமும் ஏமாற்றமும், ஓடின.

. . . . ரமி. (கண்ணில் நீர் வந்தது)

. . . . . நீங்கள் என்னைச் சோதிக்கிறீர்கள் நரேன். என்னால் பொறுக்க முடியவில்லை.

குரலில் வெறுப்பு. அவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

. . . . நான் சோதிக்கிறேனா! ரமி?

. . . . . ஆமாம். நான் போகிற இடமெல்லாம் வருகிறீர்கள். உங்களுக்கும் சசிக்கும் என்ன வித்தியாசம்?

. . . . சசிக்கும் எனக்குமா? பிரமை பிடித்தது போல் அவன் கூறினான் . . . . நானும் அவனும் ஒன்றா ரமி?

. . . இல்லையென்றால் ஏன் பின் தொடர்கிறீர்கள்?

வாயடைத்து நின்றான். சுவாசம் கூட நின்றது.

. . . . ரமி. இந்த வீட்டில் நீ இருப்பது எனக்குத் தெரியாது. மிஸ்டர் சியாம் என்பவர் இங்கே இருக்கிறார். அவரிடம் இந்தக் கடிதத்தைக் கொடுங்கள் என்று ஒருவர் சொன்னார் (கடிதத்தை எடுத்தான்) அதற்காக வந்தேன்.

. . . சியாம் எனது கணவர். இது எங்கள் வீடு.

. . . இது தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன் ரமி. உன் உதாசீனத்தை நான் புரிந்து கொண்டிருந்தேன்? உன் முன்னால் நின்றோ, பேசியோ உனது அமைதியை நான் கெடுக்க விரும்பவில்லை.

அவன் எழுந்தான். கடிதத்தை மேஜை மீது வைத்தான். . . . நான் வருகிறேன் ரமி.

புறப்பட்டவன் ஒரு கணம் நின்றான். . . . ரமி! உன் அமைதியைக் கெடுக்க நான் விரும்பவில்லை. உன்னைத் தரிசித்து விட்டுப் போவதற்காகவே மாலை வேளைகளில் நின்றேன். சாதாரணமாகப் பார்க்கத்தான் வந்தேன். அவ்வளவுதான்.

. . . பார்த்து என்ன பிரயோசனம், நரேன்? அவள் சட்டென்று கேட்டாள்.

ஒரு நிசப்தம். அவளை அவன் ஆழ்ந்து பார்த்தான்.

. . . இல்லைதான். எதுவும் இல்லைதான்.

மீண்டும் நிசப்தம்.

. . . நான் வருகிறேன் ரமி என்றான் அவன்.

வெளியே வந்தான். நினைவில் எங்கேயோ தீப்பொறி விழுந்தது. திபுதிபு என்று எரிந்தது. அவளா இப்படிப் பேசினாள்? ரமியா?

மூன்று நாட்கள் சென்றதும் ஸ்வப்நாவைச் சந்தித்தான். நடந்தது முழுவதையும் கூறினான், அவள் ஆச்சரியப்பட்டாள். ரமியின் வீட்டுக்கு அவனை அனுப்பியதற்காக வருத்தம் தெரிவித்தாள்.

. . . வருத்தப்படுவதற்கு எதுவுமில்லை. ஸ்வப்நா! ரமியை அறிவதற்கு இது ஒரு சந்தர்ப்பம் கொடுத்தது என்றான் நரேன்.

மூன்று மாதங்கள் சென்றன. நரேன் தன்னுள்ளேயே அடங்கிவிட்டான்! வெளியே எங்கும் போவது கிடையாது. ஆபீஸ் விட்டதும் வீட்டுக்கு வருவான். ஆங்கில நாவலில் ஆழ்ந்து விடுவான்.



மனம் சமயங்களில் எப்போதாவது பேதலித்து நிற்கும். ரமியின் உருவம் புன்னகையுடன் எதிரே நிற்கும் . . . . ஓ, நோ, லீவ் மீ இன் பீஸ் என்று கண்களை இறுக மூடிக் கொள்வான். ஒரு கல்லறை. . . . , அமைதிக்கு இடையே உள்ளே மனம் மட்டும் வெந்துகொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். ஏதாவது வேலை செய்து கொண்டிருக்கும்போது சட்டென்று நின்று விடுவான். சமயங்களில் கண்ணீர் தோன்றிவிடும். துடைத்துக் கொள்வான்.

ஒரு மாதக் கடைசியில் சேர்ந்தாற்போல் மூன்று தினங்கள் லீவு வந்தது. உமேஷைப் பார்க்க ஆவல் தோன்றியது. ராம்நகர் கிளம்பினான்.

. . . எல்லாம் பொய்யடா என்றான் உமேஷிடம்.

மாடியில் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

. . . . எதைச் சொல்கிறாய்? (உமேஷ்)

. . . . அவள் காதலை.

. . . . ஏன்?

. . . . இல்லாவிட்டால் அவள் என்னை இவ்வளவு உதாசினம் செய்வாளா! என்னைப் போல் அவளுக்கு ஒரு மனம் இல்லையா?

. . . நரேன் அப்படி அவளிடம் காதல் இருக்கிறது என்று வைத்துக்கொள். அதை இனிமேல் எப்படிக் காட்ட முடியும் உனக்குக் கல்யாணம் ஆகவில்லை. நீ காண்பிக்கலாம். அவளால் முடியுமா?

நரேன் யோசித்தான்.

. . . . அவள் கல்யாணமானவள், நரேன் அவளிடமிருந்து நீ இப்போது என்னதான் எதிர்பார்க்கிறாய்! யு வாண்ட் ஹர் டு லீட் எ டபுள் லைஃப்?

. . . . . நாட் அட்டால்.

. . . . அப்படியானால் வேறு என்ன எதிர்பார்க்கிறாய்?

யோசித்தான்.

. . . . . அதைச் சட்டென்று சொல்ல முடியவில்லை. உமேஷ் எதையோ எதிர்பார்க்கிறேன் என்று மட்டும் தெரிகிறது.

மாலையில் நரேன் தனியாக வெளியே புறப்பட்டான். இந்தத் தடவை பஜார் வழியே போனபோது அவ்வளவு நடுக்கம் இல்லை. புதிய கடைகளையும் மாற்றங்களையும் பார்த்துக் கொண்டு இயல்பாக நடந்து சென்றான்.

ஜூபிலி பார்க் தாண்டினான். குதிரை வண்டி - ஸ்டாண்டைக் கடந்து குறுகிய சாலையில் நுழைந்தபோது, முன்னால் போகும் நபர் மீது பார்வை விழுந்தது. மீனுதான் அவள். கையில் ஒரு கனமான பையையும் இடுப்பில் ஒரு டப்பாவையும் தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். கழுத்து வழியாக வியர்வை வழிந்தது. தலைமயிரில் தூசியும், வெள்ளைத் தூள்களும் ஒட்டிக் கொண்டிருந்தன.

பார்க்க இரக்கமாக இருந்தது. மனம் எதையோ நினைத்தது அவள் பின்னாலேயே நடந்தான்.

சிறிது தூரம் போன பிறகு அவள் இடது தெருவில் திரும்பினாள். பிறகு சந்துகளில் திரும்பி ஒரு பழைய ஓட்டு வீடு முன் நின்றாள். சுமைகளைக் கீழே வைத்துவிட்டுப் பூட்டைத் திறந்தாள்.

நரேன் சிறிது தூரத்தில் நின்றான். அவளைப் போய் பார்க்கலாமா, வேண்டாமா?

பத்து நிமிடம் ஆகியது. மேலே நடந்து அவள் வீட்டு வாசலை அடைந்தான். கதவைத் தள்ளியதும் அது திறந்தது.



உள்ளே குச்சிகளான விறகுகளை அடுக்கிக் கொண்டிருந்தாள் அவள். . . . ஒரு ரூபாய்க்குப் பத்து கட்டை கூடத் தேற மாட்டேங்குதே என்று சபித்துக் கொண்டிருந்தாள்.

. . . மீனு.

திடுக்கிட்டுத் திரும்பினாள். சட்டென்று எழுந்தாள். சந்தேகத்தோடு அவனைப் பார்த்தாள். அடுத்த கணம் - பாவி என்று சீறினாள்.

புடைத்து எழுந்து முன்னால் வந்தாள் - பாவி! துரோகி! நீ உருப்படுவையா? விளங்குவையா? உன் குடும்பம் விளங்குமா சந்ததி விளங்குமா?

சரமாரியாகப் பொழிந்தாள். பிறகு அவன் சும்மாவே நிற்பதைப் பார்த்துவிட்டு உள்ளே ஓடினாள். ஒரு விறகுக் குச்சியை எடுத்து வந்து மேலும் கீழும் அவனை அடிக்கத் தொடங்கினாள்.

அவளுக்கு வயது இருபத்திரண்டு இருக்கும். அவ்வளவு வலு இல்லை. எனினும் அடிகள் உடம்பில் பட்டபோது வலி எழுந்தது. அவன் கவலைப்படவில்லை. அப்படியே இரக்கத்தோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலே தோள்பட்டையில் சட்டை கிழிந்தது. கையில் ஒரு இடம் கன்னிப் போய் ரத்தம் கசிந்தது. இருந்தும் அவன் அசையவில்லை! பார்வையையும் மாற்றவில்லை.

கை ஓய்ந்த பிறகு அவள் நிறுத்தினாள். கண்ணில் நீரோடு தள்ளிப்போய் உட்கார்ந்தாள். - பாவி. குடும்பத்தைக் கெடுத்துட்டியே பாவி என்றாள்.

மூச்சு இழைத்தது. முகத்தைத் துடைத்தாள்.

. . . மீனு என்றான் அவன்... உனக்கு வேண்டுமென்றே நான் துக்கத்தைத் தரவில்லை. உன் அண்ணனைக் கொன்றது தப்பிதம்தான். அதை நான் விருப்பத்தோடு செய்யவில்லை. ஒரு விபத்து அது.

. . . . துரோகி? அவனைக் கொன்னையே உனக்கு என்ன கிடைச்சுது!

எதுவும் கிடைக்கலை, மீனு (குரல் கம்மியது) நான் செய்தது தப்பிதம். பெரிய முட்டாள்தனம்னு இப்போ தெரிகிறது. அதற்குத் தண்டனையா ஜெயில்லே வாழ்நாள் முழுதும் இருப்பேன்னு பார்த்தேன். அவங்களும் விடுதலை பண்ணிட்டாங்க.

. . . . உலகத்திலே ஏதாவது நியாயம் இருக்கான்னு கேட்கிறேன். எங்கயாவது துளிக்கூட இருக்கா? பாவி, உன்னாலே எங்க அண்ணன் செத்தான். அவனை நினைச்சு நினைச்சு எங்க அப்பா செத்தார். எனக்குக் கல்யாணம் பண்ணி வச்ச கையோட அம்மா செத்தா. கைப் பிடிச்சவர் எங்கேயோ ஓடிட்டார். நான் படறேன் கஷ்டம். காதி பந்தர்லே வேலை செஞ்சு தினம் ரெண்டு ரூபாய் சம்பாதிக்கிறேன்; வாழறேன். இதே மாதிரி கூலி வேலை நான் ஆயுசுக்குச் செஞ்சிருப்பேனா? இருக்கிறதையெல்லாம் வித்து எங்க அப்பா, அண்ணனை என்சினீர் படிப்புக்கு அனுப்பினார். அவன் பெரிய என்சினீரா வருவான், குடும்பம் உருப்படியாயிடும்னு கனவு கண்டார். எல்லாத்தையும் பாழ் பண்ணிட்டியே, பாவி.

கோபம் அதிகமாகியது. எழுந்தாள். . . . உன்னை எப்படி வெளியிலே விட்டாங்க! உன்னை ஏன் தூக்கிலே போடலை? நான் போய் போலீசிலே சொல்லி. . . .

சீறிக்கொண்டு மீண்டும் கட்டையை எடுத்துக் கொண்டு வந்தாள். அருகில் வந்ததும் நின்றாள். அவன் கண்களில் நீரைப் பார்த்ததும் ஒரு தயக்கம். சட்டையில் சில இடங்களில் ரத்தம் ஒட்டியிருந்தது. அடிபட்டதில் உள்ளே புண் ஏற்பட்டிருக்க வேண்டும்.



வந்த கோபம் ஒரு கணம் நின்றது. சட்டென்று கட்டையைக் கீழே போட்டாள். முகத்தைச் சுளுக்கிக் கொண்டே திரும்பிப் போனாள்.

சிறிது நேரம் நிசப்தம். அவள் விசிப்பது மட்டும் கேட்டது. அவன் நிமிர்ந்து பார்த்தான்.

. . . . மீனு, உனக்காக ரொம்ப மனசு கஷ்டப்படறேன். நீ என்னை மன்னிக்க வேண்டாம். ஆனால் உள்ளூர நான் வருத்தப்படறேன் என்கிறதை உணர்ந்தால் போதும்.

அவள் திரும்பினாள். அவன் குழைவோடு அவளைப் பார்த்தான்.

. . . . . என்னை மன்னிக்க முடியும்னா மன்னிச்சுடு, மீனு!

கண்களைத் துடைத்தாள். பிறகு மூக்கை உறிஞ்சிக் கொண்டே . . . . உங்களை ரொம்ப அடிச்சுட்டேனா என்றாள்.

. . . . இல்லேம்மா! பட்டதெல்லாம் எனக்கு வேண்டியதுதான்! உண்மையிலேயே இப்போதான் என் ஆத்மாவே அடி பட்டது! அந்தத் தண்டனை போதும்.

அவள் பேசவில்லை.

. . . மீனு உனக்கு ஒரு உதவி நான் செய்யலாமா?

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

. . . சின்ன உதவி. நான் உனக்கு மாதம் ஏதாவது. . . பணம் அனுப்பலாமா?

. . . சீ என்றாள் அவள். . . . உன் கிட்டேயிருந்து பணம் வாங்கிப்பேனா? நீ செய்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் பண்ணறியா? அவள் அதற்கு மேல் பேசவே யில்லை. நரேன் சிறிது நேரத்தில் திரும்பவேண்டி வந்தது.

பார்க்கிலிருந்து அவன் எழுந்தபோது இரவு மணி எட்டு. மேலே வலிகள் ஆறியிருந்தன. குளிர் காற்று அவன் மனத்தை லேசாக்கியிருந்தது.

வெளியே வந்தான். எதிலும் பிடிபடாமல் நடந்தான். சாலையைக் கடந்து பெரிய பஜாரைத் தாண்டினான். கடிகாரக் கூண்டைத் தாண்டியதும் சினிமா தியேட்டர்.

பார்வின் என்று அதன் பெயர். அதன் முகப்புக்குச் சற்று எட்டத்தில் நின்றான்.

மனத்தில் ஒரு சூன்யம். ஏதோ ஒரு உள்வலியில் மனம் சுருளுவது போல் அவனே கற்பனை செய்ய முடிந்தது. ஏதோ வலி! ஏதோ துக்கம்.

தியேட்டர் வாசலில் ரமி நின்றாள். பிரமையில் தோன்றிய ரமிதான். அவளைப் பார்த்ததும் வெறுப்பில் முகத்தைத் திருப்பினான்.

மேலே நடந்தான். கால்கள் தாமாகச் சென்றன. தெருக்களை எல்லாம் தாண்டி அந்த நாற்சந்திக்குப் போய் நின்றான்.

இதே வழியில் சென்று வலதுபுறம் திரும்பினால் அவள் வீடு. போகலாமா? தயங்கியவாறு நின்றான்.

இருள் மெதுவாக இறங்கியது. தெருக் கம்பங்களில் தீபங்கள் தொற்றிக் கொண்டன.

அடி எடுத்து வைத்தான். தன்னையறியாமல் அதே தெருவில் திரும்பினான். அதே வீட்டு வாசலில் போய் நின்றான்.



ரமி கையைத் தூக்கி ஜாடை காட்டினாள். புன்னகை புரிந்தாள். அவன் அதை அலட்சியமாகப் பார்த்தான். இனி உனக்கும் எனக்கும் என்ன என்று முணுமுணுத்தான்.

மறுகணம் அடுத்த வீட்டைக் கவனித்தான். அவன் தங்கியிருந்த மாடி வீடு. இது இப்போது ஒரு ஹோட்டலாக மாறியிருந்தது. வெளித் தோட்டத்தில் அநேகம் பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே போய் உட்கார்ந்தான். காப்பி வரவழைத் தான். மாடியிலிருந்து சசி சிரித்தான். குடிப்பதை நிறுத்தி விட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தான்.

சசி! உன்னைக் கொன்றது தவறு! அதுவும் ஒரு பெண்ணுக்காக! அதுவும் காதலை உணராத பெண்ணுக்காக. . . .

வெகு நேரம் சிந்தனையில் இருந்த பிறகு திடீரென்று ஒரு நினைவு. அடுத்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்கும் இடையே ஒரு காம்பவுண்டுச் சுவர். அதில் கீறல் விழுந்த இடுக்குகள் அநேகம் இருந்தன. அவற்றில் ஒன்றில்தான் கடிதம் எழுதி வைப்பான். அவள் எடுத்துக் கொள்வாள்.

மெள்ள எழுந்தான். எதையோ பார்ப்பது போல் பாவனை காட்டிக் கொண்டு காம்பவுண்டுச் சுவரைப் பார்த்தவாறு போனான். அந்தக் கீறல் தெரிந்தது. ஆச்சரியம்? அதில் அடைத்து வைத்திருந்த துண்டுச் செங்கல் அப்படியே இருந்தது.

சுற்றிவரக் கவனித்தான். மெதுவாகச் செங்கல்லை உருவினான். உள்ளே என்ன?

மீண்டும் ஆச்சரியம்! அங்கே ஒரு காகிதம் இருந்தது. தூக்கி வாரிப்போட்டது. மெள்ள இரு விரல்களை விட்டு வெளியே எடுத்தான்.

சட்டென்று பையில் போட்டுக் கொண்டு வெளியே அவசரமாக வந்தான். தெருக்களில் விரைவாக நடந்தான்.

நடமாட்டமில்லாத ஒரு முனையில் நின்று கொண்டு கடிதத்தை எடுத்தான்.

அது மக்கியிருந்தது. எழுதி வெகுநாள் ஆகி இருக்க வேண்டும். அவசரமாகப் பிரித்தான்.

. . . இந்தர்.

நாளை என் மணநாள். இரவு 12 மணிக்கு இதை எழுதுகிறேன். அறையில் விளக்கு எரிக்காமல் நிலா வெளிச்சத்தில் எழுதுகிறேன்.

இந்த வானமும் பூமியும் இருக்கும்வரை நீங்கள் என்றைக்கும் என் மனத்தில் உறைவீர்கள். இது சத்தியம்.

இன்று மாலை வைபவங்கள் நடந்தபோது நான் உங்களையே நினைத்துக் கொண்டிருந்தேன். யாருக்கும் தெரியாமல் ஜாடையாகக் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

மணமாகாத ஒரு கன்னிப் பெண்ணாக இருக்கும் போது நான் கடைசியாகச் செய்ய விரும்பிய செய்கை இந்தக் கடிதம் எழுதுவதுதான்.

ஆதவனின் வரவால்தான் கமலங்கள் மகிழ்ச்சி கொள்கின்றன. நான் உங்கள் நினைவால்தான்.

இந்தத் தென்றலும், இரவும், இந்த நிலவும் உண்மை யானால் என்றாவது ஒருநாள் நாம் சந்திப்போம்.

அப்போது ஒரே ஒரு கண் - பார்வையில் - இமை கொட்டாத மாற்றுக் கொள்ளாத ஒரே பார்வையில் - நாம் மனத்திலும் உயிரிலும் ஆன்மாவிலும் ஒன்றாகக் கலந்து விடுவோம். இது உறுதி.



இதை நமது பதிவான இடத்திலேயே வைக்கிறேன். கடவுள் அருளால் நீங்கள் எப்போதாவது இதைப் பார்க்க நேர்ந்தால் இது என் மனத்தில் உங்கள் மீது இருக்கும் பாசத்தையும் காதலையும் சந்தேகமறக் காட்டிவிடும்.

கண்கள் குளமாயின. கடிதத்தை மடித்து முத்த மிட்டான். நோ! ரமி என்னுடையவள்தான்! என்னுடையவள் தான்! என்று மனத்திலேயே கூவினான்.

அதுவரை உள்ளே அவன் மனத்தில் பதுங்கியிருந்த அவளைப் பற்றிய நினைவுகள் யாவும் திடீரென்று கட்டுக் கடங்காமல் வெளியே வந்தன.

* * *

## 11

சென்னைக்கு வந்த பிறகு ஒரு வாரம் வரை நரேனுக்கு எதுவும் ஓடவில்லை. ரமியின் நினைவு ஒரு வஞ்சத்துடன் வேகமாக வந்து கொண்டிருந்தது.

ராம்நகர் போய் அந்தக் கடிதத்தைப் பார்க்காம லிருந்தால் இந்த நினைவு வந்திருக்காதோ என்னவோ!

அந்த நகரை விட்டுப் புறப்படும்போது உமேஷ் சொன்னது நினைவுக்கு வந்தது. . . . நரேன், அவளை மறந்து விடு.

மறக்க முடியுமா?

ஒரு நாள் மாலை வீட்டுக்கு வரும்போது உடம்பு கதகதத்தது. இரவில் ஜுரம் ஆரம்பித்தது.

நான்கு நாள் வரை ஆபீஸ் போகவில்லை. ஐந்தாம் நாள் மாலையில் வீட்டுக்கு ஸ்வப்நா வந்தான்.

அவளைப் பார்த்தது ஆச்சரியமாக இருந்தது. வீடு வரை வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

சென்னைக்கு வந்தபிறகு அவளை அவன் சந்திக்கவேயில்லை என்று குற்றம் சாட்டினாள் அவள்.

மனம் சரியில்லை என்று காரணத்தைக் கூறினான் அவன்.

. . . . ஏன் என்ன நடந்தது?

. . . . . அவளை மறக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் ராம் நகரில் அவள் எழுதி வைத்த கடிதம் கிடைத்தது. அதைப் படித்த பிறகு. . . .

கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

படித்துவிட்டு அவள் சிறிது நேரம் பேசவில்லை.

பிறகு மெதுவாக, . . . நரேன் மனதில் பழையதையெல்லாம் நினைத்துச் சஞ்சலப்படாதீர்கள் என்றாள்.

. . . . . அப்படியானால் ரமியை மறக்கச் சொல்கிறீர்களா? அது முடியாது ஸ்வப்நா என்றான் அவன்.

ஒவ்வொரு தினம் மாலையிலும் ஸ்வப்நா வந்தாள். நேரே உள்ளே சென்று ஹார்லிக்ஸ் கரைத்துக் கொடுத்தாள். இரவுக்கு வேண்டிய உணவை, சமயங்களில் அவளே தயார் செய்து கொடுத்தாள்.

அவள் வரும்போது நரேன் படுக்கையில் படுத்தவாறு யோசித்துக்கொண்டிருப்பான். எதை நினைத்தாலும் ரமிதான் தோன்றிக்கொண்டிருப்பாள். இடையில் சமையலறையில் ஸ்வப்நா மெதுவாக இழுக்கும் ஆங்கில ட்யூன் அவன் கவனத்தை இழுத்துக்கொண்டிருக்கும். அல்லது. . . . . . நரேன், ஷுகர் போடவா, வேண்டாமா என்று உள்ளிருந்து கேட்கும் அவள் குரல் அவன் நினைவைத் தடை செய்து கொண்டிருக்கும்.



இவள் எத்தகைய பெண் என்று ஆச்சரியத்துடன் நினைப்பான். கையில் டம்ளரை ஏந்திக்கொண்டு அவள் நிற்கும் அவளது பார்வையில் ஏதோ ஒன்று ரமியை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

இவள் ரமியாக இருந்தால். . .

கலகலவென ஸ்வப்நா சமயங்களில் சிரிப்பாள். . . வெந்நீர் வேண்டுமா இருங்கள் என்று ஒரு கணத்தில் துள்ளி உள்ளே ஓடுவாள். . . . இன்று ஆபீஸில் என்ன நடந்தது தெரியுமா என்று ஏதாவது ஒரு விசித்திர நிகழ்ச்சியைக் கூறுவாள்.

எல்லாவற்றையும் முடித்தபிறகு இரவு எட்டுக்குப் புறப்படும்போது, வாசல் கதவை திறந்துவிட்டு ஒரு கணம் தயங்கி நிற்பாள். அப்போது அவள் வீசும் ஒரு பார்வையில் லைட் ஹவுஸ் போல் ஒளிகள் பறந்து அடிக்கும்.

கதவை அடைத்துவிட்டு அவள் மறைந்த பிறகு அவன் மனத்தில் ஒரு வருத்தம் ஏற்படும். அவளை உடனே அழைத்து மீண்டும் பேச வேண்டும் என்ற ஒரு தவிப்பு ஏற்படும்.

ஒரு சனிக்கிழமை இரவு, அவள் வருவதற்கு நேரமாகியது. கதவைத் திறந்தவள் பரபரப்புடன் வந்தாள் - நரேன் மன்னிக்க வேண்டும். நேரமாகிவிட்டது என்று கூறியவாறு உள்ளே வந்தபோது, அவன் கண்கள் கலங்கியிருப்பதைக் கவனித்தாள்.

. . . ஏன் நரேன் என்றாள்.

அவன் விழி ஓரமாக நீர் வழிந்தது.

. . . ஏன் நரேன் என்றாள் மீண்டும்.

. . . இல்லை, நீங்களும் மறக்க ஆரம்பித்து விட்டீர்களோ என்று நினைத்தேன் என்றான்.

அவள் மனதில் புல்லரித்தது.

. . . நானா. உங்களையா? என்றாள். பிறகு வலது கைவிரல்களால் அவன் கண்ணீரைத் துடைத்தாள். புருவங்களுக்கு மேலாக நெற்றியை நீவி விட்டபோது அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். அவள் சட்டென்று தன் கையை மேலே தூக்கினாள். அந்த கணத்தில் தன் விழிகளை மாத்திரம் அவன் கண்களில் மெதுவாக இறக்கி அதில் மெய்மறந்தவளாய் லயிக்க லானாள்.

அந்தப் பரவச நிலையில் கணங்கள் ஓடின. நரேன் பிரமித்துப் போய் அவள் விழியில் ஆழ்ந்திருந்தான். அதன் ஆழத்துள்ளே ரமி நின்று கொண்டு அவனைக் கைகாட்டி அழைத்துக் கொண்டிருந்தாள்.

. . . ஸ்வப்நா என்றான் அவன்.

அவள் நிமிர்ந்தாள். தழைந்து வந்த மார்பு பின்னால் போயிற்று. அவளும் ஏதோ பிரமிப்பிலிருந்து எழுந்து கொண்டிருந்தாள். அந்த ஒரு கணத்தில் அவள் வேறு ஒரு ஸ்வப்நாவாகத் தெரிந்தாள். ஒரு கணத்தில் தான்.

மீண்டும் அவன் கண்கள் கலங்கியிருந்தன.

. . . ஏன் என்றாள் அவள்.

. . . ரமியை நினைக்கிறேன், அவள். . .

அவள் முகம் சுருங்கியது.

. . . உங்களுக்கு அவள் நினைவுதான்! வீணாக மனத்தைக் கஷ்டப்படுத்திக் கொள்கிறீர்கள்!

எழுந்தாள். ப்ரட் ஸ்லைஸ்களை எடுத்துக்கொண்டு சமயலறையை நோக்கி நடந்தாள்.



வழக்கமாக வரும் ஆங்கில ட்யூன் இன்று கேட்க வில்லை. நரேன் நரேன் என்று கூப்பிடும் குரலும் கேட்கவில்லை. மௌனமாக இருந்தாள்.

அவனும் பேசவில்லை. இருவர் மனங்களும் எங்கேயோ அடிபட்டிருந்தன.

எட்டு மணிக்கு அவள் புறப்பட்டாள். உடம்பு தேறி இருந்ததால் அவன் எழுந்து அவளுடன் போனான். கதவைத் திறந்து வராந்தாவில் நின்றதும் அவள் திரும்பிப் பார்த்தாள். டக்கென்று லேசாக வந்தது புன்னகை. குனிந்தாள். இது அவளிடம் பார்க்க முடியாத செயல்.

- கவலைப்படாமல் இருப்பீர்களா? என்றாள் அவள்.

- எப்படி முடியும்?

அவளை அவன் ஆர்வத்துடன் பார்த்தான். அவளுக்கு ஒரு ஆவல். முகத்தில் அதன் ஒளி ஓடியது.

- கவலைப்பட்டால் எதைப்பற்றிப் படுவீர்கள்?

- ரமியைப் பற்றித்தான் ஸ்வப்நா! வாழ்க்கையில் எனக்கு வேறு என்ன இருக்கிறது?

அவள் முகத்தில் அந்த ஒளி தணிந்தது. தலையைக் குனிந்தாள். மேலே இரண்டு அடி எடுத்து வைத்தாள்.

பிறகு திரும்பினாள்.

- நரேன் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கவா? என்றாள்.

- கேளுங்கள்.

- ரமியிடமிருந்து நீங்கள் என்னதான் எதிர்பார்க் கிறீர்கள்?

அவன் யோசித்தான்.

- எனக்குச் சொல்லத் தெரியவில்லை ஸ்வப்நா?

- அவள் உன்னிடம் பேச வேண்டுமா, பழக வேண்டுமா அல்லது. . . .

- எதுவும் வேண்டாம் ஸ்வப்நா. ஆனால். . . ஏதோ ஒரு பரிச்சயத்தை மட்டும் எதிர்பார்க்கிறேன். அது என்னவென்று என்னால் விவரிக்க முடியவில்லை.

ஸ்வப்நா தலை குனிந்தாள். யோசிப்பது தெரிந்தது. சில கணங்களுக்குப் பிறகு - நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

மூன்று மாதங்கள் சென்றன. ஒரு நாகரிகப் பகுதியின் சாலை ஒன்றில் தி நைட் புக்ஷாப் என்ற பெயரில் ஒரு புத்தகக் கடை. இரவு ஏழு மணி இருக்கும். உள்ளே வரிசையாக நிற்கும் ஷெல்புகளுக்கு நடுவில் ஒரு மேஜை. அதில் நரேன் உட்கார்ந்திருந்தான்.

உள்ளே ஒரு ஆணும் பெண்ணும் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நரேன் அவர்கள் மீது அதிக கவனம் செலுத்தவில்லை. அவன் பார்வை கடையின் கண்ணாடி சன்னல் வழியே வெளியே போயிருந்தது. எப்போதாவது காரில் ரமி அந்த வழியாகப் போவாள். அவளை அவன் பார்க்கவேண்டும்.

அவளைப் பார்ப்பதற்கு என்றே இப்படி ஒரு பொழுதுபோக்கை, ஏற்படுத்தியிருந்தாள் ஸ்வப்நா. அவளது யோசனை இது. மாலை வேளைகளில் நரேன் வேலையில்லாமல் இருந்தால் எதையாவது நினைத்து மனத்தில் கஷ்டப்படுகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள். அதனால் அவனது உடல்நலம் கூடப் பாதிக்கப்பட்டது. இப்படியே போய் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் என்று அவள் எண்ணினாள்.



ஆகவே, நரேன்! நீங்கள் மாலைப் பொழுதைக் கழிப்பதற்கு ஒரு புக்ஷாப் ஆரம்பியுங்கள். அது உங்களுக்கு நிம்மதி தரும் என்றாள்.

முதலில் நரேனுக்கு அது விசித்திரமாகப் பட்டது. ஆனால் அவள் வற்புறுத்தவே சரி என்று சொன்னான்.

புக்ஷாப் இருந்த இடதுமெயின் சாலை. அதன் அடுத்த தெருவில் ரமி இருந்தாள். அவள் வெளியே போவதானால் அந்த சாலையைத்தான் பயன்படுத்த வேண்டும்.

அதைத் தெரிந்து கொண்ட ஸ்வப்நா - நரேன் நீங்கள் அவளை தினம் ஒரு முறையாவது பார்க்க விரும்புகிறீர்கள். அதற்கு நீங்கள் இங்கே இருப்பது நல்லதாகப் போயிற்று.

அன்று இரவு ஷாப்பில் இருந்தபோது வாசலில் ஒரு கார் வந்தது. ஸ்வப்நா இறங்கி உள்ளே வந்தாள்.

- வாட் ஹேப்பண்ட் டு யூ! முகம் சரியில்லையே என்றாள்.

அவன் உடனே பேசவில்லை.

- ஏன் நரேன்!

- இன்று மாலை ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

- ரமி வந்தாளா?

- ஆமாம்.

- உள்ளே வந்தாளா?

- இல்லை. வாசலில் அவள் கார் நின்றது. அவள் இறங்கவில்லை. அவளது கணவர் வந்தார். டைம் வாரப் பத்திரிகை இருக்கிறதா என்று கேட்டார். இல்லை என்றேன். போய்விட்டார்.

- ரமி உங்களைப் பார்த்தாளா?

- பார்த்திருக்க வேண்டும். பார்க்கும் படியாகத்தான் நாங்கள் நின்றோம்.

ஸ்வப்நா உட்கார்ந்தாள்.

- அவள் மனம் எவ்வளவு உறுதியாயிருக்கிறது நரேன்? ஒரு சாதாரணப் பார்வை கூடப் பார்க்கவில்லை என்றால் என் மனமே கொதிக்கிறது.

சிறிது நேரம் நிசப்தம்.

- ஸ்வப்நா! எனக்கு வேறு எதுவும் தேவையில்லை. அவளிடம் சிறிது நேரம் பேச சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். எனக்கு அவள் இழைக்கும் அநீதி முழுவதையும் எடுத்துக் காட்டுவேன்.

- உங்களை அவள் பார்த்ததுகூட நல்லதுக்குத்தான் நரேன். தினம் இந்த வழியாகப் போகும்போது அவள் மனம் அரித்துக் கொள்ளும். அதுவே அவளுக்கு ஒரு தண்டனையாகக் கூட இருக்கும் என்றாள் ஸ்வப்நா.

அவனிடம் பேசிவிட்டுக் கடைசியில் புறப்படும் போது அவள் - நரேன், இந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு கார்னிவல் நடக்கிறது. உங்களுக்கு ஒரு அழைப்பு. நீங்கள் என்னோடு வரவேண்டும் என்றாள்.

- புக்ஷாப்? என்றான் அவன்.

- ஒரு மாலை நேரத்தில் மூடுவதால் பரவாயில்லை என்றாள் அவள்.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஸீ-கார்டனில் அந்த நிகழ்ச்சி நடந்தது. நரேன் போனபோது வாசலில் ஸ்வப்நா வரவேற்றாள். உள்ளே நிறைய பேர் நாகரிக டிரஸ்களில் காணப்பட்டார்கள். வாசலில் கார்கள் இடத்துக்காக இரைந்து கொண்டிருந்தன.



கூட்டத்துக்கிடையே ஸ்வப்நா நரேனை லாவகமாக அழைத்துப் போனாள். அவளது மென்மையான உடம்பு சமயத்தில் அவன்மீது உராய்ந்தது. முகத்தில் அப்படியே நிலைத்து நின்ற புன்னகையோடு அவள் அவனை அழைத்துப் போனாள்.

அரவங்களைத் தாண்டி சற்று தூரம் போனதும் தனியாக அவனை நிறுத்தினாள். - நரேன் ஒரு விஷயம் என்றாள்.

என்ன என்று அவன் பார்வை கேட்டது.

- உள்ளே சியாமும், ரமியும் வந்திருக்கிறார்கள்.

- அப்படியா?

- ஆமாம்.

- அவர்கள் முன்னால் நான் உங்களுடன் நடந்து கொள்ளும் விதத்தை, நீங்கள் எந்தவிதத்திலும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சரிதானா?

அவன் மௌனமாக நின்றான்.

- இதெல்லாம் எதற்கு, ஸ்வப்நா?

- இது ஒரு காரணத்துக்காகத்தான். நீங்கள் சரி என்று சொல்லுங்கள்.

- சரி.

டிபன் சாப்பிடும் இடத்தில் ஸ்வப்நா அவனை அழைத்துப் போய், ரமியும் சியாமும் இருக்கும் நாற்காலி முன்னால் நிறுத்தினாள்.

- நரேன், மீட் மிஸ்டர் சியாம் என்றாள்.

அவள் குரல் குழைந்து வந்தது.

- வெரி கிளாட் என்று சொல்லி, கைகுலுக்கிவிட்டு - இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்றார் சியாம்.

அவர் சொல்வதைக் கவனியாதது போல. அருகில் நிற்பவர் தங்கள் மனைவிதானே என்றாள் ஸ்வப்நா.

... ஆமாம். இவள் என் மனைவி ரமி என்று அவர் அறிமுகப்படுத்தியதும். . . ரமி கூட இவரை எங்கேயாவது பார்த்திருக்கவேண்டுமே என்று நரேனை அவளுக்குச் சுட்டிக் காட்டினாள் ஸ்வப்நா.

★ ★ ★

## 12

இவரைப் பார்த்திருப்பீர்களே என்று நரேனைக் காட்டி ஸ்வப்நா சொன்னதும், ரமியின் முகம் சிவந்தது. நிதானமடைய சிறிது நேரம் ஆகியது.

. . . ஓ, இவரைப் பார்த்திருக்கிறேன். புக் ஷாப்பில் என்றாள். நரேன் ரமியின் பக்கம் திரும்பவில்லை. அவனது பதட்டத்தைக் கண்ட ஸ்வப்நா - கமான், நரேன் என்று அழைத்துக் கொண்டு போனாள்.

ரமி - சியாம் இருந்த இடத்திற்கு நாலைந்து அடி தள்ளி இரு நாற்காலிகளில் அமர்ந்து கொண்டார்கள். நரேனுக்கு எதிரில் ஸ்வப்நா உட்கார்ந்தாள். அவள் இருந்த இடம் ரமிக்கு எதிராகவுமிருந்தது.

டிபன் சாப்பிடும்போது ஸ்வப்நா. . . நரேன்! ஐ வான்ட் அனதர் ஸ்வீட் என்றாள். நரேன் என்று சொல்லும் போது குரல் கொஞ்சியது.

. . . . ஸ்வீட்ஸ் வில் கிவ் யூ ஸ்வீட்டர் ட்ரீம்ஸ். (கண்களைச் சிமிட்டினாள் அவள்.)



. . . இஸிட்

. . . . யா! தி ட்ரீம்ஸ் வில் தென் பி லூஷியஸ்.

. . . . இஸிட்?

. . . . யா! (இதில் ஒரு தாபமான குழைவு.)

டிபன் சாப்பிட்டபின் சிறு கும்பல்களாகப் பிரிந்தார்கள். சிரிப்புகளும் கேலிகளும் நிறைந்தன. கம் ஆன், நரேன்! கம் ஆன் என்று நரேனை ஸ்வப்நா அங்குமிங்கும் இழுத்துக் கொண்டிருந்தாள். சமயங்களில் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகச் சென்றாள்.

நரேன்! நீங்கள் மெதுவாக நடக்கிறீர்களே. கமான் என்று செல்லமாகக் கடிந்தாள். . . மிஸ்டர் நரேன்! எப்போதும் நீங்கள் இப்படித்தான்? நான் சொன்னதுக்கெல்லாம் சரி சரி என்கிறீங்க. ஒருதரமாவது அப்ஜெக்ட் பண்ணுங்களேன். லெட் மி ஹேவ் ஸம் ஃபன் இன் க்வாரலஸ் என்று கொஞ்சினாள்.

அவளது நடையும் ஒயிலும், கண்வெட்டலும், மறுகலும், கொஞ்சலும் நிறையப்பேர் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தன. அநேகம் பேர் அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பார்கள்.

சியாம் - ரமி இருக்கும் பக்கமாவே ஸ்வப்நா அடிக்கடி நரேனை இழுத்துப் போனாள். அவர்கள் காது கேட்கும்படியாகவே பேசினாள். சமயங்களில் ஜாடையாக ரமியைப் பார்த்துக் கொண்டாள். ரமியின் பார்வை அவர்கள் பக்கம் திரும்பியிருப்பது தெரிந்தால், தைரியமாக நரேனை இடித்தவாறு அவன் தோள் மீது கையை வைத்துக்கொண்டாள்.

நிகழ்ச்சிகள் முடிந்து வெளியே வந்தபோது - எப்படி என் நடிப்பு? என்று கேட்டாள் ஸ்வப்நா.

- எனக்குப் பயமாகப் போய்விட்டது ஸ்வப்நா. நீங்கள் ஏன் இதுபோல் செய்தீர்கள்?

- உங்களுக்குத் தெரியாது. இதன் மூலம் ஒரு பொறாமையை அவள் மனத்தில் எழுப்ப விரும்பினேன். ஒரு பெண்ணின் மனத்தில் பொறாமை எப்படி வேலை செய்யும் என்று எனக்குத் தெரியும். ஒருத்தி ரசித்து அனுபவித்த பொருள் இன்னொருத்தி கையில் போய் விட்டால்...

அவள் சிரித்தாள். காரை ஓட்டும்போது லல்லலாலா என்று டியூனை முணுமுணுத்தாள். காரின் ஸ்டீரிங் அவள் கைபட்டு வலமும் இடமும் கிரங்கிச் சுற்றியது. மேடுகளிலும் பள்ளங்களிலும் கார் ஆடிச் செல்லும்போது, ஒரு ஸ்பிரிங் பந்து போல் அவள் ஸீட்டில் தளும்பிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் நரேனை இறக்கியதும், பை பை என்றாள். கார் வளைந்து திரும்பியது.

அவள் வீட்டை அடையும்போது இரவு பன்னிரண்டு மணி மாடிக்குச் சென்றதும் ஹாலில் விளக்குகளைப் போட்டாள். நிலைக் கண்ணாடியின் முன் நின்றாள்.

உருவத்தைப் பார்க்கும்போது, கார்னிவலில் நரேனைத் தொட்டதும் இழுத்ததும் மேலே சரிந்து நின்றதும் நினைவுக்கு வந்தது.

நடிப்பா? செய்ததெல்லாம் நடிப்புக்குத்தானா?

நடிப்புக்குத்தான் செய்தாள். ஆனால் இதுவரை அனுபவித்து அறியாத இனிதான உணர்வு அவளை அப்போது ஊடுருவிச் சென்றது. யாரோ அவளைத் தூக்கியெடுத்து வான வீதியில் மிதக்க விடுவது போலிருந்தது.



எத்தனைப் பேரைப் பார்த்திருக்கிறோம்? எத்தனை பேரிடம் பழகியிருக்கிறோம்? எத்தனை பேரிடம் நெருங்கி இணைந்து... கண்ணாடியைப் பார்த்தாள்.

நரேன்! ஐ லைக் யூ என்றாள் மெதுவாக. முகத்தில் தன் குழைவையே பார்த்துக் கொண்டாள்.

ஒரு நாள் இரவு. ஏழு மணி. புக் - ஷாப்பில் நரேன் பாராஸைகாலஜி புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான் நியானின் மெல்லிய ஒளி புத்தகத்தை நனைத்துக் கொண்டிருந்தது.

- நரேன்!

நிமிர்ந்து பார்த்தான். ஒரு அதிர்ச்சி!

ஒரு உயரமான ஸ்டூலில் கையை வைத்துக் கொண்டு சாய்ந்தவாறு ரமி நின்றிருந்தாள். கண்களில் நிதானமும் இரக்கமும் தெரிந்தன.

அவன் கண்களில் துக்கம் ததும்பியது. நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. பார்வையைத் தணித்தான்.

இருவரும் பேசவில்லை பார்த்துக் கொள்ளவும் இல்லை. டிக் டிக் என்று கடியாரத்தின் நாழிகை ஓடியது.

- நரேன்.

லேசாக நிமிர்ந்தான். அவள் பாதங்களை மட்டும் பார்த்தான்.

... ம். (ஈனமான குரல்.)

... இளைத்திருக்கிறீர்கள்.

... ம்.

... கார்னிவலில் பார்த்தபோது வருத்தப்பட்டேன்.

- ம்.

- என்னைப் பற்றி நினைத்து வருந்தாதீர்கள்.

- ம்.

டிக் டிக் . . . டிக் டிக். . . .

- என்னைப் பார்க்க விருப்பமில்லையா? (ரமி)

- விருப்பந்தான்.

- பாருங்களேன்.

- பார்த்து விட்டுச் சங்கடப்பட என்னால் முடியாது.

என் மீது வருத்தமா?

. . . ம்.

. . வருத்தமா?

- உன் மீது இல்லை.

- யார் மீது?

மேஜை மீது தலையைக் கவிழ்த்தினான்.

- ராம்நகரில் ஒரு பெண் இருந்தாள் அவள் மீது. . .

அவள் பேசவில்லை.

- அந்தப் பெண் என்னைப் பார்த்து முறுவலிப்பாள். சிரிப்பாள். ஜாடை காட்டுவாள். ஆர்வத்தோடு பார்ப்பாள். ஆர்வத்தோடு பேசுவாள். காதலைக் கொட்டுவாள். அன்பில் அணைப்பாள். ஆனந்திப்பாள். அவள் ஒரு அபூர்வப் பெண்! அதிசயப் பெண்! அவளை உனக்குத் தெரியுமா, ரமி?

ரமியின் கண்களில் இரு தாரைகள் தோன்றி வழிந்தன. சுவாசம் நிலை மாறியது.

- அந்தப் பெண்ணுக்காக என்னைத் தியாகம் செய்தேன். அவளுக்காக ஒரு உயிரை எடுத்தேன். சிறைக்குப்



போனேன். கஷ்டப்பட்டேன். திரும்பி வந்தேன். ஆவலோடு அவளைப் பார்க்கப் போனேன். அவளுக்கு என்ன நேர்ந்தது தெரியுமா ரமி?

அவள் பேசவில்லை.

- அவள் போய்விட்டாள்.

இனம் தெரியாத சப்தம் அவளிடமிருந்து எழுந்தது. அவன் நிமிரவில்லை.

- இறந்து போவதற்கு முன் ஒரு நல்ல காரியம் செய்தாள் இந்தக் கடிதத்தை எழுதி வைத்திருந்தாள் ரமி.

டிராயரைத் திறந்தான். ரமி எழுதிய கடைசிக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் பார்த்தாள். அடையாளம் புரிந்தது. மேஜை மீது மீண்டும் வைத்தாள்.

- இவ்வளவு அன்பு ஒழுக, மனம் குளிர, எழுதினாளே அந்தப் பெண், அவள் இறந்துவிட்டாள் ரமி! அதனால் தான் துக்கப்படுகிறேன்.

அவளிடம் ஒரு விம்மல், ஆனால் சப்தமில்லை.

- அவளை நினைத்து வருந்தும்போது, நான் ஏன் இளைக்க மாட்டேன், ரமி? எனக்கு இந்த உலகில் யார் இருக்கிறார்கள்? உலகம் முழுவதும் ஜனங்கள் இருந்தும் நான் ஒரு அனாதை. அவள் கண்களில் நீர்; நியான் - ஒளியில் அது மின்னியது. கர்சீப்பால் வாயை மூடினாள். சிறிது நேரம் பேச்சில்லை.

பிறகு - நரேன்! என்றாள். - நீங்கள் சொன்னது போல் அந்தக் கடிதம் எழுதிய தினத்தோடு அவள் இறந்து விட்டாள். அவளது உயிரற்ற உடல் இன்னும் உலகத்தில் உலவிக் கொண்டிருக்கிறது. அவளை ஏன் இன்னும்

துன்புறுத்துகிறீர்கள், நரேன்? உங்களுக்கு இரக்கம் இல்லையா?

- ரமி (குரல் தீவிரமாகியது.) அவளை நான் துன்புறுத்துகிறேனா; ரமி?

நரேன் எழுந்தான். பாராஸைகாலஜி படபடத்தது.

- துன்புறுத்துகிறேனா, ரமி? அவளை நேராகக் கண்களில் பார்த்தான்.

- ஆமாம் நரேன்! உங்களை மறந்து வாழலாம் என்று பார்க்கிறாள் அவள். கண்களிலிருந்து நீர் ஓடியது.

- ரமி! என்றான் நரேன் உணர்ச்சியோடு - அவள் வாழ வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். அதற்கு எந்தவித இடையூறையும் செய்யமாட்டேன் ரமி. இது உறுதி.

நிசப்தம். கண்களை ரமி மூடினாள். நரேன் கண்ணிலும் நீர். மெதுவாக அதைத் துடைத்தான். நேரம் ஓடியது.

- ரமி! என்றான் அவன் மீண்டும். - நான் எதையும் எதிர்பார்த்து உன்னைப் பின் தொடரவில்லை. சிறையி லிருந்தேன். விடுதலை அடைந்தேன். வெளியே வந்தேன். உன்னைப் பார்க்க வந்தேன். அவ்வளவுதான். உன்னைப் பார்த்தேன். நீ என்னை பார்த்ததாகக் காட்டிக் கொள்ள வில்லை, என்னை ஒரு காலத்தில் காதலித்தவளாகக்கூடக் காட்டிக் கொள்ளவில்லை. அது எனக்கு ஒரு அதிர்ச்சி, பெரிய அதிர்ச்சி - என்னால் அதைத் தாங்கமுடியவில்லை. துடித்தேன். மனத்தில் எரிந்தேன். உன்னிடம் ஒரு வார்த்தையாவது பேச வேண்டுமென்று ஆவல். நீ உன் வாய் திறந்து 'நரேன், காதலுக்காகச் சிறை சென்று கஷ்டப் பட்டீர்களே. நான் உங்களுக்காக ரொம்ப வருந்துகிறேன்' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும் என்று



நினைத்தேன். அதை வாழ்நாள் முழுவதும் நினைத்து வாழலாம் என்று நினைத்தேன். ஆனால் நீ பதிலாகக் கடுமையாகப் பேசினாய். என்னால் அதைத் தாங்க முடியவில்லை. ரமி நிஜமாகத் தாங்க முடியவில்லை.

ரமி நிமிர்ந்தாள்.

- நரேன்! (அவள் குரல் கம்மியது.) என்னை மன்னித்து விடுங்கள் நரேன்! நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் விடுதலை ஆன செய்தி எங்கள் பழைய டிரைவர் மூலம் அப்பாவுக்கு தெரிந்தது. அவர் என்னை எச்சரித்து விட்டுச் சென்றார். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர் சொல்லுமுன்பே நான் ஒரு திடமான உறுதிக்கு வந்துவிட்டேன்.

நான் வேறு ஒருவரை ஏற்றுக்கொண்டாகிவிட்டது. இனி மாறுபட வழியில்லை. இது எனக்குத் தெரியும். ஆனால் அதே சமயத்தில் உங்கள் நினைவு என் மனத்தில் ஒரே சீராக ஊடுருவிவிட்டது. அதைக் களைந்து எடுப்பது முடியாத காரியம். இந்த ஜன்மத்தில் முடியாது. உங்கள் நிழலைப் பார்த்தால்கூட என் நினைவுகள் கிளர்ந்துவிடும். என் மனம் அவ்வளவு மெல்லியது. உங்கள் நினைவு அலைபாய்ந்து வருவதை என்னால் தடுக்க முடியாது. ஆகவே உங்களைப் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

சட்டென்று அவனைப் பார்த்து அவள் திரும்பினாள்.

. . . நரேன்! இதில் நான் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறது. நீங்கள் என்ன நிலையில் இருக்கிறீர்களோ தெரியாது. உங்களுடன் மீண்டும் நான் பேசிப் பழகி, அதன் மூலம் உங்களிடம் அனாவசியத் தாபங்களை வளர்த்துவிட விரும்பவில்லை. காதல் ஒரு

விசித்திர வியாதி நெருங்க நெருங்க அது ஜுவாலை விட்டு வளர்ந்து விடுகிறது. பிறகு அதை அணைப்பதற்குக் கஷ்டமாகி விடுகிறது.

நரேன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

. . . . ரமி! நீ சொன்ன ஒன்று மட்டும் உண்மை. உன்னைப் பார்க்கப் பார்க்க, நான் மனத்தில் குமைகிறேன். வேதனையில் துடிக்கிறேன், உன்னை நான் இழந்தது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பது தெரிகிறது. ரமி! விதி என்னை இப்படிப் பாழ் செய்துவிட்டது. ஒரு வருஷத்திற்கு முந்தி நான் விடுதலை ஆகியிருக்கக்கூடாதா? அல்லது நீ இன்னும் ஒரு வருடம் மணமாகாமல் இருந்திருக்கக் கூடாதா? என்னால் இதை நினைத்து நினைத்து துக்கப் படாமல் இருக்க முடியவில்லை, ரமி! சமயங்களில் அப்படியே வெந்து போகிறேன். பைத்தியம் பிடித்தது போல் ஆகிறேன். இப்படிக்கூட வாழ்க்கையில் ஒரு துர்ப்பாக்கியசாலி உண்டா? நான் ஒரு பாவி! பாவி. . . .

அவனுக்கு ஒரு வெறி படர்ந்தது. கண்ணாடி அலமாரிமீது தலையை அழுத்தினான். அழுத்திய வேகத்தில் கண்ணாடி உடைந்தது. நெற்றியில் கீறல்கள் விழுந்தன. ரத்தம் கசிந்தது.

. . . . நரேன் என்றாள்.

. . . . ஒன்றுமில்லை என்றான் அவன். நெற்றியைத் தடவினான். பிறகு விறுவிறென்று சென்று ஆயின்ட்மெண்ட் எடுத்து வந்து தடவினான். கண்களை மூடிக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

சிறிது நேரம் நிசப்தம். பிறகு அவள் மெல்ல அவன் முன் வந்தாள். கருணை பொங்க அவனைப் பார்த்தாள்.

. . . . நரேன்!

. . . . நரேன்!



நிமிர்ந்தான். பளபளவென நீர் உதிர்த்தது.

. . . என்னை மன்னித்து விடு, நரேன்.

அவன் பேசவில்லை. கண் மீண்டும் கலங்கியது.

ரமி அவன் முன்னால் நாற்காலியை இழுத்து உட்கார்ந்தாள்.

. . . நரேன், (மேஜை மீது தழைந்து அவனை நோக்கினாள்.)

அவன் விழித்து அவளைப் பார்த்தான். அவளது கொஞ்சும் முகமும், தழைவும், பார்வையையும் பழைய நாளைய ரமியை நினைவு படுத்தின.

- ரமி! என்றான் உணர்ச்சியுடன். மனத்தில் பொங்கும் உணர்ச்சியில் தள்ளாடினான்.

- நரேன்! மன்னிப்பீர்களா?

- எதற்கு ரமி?

- உங்களை இத்தனை நாள் பாராமல் இருந்ததற்கு. பேசாமல் இருந்ததற்கு.

மீண்டும் அவள் குழைந்தாள். அவள் கண்களையே அவன் பார்த்தான். உள்ளே அலைகள் பொங்கின.

- மன்னிக்க வேண்டாம் ரமி! எனக்கு ஒரு வரம் கொடு.

- வரமா?

. . . . ஆமாம்.

- என்ன வரம்?

. . . . என்னைக் கேவலமாக நினைக்க மாட்டாயே!

. . . . மாட்டேன்.

. . . . ரமி! என்றான் அவன். தயக்கத்துக்குப் பிறகு தொடர்ந்தான் . . . .ரமி! என் மனத்தின் வேதனை எனக்குத் தெரியும். நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்வு இல்லை. இந்நிலையில் நீ வேறு ஒருவருடன், வாழ்கிறாய் என்பதை நினைக்கக்கூட மனம் வேதனைப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்ளக்கூட மனம் மறுக்கிறது. நீ வீட்டில் உன் கணவருடன் எப்படி வாழ்வாய், எப்படிப் பேசுவாய், பழகுவாய் என்றெல்லாம் நினைத்து நினைத்து மாய்ந்து போகிறேன். உன் அன்புக்கும் பணிவிடைக்கும் மற்றொருவர் ஆளாவதை என்னால் தாங்க முடியவில்லை. ரமி, இந்த நிலையில்தான் இந்த வரத்தைக் கேட்கிறேன்.

. . . கேளுங்கள்.

. . . ரமி! நீ என்னுடன் ஒருநாள், ஒரே ஒரு நாள் இல்லறம் வாழ வேண்டும்.

அவள் சட்டென்று நிமிர்ந்தாள்.

. . . ஒரே ஒரு நாள் கணவன் . . . . மனைவி போல் நாம் வாழ வேண்டும். அது போதும். அந்த நினைவிலேயே வாழ்வைக் கழித்து விடுவேன்.

ரமி மேலும் நிமிர்ந்தாள். திக்பிரமையுடன் அவனைப் பார்த்தாள்.

★ ★ ★

## 13

ரமியின் தயக்கத்தைப் பார்த்ததும், நரேனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

. . . ரமி! நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்றான்.



அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

. . . . கேவலமாக நினைக்கிறாயா?

அவள் பேசவில்லை.

. . . உன்னுடன் ஒரு நாள் வாழ நினைக்கிறேனே தவிர, வேறு எதையும் நினைக்கவில்லை. ரமி! உன்னைக் கையால்கூடத் தொடமாட்டேன். இது சத்தியம்.

அவள் நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்தாள்.

. . . . ஆமாம். ரமி! இதை உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா?

. . . . புரிந்து கொண்டேன்.

. . . . ஏன் தயக்கம் ரமி?

- எனக்குப் பயமாக இருக்கிறது.

- ஏன்?

. . . . இப்படிச் செய்வது சரிதானா?

- ஒரு நிசப்தம் நிலவியது. அவன் கையைக் கோர்த்தவாறு இருமுறை உலாவினான்.

. . . . யோசித்துக்கொள், ரமி. நான் வாழ்வை இழந்தவன், நீ என்னுடன் ஒரு நாள் வாழ்ந்தால் அதை சுவர்க்கமாக நினைப்பேன். இந்த வாழ்வில் இனி நான் பெறக்கூடிய ஒரே ஒரு இன்பம் அதுதான். யோசித்துக் கொள், ரமி (அவன் குரல் கம்மியது.)

அவள் தயங்கினாள்.

. . . . யோசிக்கிறேன், நரேன்.

- இன்றைக்கே முடிவு செய்ய வேண்டாம். அவகாசம் எடுத்துக் கொள்.

அவள் திரும்பினாள்.

- ஆனால் ஒன்று, நரேன்!

- என்ன?

- என் முடிவு எதுவாக இருந்தாலும் நீங்கள் அவளுடன் பழகுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

- யாருடன்?

- ஸ்வப்நாவுடன். அன்று அவள் உங்களுடன் நெருங்கிப் பழகியது எனக்குப் பிடிக்கவில்லை. அவள் ஒரு மோசக்காரி. ஒரு கால் - கேர்ல். என் கணவர் அவளைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். உங்களை எச்சரிக்க நினைத்தேன். இன்று நான் இங்கு வந்ததற்குக் காரணம் அதுவும் ஒன்று. நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

- ம்.

- நான் வருகிறேன்.

ஒரு வாரம் வரை ரமி யோசித்துக் கொண்டிருந்தாள். நரேனின் நிர்மலமான முகம் நினைவில் வந்து கொண்டிருந்தது. எனக்காக அவர் எவ்வளவு தியாகம் செய்திருக்கிறார்? என்னால் தானே அவர் இந்தக் கதியை அடைந்திருக்கிறார். அவர் வேண்டுகோளை நிறைவேற்றுவதில் என்ன தவறு இருக்கிறது?

மறுகணம் சியாமின் உருவமும் நினைவுக்கு வந்தது. அவர் ஒரு ஜென்டில்மென். அதிர்ந்து பேசமாட்டார். முகத்தைச் சிணுங்கியது கிடையாது. அழுத்திப் பேசுவது கிடையாது. - நான் சொல்வது உனக்குப் பிடிக்கிறதா என்று என்னை நூறு தடவை கேட்பார். அப்படிப்பட்ட வெள்ளை மனம் படைத்தவருக்கு எதிராக. . . . அவருக்குத் தெரியாமல்.



ஒரு வாரம் வரை எதுவும் தோன்றவில்லை. அதற்குப் பின் நரேனின் தட்டு உயர்ந்தது. வாழ்க்கையில் அவன் செய்த தியாகத்திற்கு இணையாக ஒரு சின்னத் தியாகமாவது செய்ய வேண்டும் என்று நினைத்தாள். அந்த முடிவை ஒரு நாள் இரவு நரேனிடம் தெரிவித்து விட்டு வந்தாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை. நரேன் வீட்டின் பஸ்ஸர் கர்ர்ர்ர்ரித்தது. அவசரமாக நரேன் எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

தலையைச் சுற்றியிருந்த ஸ்கார்ஃபை உருவியவாறு ரமி உள்ளே நுழைந்தாள். வந்ததில் ஒரே பரபரப்பு. நரேனைப் பார்த்து முறுவலித்து விட்டுத் திரும்பும்போது அவள் தலையில் ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டியது. பிளாஸ்டிக் பூ - ஹௌ ஆர் யு டியர்? என்று சொல்லிக் கொண்டு உரிமையுடன் உள்ளே நுழைந்தாள்.

- ஓ! எவ்ரிதிங் இஸ் ஸ்பிக் அன் ஸ்பான் என்று கூறிக் கொண்டு ஒவ்வொரு அறையாகச் சென்றாள்.

கிழக்குப் பக்க அறையின் சன்னலைத் திறந்ததும் சூரிய ஒளி பளீர் என்று கன்னத்தில் விழுந்தது. கண்களை கசக்கிக் கொண்டு நிழலுக்கு வந்து - நரேன், வாட் எ நைஸ் ஹவுஸ் வீ ஹேவ்? என்றாள்.

வீ என்று சொன்னது அவனுக்குப் பெருமையாக இருந்தது. நேராகச் சமையலறைக்குச் சென்றாள். - காப்பி சாப்பிட்டீர்களா, டார்லிங் என்றாள்.

- இல்லை, ரமி.

- ஹச்சா என்று கையைக் கொட்டினாள் - இப்போது என் வேலை ஆரம்பமாகிறது.

ஒரு குழந்தையைப்போல் துள்ளி மேடை அருகில் ஓடினாள். அலமாரிகளை சர்வேயிட்டாள். பால்

புட்டியைத் தெரிந்து கொண்டு பரபரவென்று எடுத்து மேடை மீது வைத்தாள்.

- டார்லிங்! என்றாள்.

- யா.

... நீங்கள் இந்த நேரத்திற்குள் எழுந்திருக்கக் கூடாது.

ஏன்?

... நான் பெட் - காபியுடன் வந்து உங்களை எழுப்ப வேண்டும் கமான். ப்ளீஸ் கோ டு யுவர் பெட்.

ஐந்தாவது நிமிடத்தில் கையில் காப்பியுடன் அவனது கட்டில் அருகே நின்றாள்.

.... ஹனி? ப்ளீஸ் கெட் அப்.

.... நோ, டார்லிங்! இன்னும் தூங்கணும்.

.... ஐயோ! நாழியாயிடுத்து! சீக்கிரம். . .

மேலேயிருந்த பெட்ஷீட்டை உருவினாள். நரேன் கண் விழித்தான். இருவரும் சிரித்தார்கள்.

காப்பி அருந்திக்கொண்டே அவளைப் பார்த்தான். அவள் கழுத்து ஸ்லெண்டராக வளைந்திருந்தது. கையால் இடது கன்னத்தைத் தடவிக்கொண்டிருந்தாள். தடவும் போது பார்வை அவன் மீது தயக்கமாக விழுந்தது.

இருவரும் எழுந்து அடுத்த அறைக்குச் சென்றார்கள். அப்புறம் டிபன் என்ன செய்யலாம்? என்றாள் அவள்.

... நீ செய்ய வேண்டாம். வரவழைப்போம்.

... நோ!

... ஊஹூம்! வேண்டாம்! நாம் பேசுவதற்கு நிறைய நேரம் வேண்டும்.



அவன் குளிப்பதற்குள் வேலைக்காரி டிபன் வாங்கி வந்திருந்தாள்.

... டிபன் ரெடி! என்றாள் ரமி.

தலையை வாரி முகத்தில் பவுடர் போட்டவாறு நரேன் உள்ளே வந்தான்.

இருவரும் அருகருகே உட்கார்ந்தார்கள். பிளேட்களில் இட்லிகள் ஆவி பறக்கக் கிடந்தன.

... சட்னி போட்டுக் கொள்ளுங்கள்.

ஸ்பூனால் எடுத்துப் போட்டாள்.

... உங்களுக்கு இன்னொரு இட்லி வேண்டுமா? என்று கேட்டு விட்டு அவன் பதில் சொல்லுவதற்குள் தன் தட்டிலிருந்து ஒன்றை எடுத்து அவனுக்குப் போட்டாள்.

... ஹேய் யு ஆர் நாட்டி! என்றான் அவன். அவள் முகம் சிவந்தது. காதில் இருந்த ஸ்டட் கன்னத்தை மேலும் சிவப்பாக்கியது.

மீண்டும் காப்பி.

.... குடிக்கவில்லையா? என்றாள் அவள். கையில் ஸாஸரை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

... ஏன் நரேன்?

... இட்ஸ் நாட் ஸ்வீட்.

... ஓ! ஷுகர் வேணுமா?

பரபரப்புடன் எழுந்தாள்.

... நோ, நோ! நாட் தட்.

அவள் கண்களை முதன் முறையாக அவன் அழுத்தத்துடன் பார்த்தான். ரமி சிறகடித்து நின்றாள்.

அந்த ஒரு கணப் பார்வையில் இருவர் மனங்களிலுள்ள எல்லா இயக்கங்களும் ஸ்தம்பித்து நின்றன.

. . . ஓ! இதுவா? என்றாள் ரமி.

பிறகு கப்பை எடுத்தாள். உதட்டில் வைத்துக் கொஞ்சம் பருகிவிட்டு அவனிடம் கொடுத்தாள்.

. . . இட்ஸ் ஸ்வீட் நௌ! என்றான் அவன். இருவரும் சிரித்தார்கள்.

நேரம் போய்க்கொண்டிருந்தது, மத்தியானச் சாப்பாட்டை அவன் வாங்கி வந்தான்.

அதற்கு வீட்டில் உள்ள பர்னிச்சர்களையும், பூத்தொட்டிகளையும்; அவள் மாற்றியிருந்தாள். . . இந்த டேபிளை இங்கே போட்டேன். உங்கள் ரெஃபரன்ஸ் புத்தகங்களை இங்கே வைத்திருக்கிறேன் என்றாள்.

பிறகு. . . நரேன், இந்தப் பெட்டியில் என்ன வைத்திருக்கிறீர்கள்? கனமாக இருக்கிறது என்றாள்,

. . . கனமானதுதான் என்றான் அவன். சாவியை எடுத்து வந்து திறந்தான்.

உள்ளே ஒரு பிளாஸ்டிக் பெட்டி. அதைத் திறந்த போது அவளது போட்டோ! அதனடியில் அவள் அவனுக்கு எழுதிய கடிதங்கள். அவள் தன் கையால் திருகிக் கொடுத்த ஜவந்தி பூவின் இதழ்கள். மார்பிலிருந்து உருவிக் கொடுத்ததுபோல் பாயிண்ட் பரிசளித்த ஒரு கர்சீஃப்.

அவள் பேசவில்லை.

. . . ஒரு மறைந்த சுவர்க்கத்தின் ஆர்கியாலாஜிகல் ரெலிக்ஸ் இவை, என்றான் அவன்.

அவள் எழுந்து நடந்தாள். கூடவே அவனும் போனான்.



. . . வாழ்க்கை ஒரு சோக நதி என்று கூறியவாறு சோபாவில் அவள் சாய்ந்தாள். கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டு கைப்பிடிமீது தலையை வைத்தாள். ஸீலிங்கைப் பார்த்தவாறு யோசனையில் ஆழ்ந்தாள்.

. . . என் வாழ்க்கைதான் ஒரு சோக நதி என்றான் அவன்.

அருகில் ஒரு அடி இடைவிட்டுப் போட்டிருந்த இன்னொரு சோபாவில் சாய்ந்தான்.

. . . என் வாழ்க்கைதான் ரமி. உன் வாழ்க்கையல்ல. நீ இருக்குமிடமெல்லாம் இன்பம். நான் இருக்குமிடமெல்லாம் துன்பம்.

. . . என்ன விசித்திரம். பார்த்தீர்களா? நாடகத்தில் காட்சி திரும்புவது போல் வாழ்க்கை சட்டென்று மாறி விட்டது. ஒரு நிமிடத்தில் நாம் குருடர்களாகி விட்டோம். பழைய காட்சி எங்கே, எங்கே என்று தேடுகிறோம்.

இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தார்கள்.

அவள் புரண்டு படுத்து உடலைக் கவிழ்த்தியவாறு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

. . . நரேன்! (மெல்லிய குரல்)

அவன் திரும்பினான். இருவர் முகங்களும் ஒரு அடி இடைவெளியில் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டன.

. . . நரேன், இருவரும் வாழ்வில் ஒரு பெரிய புதையலை இழந்துவிட்டோம்.

. . . ஆமாம்.

அவள் கண்கள் நிலையாக நின்றன.

. . . நரேன்!

. . . ம்?

. . . நமக்குத் துக்கம் தருவது எது?

. . . நாமாக ஏற்படுத்திக்கொண்ட கட்டுப்பாடுகள், ரமி!

. . . ஏன் ஏற்படுத்திக்கொண்டோம்?

. . . நாம் என்றால் நாமில்லை.

. . . . ம்.

- எல்லோரும் சேர்ந்துதான். சமூக மக்களிடையே அமைதி இருக்கவேண்டும். அதற்காக நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்ட சட்ட திட்டங்கள் இவை.

- இவைகளை முறியடிக்க முடியாதா?

- ஏன் முடியாது? இன்று ஒருநாள் முறித்திருக்கிறோமே.

- நரேன்!

- ம்.

இப்போது உங்களைப் பார்த்தபிறகுதான் நான் எவ்வளவு பெரிய நஷ்டம் அடைந்திருக்கிறேன் என்று தெரிகிறது.

. . . நிஜமாக அப்படி நினைக்கிறாயா?

. . . . ஆமாம்.

. . . இப்போதுதான் என் மனம் குளிர்கிறது ரமி!

நிசப்தம்.

இருவரும் ஒருவர் கண்களில் ஒருவர் ஆழ்ந்து ஸ்பேஸில் நீந்துவதுபோல் நீந்தினார்கள். இருவர் நெஞ்சங்களும் கதகதத்தன.

- ரமி;



. . . . ம்.

. . . . உன் வதனத்தின் அழகைக் கண்டபிறகு வேறு யார் மீதாவது என் மனத்தைத் திருப்ப முடியுமா? அதனால்தான் ரமி, உன்னைப் பார்ப்பதற்காகத் துடித்தேன். உன்னைப் பின் தொடர்ந்தேன். இது தவறானால் மன்னித்து விடு.

. . . . தவறில்லை, (அவள் குரல் தழதழத்தது)

. . . இப்போதும் என் மனம் குளிர்கிறது ரமி!

அவன் கண்களில் நீர் தளதளத்து வழிந்தது. - அழாதீர்கள். அழாதீர்கள் என்றாள் அவள். கைகளை வீசி அவன் கண்களைத் துடைப்பதுபோல் பாவனை செய்தாள். தொடவில்லை.

வாசலில் பஸ்ஸர். இருவரும் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

- ரமி, எங்கேயாவது மறைந்து கொள். யாரென்று பார்க்கிறேன்.

ரமி லம்பர் அறைக்குள் சென்று தாளிட்டாள்.

நரேன் கதவைத் திறந்தான்! உள்ளே வந்தவள் ஸ்வப்நா.

- வாருங்கள் என்று தத்தளித்தவாறு கூறினான்.

. . . . உள்ளே வந்தாள்.

. . . . ஹாலைப் பார்த்தாள்.

. . . . உங்கள் உறவினர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று கேட்டாள்.

. . . . இல்லை ஸ்வப்நா.

. . . . எல்லாம் மாறியிருக்கிறதே? ஒரு பூத்தொட்டி முன் நின்றாள்.

. . . . ஏது இந்த இயற்கைப் பூ?

. . . . காலையில் வாங்கினேன்.

. . . . எங்கே வாங்கினீர்கள்?

. . . . ம் . . ம் . . ம் . . ஹோர்டி கல்சிரல் கார்டனில்.

. . . . அங்கே பூ விற்கிறார்களா?

. . . . ஆமாம்.

இருவரும் உட்கார்ந்தார்கள். பேசினார்கள்.

சிறிது நேரத்தில் அவள் காபி போட எழுந்தாள். வேண்டாம் என்றான் நரேன். அவள் கேட்கவில்லை.

. . . . என்ன இது? யாராவது இங்கே காலையில் காபி போட்டார்களா?

. . . . நான்தான் போட்டேன்.

ஒரு ஆங்கில ட்யூனை அவள் முணுமுணுத்தாள். நிமிடத்தில் காபியைத் தயார் செய்து கொண்டு உள்ளே வந்தாள்.

இருவரும் பருகியவாறு பேசினார்கள். பேச்சு ரமி பக்கம் திரும்பியது.

. . . . ரமி இங்கே வந்தாளா?

அவன் திடுக்கிட்டான்.

. . . . அவள் ஏன் வரப் போகிறாள்?

– புக் ஷாப்புக்கு வந்தாளா?

. . . . ஊஹூம்.



அவள் ஒரு புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

. . . அப்படிப்பட்டவர்களையெல்லாம் இன்னும் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நரேன்!

அவன் பேசவில்லை.

. . . . நீங்கள் அவளைக் காதலிக்கிறீர்கள். ஆனால் அவளுக்கு உங்கள்மீது காதல் இருக்கிறது என்று சொல்வதெல்லாம் பொய். ஒரு பெண்ணுக்கு ஒருவர்மீது காதல் இருக்குமானால் அவள் உங்களைவிட அதிகம் துடித்துக் கொண்டிருப்பாள். நான் சொல்வது சரிதானா, நரேன்?

தலையை மட்டும் அசைத்தான். அவள் கலகலவெனச் சிரித்தாள். கடைசியில் அவள் எழுந்தபோது . . . இது ஏது ஸ்கார்ஃப்? என்று கேட்டு விட்டு, . . . ஓகோ; உங்கள் வேலைக்காரி கொண்டு வந்திருப்பாள் என்று கூறிவிட்டு அவனை நோக்கி மர்மமாகப் புன்னகை வீசியவாறு வெளியேறினாள் அவள்.

அவள் வெளியே போகும் வரை அவன் மனம் கதங் கதங் என்றிருந்தது.

கதவைத் தாழிட்டு உள்ளே வந்ததும், லம்பர் அறைக் கதவைத் திறந்துகொண்டு ரமி வந்தாள். அவள் முகம் கண்ணீரில் நனைந்திருந்தது.

. . . . நரேன்.

. . . . அவள் பேசியதை எடுத்துக் கொள்ளாதே, ரமி.

அவ. . . கண்ணீர் நிற்கவில்லை.

. . . . . உண்மையில் உங்கள் காதலுக்கு நான் தகுதியுள்ளவளா நரேன். சொல்லுங்கள்! தகுதியுள்ளவள் தானா?

அவள் குழைந்து நின்றாள்.

. . . . தகுதி உள்ளவள்தான் ரமி! . . . .

அவள் அதற்குள் குலுங்கி அழுதாள். இருவரும் சோபாக்களில் அமர்ந்தார்கள்.

. . . . ரமி, எனக்கு உரிமை இல்லையே என்று வருந்துகிறேன்.

. . . . எதற்கு என்றாள் அவள், கண்களைத் துடைத்தவாறு.

உன்னை என் மடியில் சாய்த்துக் கொண்டு உன் கண்ணீரைத் துடைத்துவிட நினைக்கிறேன். அதற்கு உரிமை இல்லையே! . . . நரேன் என்றாள் அழுகையுடன் . . . எதையாவது சொல்லி என்னைக் குழப்பாதீர்கள். நான் எரிகிறேன். மனத்தில் எரிகிறேன்.

மனம் நொந்து அழுதாள்.

மாலையாகும்போது இருவரிடமும் ஒரு அமைதி. ஊதுவத்திகளைக் கொளுத்தி வைத்த ரமி, தன் மனத்தில் நுண்ணிதான மாற்றம் நடந்திருப்பதை உணர்ந்தாள். உள்ளே ஒரு இனிமை நிரம்பியிருந்தது.

. . . . ஓ! நான் இந்தக் காற்றில் இப்படியே கரைந்து விடக் கூடாதா? இந்த உணர்ச்சியோடு மறைந்து விடக் கூடாதா என்று எண்ணினாள்.

நரேனின் அறைக்குள் சென்றபோது அவன் தலையை வாரிக் கொண்டிருந்தான்.

கண்ணாடி பின்னால் போய் முறுவலித்தாள். அவனும் சிரித்தான்.

- இப்படி வாரிக் கொள்ளுங்கள்.



கையிலுள்ள சீப்பை வாங்கினாள். கேசத்தை முன் பக்கமாக வாரினாள். வகிடைச் சரி செய்தாள்! தொடவில்லை.

முகத்தைக் கண்ணாடியில் பார்த்ததும் நரேன் ஆச்சரியத்துடனும் உணர்ச்சியுடனும் - ரமி என்றான்.

- நரேன்.

அவளது மனமும், உடலும் குழைந்தன. கண்கள் இளகிக் கடல்களாக மாறின. கன்னங்களில் சிவப்பு ஊர்ந்து அலைபோல் பரவியது.

- உன் காதல் உண்மையான காதல்தான் ரமி.

- உண்மையானது. களங்கம் இல்லாதது. நிரந்தர மானது இதை நம்புங்கள் நரேன்.

- நம்புகிறேன்.

அவள் தழைந்து முன்னால் வந்தாள். வெளியே மாலை மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது.

இரவு வேறு விரைவாக வந்து கொண்டிருந்தது.

* * *

36391
384216

## 14

ரமி தழைந்து நரேனின் முன்னால் உட்கார்ந்தாள். கண்கள் மறுகி நின்றன.

- ரமி அப்படியே இரு என்றான் நரேன்.

பதுமை போல் இருந்தாள்.

நரேன் எழுந்து அவளை ஒரு தரம் சுற்றினான். ரமி ஆவலோடு அவனைப் பார்த்தாள்.

- உன்னை இப்போதுதான் முழுதாகப் பார்க்கிறேன், ரமி. இதுவரை தைரியமில்லை. எவ்வளவு அழகாக வளர்ந்திருக்கிறாய்!

வெம்மையான மூச்சுடன் நின்றான். அவனது மானசீக நினைவில் ரமி அவனது கைகளில் படுத்திருந்தாள். ரமி, ரமி என்று கொஞ்சியவாறு அவளது ரூஷ் உதடுகளை விரல்களால் வருடினான்.

- நரேன்.

நினைவிலிருந்து விடுபட்டு அவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

- ஏன் மௌனமாகி விட்டீர்கள்?

அவன் சமாளித்து எழுந்தான்.

- ரமி, நீ எப்படி இங்கே வந்தாய் ரமி! வீட்டில் என்ன சொல்லிவிட்டு வந்தாய்?

- நான் இங்கே எப்படியோ வந்துவிட்டேன். அதற்கு மேல் எதுவும் கேட்காதீர்கள்!

அவள் தலையைக் குனிந்தாள்.

- பாவம், என்னால்தானே - உனக்கு இந்த சிரமம் எல்லாம்? அவள் பேசவில்லை எதையோ நினைத்து அவள் வருந்துவது தெரிந்தது.

- ரமி.

- உட்காருங்கள் நரேன்.

டிரஸ்ஸிங் டேபிளில் சரிந்து முகத்தை அதன் மீது படியவிட்டாள். நரேன் என்றாள் மீண்டும் குழைந்து.

டேபிள் மீது அவனும் சரிந்தான். அவனது முகம் அவளது நெற்றிக்குச் சிறிது இடைவெளியில் இருந்தது.



கண்களை வளைத்து அவள் அவனது பார்வையை மெதுவாக அணைத்தாள்.

அவள் உதடுகள் லேசாக நெளித்தன.

பரவசமும், இன்பமும் கலந்த அந்த வேளையில் டீக்-வுட் பலகை மீது படிந்திருந்த அவளது மெல்லிய விரல்களை அவன் தொட்டிருந்தால்கூட அது தவறாகப் போயிருக்காது எனினும் தொடவில்லை.

. . . நரேன்.

. . . ரமி.

கற்பனையில் அவன் அவளை அப்படியே அள்ளி எடுத்து, அவள் கன்னத்தின் மீது தன் கன்னத்தை அழுத்தினான்.

. . . . நரேன்,

. . . . திடுக்கிட்டு அவன் தன் நிலைக்கு வந்தான்.

. . . . . நரேன், வாழ்வில் சில இன்பங்கள்தான் ஜீவனுக்குள் சென்று ஆத்மாவையே தொட்டு விடுகின்றன, என்றாள் அவள் சோகமாக.

இரவு, ஒரு அக்டோபஸ் போல் கால்களை மெள்ள மெள்ளப் பரப்பி வைத்து வந்தது. அவர்கள் அறை சன்னல்களின் கார்ட்டன்களைக் கறுப்பாக்கிக் கொண்டு உள்ளே வந்தபோது, இருவரும் இரு சோபாக்களின் மீது படுத்திருந்தார்கள். மெல்லியதான ஒளி அவர்கள் மீது விழுந்திருந்தது. யௌவனத்தின் இரு பிரதி பிம்பங்கள் போல் அவர்கள் படுத்திருந்தார்கள்.

சோபாக்கள் அருகருகே நீள வாட்டத்தில் இருந்தன. இடையில் சத்தியக் கோடு போல் ஒரு சின்ன இடைவெளி ஓடியிருந்தது. சில அங்குலங்கள்தான் இடைவெளி.

இருவர் முகங்களும் வெகு அருகில் நேருக்கு நேர் இருந்தன. பார்வைகள் இரண்டும் மெய்மறந்து ஒன்றையொன்று தழுவிக் கொண்டன.

- நரேன்.

மெல்லிதாக அவள் வார்த்தை விழுந்தது.

. . . ரமி.

அவள் பேசவில்லை. பார்வைகள் மட்டும் சந்தித்தன. மெதுவாக உரையாடிக் கொண்டன.

. . . . நான் இப்போது என்ன செய்கிறேன், தெரியுமா நரேன்? என்று கேட்டது ரமியின் பார்வை.

. . . என்ன செய்கிறாய்? என்றது அவன் பார்வை.

- உங்கள் கன்னங்களை மானசீகமாக வருடுகிறேன்.

. . . நான் என்ன செய்கிறேன் தெரியுமா, ரமி?

. . . ம்?

. . . மானசீகமாய் உன் காதோரக் கூந்தலைக் கோதி விடுகிறேன்.

- உங்களது முகத்தை என் கைகளால் அள்ளி எடுக்கிறேன்.

. . . உன் உடலை மெதுவாக அணைக்கிறேன்.

. . . ஒரு கொடிபோல் உங்கள் மீது சரிகிறேன்.

. . . நான் தழுவுகிறேன்.

. . . நான் மெய்மறக்கிறேன்.

. . . இருவரும் ஒன்றாகிறோம்.

. . . நானும் இல்லை; நீங்களும் இல்லை.



. . . . எல்லையில்லா வெளியில் நீந்திக் கரைகிறோம்.

பார்வையின் உரையாடல்கள் முடிந்ததும் இருவர் கண்களும் மூடின. மீண்டும் திறந்தபோது அவை வெள்ளமாகிக் கிடந்தன.

. . . அழாதீர்கள், நரேன்.

. . . அழாதே, ரமி!

இரவு ஒன்பது மணிக்கு கேரியரில் வந்த சாப்பாட்டை அருந்தியபோது, இருவரும் மௌனமாக இருந்தார்கள். இருவர் மனங்களும் நிரம்பியிருந்தன.

வீடே உணர்ச்சிகளால் கனத்திருந்தது. எங்கேயாவது எதையாவது தொட்டால் எல்லாமே நிகழ்ந்து விடும்போல் இருந்தது.

சாப்பிட்டு விட்டு அவன் தன் அறைக்குச் சென்றான். கூடை நாற்காலியில் அமர்ந்து ஒரு ஆங்கில நாவலைப் படிக்க ஆரம்பித்தான்.

சிறிது நேரத்தில் ரமி உள்ளே வந்தாள். அவனது பின்புறமாக வந்து மெதுவாகக் குனிந்தாள்.

அவள் கன்னத்தில் ஒரு வெம்மையும், குறுகுறுப்பும் உண்டாயின.

நரேன் முறுவலித்தான்.

அவன் முன்னால் அவள் போய் உட்கார்ந்தாள். ஹம்மிங்கில் ஒரு இந்திப் பாடலைப் பாட ஆரம்பித்தாள்.

அவன் புத்தகத்தை மூடினான். ரமியின் பக்கம் திரும்பினான். ஹம்மிங் முடியும் வரை காத்திருந்தான். முடிந்ததும் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

- ரமி.

- எப்படி இருக்கிறது நரேன்?

அவன் புன்னகை புரிந்தான்.

- உங்கள் அறைக்குச் செல்லுங்கள். நான் சீக்கிரம் வருகிறேன்.

நரேன் மெதுவாக எழுந்தான். உள்ளே போனான். படுக்கையில் அமர்ந்த சிறிது நேரத்தில் ரமி உள்ளே வந்தாள்.

- நரேன் என்றாள்.

கூந்தலைப் பிரித்து இரு தோளிலும் தொங்க விட்டிருந்தாள். ஸாரியின் தலைப்பை அணிவதில் ஏதோ வித்தியாசம். உடல் மேல் பகுதியின் திரட்சியும் வாளிப்பும் ஒரு சிலிர்க்கும் காட்சியாய்த் தெரிந்தது.

படுக்கை அருகில் அவள் நின்றாள். கையில் பால் டம்ளரை வைத்திருந்தாள்.

- ம், சாப்பிடுங்கள் என்றாள் அவள்.

- நீ?

- நானா? டம்ளரிலிருந்து சிறிது பருகினாள். பிறகு அவனுக்குக் கொடுத்தாள்.

- நரேன் நான் படுத்துக்கொள்ளவா?

இருவர் கண்களும் சந்தித்தன. இருவர் உள் மனங்களிலும் எழுந்த நினைவுகள் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டன.

அவன் நினைத்தான் - ரமி உன்னைக் கையால்கூடத் தொட மாட்டேன். இது சத்தியம்.

- போகவா, நரேன். படுத்துக்கொண்டே பேசலாம்.

- ம்.



அவள் அடுத்த அறைக்குப் போனாள். அடுத்தாற் போலவே அந்த அறை. இரண்டுக்கும் நடுவே ஒரு சன்னல். அதில் இந்தப் புறம் அவன் படுக்கை. அந்தப் புறம் அவள் படுக்கை, கட்டில்கள் இரண்டும் சன்னலோடு ஒட்டி யிருந்தன. பெரிய இடைவெளிகளை விட்ட கம்பிகள் மாத்திரம் அவர்களைப் பிரித்திருந்தன.

அறைகளுக்கு நடுவே உள்ள கதவை அடைத்துப் பூட்டி விட்டு அவன் படுக்கைக்குத் திரும்பினான். பூட்டிய ஒற்றைச் சாவியை சன்னல் வழியாக அவளிடம் தூக்கிப் போட்டான். அவள் இருந்த பக்கத்திலும் ஒரு பூட்டு. அதைப் பூட்டிச் சாவியை அவள் கையில் வைத்திருந்தாள். நரேனிடம் அதைத் தூக்கிக் காட்டி விட்டுச் சிரித்தவாறு அவனிடம் தூக்கி போட்டாள்.

இருவரது புனிதங்களும் அந்த இரு சாவிகளில் பந்தப்பட்டுக் கிடந்தன.

- நரேன் என்ன இது? ஓடுவது தெரியவில்லையா?

- எது?

- நேரம்! நம் காலுக்குக் கீழே சலசலத்து ஒரு நதிபோல் ஓடுகிறது. படுத்துக் கொள்ளாதீர்கள்.

சன்னலை அடுத்தாற்போல் ஓடிய சின்ன மேடையில் கையை வைத்துக்கொண்டு சாய்வாக நிமிர்ந்தாள். அவன் மறுபுறம் எழுந்து உட்கார்ந்தான், சன்னல் அருகே சாய்ந்தான்.

- அப்புறம் என்றான் நரேன்.

- ம். என்றாள் அவள்.

- ரமி.

சோகமாகப் பார்த்தாள்.

பிறகு ஹம்மிங்கை ஆரம்பித்தாள்.

ஹம்மிங்கை நிறுத்தியதும் அவள் கண்கள் நனைந்திருந்தன.

அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

. . . நரேன்.

- ம்.

. . . உலகில் நாம் ஏன் வருத்தமாயிருக்க வேண்டும்? ஏன் நரேன் சொல்லுங்கள்!

அதற்குப் பதில் இல்லை. அவனால் சொல்ல முடியவில்லை. மனித இனத்தில் எதனாலோ எப்படியோ ஏற்பட்ட பழக்க வழக்கங்கள் அந்த சன்னல் கம்பிகளைப் போல அவர்களைப் பிரித்திருந்தன. அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு - இன்னும் பாடு என்றான் அவன் அவனது மனம் கனத்திருந்தது.

ஹம்மிங்.

மீண்டும் மௌனம்.

கம்பி ஒன்றில் உதடுகளை வைத்து ஈரப்படுத்தியவாறு அவனை நோக்கினாள் ரமி.

- ரமி என்று அருகில் வந்தான் அவன் - இந்தக் கம்பி செய்த பாக்கியம்கூட நான் செய்திருக்கவில்லை என்றான்.

அவள் முகத்தை எடுத்துக் கொண்டாள். அடுத்த கணம் கம்பியின் ஈரப்பகுதியில் அவன் தன் உதட்டை அழுத்தினான். அவனை உணர்ச்சியோடும் இரக்கத்தோடும் அவள் பார்த்தாள்.

பிறகு எதையோ நினைத்தவனாய் சட்டென்று தலை நிமிர்ந்தான். அவளைப் பார்த்தான்.



அவள் பார்வை அவனைச் சிறிது ஏளனமாகப் பார்த்தது. - உங்கள் சத்தியம் எல்லாம் இவ்வளவுதானா என்று கேட்பது போலிருந்தது.

திடுக்கிட்டுப் பின்னால் நகர்ந்து, - நான் என்ன செய்கிறேன் என்று அவள் கேட்கும்படியாகவே கூறினான்.

- ரமி, என்னை மன்னித்துவிடு! இது நான் செய்த தவறு. மூச்சு இழைத்தவாறு கூறினான்.

பிறகு தன்னையே கடிவது போல் - சீ, என்ன இது என்று மெதுவாக இரைந்தான். நிலையில்லாது பதட்டத்துடன் அவன் உடல் ஆடியது.

- ரமி! தயவுசெய்து பின்னால் தள்ளிப் போய்விடு ரமி! என் சத்தியத்திற்கு எந்தவித பங்கமும் ஏற்படக் கூடாது என்றான்.

அவள் கண்களில் புரண்ட அலைகள் எல்லாம் அடுத்த கணங்களில் மிருதுவாக அடங்கிவிட்டன. அவளுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது.

இரவு முழுவதும் இருவதும் மௌனமாகவே இருந்தார்கள் பேசவில்லை. பார்க்கவில்லை.

* * *

## 15

அவர்களது (ரமி, நரேன்) மௌனம், காலை அவள் புறப்படும் வரை நீடித்தது. அதிகாலையில் ரமி எழுந்து, வருகிறேன் என்று கூறிவிட்டு, தலையில் ஸ்கார்ஃபைக் கட்டிக் கொண்டாள். பிறகு இருள் கலையாது, நிசப்தமாயிருந்த தெருவில் மெல்லிய ஸ்லிப்பர் சத்தங்களை ஏற்படுத்திக் கொண்டு தனியாக நடந்து போனாள்.

வீட்டை அடைந்து கதவைத் திறந்ததும் நேராக உள் அறைக்குப் போனாள், சுவரில் புன்னகையோடு தெரியும் சியாமின் படத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு, படுக்கை யறைக்குச் சென்றாள், முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

- என் அஸ்திவாரம் அசைந்து விட்டதே? என்று பல முறை புலம்பினாள், அன்று முழுவதும் சாப்பிடவில்லை.

நரேனின் மனத்தில் அமைதி இறங்கியிருந்தது, வாழ்வில் வைத்திருந்த ஒரே ஒரு ஆர்வம், லட்சியம் நிறைவேறிவிட்டது, ரமியுடன் ஒரு நாள் வாழ்ந்தாகிவிட்டது என்ன இனிமையான இரவு!

இடையில் ஸ்வப்நா இரண்டு, மூன்று முறை வந்து போனாள். ஒவ்வொரு முறையும் நீண்ட நேரம் பேசினாள், அவள் கம்பெனியின் வெள்ளி விழா நடக்கிறதென்றும் அதில் அவன் கலந்துகொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்திச் சென்றாள்.

ஒவ்வொரு முறை ஸ்வப்நா வந்து போனதும் நரேன் யோசித்துக் கொண்டிருந்தான்.

அவள் ஏன் அவன் வீட்டுக்கு வருகிறாள்?

அதன் உள் அர்த்தம் எதுவாக இருக்கும்?

ரயிலில் தோன்றிய சினேகிதத்தை நிலைநிறுத்த விரும்புகிறாளா?

அல்லது பலதரப்பட்ட மனிதர்களிடம் பேசிப் பழகுவதே அவள் பொழுதுபோக்கா?

அல்லது. . . .

இவனை அவள் கவர முயற்சிக்கிறாளா?

யோசித்துப் பார்த்தான். அவனைக் கவர நினைப்ப தாகவும் தெரியவில்லை. அவனிடம் பேசிப் பழகுகிறாளே



ஒழிய, அதில் துளிக்கூட வேறு நினைவு இருப்பதாகத் தெரியவில்லை. சமயங்களில் அவள் பேசுவதில் அதிகமான பாசம்தான் தெரிகிறது.

ஆனால் இப்படிப்பட்டவளுக்கு ஏன் கெட்ட பெயர் நிலவுகிறது?

அதைக்கூட அவள் மறுப்பதில்லையே! வெளிப் படையாக ஒத்துக் கொள்கிறாளே!

ஒரு சனிக்கிழமை இரவு. ஸ்வப்நா வந்தாள்.

- நாளை என்னுடன் மங்கலம் வரை வரவேண்டும் என்றாள்.

- மங்கலமா? எங்கே இருக்கிறது?

எண்பதாவது மைலில் அந்த ஊர் இருக்கிறது என்றும், அங்கே அவளது கம்பெனி டைரக்டர் ஒருவர் மாட்டுப் பண்ணை நடத்தி வருகிறார் என்றும், அவரிடம் நேரில் போய்ச் சில கையெழுத்துக்கள் வாங்கிவர வேண்டுமென்றும் கூறினாள்.

மறுநாள் காலையில் ஸ்வப்நா அவனை அழைத்துப் போக வந்தபோது நரேனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

- ஸ்வப்நா! நான் வர வேண்டுமா? என்றான்.

- ஏன் விருப்பமில்லையா?

அவன் பேசவில்லை, சிறிது நேரம் மௌனம் நீடித்தது.

பிறகு அவள் தலையைக் குனிந்தாள்.

- அப்போ, நான் வருகிறேன் என்று புறப்பட்டாள்.

படிகளில் இறங்கும்போது அவன் திகைத்து நின்றான். சில கணங்கள் எதுவும் ஓடவில்லை. அவள்

காரை ஸ்டார்ட் செய்யும் சப்தம் கேட்டதும் வெளியே ஓடினான். - ஸ்வப்நா ப்ளீஸ் வெய்ட் என்று கூறிவிட்டு உள்ளே திரும்பி ஓடி வந்தான்.

டிரஸ் அணிந்து மீண்டும் காரை அடைந்தபோது அவள் ஸ்டீரிங் வீலில் கவிந்திருந்தாள். கண்களிலிருந்து நீர் விழுந்துகொண்டிருந்தது. அவன் ஏறி உட்கார்ந்ததும் முகத்தைத் துடைத்து விட்டுச் சட்டென்று ஸ்டார்ட் செய்தாள்.

நகரத்தை விட்டு வெளியேறும் வரை இருவரும் பேசவில்லை. கார் கிச் என்று பறந்து கொண்டிருந்தது.

வெகுதூரம் போனதும் அவன் பேசினான்.

- கோபமா?

- நான் கோபப்பட்டு என்ன ஆகப்போகிறது?

- ஏன்?

- நான் ஒரு கண்ணியமற்றவள்தானே?

- நான் அப்படி நினைக்கவில்லை.

- நினைக்கவில்லை என்று சொன்னால் போதுமா?

- வேறு என்ன செய்யவேண்டும்?

- செய்கையிலும் காட்டவேண்டும்.

- காட்டித்தான் வருகிறேன்.

அவள் திரும்பிப் பார்த்தாள். கண்ணீர் அவள் கன்னத்தில் உறைந்திருந்தது. பார்வையில் பெருமிதம் தோன்றியிருந்தது.

- ஸ்வப்நா? நீங்கள் கண்ணீர் விடுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை.



- நானும் பெண்தானே?

- ஏன் இந்தக் கண்ணீர்?

- திரும்பி அதே கேள்வியைத்தான் கேட்கிறீர்கள். அதே பதிலைத்தான் சொல்லவேண்டும்.

- என்ன பதில்?

- நான் வேண்டாதவள், வேண்டப்படாதவள்.

- ஏன்?

- இல்லாவிட்டால் நீங்கள் என்னுடன் வரத் தயங்கியிருக்க மாட்டீர்கள்.

- அப்படியில்லை, ஸ்வப்நா.

- என் வீட்டிற்கும் வராமலும் இருந்திருக்க மாட்டீர்கள்.

- வந்திருக்கிறேனே?

- ஒரே ஒரு தடவை வந்தீர்கள். அதற்குப் பின் ஆயிரம் முறை எதிர்பார்த்தேன். வரவில்லை.

நரேனுக்கு உண்மையில் ஒரு குற்ற உணர்வு இருந்தது. வதந்திகளைக் கேள்விப்பட்டுத்தான் அவன் அவள் வீட்டிற்குச் செல்லவில்லை. அதை அவளிடம் சொல்லும் துணிவு இல்லை. ஆனால் அவள் புரிந்துகொண்டிருக் கிறாள்.

- நான் அழிந்தவள். நரேன், ஆனால் சிநேகங்களை விரும்புபவள்.

ஒரு நெடிதான மரத்தடியில் காரை நிறுத்தினாள். பின் சீட்டிலிருந்து டிபன் கேரியரை எடுத்தாள். அவன் கையில் ஒரு தட்டைக் கொடுத்து இட்லிகளை வைக்கலானாள்.

அவனுக்காக அவள் டிபன் கொண்டு வந்திருக்கும் அழகே அவனுக்குப் பிடித்தது. காப்பி அருந்துவதற்காக இரண்டு ஸ்பார்க்லிங் டம்ளர்களைக் கொண்டு வந்திருந்தாள். பெரிய ஜக்கில் தண்ணீர் கொண்டு வந்திருந்தாள்.

தண்ணீரை அருந்திவிட்டு மீதியைக் கொட்டும் போது டாஷ் போர்டில் பட்டு அவன் முகம் எல்லாம் தெறித்தது - ஓ, மை என்று கூறிவிட்டு டக்கென்று இடுப்பிலிருந்த கர்சீப்பை உருவி அவன் முகத்தை ஒத்தி விட்டாள்.

பன்னிரண்டு மணிக்கு மங்கலத்தை அடைந்தார்கள். டைரக்டர் வெளியே போயிருந்தார். வருவதற்கு மாலை மூன்று மணி ஆகியது. அதுவரை அவர்கள் அங்கே தங்க வேண்டிவந்தது.

அவர் வந்த பிறகு அவரிடம் பேசிவிட்டுப் புறப்படுவதற்குள் ஏழு மணி ஆகிவிட்டது.

இருவரும் கிளம்பினார்கள். நல்ல இருட்டு, காரின் வெளிச்சம் பால்போல் விழுந்தது.

- நல்ல வேளை தப்பித்தேன் என்றாள் அவள்.

- ஏன்?

- இரவில் எப்படியாவது என்னைத் தங்க வைத்து விட வேண்டும் என்று அவர் நினைத்தார்.

- ஏன்?

- நான் அதைச் சொல்ல வேண்டுமா?

எதிரே வந்த லாரியின் வெளிச்சம் அவன் முகத்தில் பளிச்சென்று விழுந்து மறைந்தது. அவன் பேசவில்லை.



- நான் ஒரு கைப்பொம்மை! என்று சொல்லி விட்டு அவனைப் பார்த்தாள். அவன் சலனமில்லாமல் இருந்தான்.

- எங்கள் கம்பெனியின் ஹையர் - அப்ஸ்களுக் கெல்லாம் நான் ஒரு கைப் பொம்மை. என்னை எப்படி வேண்டுமானாலும் வளைத்து விளையாடுவார்கள்.

ஒரு பை-பாஸ் ரோடில் இறக்கி ஓட்டினாள். கார் ஊஞ்சலாக ஆடியது.

- இவர்கள் எல்லோருமே எழுபது வயசுக்காரர்கள். இவர்கள் என்னிடம் ஆடும் ஆட்டத்தைப் பார்க்க வேண்டுமே! என்னைப் பொம்மை என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அவர்களைத்தான் நான் பொம்மையாக வைத்திருக்கிறேன்! சிரித்து மயக்கிப் பேசி என் இஷ்டப்படியெல்லாம் அவர்களை ஆட்டி வைக்கிறேன்!

கார் மெயின் சாலைக்கு வந்தது.

- டைரக்டர்களின் ஆட்டங்களைப் பார்த்துக் கீழே மானேஜரும், இன்னும் குட்டி தெய்வங்களும் கூட என்னைச் சுற்றி வருகிறார்கள். ஒரு சிரிப்பு, ஒரு முறுவல், ஒரு கண் வெட்டு இவைகளால் அவர்களை வீழ்த்தி விடுகிறேன். அது போதும் அவர்களுக்கு. ஹேன்னு இளித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒரு வைக்கோல் வண்டியை விலக்கி ஓட்டினாள்.

- சிலருக்கு மட்டும் இசைந்து விடுவேன். அது என் இஷ்டம். என் விருப்பம்.

ஓர விழியால் அவனைப் பார்த்தாள். கார் பறந்தது.

அவன் வெகுநேரம் மௌனமாக இருந்தான். பிறகு அவள் பக்கம் திரும்பினான்.

- ஸ்வப்நா, இதெல்லாம் உனக்கு வெட்கமாயில்லை?

- வெட்கம் ஹஹ்ஹஹாஹா. . . . ஏன் வெட்கம். அந்த நாள் எல்லாம் ஓடிவிட்டது. வெட்கப்பட்டால் நான் ஓட்டு வீட்டுக்குள் ஒரு ஒன்றுமில்லாத பேர்வழியுடன் அரை வயிறு பட்டினியோடு ஒண்டிக் குடித்தனம் நடத்திக் கொண்டிருப்பேன். ஹைஸ்கூல் படிப்பு மட்டும் படித்து முடித்த ஒரு அபலைப் பெண்ணுக்கு இந்த உலகில் வேறு என்ன வழி இருக்கப்போகிறது.

- அப்படி எளிய வாழ்க்கைகூட நடத்தினால் கண்ணியமாக இருந்திருக்கும்.

- கண்ணியத்தைப் பற்றி பேசாதீர்கள் நரேன். என் ஃபிலாஸப்பி வேறு. கண்ணியம் சோறு போடாது. இன்று நான் இந்த நிலையில் இருப்பதால்தான் எத்தனையோ கண்ணியமுள்ளவர்களின் வாசல் கதவுகள் எனக்காகத் திறந்திருக்கின்றன. நான் எந்தக் குடும்பத்தினிடையேயும் சரி நிகராக உலாவ முடிகிறது. ஒரு சிலர் மட்டும் முகத்தைச் சுளித்துக்கொண்டால் எனக்கென்ன? இவர்கள் வாழும் ஒண்டிக்குடித்தனத்துக்குள் நான் போக வேண்டியதில்லை. உயர்ந்த இடங்களில் நான் உறவாடும்போது இவர்களை நான் மதிக்கவேண்டியதில்லை.

- இதற்கெல்லாம் உங்கள் மனம் எப்படி துணிந்தது?

- துணியவா? நானா துணிகிறேன்? துணிய வைத்து விடுகிறார்கள். சீரான வருமானமுள்ள ஒரு கட்டுக் கோப்பான குடும்பம் ஒன்றில்தான் பெண்களின் நெறிகள் ஓரளவு காப்பாற்றப்படுகிறது. மற்ற இடங்களில் நெறிகள் தளர்ந்து போய் விடுகின்றன.

அவன் பேசவில்லை.

ஒரு லாரிக்கு விலகிய கார் திடீரென்று நின்றது. பிறகு ஸ்டார்ட் செய்து புறப்படவில்லை. கீழே இறங்கி பானட்டைத் தூக்கிப் பார்த்தான். எதுவும் புரியவில்லை. இருவரும் தள்ளிப் பார்த்தார்கள். வண்டி புறப்படவில்லை.



விசாரித்ததில் அருகில் ஒரு பர்லாங் தூரத்தில் பி. டபிள்யு. டி. பங்களா இருப்பது தெரிந்தது. இரண்டு பேரைக்கொண்டு தள்ளச் செய்து காரை அங்கே கொண்டு போய்ச் சேர்த்தார்கள். இரவில் அங்கே தங்குவது என்று முடிவு செய்தார்கள்.

இந்த இரண்டு போர்ஷன்களில் ஒன்றில் ஒரு ஆபீசர் தங்கியிருந்தார். மற்றொரு போர்ஷனை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

உள்ளே ஒரு மின் விசிறி, கண்ணாடி, இரு நாற்காலிகள், இரு கட்டில்கள் யாவும் அழகாயிருந்தன. பால் கிடைக்குமா என்று விசாரித்து விட்டு இருவரும் சோபாவில் அமர்ந்தார்கள்.

- ஸ்வப்நா, நான் ஒன்று கேட்கவா?

- ம்.

- வித்தியாசமாக நினைக்க மாட்டீர்களே?

- இல்லை.

- என்னுடன் பழகுவதன் அர்த்தமென்ன?

ஒரு கணம் அவள் தயங்கினாள்.

- உங்கள் சிநேகத்தை நான் விரும்புகிறேன். உங்களிடம் மட்டும் அல்ல. இன்னும் பல உயர்ந்த மனமுள்ளவர்களுடன் சிநேகம் வைத்திருக்கிறேன். இவையெல்லாம் என் இதயத்திற்கு ஆறுதல்கள்.

நரேன் பேசவில்லை. அவள் மனத்தை வெளிப் படையாகத் திறந்துவிட்டாள் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

பையன் பால் கொண்டுவந்தான். இருவரும் பருகினார்கள். கட்டில்களைத் தூரங்களில் இழுத்து

விட்டுக்கொண்டார்கள். நரேன் யோசித்தான். இதெல்லாம் என்ன? இங்கே இந்தத் தனிக் கட்டில், எப்படி வந்தோம்? இவளுடன் ஒரே அறையில் ஏன் படுத்திருக்கிறோம்? இதென்ன விசித்திரம்? ஸ்வப்நா புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அவள் கட்டில் ஆடும் சப்தம் கேட்டது. கையில் செயின் புரளும் சப்தமும் கேட்டது. அவன் திரும்பவில்லை. அவள் என்ன செய்கிறாள் என்பதை பார்க்க விரும்பவில்லை. விடிவிளக்கு இல்லாதிருந்தும் வெளியிலுள்ள லைட்-போஸ்டின் வெளிச்சம் உள்ளே வந்திருந்தது. அவன் கண் மூடவில்லை. மனத்தில் எதுவோ நெளிந்து கொண்டிருந்தது.

- தூங்கிவிட்டீர்களா, நரேன்?

- இல்லை.

- பேசலாம். பேச வேண்டியது இருக்கிறது.

- ம்.

- இதே போல் ஒரு தடவை மிஸ்டர் காந்த்துடன் தங்க வேண்டிவந்தது.

- ம்.

.... அது வேறு ஊரில். அன்றைக்கு மழை. அவர்தான் கார் ஓட்டி வந்தார். எப்படியும் சென்னைக்குப் போய் விடலாம் என்றார். நான் விடாப்பிடியாகப் பிடித்து டி. பி. யில் தங்க வைத்தேன். அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

. . . . . என்ன காரணம்?

. . . . . மிஸ்டர் காந்த் ஒரு கண்யமானவர் எங்கள் ஆபீஸில் உயர்ந்த பதவி வகிக்கிறவர். ஒரு சமயம், ஒரு டைரக்டரின் பிறந்த தின நிகழ்ச்சியில் ஒன்று கூடியிருந்தோம்.



காந்த்துக்கு மிக அழகான மனைவி, அவளும் வந்திருந்தாள். என்னை உதாசீனமாகப் பார்த்தாள், உதாசீனமாக நடத்தினாள். நான் வலியச் சென்று பேசியபோது முகத்தை முறித்துக் கொண்டாள். என் . . . .வாழ்வை அவள் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அவளது உதாசீனம் எனக்குப் பெரிய ஆத்திரத்தைக் கொடுத்தது. பொறாமையும் எழுந்தது. அவளை எப்படியும் பழிவாங்க வேண்டுமென்று நினைத்தேன். அதற்காகவே காந்த்திடம் நெருங்கிப் பழகினேன். அன்றுச் சந்தர்ப்பம் கிடைத்தபோது அந்த டி. பி. யில் என்னுடன் அவரைத் தங்க வைத்தேன். என்னைக் கேவலமாக நினைக்கிறீர்களா? நரேன்.

. . . . ஊஹூம் என்று எதையும் நினைக்காமல் கூறினான் அவன்.

. . . . எனக்குச் சமயங்களில் இப்படி ஒரு ஆத்திரம், பொறாமையெல்லாம் எழுவதுண்டு. அன்று காந்த் என்னிடம் அகப்பட்டுக் கொண்டார். ஒரே அரையில் தங்கினோம். அவர் கூச்சம் மிகுந்தவர். வெளியே படுக்க விரும்பினார். ஆனால் வராந்தாவெல்லாம் மழை நீர். படுக்க முடியவில்லை. உள்ளே படுத்தார் - நான் அவரிடம் பேசினேன். பேசிக்கொண்டேயிருந்தேன். பேச்சுக்கிடையே ஏதோ கடிக்கிறது என்று கூறி வேண்டுமென்றே விளக்கைப் போட்டு பாதி திறந்திருந்த என் மேல் . . . உடம்பைக் காட்டினேன். ஒரு தரமல்ல. பல தடவை விளக்கைப் போட்டு உடம்பை வெவ்வேறு கோணங்களில் காட்டினேன். கடைசியில் ஒரு காலைத் தூக்கி அவர் கட்டில் மீது வைத்து, பூச்சிக் கடிகளால் சிவந்து போன பகுதி என்று சொல்லிச் சில இடங்களைக் காட்டினேன். கேட்கிறீர்களா, நரேன்.

அவன் பேசவில்லை.

. . . . காந்த். அதுவரை இறுக்கமாக இருந்த காந்த், மெதுவாக இளகுவது தெரிந்தது. அவர் பேச்சுக் குழைந்தது, பார்வை குழைந்தது. இரவின் பாதி ஓடுவதற்குள் அவர் என் வலையின் பின்னல்களில் முழுதுமாகச் சிக்கியிருந்தார்.

அவள் நிறுத்தினாள். அவன் பேசவில்லை. அவளைப் பார்த்துத் திரும்பவும் இல்லை.

. . . . அவ்வளவுதான்; அவர் என் அடிமையாகி விட்டார். வண்டுபோல் என்னைச் சுற்ற ஆரம்பித்தார். அவரை ஹூக்கில் வைத்து இஷ்டம் போல் இழுக்கிறேன். இப்போது அவர் மனைவி, அந்த அழகான மனைவி கண்ணீரும் கவலையுமாக இருக்கிறாள். நான் செய்தது தவறுதான். ஆனாலும் நான் ஆனந்தித்திருக்கிறேன். உள்ளூர சந்தோஷப்படுகிறேன்.

. . . . ஸ்வப்னா! (அவன் திடுக்கிட்டு அழைத்தான்) . . . . இப்படி நீங்கள் செய்யலாமா?

. . . . தவறுதான் நரேன். யார் இல்லை என்றார்கள். ஆனால் என் மனத்தில் ஒரு பொறாமையும், ஒரு ஆற்றாமையும் இருக்கிறதே. அது ஒரு காட்டுத் தீ மாதிரி. அதன் வேட்கை முன்னால் என்னால் எதுவும் செய்ய முடியாது. அந்த நெருப்புக்கு நான் அடிமை.

அங்கே ஒரு மௌனம் விழுந்தது. அவளது கட்டில் மேலும் ஆடுவது கேட்டது. களிங் என்று ஏதோ சப்தம். அவன் திரும்பவில்லை.

. . . நரேன்.

. . . . ம்.

. . . . எழுந்து உட்காருங்கள். பேசலாம். இன்னும் எவ்வளவோ பேச வேண்டியிருக்கிறது.



இரண்டு தடவை வற்புறுத்திய பின் உட்கார்ந்தான்.

- இந்த இரவும் இந்தச் சூழ்நிலையும் எனக்கு மிகவும் பிடிக்கிறது நரேன்.

அவன் பேசவில்லை மௌனம் நீடித்தது.

- எனக்கு ஒரு குணம் உண்டு நரேன்!

- ம்

- என்னிடம் பழகுபவர்கள், என்னையே கேட்டால் கூடச் சுலபமாகத் தந்துவிடுவேன்.

அவன் பேசவில்லை. அவன் இன்னும் திரும்பாதது. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

- அதோ, சுவரில் பாருங்கள், நரேன்! (பரபரப்புடன் கூறினாள்).

அவன் திரும்பினான், வெளியிலிருந்து வந்த வெளிச்சம் அவர்கள் இருவரது நிழல்களையும் சினிமாக் காட்சிபோல் சுவர் மீது தள்ளியிருந்தது, உண்மையில் அவர்கள் தூரத்தில் இருந்தாலும் அவர்கள் நிழல்கள் அந்தச் சுவரில் காதல் - காட்சியில் நெருங்கியிருப்பது போல் தெரிந்தது.

நிழலை அவன் பார்ப்பதை அவள் கவனித்ததும் மேலும் நகர்ந்து தன் நிழலை அவனுடன் நெருக்கினாள். முகங்கள் ஆர்வத்துடன் இணைவதுபோல் நிழல் - காட்சி தென்பட்டது, அதைக் கண்டதும் திடுக்கிட்டான்.

- ஸ்வப்நா! என்று அவன் திகைப்புடன் கூறும்போது அவள் - உங்களைத் தொடவில்லையே! உங்கள் நிழலைத் தானே தொடுகிறேன் என்றாள்.

* * *

## 16

நரேன் திடுக்கிட்டான். மனத்தில் பல நினைவுகள் எழுந்தன. ஸ்வப்னாவின் உள்நோக்கம் அவனை வசீகரிப்பதற்காக இருக்கும் என்று நினைத்து உடம்பு வியர்த்தது. ஒரு கணம் ஏதாவது கோபமாகக் கேட்டு விடுவோமா என்று நினைத்தான். மறுகணம் அது தவறு என்று தோன்றியது.

- ஸ்வப்னா! வெறும் உடம்புடனா இருக்கிறீர்கள் என்று கேட்டான். அந்தக் கேள்வியில் ஒரு அழுத்தம் இருந்தது.

- ஆமாம் நரேன்! ஃபான் காற்று இங்கே வீசவில்லை. வியர்க்கிறது என்றாள்.

நரேன் மேலே பார்த்தான். அவனுக்கு நேர் மேலே அந்த ஃபான் இருந்தது. ஸ்வப்னாவின் கட்டில் ஃபானுக்குத் தூரமாகவே இருந்தது.

நரேன் எழுந்து அவள் கட்டில் அருகில் பார்த்தான். காற்று அதுவரை எட்டவில்லை. ஸ்வப்னா சொல்வது உண்மைதான் - நான் வேண்டுமானால் இங்கே படுக்கிறேன். நீங்கள் என் கட்டிலில் படுத்துக் கொள்ளுங்கள் என்றான்.

- வேண்டாம் நரேன். இந்தக் கட்டிலை அங்கே இழுத்துப் போட்டால் போகிறது என்றாள் அவள். பிறகு அவன் பதிலைக் கூட எதிர்பாராமல் கட்டிலை இழுத்துப் போட்டாள். நரேனுக்கு ஏதோ மாதிரி இருந்தது. ஸ்வப்னா சொல்லிய கதையும் மனத்தில் கலக்கத்தைக் கொடுத்தது. சிறிது நேரம் யோசித்து விட்டு நேராகப் போய்க் கதவைத் திறந்தான்.



- ஏன் நரேன்?

- வராந்தாவில் காற்று வீசுகிறதா என்று பார்க்கிறேன்.

அவள் சிரித்தாள்.

- நர். . ரே. . ன், இழுத்தவாறு அழைத்தாள்.

- ம்.

- பயப்படுகிறீர்களா?

மீண்டும் சிரித்தாள்.

அவன் திடுக்கிட்டான். அடுத்த கணம் இல்லை என்று கூறினான். அவன் மனம் குமைந்தது. அவளது கேள்வி அவனது தன்னம்பிக்கைக்கும், கௌரவத்திற்கும் களங்கம் விளைவிக்கிறது என்று நினைத்தான்.

அவள் மேலும் சிரித்துக் கொண்டிருந்தாள். கதவை அடைத்து விட்டு அவன் உள்ளே வந்தான். கட்டிலில் படுத்தவாறு பார்த்தபோது அவளது கட்டில் எவ்வளவு அருகில் இருக்கிறது என்பது தெரியவந்தது. சில அங்குல இடைவெளிதான்.

மற்றொன்று அவனைத் திடுக்கிட வைத்தது இப்போதுகூட அவள் மார்பு அரைகுறையாக மூடப் பட்டிருந்தது.

- ஸ்வப்னா, ஏன் இப்படி . . . ? என்று கேட்டான் திகைப்புடன்.

- இரவில் இப்படி உறங்குவது என் பழக்கம். அப்போதுதான் தூக்கம் வரும் என்றாள் அவள்.

பிறகு அவன் குழம்பியிருப்பதைப் பார்த்ததும் - உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் போர்த்திக்

கொள்கிறேன். சரிதானா? என்றாள். உடன் தொடர்ந்து - உங்கள் விருப்பம் எதுவாயினும் அதற்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாள் அழுத்தமாக.

அவள் எழுந்து உட்கார்ந்து தன்னைச் சரியாக்கிக் கொண்டாள்.

இவள் எப்படிப்பட்டவள் என்று நினைத்தான் நரேன். என்னையும் காந்த் என்று நினைக்கிறாளா? அல்லது இது அவள் சுபாவந்தானா?

நேரம் ஓடியது தூக்கம் வரவில்லை. மனத்தில் பரபரப்பு.

- நரேன்! மெல்லிதாக அவள் அழைத்தாள்.

- திரும்பிப் பாருங்கள் நரேன்.

பார்த்தான்.

கட்டிலின் நுனியில் முகத்தைத் தாழ்த்தியவாறு அவள் பார்த்தாள். கண்கள் ட்விங்கிளடித்தன -.

- நான் ரமியைப் போல் இல்லையா, நரேன்?

அவன் கண்கள் மெதுவாக மூடின. பேச்சு இல்லை.

- உங்கள் நீண்ட இரு விழிகளையும் திறந்து என்னைப் பாருங்கள். உங்களுக்காக என் ரகசியங்கள் யாவற்றையும் திறந்து வைத்திருக்கிறேன். என்னைப் பாருங்கள் நரேன். உங்கள் பார்வையாவது என் நெஞ்சங்களைத் தொட்டு அவைகளைக் குளிரச் செய்யட்டும். அவை வெம்மையில் வாடுகின்றன.

- நரேன்.

- ஸ்வப்நா.

பற்களைக் கடித்து எதையோ அவன் அழுத்திக் கொள்வது தெரிந்தது.



ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு - ஸ்வப்நா என்று ஏதோ ஆரம்பித்தான். அதற்குமேல் பேச முடியவில்லை. குரல் அடைத்தது.

- நரேன் என்றாள் அவள்.

- நான் ரமி போல் இல்லையா, நரேன்?

அவன் பேசவில்லை.

அவள் அசையும் சப்தம் கேட்டது. மேலும் நெருங்குகிறாள் என்பது மட்டும் தெரிந்தது. அவன் திரும்பவில்லை.

- நரேன் உங்கள் வாழ்வில் ஒரு வசந்தம் வந்தது. பொன் மயமான பூக்களைப் பூத்து உங்கள் இள - வாழ்வினை நிறைத்தது. அந்த வசந்தம் இன்று போய் விட்டது. அது இன்னொருவர் பூங்காவில் மெள்ள மெள்ள வீசி அங்குள்ள பூக்களை மலர வைக்கிறது. வேறொருவர் வாழ்வை நிறைய வைக்கிறது.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் தொடர்ந்தாள்.

- அந்த வசந்தம் போன பிறகு அதையே நினைத்து வாடுவதில் பிரயோசனம் என்ன? புது வசந்தங்களை எதிர் பாருங்கள். நரேன், வாழ்விலே எத்தனையோ வசந்தங் களுக்கு இடம் உண்டு.

மேலும் அவள் புரளும் சப்தம் கேட்டது.

- வாழ்வின் இளம் - இறக்கைகள் இருக்கும்போதே பறந்து பறந்து மலர்களை அணைந்து விடவேண்டும். நரேன், இளம் - உதடுகள் இருக்கும்போதே கோப்பைகளை மனதார உறிஞ்சி விடவேண்டும்.

- ஒவ்வொரு காலையிலும் ஒரு முழுநாள் உங்கள் முன் வந்து நிற்கிறது. உங்களைக் கை தட்டி அழைத்து,

ஹேய்! இன்றைய சுவர்க்கத்தை உன் முன்னால் விரிக்கிறேன் என்கிறது. அந்த சுவர்க்கத்தை, உங்கள் முன்னால் விரிந்து தவழும் சுவர்க்கத்தைப் பாருங்கள்! நழுவ விடாதீர்கள்.

சில கணங்களுக்குப் பின் மேலும் தொடர்ந்தாள்.

- ஒவ்வொரு புது தினமும் ஒவ்வொரு புது சுவர்க்கம் நரேன். ஏதோ ஒரு பழைய நாளில் நீங்கள் கண்டதுதான் ஒரே சுவர்க்கம் என்று நினைக்காதீர்கள். தன்மையில், வடிவில், இயல்பில், எழிலில், ருசியில் இன்னும் எத்தனையோ விதங்களில், விதம் விதமாய்ப் பூக்கும் சுவர்க்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித் தன்மை. ஒவ்வொன்றும் ஒரு தனி அழகு! ஒன்று போல் ஒன்று இராது. ஒன்று போல் ஒன்று சுவைக்காது. அதை நினைவில் கொண்டு உங்கள் முன்னால் நிறைத்து வைத்து இருக்கும் கிண்ணங்களைப் பாருங்கள் நரேன். பருகுங்கள். பழைய கிண்ணங்களை மறந்து விடுங்கள்.

பதிலே இல்லை. அவன் கண்கள் மூடியே இருந்தன.

மேலும் அவள் தொடர்ந்தாள்.

. . . . . நரேன், நான் ரமியாக இல்லாவிட்டாலும் அவள்தான் என்றாவது கற்பனை செய்து கொள்ளுங்கள். அவளைப் போன்ற பெண்மை என்னிடம் இருக்கத்தானே செய்கிறது நரேன்.

நீண்ட நேரம் நிசப்தம். நரேனிடமிருந்து நீண்ட பெருமூச்சுகள் வந்தன.

. . . . என்னைப் பாருங்கள் நரேன்!

. . . . பாருங்கள் நரேன் பாருங்கள்! அவள் குரல் தீவிரமாகியது. திரும்பினான்.

. . . . ஸ்வப்நா என்றான் அவன் நாக்கை அழுத்தி.



. . . . ஏன் நரேன்!

அவள் தன் கட்டிலிலிருந்து அவன் கட்டிலுக்குத் தாவினாள். அவன் திடுக்கிட்டான்.

. . . . ஏன் நரேன், பேசுங்கள், பேசுங்கள்!

ஆர்வத்துடன் நெருங்கி வரும் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் கண்களில் ஒரு தீ படர்ந்து ஹோவென்று எரிந்து கொண்டிருந்தது. அவளது வெம்மையான சுவாசம் அவனது முகவாயில் விழுந்து அதை எரித்துக்கொண்டிருந்தது.

. . . . ஸ்வப்நா!

வெறுப்புடன் வார்த்தையை எறிந்தான்.

. . . . ஓ நரேன்! நரேன்! நான் என்னை இழந்து விட்டேன். இழந்து விட்டேன் என்று உன்மத்தத்துடன் கதறினாள் ஸ்வப்நா.

மறுகணம் அவன் விலக முனைவதற்குள், அவள் ஒரு எரிமலை போல் வெந்த தழலைப் பரப்பிக்கொண்டு அவன்மீது சரிந்து விட்டாள். பேரலைகள் கொண்ட சமுத்திரம் அவனை மூடுவது போல் மூடினாள். கழுத்தைச் சுற்றிக் கைகளை வளைத்து நரேன், நரேன் என்று குமுறினாள்.

பிறகு அதே வேகங்களில் அவனது கண்களைத் தேடும்போது அவை இரண்டும் பயந்து, இரக்கம் வரவழைக்கத் தக்க பரிதாபத்துடன் ஸ்தம்பித்துப் போய் நிற்பதைக் கவனித்தாள். அவைகளிலிருந்து கண்ணீர் பீறி வழிந்து கொண்டிருந்தது. திடீரென்று உயிரற்ற உடல் போல் அவன் சலனமில்லாமல் இருந்தான். அவனது பார்வை வெகு தொலைவிலுள்ள எங்கேயோ ஓடிச் சென்றிருந்தது. இந்த உலகிலேயே அவன் இல்லை.

முதல் துடிப்புகள் அதற்குள் அடங்கிவிடவே அவள் திடுக்கிட்டு வியப்புடன் அவனைப் பார்த்தாள். பிறகு அவன் உடலிலிருந்து வழிந்து கீழே விழுந்து நரேன், நரேன் என்றாள், கண்களைத் திறவாமலும், பேசாமலும், ஆனால் கண்ணீர் மட்டும் வடித்துக்கொண்டும் இருந்த அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஒரு தயக்கமும், பயமும், குற்ற உணர்வும் தோன்றின. இழைந்தவாறு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். பிறகு சட்டென்று கீழே குதித்துக் கட்டிலுக்குப் போனாள். அங்கு தலையணையில் கவிழ்ந்து கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

ஒருவர் விசிப்பதும், மற்றொருவர் கண்ணீர் விடுவதுமாக இரவு ஓடியது.

அவள் முகத்தைக் கழுவிக்கொண்டு வெளியே வந்தபோது காரின் மீது சாய்ந்தவாறு நரேன் நின்று கொண்டிருந்தான். மௌனமாக அவனருகில் போய் அவள் நின்றாள்.

அந்தக் காலையிலும் வடக்கே வெகுதூரம் பரந்த வெட்ட வெளியிலிருந்து காற்று ஹூய் என்று ஒரு ஈரப் பதத்துடன் வீசிக்கொண்டிருந்தது. இருவர் கேசங்களும் கோதப்பட்டு நெற்றிகளில் வீழ்ந்து புரண்டு கொண்டிருந்தன.

மௌனமாகவே அவர்கள் நின்றார்கள்.

திடீரென்று அவள் கீழே மண்டியிட்டு, அவன் கால்களைத் தொட்டாள்.

- என்னை மன்னியுங்கள் நரேன் என்றாள்,

அவன் அவளைப் பற்றி மேலே உயர்த்தினான்.

அவள் விசித்துக் கொண்டிருந்தாள், குழந்தையைப் போல் தேம்பிக் கொண்டிருந்தாள்.



சிறிது நேரத்திற்குப் பிறகு அழுகையோடு பேசினாள்,

- நரேன் . . மன் . . னிப்பீர்களா?

அவள் கண்களிலிருந்து வடியும் நீரைப் பார்த்தவுடன் அவன் மனம் துணுக்குற்றது. மௌனமாக அவளைப் பார்த்தான்,

- மன்னிப்பீர்களா நரேன்?

அவன் பேசவில்லை. வெகுநேரம் பேசவில்லை. ஹூய் என்று காற்று அவர்கள் காதுகளில் வீறிட்டுக் கொண்டு ஓடியது. வெகு நேரம் நிசப்தம். ஒரு யுகம்போல் தோன்றியது. அவள் விசிப்பு மட்டும் இடையிடையே கேட்டது.

கடைசியில் மெல்லிதாக - நரேன் என்றாள்.

அவன் பேசவில்லை.

- நரேன்.

அவன் திரும்பினான்.

- உங்கள் மனத்திலிருந்து நான் விழுந்து விட்டேன். தெரியும் நரேன்.

அவன் கண்கள் வளைந்து திரும்பின.

- நீங்கள் ஒரு ஹீரோ நரேன்! ஒரு தெய்வம்! (விழிகளைத் துடைத்தாள்) என் பிடியிலிருந்து இதுவரை எந்த ஆணும் தப்பியதில்லை. ஆனால் நீங்கள் தப்பி விட்டீர்கள். அதற்கான தைரியமும் திடமும் உங்களிடம் இருக்கிறது. உங்கள் முன்னால் நான் வெறும் தூசி. ஒரு அற்ப ஜந்து நரேன், நரேன் என்னைப் பார்க்கக்கூட மாட்டீர்களா?

மெதுவாகத் திரும்பினான். உதடு சலசலத்தது. பேச்சு வரவில்லை.

- பேசுங்கள் நரேன், பேசுங்கள். என்னால் இந்த மௌனத்தைத் தாங்க முடியவில்லை.

மேலும் அவளை ஒருதரம் அவன் தீர்க்கமாகப் பார்த்தான். கடைசியில் - ஸ்வப்நா என்றான் மெதுவாக.

பயபக்தியோடு அவள் திரும்பினாள்.

- புயல் ஓய்ந்துவிட்டதா?

- ஓய்ந்துவிட்டது, நரேன்.

- நானும் புயலிலிருந்து விடுபட்டேன், ஸ்வப்நா.

ஒரு திடீர்க் காற்று மேலும் அவன் கேசத்தைப் புரட்டியது. சிறிது நேரம் பேச்சில்லை. இதற்குள் காப்பி ரெடி என்று பையன் கூறவே இருவரும் திரும்பினார்கள்.

அறையில் உட்கார்ந்து காப்பியைப் பருகினார்கள்.

- மன்னிப்பீர்களா, நரேன்.

- என் மன்னிப்பு எதற்கு ஸ்வப்நா?

- நான் எல்லோரையும் போல் உங்களை நினைத்து விட்டேன். நீங்கள் முற்றிலும் மாறுபட்டவர். இயற்கையின் எந்த வேகமும் உங்களை அசைக்க முடியாது.

அவன் சிறிது யோசனையிலிருந்தான்.

- இதில் எந்த அதிசயமும் கிடையாது. ஸ்வப்நா! நான் ரமியை நினைத்தேன், என்னை மறந்துவிட்டேன். என் ரமி என் இதயத்தில் இருக்கும் வரை உலகில் எந்தப் பெண்ணும் என்னை அணுகி விட முடியாது. அவள் ஒருத்திதான் உலகில் பெண். மற்றவர்கள் எனக்குப் பெண்களாகவே தோன்றவில்லை.

ஸ்வப்நாவின் நெஞ்சம் விம்மியது.

- உங்கள் ரமி ஒரு பாக்கியசாலி.



- அவள் பாக்கியசாலி மட்டுமல்ல! எனக்கு அவள் தெய்வம், என்னைக் காக்கிறாள்.

அவள் அதிசயத்துடன் பார்த்தாள்.

- நரேன்!

- ம்.

- உங்களுக்கு நான் பெரும் தீங்கு இழைத்து விட்டேன்.

- இல்லை.

- என் மனம் ஒப்பவில்லை. நான் வருந்துகிறேன். என் செய்கைக்குக் காரணம் என் பொறாமைதான்.

ஆச்சரியத்துடன் அவன் பார்த்தான்.

- ஆமாம் நரேன். என் பொறாமைதான். ரமி மீது எனக்குள்ள பொறாமை.

- அவள் உனக்கு என்ன தீங்கு செய்தாள் ஸ்வப்நா?

.... அவள் உங்களை முழுதுமாக எடுத்துக்கொண்டு விட்டாள்.

- அது அவள் குற்றமல்ல. நான்தான் என்னை அவளிடம் கொடுத்துவிட்டேன். இதில் நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்

- உங்களை ரயிலில் பார்த்தபோதே என் மனம் விம்மிவிட்டது. என்னை நீங்கள் பார்க்கவில்லை என்பது என்னைக் கலங்க வைத்தது. என்னை உதாசீனப் படுத்துகிறீர்கள் என்பது என் மனத்தில் தீயை வளர்த்தது. உங்களை எப்படியும் அடையவேண்டும் என்று நினைத்தேன். ரமி ஏற்கெனவே மணமானவள். ஆதலால் அவளிடமிருந்து எப்படியும் விடுபட்டு என்னிடம் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். என் நினைவு பொய் யாயிற்று. நீங்கள் மேலும் அவள் மீதே ஈடுபட்டீர்கள்.

சில கணம் நிறுத்தி மேலும் தொடர்ந்தாள்.

- அன்று அவள் உங்கள் வீட்டுக்கு வந்திருப்பதை நான் கண்டு கொண்டேன் நரேன். சோபாவில் கிடந்த அவளது ஸ்கார்ஃபிலிருந்து புரிந்து கொண்டேன். எனக்கு அது மகிழ்ச்சி கொடுத்தாலும், அவள் உங்களை அடைகிறாள் என்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. இரவு பதினொரு மணிக்குக் காரை எடுத்து வந்து உங்கள் வாசல் முன் நின்றேன். மேலே ஒரு சன்னலில் வெளிச்சம் தெரிந்தது. அதைப் பார்த்ததும் மனதில் பொறாமை எரிந்தது. நீங்கள் அந்த நேரத்தில் அவளிடம் சல்லாபித்துக் கொண்டிருப்பீர்கள் என்பதை நினைக்கும் போது பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. பொருமியவாறு சன்னலை முறைத்துக் கொண்டிருந்தேன். ஒரே ஒரு சமயம் அவள் நிழல் சன்னல் கண்ணாடியில் விழுந்து மறைந்தது. அந்தக் கணம் என் உணர்வுகள் எல்லாம் ஸ்தம்பித்துப் போய்விட்டன. நெற்றியில் ஓர் எரிச்சல் என் வாயும், உள்ளே உமிழ்நீரும் கூடக் கொதித்தன. ஸ்டீரிங்கின் மீது சாய்ந்தேன். டக்கென்று போலீஸ்காரர் வந்து தட்டும்போதுதான் எழுந்தேன். காரை ஸ்டார்ட் செய்தேன். அன்று தொடங்கிய பொறாமைதான் இன்று வந்து என்னைத் தாக்கியது நரேன், மை டியர் நரேன்! நீங்கள் ஒரு தீரர் நரேன். . . .

அவள் நிறுத்திக் கண்களைத் துடைத்தாள்.

- ஸ்வப்நா! உணர்ச்சிக்கு இடம் கொடுத்தீர்கள்! இப்போது ஒன்று சொல்லப்போகிறேன். மனதைத் திடமாக்கிக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து நம் உறவு முறிந்து விட வேண்டும். இனி நாம் பிரிய வேண்டும்.

அவள் சட்டென்று எழுந்தாள். ஏதோ ஒரு ஆவேசம் அவளை உலுக்கியது. சட்டென்று மண்டியிட்டு அவன் கால்களைப் பிடித்தாள்.



- நரேன், நரேன் என்னை விட்டுவிடாதீர்கள். இது சத்தியம் நரேன். இந்தக் கணத்திலிருந்து நான் மாறி விட்டேன். இனி நான் பலரை நாடும் பெண்ணல்ல. ஒரே ஒன்றை நாடி அதையே ரசிக்க விரும்பும் ஒரு பெண். நரேன் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களின் அடிமையாகி வாழ்ந்து, உங்களுக்கே சேவை செய்ய விரும்புகிறேன், உங்களை மணக்க விரும்புகிறேன் என்றாள்.

* * *

## 17

உங்களை மணக்க விரும்புகிறேன் என்று ஸ்வப்நா கூறியதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்ளே சிரிப்பும் பரிதாபமும் ஒருங்கே தோன்றின. புருவம் உயர்த்தி ஒரு பார்வை மட்டும் பார்த்து விட்டு அவன் பேசாமல் இருந்தான்.

- நரேன் பேசுங்கள் என்றாள் அவள்! அவன் பேசவில்லை.

- நரேன் ப்ளீஸ்!

- ஸ்வப்நா

- என் விருப்பத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் நரேன்!

வருத்தமான புன்னகை அவனிடம் தோன்றியது.

- ஸ்வப்நா உலகில் எதுவாவது நடவாதென்றால் அதுதான் இது என்றான்.

- நரேன் ப்ளீஸ். இப்படி நீங்கள் சொல்லும்போது என் நெஞ்சம் எரிகிறது நரேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் உங்கள் அடிமை. உங்கள் நிரந்தர அடிமை நான். முற்றிலும் மாறியவள், நரேன்!

அவன் எதுவும் பேசவில்லை. எழுந்து வராந்தாவுக்கு வந்தான். அங்கே வெகுநேரம் யோசனையில் நின்றான். பிறகு - புறப்படலாமா? என்றான்.

அவள் பேசவில்லை.

- கார் ஸ்டார்ட் ஆகுமா? என்றான் மீண்டும்.

- என்னால் ஸ்டார்ட் செய்யமுடியும் என்றாள் அவள்.

வாட்ச்மேனிடம் சாவிகளைக் கொடுத்துவிட்டு, இருவரும் காரில் உட்கார்ந்தார்கள். ஸ்டார்ட் செய்ததும் கார் புறப்பட்டது. ஆச்சரியத்துடன் நரேன் ஸ்வப்நாவைப் பார்த்தான்.

- நேற்று உண்மையில் கார் ரிப்பேர் இல்லை. அதுவும் என் செய்கைதான் என்றாள் அவள், குனிந்தவாறு.

கார் பறந்தது. அவன் பேசவில்லை. அவளும் பேசவில்லை. இடையிடையே கண்களை மட்டும் துடைத்துக்கொண்டிருந்தாள்.

ஊருக்கு வந்ததும் எதுவும் ஓடவில்லை. ஒரு வாரம் வரை ஸ்வப்நா செய்தது நினைவுக்கு வந்தது. திடீரென்று அவனை யாரோ கீழே தள்ளுவது போலிருந்தது. எதிரே ஸ்வப்நா கலகலவெனச் சிரித்துக்கொண்டிருந்தாள். அவளது ஆடையில்லா உருவம் ஒரு கோரமாகத் தெரிந்தது!

ஒரு நாள் ஆபீசில் இருக்கும்போது ஸ்வப்நா போன் செய்தாள்.

- எங்கேயாவது சந்திக்கலாமா?

- ஊஹூம் எனக்கு வேலை இருக்கிறது.

- ஒரு ஐந்து நிமிஷம் பேசிவிட்டுப் போனால் போதும்.



- மன்னிக்கணும் ஸ்வப்நா!

அதன் பிறகு மறுநாளும் அவள் போன் பண்ணினாள். அதே உரையாடல் நடந்தது. கடைசியில் போனை வைக்குமுன் - என்னைச் சோதிக்கிறீர்களா நரேன்? என்று தாங்கலோடு வைத்தாள்.

பிறகு குறிப்பிட்ட மாலைகளில் அவளிடமிருந்து போன் வந்து கொண்டிருந்தது. வெளியே சந்திக்கலாமா என்ற கேள்வி இப்போது கேட்பதில்லை. அதற்குப் பதிலாக - ஜஸ்ட் எ வோர்ட் நரேன். உங்கள் குரலைக் கேட்க வேண்டுமென்று ஆசை. தாங்க்ஸ் என்று வைத்து விடுவாள். சமயங்களில் - ஐ ஆம் வெல் ஹியர். ஐ ஹோப் யு ஆர் வெல் என்பாள். குரலில் நடுக்கம் தெரியும்.

- டூயிங் வெல். தேங்க்யு என்பான் அவன்.

- தேங்க்யு வெரிமச். நரேன் வைத்து விடுகிறேன் என்று பதட்டத்துடன் கூறி அவள் வைத்து விடுவாள்.

ஒரு சனிக்கிழமை இரவு ஏழு மணி. வெளியே மையிருள். நரேன் யோசனையோடு புக் - ஷாப்பில் அமர்ந்திருந்தான்.

ஏதோ அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

ஒரு வதங்கிய மலர் போல் ரமி அங்கே நின்று கொண்டிருந்தாள். திடுக்கிட்டு நரேன் அவளைப் பார்த்தான். - ரமி என்றான் உணர்ச்சிவசத்துடன்.

நிதானமும், கலக்கமும் கொண்ட விழிகளோடு அவள் அவனைப் பார்த்தாள். - நரேன் என்று கூறிவிட்டு மேலே பேசுவதறியாது தவித்தாள்.

- வா, ரமி, என்றான் நரேன்.

இருவரும் உள்ளே சென்றார்கள். அதற்குள் அவள் உணர்ச்சியில் மூழ்கி சுவாசம் இழைத்தவாறு நின்றாள்.

- நீங்கள் உட்காருங்கள் நரேன், என்றாள் அவள்.

அவன் உட்கார்ந்தான்.

கையிலிருந்து பையிலிருந்த ஒரு பாக்கெட்டை எடுத்தாள். - இது நான் உங்களுக்காகப் பண்ணின ஸ்வீட் எடுத்துக் கொள்ளுங்கள் என்று மிகவும் ஆதாரத்துடன் கூறி அவன் கையில் கொடுத்தாள். பிறகு அவனருகில் உட்கார்ந்து கொண்டு அவன் சாப்பிடுவதைப் பாசத்துடன் கவனித்தாள்.

- ரமி, நீ வந்தது எவ்வளவு மகிழ்ச்சி! என்றான் அவன்.

- இன்னும் இன்னும் என்று கூறி ஸ்வீட்களைச் சாப்பிட வைத்தாள் அவள். அவன் சாப்பிட்ட பிறகு ஆசுவாசத்துடன் நாற்காலியில் சாய்ந்து - அப்பா? என் ஆர்வம் தீர்ந்தது! என்றாள்.

நரேன் முறுவலித்தான்.

அவள் எழுந்து ஷாப்பின் பகுதிகளை ஆர்வத்துடன் சுற்றிப் பார்த்தாள்.

- ஒன்றுமில்லை நரேன். அன்றைய அனுபவங்களை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறேன். அலுக்கவேயில்லை. இங்கே வந்ததும், இங்குள்ள ஒவ்வொரு இடமும் புனித யாத்திரை ஸ்தலங்களாக எனக்குத் தோன்றுகின்றன. அவைகளைத்தான் பார்க்கிறேன் என்றாள்.

அவள் கண்கள் கலங்கி, பளிங்கு போல் மின்னின.

- ரமி! என்றான் அவன் உணர்ச்சியுடன்.

- இங்கே வந்தால் ஏன் இவ்வளவு சுதந்திரமாக இருக்கிறேன் நரேன்? என்றாள் அவள்.

நரேன் பேசவில்லை. தலையைச் சாய்த்து அழகாக ஒரு பார்வை பார்த்தான். அவளுக்குள் ஏதோ பொங்கி



வருவதை அவனால் உணர முடிந்தது. ஏதோ பரவசத்திலே அவள் மூழ்கியிருந்தாள்.

ஆனால் அடுத்த கணமே காட்சி மாறியது. அவள் கண்ணிலிருந்து நீர், களக் என்று விழுவதைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

- ரமி, என்ன இது?

அவள் பேசவில்லை. மளமளவென்று நீர் விழுந்தது.

- ரமி! ரமி!

பதட்டத்துடன் அவளருகே சென்றான். ஆதரவாக வளைந்த கைகள் அவளுக்கு ஒரு அடி மேலாகவே நின்று விட்டன.

- ரமி! இது என்ன?

- நரேன்! என்றாள் விம்மலுடன் - என்னால் பொறுக்க முடியவில்லை.

- ஏன் ரமி?

- என் நினைவுகளே என்னைச் சுட்டெரிக்கின்றன, நரேன்!

நாற்காலியை இழுத்து அவளருகே அமர்ந்தான்.

- அன்று வந்து விட்டுப் போனேனே, எங்கள் வீட்டுக்கு, அன்றிலிருந்து எதைச் செய்தாலும், எதை நினைத்தாலும் உங்கள் நினைவே வருகிறது. நான் இத்தனை நாளும் ஒதுங்கியதற்குப் பழி தீர்ப்பது போல் பொங்கி வருகிறது நரேன்? நான் என்ன செய்வேன்?

- அழாதே, ரமி! என்றான் நரேன். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

- சியாமுக்கு சாப்பாடு போடுகிறேன். சட்டென்று உங்களை நினைத்து விடுகிறேன். அவருக்குப் பால் கொண்டு போகிறேன். உங்களை நினைத்து விடுகிறேன். அவருடைய தோள்களில் சாய்கிறேன். உங்களை நினைத்து விடுகிறேன். என்னால் உங்கள் நினைவைத் தவிர்க்கவே முடியவில்லை.

ஒரு விம்மலோடு அவள் நிறுத்தினாள். அவன் எழுந்தான். அவன் கண்களிலும் நீர் பளீரிட்டது.

- உனக்கு என் நினைவு வருகிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது ரமி!

- எனக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது, நரேன். ஆனால் நான் தவிக்கிறேன் நரேன்.

- ஏன், ரமி?

- உங்களை நினைக்கும் கணமே, உங்களை ஓடி வந்து பார்க்க விரும்புகிறேன்.

- வருவதுதானே! ரமி!

- வருவேன். ஆனால் வீட்டுப் பந்தங்களை உதறி விட்டு எப்படி வருவேன்? ஒவ்வொரு நாள் மாலையும் உங்களைப் பார்க்கத் துடிக்கிறேன். மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு வாசல் வரை வருகிறேன். ஆனால் வாசலில் வந்து நின்றதும், சியாமின் உருவம் நினைவுக்கு வருகிறது - ரமி இன்னிக்கு ஒரு ப்ரசன்ட் கொண்டு வந்திருக்கிறேன் என்று புன்னகையோடு அவர் காரிலிருந்து இறங்கும் காட்சி நினைவுக்கு வருகிறது. வெலவெலத்து நிற்கிறேன். மனம் குழம்புகிறேன். மேலே ஒரு அடி எடுத்து வைக்க முடிவதில்லை. உள்ளே திரும்புகிறேன். போய் சோபாவில் அமருகிறேன். சிறிது நேரம்கூட ஆகியிருக்காது. மீண்டும் உங்கள் நினைவு வந்துவிடுகிறது. தவிக்கிறேன் நரேன், தவிக்கிறேன்.



கண்களை வேதனையில் மூடினாள். உதட்டை மடித்துக் கொண்டு உள்ளே எதையோ அனுபவிப்பவள் போல் நின்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை. அவள் விசிப்பு சிறிது நேரம் கேட்டது. யாரோ ஒருவர் உள்ளே வந்து சிறிது நேரம் புத்தகங்களைப் பார்த்துவிட்டுச் சென்றார்.

- ரமி! நேரக்கூடாதது நேர்ந்துவிட்டது. மனத்தைத் தேற்றிக்கொள். நீ வருவதை நான் விரும்புகிறேன். வாழ்க்கை என்பது வெறும் கல்யாண பந்தத்தில் ஏற்படுவதுதானா? இந்த பந்தத்திற்கு அப்பால் - மனித நியதிகளுக்கு அப்பால், நம் மனங்கள் ஒன்று சேர்ந்து குடும்பம் நடத்துகின்றன. ஒன்று சேர்ந்து வாழ்க்கை நடத்துகின்றன. அது போதும், ரமி.

அவன் சொன்ன வார்த்தையும் அதைச் சொன்ன விதமும் அவளைப் பெரிதும் கவர்ந்தன. சில கணங்கள் அவனையே பார்த்து நின்றாள்.

- மனத்தில் வாழ்ந்தால் மட்டும் போதுமா நரேன்! என்றாள் ஈனமான குரலில்.

- போதும் ரமி! நான் ஆறு வருடமாக அப்படித்தான் சிறையில் வாழ்ந்தேன்,

ரமி அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

- நீங்கள் மனத்தைப் பழக்கிவிட்டீர்கள் நரேன். என்னால் அது (ஒரு பொருமலுடன் நிறுத்தினாள் அவள்). நரேன், நான் இவ்வளவு நாள் மன உறுதியுடன் உங்களைத் தவிர்த்து வந்தேன். உள்ளத்தை இறுக்கமாக வைத்திருந்து, உங்களை ஏறிட்டுக்கூடப் பார்க்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தேன். ஆனால். . . அன்று உங்களுடன் ஒரு தினம் வாழ்ந்ததிலிருந்து. . . வேறு எந்தவித வாழ்வும் எனக்கு ரம்யமாகத் தோன்றவில்லை. எதுவுமே

சாரமற்றுப் போய்விட்டது. உங்களை ஒவ்வொரு கணமும் பார்த்திருக்க வேண்டும் என்று தவிக்கிறேன். சமயத்தில் உங்களை நினைத்து தனியே போய்க் கண்ணீர் விடுகிறேன். வேதனையில் என் மனம் நரேன். . . என்ன செய்வேன் நரேன். நான் என்ன செய்வேன்?

நரேன் பேசவில்லை. இரக்கத்தோடு ரமியைப் பார்த்தான்.

- ரமி!

அவள் விசித்தாள்.

- ரமி. . . மனம் தளராதே. . . இப்போது எனக்கு ஒன்று புரிகிறது. ஒரு நாள் என்னுடன் வாழ்ந்தது உனக்கு இவ்வளவு வேதனையைத் தந்திருக்குமானால், நான் அப்படிச் செய்யுமாறு உன்னைக் கேட்டிருக்க மாட்டேன். அது என் தவறு! உனக்கு எந்த விதத்திலும் இன்பம் கொடுக்கவே நான் நினைக்கிறேனே தவிர, வேறு எதையும் நினைப்பதில்லை.

- நீங்கள் கேட்டது தவறல்ல, நரேன்.

- இல்லை ரமி? அது உனக்கு இவ்வளவு கலக்கம் தந்திருக்குமானால். . .

- கலக்கம் இல்லை நரேன். உங்களுக்கு என் மீதுள்ள அன்பை அது நிரூபித்துவிட்டது. அந்த அன்பை உலகில் வேறு எந்த உணர்வாலும் ஈடு செய்ய முடியாது என்று அறியும்போதுதான் தவிக்கிறேன் நரேன்.

இருவரும் மௌனமானார்கள். நியான் ஒளியில் இருவரது கண் விழிகளும் மின்னின. சிறிது நேரத்தில் அவன் பேசினான்.

- ரமி.

- ம்.



- ஒன்று சொல்லட்டுமா?

- ம்.

- தவறாக நினைக்காதே. உன் வாழ்வில் சிறிது சேதம் ஏற்படுவதைக்கூட விரும்பாதவன் நான்.

- அவள் பேசவில்லை.

- உனக்குத் துன்பம் சிறிது ஏற்பட்டாலும் துடிப்பவன். அந்த நிலையில் உன் வாழ்வின் அமைதிக்கு ஒரு யோசனை கூறலாமா?

- கூறுங்கள்.

- நீ முன்பு என்னைப் பார்க்காமல் மனத்தை அடக்கியிருந்தாய். அதனால் அமைதியாக வாழ முடிந்தது.

- ம்.

- இன்னும் அதே காரியத்தைச் செய். நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருப்போம். எங்கேயோ நம் மனங்கள் கூடியிருக்கின்றன என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்வோம். அது உனக்கும் நிம்மதி. உன் அமைதியை விரும்பும் எனக்கும் நிம்மதி.

- அது முடியுமா, நரேன்?

. . . . ஏன் முடியாது? மனதைத் திடப்படுத்திக்கொள். முதலில் வேதனைதான் இருக்கும். பிறகு சிறிது சிறிதாக அது குறைந்து ஆறுதல் பிறக்கும்.

அவள் சில கணங்கள் பேசவில்லை. பிறகு விழிகளைத் துடைத்து, - நரேன் என்றாள். அழுகையுடன் - யு ஆர் கிரேட் நீங்கள் இவ்வளவு உன்னதமாகப் பேசுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை நரேன்! ஆனால் இவ்வளவு பயங்கரமான யோசனையைக் கூறுகிறீர்களே; அதை என்னால் பொறுக்க முடியுமா?

... இல்லை ரமி! என்று எழுந்தான் அவன். நான் தீர யோசித்துத்தான் பேசுகிறேன். உன் அமைதிக்குத்தான் கூறுகிறேன். உன் நிம்மதியை மனதில் வைத்துதான் இந்த முடிவு எடுக்கிறேன். நான் சொல்வதை ஏற்றுக்கொள் தயவு செய்து ஏற்றுக்கொள்!

அவள் விசித்தாள். கலங்கிய கண்களுடன் அவனைத் தீனமாகப் பார்த்தாள்.

* * *

## 18

ரமி தவித்தவாறு நின்றாள்.

- நரேன், என்னால் அது முடியாது. முன்பு உங்களைப் பார்க்காமல் இருக்க முடிந்தது. இப்போது முடியாது என்றாள்.

புத்தக ரேக்கில் தலை வைத்துக் கலங்கிய கண்களோடு அவனைப் பார்த்தாள்.

- என்னால் மட்டும் முடியுமா ரமி! நான் சொல்வது உனது அமைதிக்காகத்தான். வேறு எதற்கும் அல்ல. நீ துடிப்பதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

- அப்படிச் செய்தும் எனக்கு அமைதி இல்லை என்றால்...

- முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும், ரமி. பிறகு மெள்ள மெள்ள மனம் ஒரு நிலைக்கு வந்து விடும். நாம் எங்கேயிருந்தாலும் மனங்களில் ஒன்றாக இருக்கிறோம் என்ற அவேர்னஸ் நம் உள்ளத்தில் படிந்துவிடும். அது போதும் ரமி என்றான் அவன்.



ரமி சிறிது நேரம் வாதம் செய்தாள். பிறகு நரேன் சொல்வதை ஏற்றுக்கொள்ளலாம் என்று தோன்றியது இரவு அவள் வீட்டுக்குப் புறப்பட்டபோது மணி எட்டு. தயங்கிய கண்களுடன் நரேனைப் பார்த்தவாறு வெளியே சென்றாள்.

பல நாட்கள் வரை நரேன் உன்மத்தம் பிடித்தது போலிருந்தான். ரமி தன் மனத்தைத் திறந்து சொன்னது அவனைப் பெரிதும் கலக்கியது. அவளது சோகமான முகம் பல நாட்கள் வரை நினைவில் தங்கியிருந்தது. ஆனால் அவள் போராடிக் கொண்டிருக்கிறாள் என்று நினைக்கும் போது வேதனையாகவும் இருந்தது.

ஒரு நாள் ஊரிலிருந்து தந்தி வந்தது அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று கண்டிருந்தது. அவசரமாக ஊருக்குப் புறப்பட்டான்.

மீண்டும் கிராமத்தைப் பார்க்கும்போது ஒரு சோகம் அவனைக் கவ்வியது. அடிவாரத்தில் தங்கி நிற்கும் வெள்ளை மேகங்களின் பின்னணியில் சின்னச் சின்னக் கூடாரங்கள் போல் ஊர் தெரிந்தது.

வீட்டின் நிலைவாயிலில் காலை வைத்து இருள் மயமான ரேழிக்குள் சென்றபோது, அப்பா பலமாக இருமிக்கொண்டிருந்தார். பாதியாக இளைத்திருந்தார். பழுப்பான கண்களைக் கூர்மையாக்கி நரேன்தானா இல்லையா என்ற சந்தேகத்தோடு பார்த்தார்.

எழுந்திருக்க முடியவில்லை. அவனது கைகளை மட்டும் பிடித்துக் கொண்டார். பேச முடியவில்லை. இருமல் தொடர்ந்து வந்தது.

சமையலறை வாயிலில் அம்மா நின்றாள் அவனைப் பார்த்தபோது திடுக்கிட்டாள். அவள் முகத்தில் வயதான களை தோன்றியிருந்தது.

- என்னம்மா? என்றான் தீனமாக.

- ஒரு வியாதின்னாத்தானே சொல்ல முடியும்? ஆஸ்துமா இருக்கு. தலை சுற்றல் இருக்கு. டாக்டர் வந்து பார்க்கிறார். முந்தா நாள் ரொம்ப மோசமாப் போயிட்டது கண்ணெல்லாம் செருகிப் போச்சு, அதுதான் தந்தி கொடுத்தேன். மூன்று நாட்கள் ஊரில் தங்கவேண்டி வந்தது. அப்பாவின் இருமல் சிறிது குறைந்தது. கடைசி நாள்தான் நிதானமாகப் பேசினார்.

- இப்படி எத்தனை நாள் இருப்பேடா? என்றார்.

நரேன் பேசவில்லை. தலை குனிந்தான்.

- என் காலம் இப்பவோ அப்பவோ எத்தனை நாள் இப்படி இருப்பே?

அவன் பேசவில்லை.

- சொல்லு நரேன்.

- அப்பா. . . .

அவன் குழம்பினான். குரல் உடைந்து வந்தது.

- ஏண்டா?

- என்னை இந்த விஷயத்தில் வற்புறுத்தாதீர்கள், அப்பா.

- ஏன்?

அவன் தலை குனிந்தான். அவரது படுக்கையை விரலால் கீறினான்.

ஏன் நேரன்?

பதில் இல்லை.

. . . . இன்னும் அவளை மறக்கவில்லையா?



அவன் தலை நிமிர்ந்து பரிதாபத்தோடு பார்த்தான்.

. . . . மறக்கவில்லையாடா.

கேள்வியைக் கேட்டுவிட்டு அப்பா அவனை அப்படியே பார்த்தார். அந்த நிசப்தத்தில் நரேனின் இதயத்தில் ஒரு காட்சி. ரமி அவன் மனைவியாக அந்த வீட்டில் இருக்கிறாள். சமையலறை வாயிலில் நிற்கிறாள். பார்த்துப் புன்னகை பூக்கிறாள். அவன் தந்தைக்குக் கஞ்சியைக் கொண்டு வந்து கொடுக்கிறாள். நீள விழிகளை வளைத்து அவனை இதமாகப் பார்க்கிறாள்.

- இன்னும் நினைச்சிண்டிருக்கிறாயா?

முகத்தை மெதுவாகத் திருப்பி மேலே விதானத்தைப் பார்த்தான்.

- சொல்லேன்.

பார்வையைக் கீழே இறக்கினான். அவர் முகத்திற்கு நேராக நிறுத்தி, எதையோ இழந்தவன் போல் பார்த்தான்.

- அவளை மறக்கவில்லையாடா?

- இல். . .ல். . லை. . .

- மறந்திடு.

பேசவில்லை.

- முடியாதா?

- எனக்குச் சக்தியில்லை.

- அப்போ என்ன செய்வே?

- நினைத்துக் கொண்டே இருப்பேன்.

- வாழ்க்கை பூராவுமா?

- கீழே பார்வையைத் தணித்தான்.

- சொல்லுடா.

- ஆமாம்.

. . . அப்பா திடுக்கிட்டு அவனைப் பார்த்தார்.

- நிஜமாவா?

- ஆமாம்.

- நரேன்.

அவர் குரல் நடுங்கியது. பார்வை ஸ்தம்பித்து விட்டது.

- அப்பா! வருத்தப்படறேன் அப்பா! அவள்தான் எனக்கு எல்லாம். வாழ்வில் இனி யாரையும் நினைக்க முடியாது. அவள் ஒருத்திதான் என் கண்களுக்கு ஒரே பெண். வேறு யாரும் இல்லை.

அப்பா திகைத்து நின்றார்.

- அவளுக்குக் கல்யாணம் ஆயிடுத்தில்லையா?

- ஆகிவிட்டது. (அவன் நெஞ்சம் பொங்கித் தணிந்தது)

- அப்போ நீ. . .

- அதனாலேதான் எனக்கு ஆக வேண்டாம் என்கிறேன்.

- என்ன?

- அப்பா! என்னால் இனிமே யாரையும் ஏற்க முடியாது அப்பா, இது உறுதி. (அவன் மூச்சு இழைந்தது) இதுக்காக என்னை மன்னிச்சுடு. இது ஒண்ணாலேதான் நான் மாறாம இருக்க வேண்டியிருக்கு.

அதற்குமேல் நிற்கவில்லை. எழுந்தான். பெட்டியை தடக்கென்ற சத்தத்துடன் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.



வானத்தில் மேகங்கள் இளம் கருமை நிறமாய் மாறி ஒரு சோகமான காட்சியை ஏற்படுத்தியது. அப்போது நரேன் ராம்நகரில் இருந்தான்.

துருதுருவென்று கண்களை அங்கும் இங்கும் சுழல விட்டுத் துரிதமாக நடந்தான். பஜார் வந்ததும் ஒரு கடையில் மலைப்பழங்களை வாங்கினான். நடந்து கொண்டே போகும்போது வேறு என்னென்ன வாங்கலாம் என்று பார்த்துக் கொண்டே போனான்.

கடைசியில் மீனு வீட்டை அடைந்தபோது, அவன் கையில் ஒரு கூடையும் பல பொட்டலங்களும் இருந்தன. அவளது வீட்டின் பலவீனமான கதவைத் தொட்டபோது, அது திறந்தது. உள்ளே மீனு ஒரு பழைய துணியைத் தைத்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்துத் திடுக்கிட்டு எழுந்தாள். ஆத்திரம் பொங்கி வந்தது.

மறுகணம் நரேனின் கலைந்த கேசமும், சோகம் ததும்பும் விழிகளும் அவளை ஒரு கணம் செயலிழக்க வைத்தன.

- மன்னிச்சுடு, மீனு.

பயந்தவாறு அவன் கூறினான்.

கீழே கூடை முதலியவைகளை வைத்தான். அவன் உடம்பு மெலிந்து, முகம் வாடிப் போயிருப்பதைப் பார்த்ததும் அவளுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

- மன்னிச்சுடு, மீனு.

- அவள் கண்ணில் நீர். துணியை எடுத்து முகத்தை மூடினாள், விசித்தாள்.

- மன்னிச்சா என்ன? மன்னிக்காட்டி என்ன? என் வாழ்க்கை இருண்டு போயாச்சு.

அவள் பொருமினாள்.

- என் வாழ்க்கையும்தான் மீனு!

- என்னைப் போலவா உங்கள் வாழ்க்கை? எனக்குத்தான் எல்லாம் போச்சு.

அந்த வார்த்தை நரேனை உலுக்கி எடுத்தது. எல்லாம் போச்சு. மீனுவுக்கு எல்லாம் போச்சு. உலகமே அஸ்தமித்துப்போய் அவள் மட்டும் நிற்கிறாள். அனாதையாய், அபலையாய். அவன் கண்களில் நீர் பொங்கியது.

- தயவு செய்து உன்னை ஒன்று வேண்டிக்கலாமா, மீனு?

- என்ன? என்று அவள் பார்வை கேட்டது.

- இதெல்லாம் உனக்காகத்தான் வாங்கிட்டு வந்திருக்கேன். மனம் நிறைஞ்சு எடுத்துக்க.

- ஊஹூம், வேண்டாம்! என்று வெறுப்புடன் தலையை ஆட்டினாள் அவள்.

- மீனு! என்றான் அவன் உணர்ச்சியோடு - நான் ஒரு பாவி, பாதகம் செய்தவன்; உன் வாழ்க்கைக்குத் தீராத துன்பத்தைக் கொடுத்தவன். ஆனால் மீனு, என்னை எப்போதும் பாவியாகவே இருக்க விடாதே. மனம் உருகித் திருந்துவதற்கு இடம் கொடு. என் கண்ணீர் ஓய்வதற்கு இடம் கொடு. மீனு, தயவுசெய்து இவைகளை ஏற்றுக் கொள். என் மனம் சிறிதாவது வெளுப்பதற்கு இடம் கொடு. அவள் பேசவில்லை.

அவளைத் தயக்கத்துடன் பார்த்தவாறு, கூடையை நடுங்கும் கரத்துடன் தூக்கி உள் அறையின் முனையில் வைத்தான். அப்போது ஒரு கணத்தில் பார்த்த பார்வையில் இரண்டு, மூன்று தட்டு முட்டுச் சாமான்களைத் தவிர,



அவளது அறை முழுவதும் வெறுமை என்று தெரிந்து விட்டது. அந்த உணர்வு தந்த கலக்கத்தில் நிமிர்ந்தபோது, தோள்பட்டையில் கிழிந்திருந்த மீனுவின் ரவிக்கையும், அவளது வெறுமையான கழுத்தும் தெளிவாகத் தெரிந்தன.

- மீனு! என்றான் உணர்ச்சியுடன்.

அவள் கண்ணில் நீர் மின்னியது.

- மீனு, நான் செய்த பாதகத்திற்கு இது பிராயச்சித்தம் அல்ல. ஆனால் ஆறாத காயம் விழுந்துள்ள ஒரு ஆத்மா, தன்னை சுத்தம் செய்து கொள்வதற்காக எடுத்துக் கொண்டுள்ள சிறு முயற்சி இது. தயவுசெய்து மறுத்து எதுவும் சொல்லி விடாதே. உன் பாதங்களில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்.

தேம்பும் கண்களுடன் முதல் தடவையாக அவள் அவனைப் பார்த்தாள். விம்மல் அவளை உலுக்கியது. அவளது தற்போதைய ஏழ்மையோ; அல்லது அவன்மீது ஏற்பட்ட இரக்கமோ, அல்லது அவை இரண்டுமோ அவன் கொடுக்க வந்ததை நிராகரிக்க வகையில்லாமல் செய்து விட்டன.

இருவரும் வெகு நேரம் பேசவில்லை. அவள் அழுது கொண்டிருந்தாள். அவன் மௌனமாக நீர் உதிர்த்துக் கொண்டிருந்தான். நேரம் ஓடியது.

- ஏதாவது சாப்பிடறீங்களா? என்ற கேள்வி காதில் விழுந்ததும் திடுக்கிட்டான். கண்ணில் ஆச்சரியமும் நன்றியும் தோன்ற அவளைப் பார்த்தான்.

- எதுவும் வேண்டாம் என்றான் தணிந்த குரலில், பிறகு - நான் வரேன் என்று கிளம்பினான்.

- இருங்க. கொஞ்சம் மோர் கொண்டு வரேன்.

மோர் அவளைப் போலவே எளிமையாக இருந்தது. ஆனால் அதன் குளுமை அவனது ஆத்மாவையே நனைப்பது போலிருந்தது.

விடை பெற்றுக் கொண்டு அவன் வெளியே வந்தான். தெருவில் கனமான அடிகளை எடுத்து வைத்து நடந்தான். தூரத்திலிருந்து திரும்பிப் பார்த்தான். ஒடிசலாய், வற்றிய நிழலாய் மீனு வாசல் படியில் நின்று கொண்டிருந்தாள். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சென்னைக்கு வந்த பிறகு இரு வாரங்கள் வரை அந்த நினைவுகள் அவனை ஆழ்ந்து கொண்டிருந்தன. ஒன்று; தந்தையைப் பற்றி. இரண்டு; மீனுவைப் பற்றி.

தந்தையின் வெறுமையான பார்வையும், மீனுவின் அபலையான பார்வையும் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்தன. ஒரு சனிக்கிழமை மாலை. புக்-ஷாப்பிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது பஸ்ஸர் ஒலித்தது. அவசரமாய்ப் போய்க் கதவைத் திறந்தான். வாசலில் நின்றது ஸ்வப்நா. நரேன் திடுக்கிட்டான். பேச நா எழவில்லை. ஏன் வந்தாய் என்பது போல் அவனை யறியாமல் ஒரு பார்வை பார்த்தான். ஸ்வப்நா பேசவில்லை. பார்வையில் இதுவரை கண்டிராத அடக்கமும் பயமும் தோன்றியிருந்தன.

ஒரு ஆச்சரியம்! வழக்கமாக வரும் நாகரிக அணிகள் இல்லாமல், மிக சாதாரணமான குடும்பப் பெண் போல் அடக்கத்துடன் நின்றுகொண்டிருந்தாள். மார்புகளை முதல் தடவையாக ஸாரியால் இழுத்து மூடியிருந்தாள்.

- உள்ளே வரலாமா? என்றாள் அவள் நடுக்கத்துடன்.

பதில் சொல்லாமல், கதவிலிருந்து கையை எடுத்தான். சில அடிகள் நடந்து பிறகு திரும்பினான். ஸ்வப்நா உள்ளே வந்தாள். தரைமேல் போட்டிருந்த தாமரை வடிவ மிதியடிமேல் நின்றாள்.



- ஸ்வப்நா! என்றான் அவன்.

ஒரு நடுக்கத்துடன் நின்றாள் அவள்.

- அதுதான் உங்களுக்கு லிமிட் தாண்டி உள்ளே வராதீர்கள்.

மேலே நடந்தான். கண்ணாடி முன் நின்று தலையை வாரிக் கொள்ள ஆரம்பித்தான். பிறகு திரும்பியபோது அவள் அங்கேயே நிற்பது தெரிந்தது. வெறுப்புடன் அவளைப் பார்த்துத் திரும்பினான்.

நரேன்!

- ம்.

- என்னை அனுமதியுங்கள், நரேன்?

- எதற்கு?

- முன்பு போல் சுவாதீனமாகப் பழக அனுமதியுங்கள் நரேன்.

நரேன் தலையைக் குனிந்தான்.

- அதற்கு இனிமேல் வழியில்லை ஸ்வப்நா.

. . . . ஏன் நரேன்?

. . . . அதற்குரிய கௌரவத்தை நீங்கள் இழந்து விட்டீர்கள் ஸ்வப்நா.

. . . . நரேன்!

தவிப்புடன் கூறினாள் அவள். அவன் நிமிர்ந்து பார்த்தான்.

. . . . ஒரு தவறுக்காக ஒரு வாழ்க்கை முழுவதுக்குமே தண்டனை கொடுத்து விடாதீர்கள். நரேன்.

அந்த வார்த்தைகள் அவனை ஒரு கணம் திடுக்கிட வைத்தன.

. . . . நான் தவறிவிட்டவள். இப்போது திருந்து வதற்காக என் மனம் அடியோடு மாறிவருகிறது. நான் உங்களிடம் கேட்பதெல்லாம் பழைய நட்பைத்தானே? வேறு எதையும் கேட்கவில்லை, நரேன்!

அவள் குரல் கூட மாறியிருந்தது. கனிவும் பரிவும் அதில் பரிமளித்தன.

அவன் பேசவில்லை. நேரம் ஓடியது.

- நரேன்!

- ம்.

- பேசுங்கள், நரேன்!

ஆழ்ந்து அவளைப் பார்த்தான்.

- பேசுவதற்கு என்ன இருக்கிறது, ஸ்வப்நா? எப்போது கேவலமாக நடந்து கொண்டாயோ, அன்றிலிருந்தே நம் உறவு முறிந்துவிட்டது. அந்தக் களங்கம் என் நெஞ்சத்தைப் பெரிதும் கலக்கிவிட்டது. நாம் ஒருவரையொருவர் பாராமல் இருந்து விடுவதுதான் நல்லது.

- நரேன், அப்படிச் சொல்லாதீர்கள். இனி எந்தக் களங்கத்திற்கும் வழியில்லை. ஏனெனில் உலகில் நான் ஒரு உண்மையான மனிதரைக் கண்டுவிட்டேன். அவரை வழிபடுகிறேன் தொழுகிறேன். இனி பழைய களங்கங் களுக்கு வழியேயில்லை.

அவன் மௌனமாக இருந்தான்.

- நரேன்!

- என்னை அமைதியாக இருக்கவிடுங்கள் ஸ்வப்நா.

- உங்கள் அமைதியை விரும்புகிறேன். அதற்காகவே என்னை உள்ளே வர அனுமதியுங்கள் நரேன்.



36391
384216

அவன் பேசவில்லை.

- நரேன்!

- நரேன்!

. . . . நரேன்!

. . . . ஸ்வப்நா என்றான் கடுமையுடன், அவள் திடுக்கிட்டாள்.

. . . . தயவு செய்து திரும்பி போங்கள், ஸ்வப்நா. எனக்கு நீங்கள் இங்கே இருப்பதே பிடிக்கவில்லை.

. . . . நரேன்.

. . . . தயவு செய்து ஸ்வப்நா. . . . .

அவன் குரலைக் கேட்டதும் பயந்தாள். ஒரு வேகத்துடன் அவன் எழுந்து வருவதைக் கண்டதும் தன்னையறியாமல் பின்னால் அடி எடுத்து வைத்தாள். வாயிலுக்கு வெளியே வந்தாள். வேகத்தில் வந்த நரேன் கதவைப் படீரென்று அடைத்துவிட்டுப் பெருமூச்சு விட்டான்.

பத்து நிமிடத்தில் தன்னை தயார் செய்துகொண்டு கதவைத் திறந்தபோது, அவன் திடுக்கிட்டான்.

அங்கே வாசற்படியில் ஸ்வப்நா மயங்கி விழுந்திருந்தாள்.

* * *

## 19

**வா**சல் படியில் ஸ்வப்நா கிடப்பதைப் பார்த்ததும், சில கணங்கள் நரேன் செயலற்று நின்றான்.

ஒரு வேளை இதுவும் அவளது சாகசங்களில் ஒன்றாக இருக்குமா என்று நினைத்தான். சிறிது தயங்கி நின்றான். பிறகு தலையைக் குனிந்து - ஸ்வப்நா என்று அழைத்தான். பதில் இல்லை. பல தடவைகள் கூப்பிட்ட பிறகு அவள் சுவாசத்தைத் தொட்டுப் பார்த்தான்.

உண்மையில் மயங்கிக் கிடக்கிறாள் என்று தெரிந்ததும் அவனிடம் ஒரு அவசரம் தோன்றியது. ஒரு கணம் யோசித்தான். பிறகு அவளைத் தூக்கியெடுத்து உள்ளே கொண்டு சென்றான். சோபாவில் மெள்ளப் படுக்க வைத்தான். தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தான்.

. . . . ஸ்வப்நா.

. . . . ஸ்வப்நா.

பரபரப்புடன் அழைத்தான். பாதி உயிர் போனது போல் அவள் படுத்திருந்தாள். வேர்வை உறைந்து முகம் ஒரு வெண்கல வார்ப்பாகத் தெரிந்தது.

. . . . ஸ்வப்நா.

அவள் விழிக்கவில்லை. அவளது நீண்ட மூச்சுகள் அடங்கவில்லை.

பிறகு சிறிது சிறிதாக அவள் உடல் உலைந்தது. கண்கள் லேசாகத் திறந்தன.

நரேனைக் கண்டதும் அந்தப் பயம் தோன்றியது. கண்கள் படபடத்தன.

. . . எப்படியிருக்கிறீர்கள் ஸ்வப்நா?

குரலைக் கேட்டதும் அவளுக்கு ஒரு நம்பிக்கை! மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

- எனக்கு மயக்கம் வந்ததா நரேன்?

ஆமாம்.



மெதுவாக அவள் எழுந்தாள்.

- ஏதாவது சாப்பிடுகிறீர்களா?

- கொஞ்சம் ஹாட் வாட்டர் கொடுக்கிறீர்களா?

வெந்நீர் கொண்டு வரும்போது அவள் சோர்ந்தவாறு சோபாவில் உட்கார்ந்திருந்தாள். நீரை வாங்கிப் பருகியதும் சுவாசம் நிதானமாகியது.

- டாக்டரை அழைக்கட்டுமா?

- ஹூம். வேண்டாம். நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்து விட்டுப் போய்விடுகிறேன்.

அவளது பார்வைகள் வெறுமையாக இருந்தன. ஒரு ஏக்கத்துடனும் துக்கத்துடனும் அவன் உட்கார்ந்திருந்தாள்.

- உங்களைப் புண்படுத்திவிட்டேனோ? என்றான் மெதுவாக.

- இல்லை என்பது போல் முகத்தை அசைத்தாள் அவள்.

இருவரும் மெளனமானார்கள். நரேன் ஃபான் காற்றை அவள் மீது திருப்பி விட்டான். அது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் - நரேன் என்றாள் அவன் தலை நிமிர்ந்தான்.

- நான் வெறும் நாகரிகமாய் மட்டும் இருக்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள் நான் தனியாக இருக்கும் போது சமயங்களில் தத்துவ விசாரணையிலும் இறங்கி விடுவேன். அப்போது ஒரு தீவிரம் எனக்குத் தோன்றிவிடும். வாழ்வு மரணம் மறுபிறவி என்பதைப் பற்றியெல்லாம் தலை வலிக்கும்படி யோசிப்பேன். இந்த நிலையில் சில பெரியவர்களது வாழ்க்கைகளையும் கூர்ந்து படிப்பதுண்டு.

நரேன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

- இந்தப் பெரியவர்களது வாழ்க்கைகள், கேவலம் சில கணங்களில் எவ்வளவு பெரிய மாறுதல்களை அடைந்து விடுகின்றன! கணவன் ஒரு செம்பு நீர் கேட்டபோது கொஞ்சம் இருங்கள் என்று மனைவி சொன்னதற்காக அந்தக் கணவர் துறவு பூண்டுவிட்டார். கணவன் மறுகி அழைத்தபோது என்னை விடாதவர் எப்படிப் பெரிய விஷயங்கள் கற்கப் போகிறீர்கள் என்று ஒரு மனைவி கேட்க, மற்றொரு கணவர் துறவு பூண்டு விட்டார். இதுபோல் எத்தனையோ உதாரணங்கள் பெரியவர்களது வாழ்க்கையில் மட்டுமல்ல; சாதாரண மானவர்கள் வாழ்க்கையில் கூட அப்படிப்பட்ட பெரிய மாறுதல்கள் நிகழ்ந்து விடுகின்றன. சில கணங்கள் சில வாழ்க்கைகளையே திருப்பி விடுகின்றன.

- இதை எதற்குச் சொல்கிறாய், ஸ்வப்நா?

- சொல்கிறேன் நரேன். என் வாழ்க்கை ஒரு மாதிரி அமைந்துவிட்டது. விரும்பத் தகாத முறையில்தான்! ஆனால், அன்று இரவு நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நீங்கள் - புயல் ஓய்ந்து விட்டதா என்று கேட்டீர்களே. அந்தக் கேள்வி என்னை மாற்றிவிட்டது. அதற்காக நான் சந்நியாசியாகி விட்டேன் என்று சொல்லவில்லை என்னுள்ளே ஒரு மாற்றம் நிகழ்ந்துவிட்டது. என் பழைய வாழ்வை வெறுத்துத் தள்ளி விட்டேன். அதுவும் ஒரு துறவுதான்.

அவள் கண்கள் மினுமினுத்தன. பேசும்போது பலமுறை கண்களைத் தாழ்த்தியவாறே பேசினாள். பிறகு மௌனமானாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு நரேன் என்று சொல்லி விட்டு எழுந்தாள்.



- நான் வருகிறேன். என்னை உள்ளே அனுமதித்த தற்கும் எனக்கு உதவி செய்ததற்கும் நன்றி என்றாள்.

தள்ளாடியவாறே நடந்தாள். கதவைத் திறந்து கொண்டு நிலை வாயிலில் மறைந்தாள்.

அவள் அன்று வந்தது நடந்து கொண்டது, திரும்பிப் போனது யாவுமே அவன் நெஞ்சில் பதிந்திருந்தன. முக்கியமாகப் போகும்போது ஒரு கண்ணியமிக்க அமரிக்கையுடன் நடந்து போனது மிகவும் அழகாக இருந்தது. அந்தக் காட்சி, பல நாட்கள்வரை மனத்தில் தங்கியிருந்தது.

ஒரு மாதம் ஓடியது. நரேனுக்கு உள்ளூரப் பல துக்கங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. எதை நினைத்தாலும் ஒரு சோகம் வந்து கொண்டிருந்தது.

அவனது தனிமைதான் அவனைப் பெரிதும் பாதிக்கிறது என்று நினைத்தான். முன்பு போல் இல்லாமல், மற்றவர்களுடன் கலந்து பேசிப் பழகுவது என்று தீர்மானித்தான். ஞாயிறுகளில் எங்கேயாவது சினிமா, டிராமா என்று போக ஆரம்பித்தான். இரண்டு சபாக் களிலும் அங்கத்தினனாகச் சேர்ந்து கொண்டான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஒரு சபா பிக்னிக்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. ஒரு அணைப் பகுதியின் தோட்டத்தில் அங்கத்தினர்கள் எல்லோரும் கூடினார்கள். டீ, டிபன் கேளிக்கை, பாப் மியூசிக் என்று காலை முழுதும் கலகலவென ஓடியது.

பலரிடம் கலந்து கொண்ட நரேன், ஒரு விளையாட்டுப் போட்டியைத் தூர இருந்தவாறு ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் பார்வை சாலையை நோக்கிச் சென்றது. அங்கே காரை நிறுத்திவிட்டு ரமி ஒயிலாக இறங்கிக் கொண்டிருந்தாள், அவளுடன் புதிதாக

இரு பெண்களும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். ரமியின் கணவர் சியாம் தென்படவில்லை.

மூவரும் கூட்டத்தோடு கலந்து கொண்டார்கள். வெவ்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு மாறி மாறிச் சென்று கொண்டிருந்தார்கள்.

கடைசியில் போட்டி நடக்கும் பகுதிக்கு வந்தார்கள். அங்கே தனியாக நிற்கும் நரேனைப் பார்த்ததும் ரமி திடுக்கிட்டாள். இனிதாகவும், சோகமாகவும் ஒரு புன்னகை முகத்தில் தோன்றியது.

அவனைப் பார்த்த பிறகு ரமியின் இயக்கங்கள் தடைப்பட்டுவிட்டன. மற்ற இருவரிடமிருந்து மெதுவாக நழுவிய அவள் நரேன் அருகே வந்து நின்றாள்.

. . . . ஆச்சரியம், ரமி! என்றான் நரேன்.

. . . . எனக்கும்தான் நீங்கள் இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் கலந்து கொள்ள மாட்டீர்களே?

. . . . இப்போது கலந்து கொள்கிறேன், ரமி! பலருடன் பழகுவதால்தான் என் சொந்த துக்கங்களை மறக்க முடிகிறது.

ரமி பதில் சொல்லவில்லை. நரேனை ஆர்வத்துடன் பார்த்தாள். அவனது கம்பீரமான முகத்தில் கண்கள் இரண்டும் உருகிய திரவம் போல் பளபளத்தன. அதன் மென்மையான வசீகரத்தில் சிறிது நேரம் தன்னை மறந்து நின்றாள்.

. . . . ரமி!

மெல்லியதாய் அவன் அழைத்தான்.

அவள் பேசவில்லை. உள்ளே அவளது நெஞ்சம் குவிந்து பொங்குவது தெரிந்தது. கண்களால் வாருங்கள் என்று சொல்லிவிட்டு மேலே நடக்க ஆரம்பித்தாள்.



நெடிதாக வளர்ந்திருந்த மரங்களின் இடையே ஊடுருவிக் கொண்டு இருவரும் மௌனமாக நடந்தார்கள். இருவர் இதயங்களிலும் உணர்வுகள் பொங்கியிருந்தன.

ஒரு ஒற்றையடிப் பாதையைப் பிடித்து நடந்தார்கள். அணைக்கு மேற்புறம் உள்ள நதிக்கரை வரை சென்றார்கள். கரையெங்கும் மரங்கள் அடர்த்தியாய் வளர்ந்திருந்தன. அவற்றின் அடி மரங்கள் வழியே தேக்கத்தின் நீர் பளபளத்துக் கொண்டிருந்தது.

கீழே கிடந்த ஒரு அடிமரத்தில் இருவரும் அமர்ந்தார்கள். இருவரும் வெவ்வேறு திசையைப் பார்த்திருந்தார்கள்.

. . . . ரமி.

. . . . ம்.

. . . . பேசவில்லையா?

. . . . என்ன பேசுவேன், நரேன் – என்றாள் அவள். பிறகு. . . . இன்று உங்களைச் சந்திப்போம் என்று நினைக்கவேயில்லை. என் இதயம் பூரணமாயிருக்கிறது என்றாள்.

அவனைப் பார்த்து அவள் திரும்பினாள். அவள் முகத்தில் ஜுவாலை போல் ஒரு பரவசம் எரிந்தது.

. . . . ரமி.

. . . . ம்.

. . . . இதென்ன இப்படி ஒளிர்கிறாய் நீ?

. . . . நரேன்! கடந்த பல தினங்களாக உங்களை ஒவ்வொரு கனமும் நினைத்து வருகிறேன். இன்று என் அடங்கா ஆவலின் உச்ச நிலையில் உங்களைச் சந்தித்த போது. . . .

அவள் முகம் குழைந்தது. உடல் எல்லாம் ஒரு அபிநய வளைவாய் நெளிந்தது.

. . . . நரேன்.

அவன் திரும்பினான்.

. . . . இதே போல் ஒரு தினம் நினைவு இருக்கிறதா?

. . . . கல்லூரி நாட்களில் நாம் போன பிக்னிக்தானே!

. . . . ஆமாம்! இருவரும் இதுபோல் தனிமையில் சந்திக்கவில்லையா?

. . . நீ துள்ளி வந்து என் கைகளைக் கோர்த்துக் கொள்ளவில்லையா?

. . . பரவசங்களில் திளைத்து நீங்கள் என்னை இரு கைகளிலும் ஏந்திக்கொள்ளவில்லையா?

. . . மெய்மறந்து நாம் ஒரு பேரானந்தத்தில் லயிக்கவில்லையா?

. . . . . அந்த லயிப்பில் வெகுநேரம் மௌனமாய் இருக்கவில்லையா?

. . . ரமி.

. . . அவள் பேசவில்லை.

. . . ரமி. (அவன் அழைத்தான்.)

அவள் திரும்பினாள்.

. . . நரேன்.

. . . ம்.

. . . ம் . . .

அலை வீசும் உணர்ச்சியில் மூழ்கி இருவரும் மௌனமானார்கள்.



சிறிது நேரத்திற்குப் பிறகு நரேன் ரமியைப் பார்த்தான். அவள் கண்களில் நீர் பெருகி இருந்தது.

. . . . ஏன் ரமி?

அவள் பதில் சொல்லவில்லை. திடீரென்று விம்மினாள். முகத்தை மூடிக் கையை வைத்து விசிக்கத் தொடங்கினாள்.

. . . . ஏன் ரமி?

சிறிது நேரம் அவள் விசித்தாள். விசிப்பு அடங்கியவுடன் மெதுவாகப் பேசினாள்.

. . . நரேன் என்னால் பொறுக்க முடியவில்லை.

. . . எதை ரமி?

. . . . அன்று ரமித்திருந்தோமே. அன்று உங்கள் கைகளைக் கோர்த்துக் கொண்டேனே! உங்கள் கழுத்தை வளைத்துக் கொண்டேனே! இன்று ஏன் நான் அதுபோல் செய்ய முடியவில்லை நரேன்?

அவள் விசித்தாள்.

. . . . ரமி . . . . ரமி . . . அப்படியெல்லாம் இனி நினைக்காதே. இன்று உன் வாழ்வு மாறிவிட்டது.

. . . . . நினைக்காமல் என்னால் இருக்க முடியவில்லையே நரேன்?

நரேன் அவளைப் பார்த்தான். அவள் விசிப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

. . . . ரமி.

அவள் விம்மினாள். மறுகணம் அழத் தொடங்கினாள்.

. . . ரமி.

அவள் தொடர்ந்து அழுதாள்.

. . . ஏன் ரமி?

. . . . என்னால் உங்களை மறக்க முடியவில்லை. பிரிந்து இருக்கவும் முடியவில்லை, நரேன்.

. . . . அப்படிச் சொல்லாதே, ரமி.

. . . . இல்லை நரேன். நான் அன்று உங்கள் வீட்டுக்கு வந்தேனே அன்றிலிருந்து நான் உள்ளே வெந்து துடிக்கிறேன். என்னால் தாளமுடியவில்லை. இதோ இந்தக் கணத்தில் உங்கள் மீது சாய்ந்து உங்களோடு ஒன்றாகிவிட விரும்புகிறேன்.

. . . . ரமி.

. . . . ஆமாம் நரேன். உங்களோடு ஒன்றாகிவிட விரும்புகிறேன். நான் சொல்வதெல்லாம் தவறுதான். அது எனக்குத் தெரியும் ஆனால் என் உணர்ச்சிகளை, வெளியே சொல்லாமல் இருக்க முடியவில்லை. சொல்கிறேன். சொல்வதுகூடத் தவறானால் அந்தத் தவறுகள் என்னைச் சேரட்டும்.

அவள் படபடப்பாகப் பேசினாள்.

. . . ரமி.

. . . . நரேன்.

. . . ஏன் இப்படிச் சொல்கிறாய் ரமி?

- ஒன்று சொல்லட்டுமா, நரேன்?

- சொல்!

- என்னைத் தவறாக நினைக்க மாட்டீர்களே!

- இல்லை,



- அவள் தயங்கினாள்.

- நரேன்.

. . . ம்.

. . . நாம் இருவரும் இந்த சமுதாய எல்லைக்கு அப்பால் சென்று விடவேண்டும்.

. . . அப்படியென்றால்.

. . . சொல்கிறேன் என் வாழ்க்கையின் பந்தங்களை விடுவித்துக் கொண்டு உங்களை வந்து அடைகிறேன். இருவரும் எங்கேயாவது தூரத்தில் எங்கேயாவது போய் நிம்மதியாக வாழ வேண்டும்.

அவன் திடுக்கிட்டான்.

. . . ஆமாம், நரேன்! இனி என்னால் பொறுக்க முடியாது நீங்கள் இல்லாவிட்டால் என் உயிர் தரிக்காது. இறந்துவிடுவேன். நான் இறப்பதைத் தவிர்க்க வேண்டுமானால் நீங்கள் எனக்காக ஒன்று செய்யவேண்டும். என்னை அழைத்துக்கொண்டு எங்கேயாவது கண் காணாத இடத்திற்குப் போய்விட வேண்டும்.

சொல்லிவிட்டு அவள் உணர்ச்சி தாளாது அழுகையில் உடைந்தாள்.

* * *

## 20

நரேன் திடுக்கிட்டான். ரமி இப்படிப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. ஏதோ ஒரு திடீர் உணர்ச்சியில் பேசுகிறாள் என்று நினைத்தான். ஆனால் ரமியின் முகத்தில் அந்த உணர்ச்சி நிரந்தரமாக நின்றுவிட்டது.

. . . . ரமி என்றான்.

அவள் கண்களிலிருந்து நீர். நெஞ்சிலும் உடலிலும் விம்மல்.

. . . ரமி.

. . . நரேன்.

அவன் மேலே பேசவில்லை.

. . . சொல்லுங்கள், நரேன்.

. . . என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை.

தலையைக் குனிந்தான். மௌனமாகக் கண்ணைத் துடைத்தான்!

. . . பேசுங்கள் நரேன்!

அவன் தலை நிமிர்ந்தான் . . . ரமி! உன் மனத்தில் எந்த உணர்வுகள் ஓடுகின்றனவோ அதே உணர்வுகள் என் மனத்திலும் ஓடுகின்றன. நீ இப்போது என்ன நினைக்கிறாயோ அதை ஒரு காலத்தில் நானும் நினைத்தேன். இப்போதும் நினைக்கிறேன். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அதன் தீவிரங்களை இப்போது மட்டுப் படுத்திக்கொண்டு விட்டேன். அவ்வளவுதான்.

. . . நரேன், (அவள் கண்கள் பளபளத்தன.) நீங்களும் அப்படி நினைத்தீர்களா நரேன்?

. . . ஒரு காலத்தில் நினைத்தேன் ரமி!

. . . மனத்தில் நீங்கள் துடித்திருப்பீர்களே!

. . . துடித்தேன்.

. . . ஒவ்வொரு நினைவும் ஒரு தீப்பொறியாக உங்களை எரித்திருக்குமே.



. . . எரிந்தேன்.

. . . எதிலும் நிலை கொள்ளாது வாழ்வை முடித்துக் கொள்வோமா என்று நினைத்திருப்பீர்களே?

. . . ஆமாம், ரமி!

. . . நரேன், நரேன்! (ஆத்திரத்துடன் கூவினாள் அவள்) அதே உணர்வுகளில்தான் நான் இப்போது தவிக்கிறேன். வெளியே வரும் வகையறியாது தவிக்கிறேன். என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா நரேன்?

நரேன் பேசவில்லை. எழுந்தான்.

- ரமி.

- ஒரு முடிவு சொல்லுங்கள், நரேன்.

அவளும் எழுந்தாள். அவனை மேலே போகவிடாது தடுத்தாள்.

- ரமி என்றான் அவன் உணர்ச்சியுடன் - நானே ஒரு குழப்பத்தில் இருக்கிறேன். நானும் மனிதன்தானே? எனக்கும் ஆசாபாசங்கள் உள்ள மனந்தானே இருக்கிறது! ஒரு சமயம் நீ எனக்குச் சொல்லும் யோசனை என்னைக் கவர்ந்து இழுக்கிறது. நானும் அதில் ஈடுபட்டு ஒரு புது வாழ்வைக் காணலாமா என்று நினைக்கிறேன். மறுகணம், இதுநாள் வரை போற்றி வரும் கண்ணியம் என்னைத் தடுத்து நிறுத்துகிறது. நானும் செய்வதறியாது திகைக் கிறேன் ரமி!

அவன் மேலே நடந்தான். ரமி சட்டென்று அவன் கைகளைப் பிடித்தாள்.

. . . நில்லுங்கள். நரேன் இதுவரை உங்களிடம் நான் இப்படிப் பேசியது இல்லை. இப்படி நடந்து கொண்டதும் இல்லை. இன்றுதான் இப்படி நடக்கிறேன், எனக்குப்

பைத்தியம் பிடித்துவிட்டது என்று வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த ஊரை விட்டு நாம் போயாக வேண்டும். நிச்சயம் போயாக வேண்டும். சமூகத்திற்கு அப்பால் ஒரு புது வாழ்வை அமைத்தாக வேண்டும். இது உறுதி நரேன். நரேன் திக்பிரமையுடன் நின்றான். ரமி ஒரு துடிப்புடன் அவனைப் பார்த்தாள். அவன் கண்களில் ஒரு கலக்கமான உணர்வைக் கண்டதும் - நரேன் என்று பரபரத்தாள் - நான் நினைப்பதுபோல் நீங்கள் நினைக்கவில்லையா? நினைக்கவில்லையா சொல்லுங்கள். நரேன் சொல்லுங்கள் என்று கதறினாள். மறுகணம் அவள் கண்கள் செருகின. உணர்விழந்து மாலையாக அவன் காலடிகளில் விழுந்தாள்.

கண்களை விழித்தபோது, நரேனின் மடி மீது அவள் படுத்திருப்பது தெரிந்தது. கண்களை மெதுவாக மலர்த்திப் பாத்தாள். நரேனின் பார்வையில் கனிவும் இரக்கமும் தெரிந்தன. லேசாகப் புன்னகை புரிந்தாள் அவள். மறு கணமே ஒரு சோகம் அவளை மூடியது.

- ரமி, ரமி என்றான் அவன் தழதழத்த குரலில்.

என்னைப் பார் ரமி! உன் விருப்பத்திற்கு எதிராக நான் போகமாட்டேன். ரமி உன் விருப்பத்தையே நிறைவேற்றுவேன். நீ வருத்தமடையாதே. மனத்தில் நொந்து கொண்டு உன்னையே நீ அழித்துக் கொள்ளாதே. நீ மறைந்து விட்டால் எனக்கு வாழ்வில்லை ரமி.

அவன் குரல் உடைந்து வந்தது. கண்ணீர் புலபுலவென உதிர்ந்தது.

ஒரு சனிக்கிழமை அவர்கள் புறப்படுவது என்று தீர்மானித்தார்கள். இன்னும் ஒரு வாரந்தான் பாக்கி இருந்தது.

நரேனின் மனம் பல விதங்களில் அடித்துக் கொண்டது, ஒவ்வொரு தினமும் உணர்ச்சிகளும்



நினைவுகளும் பொங்கியெழுந்து, அவனைத் திக்கு முக்காடச் செய்தன. எங்கேயோ புது இனிமைகள் வேகமாய் விசிறிக் கொண்டு உதயமாவது போலிருந்தது.

தான், தன் குடும்பம், இந்த உலகம் என்ற நினைவுகள் யாவுமே அவனை விட்டு அகல்வது போலிருந்தன. எங்கும் ரமி ஒருத்தியே மெய்யாக நின்று கொண்டிருந்தாள். அவன் இனிய ர(ம்ம்ம்ம்)மி.

வியாழக்கிழமை வந்தது. இன்னும் இரு தினங்களே மீதி. காலையில் நரேன் நிலை கொள்ளாது இருந்தான். எட்டு மணிக்கு யாரோ பஸ்ஸரை அழுத்தினார்கள், போய்த் திறந்தான்.

ஒரு வேலைக்காரி அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றாள். உள்ளே வந்து உடைத்துப் பார்த்தான்.

. . . ஸ்வப்நா எழுதுகிறேன். இன்னும் என் உடல் குணமாகவில்லை என்பதை வருத்தத்துடனோ, வருத்தம் இல்லாத உணர்வுடனோ தெரிவித்துக்கொள்கிறேன். பலவித வேதனைகளில் உடலும் உள்ளமும் நோகும்போது நான் மனத்தில் நினைப்பது உங்களைத்தான். எவ்வளவோ மருந்துகள் சாப்பிடுகிறேன். சிகிச்சைகள் எடுத்துக் கொள்கிறேன். எனினும் குணத்தை நோக்கி நான் செல்லவில்லை.

நான் குணம் அடைய உங்கள் தரிசனமே ஒரு மருந்தானால், அந்த மருந்தை எனக்கு நீங்கள் அளிக்கக் கூடாதா? அதுதான் மருந்து என்று நான் கருதினால், நீங்கள் அதை அளியாது ஒதுங்கி நிற்பீர்களா? . . . ஸ்வப்நா.

மாலையாகும்போது அந்தக் கடிதத்தின் வார்த்தைகள் அவனைப் பாதிக்க ஆரம்பித்தன. ஸ்வப்நாவின் மீது ஒரு இரக்கம் இயல்பாகத் தோன்றியது.

ஐந்து மணி ஆனதும் ஸ்வப்நாவின் வீட்டை நோக்கிச் சென்றான்.

கதவைத் திறந்து உள்ளே சென்றபோது எங்கும் மருந்து நெடி பரவியிருந்தது.

படுக்கையில் சோர்ந்தவாறு ஸ்வப்நா படுத்திருந்தாள். அவனைப் பார்த்ததும் எழுந்திருப்பதற்கு முயன்றாள். ஆனால் அவன் கையைக் காட்டியதும், தன் முயற்சியை நிறுத்திக் கொண்டாள்.

அவளைப் பார்த்ததும் அவன் திடுக்கிட்டான். பாதியாக இளைத்திருந்தாள். கண்களின் அடியில் நிழல் தட்டியிருந்தது. கைகள் கூட வற்றிப்போய் உலர்ந்திருந்தன.

. . . இன்னும் சரியாகவில்லையா? என்றான் உட்கார்ந்து கொண்டே.

. . . இல்லை என்றாள் அவள். குரல் கரகரத்தது. கண்களைக் கொட்டியவாறு கீழே தணித்தாள்.

சிறிது நேரம் மௌனம்.

. . . என் வேண்டுகோளுக்கு இசைந்து இங்கே வந்ததற்கு நன்றி என்றாள்.

அவன் பேசவில்லை.

. . . இதை ஒரு நல்ல தினமாகக் கருதுகிறேன். நீங்கள் இங்கே வருவது தெய்வம் வருவதுபோல் இருக்கிறது. ஒரு நாளில் நீங்கள் எனக்கு எட்டிய பொருளாகத் தோன்றினீர்கள். இப்போது எட்டாத தெய்வமாக மாறி விட்டீர்கள்.

. . . அப்படி நான் நினைக்கவில்லை.

. . . நினைக்கவில்லையென்றால் மகிழ்ச்சி.



வேலைக்காரி காப்பி கொண்டு வந்தாள். நரேன் பருகினான்.

. . . நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள், டாக்டர் என்ன சொல்கிறார் என்பதையெல்லாம் கேட்டான்.

கடைசியின் அவன் எழுவதற்கு முயன்றபோது - நரேன் போகிறீர்களா என்றாள் அவள்.

ஆமாம் என்று அவன் பார்வை சொல்லியது.

அவள் கண்கள் மறுகியவாறு நின்றன.

சில அடிகள் எடுத்து வைத்தவன் நின்றான். நான் வருகிறேன் என்று திரும்பிப் பார்த்துச் சொன்னான்.

. . . அடிக்கடி வருவீர்களா என்றாள் ஆவலுடன்.

நரேன் எதனாலோ திடுக்கிட்டு நின்றான்.

. . . இல்லை ஸ்வப்நா, நான் உங்களிடம் விடைபெற வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்.

. . . இனிமேல் இங்கே வரமாட்டீர்களா? அவள் ஆதங்கத்துடன் கேட்டாள்.

ஊஹூம் என்று கண்களை அசைத்தான் அவன்.

. . . நரேன், நரேன் என்றாள் அவள் பரபரப்புடன். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னை யாவது உங்களை வந்து பார்க்க அனுமதியுங்கள்.

அவன் பதில் பேசவில்லை, சில கணங்கள் யோசித்தான். பிறகு அவளைப் பார்த்து நிமிர்ந்தான்.

ஸ்வப்நா! ஏதோ பேசவேண்டுமென்று நினைக் கிறேன். பேச முடியவில்லை. என்னிடமே எவ்வளவோ துக்கம் நிறைந்திருக்கிறது. எனினும் நீங்கள் என்னிடம் பழகிவிட்டீர்கள் என்பதால்தான் இங்கு வந்து பேசுகிறேன்.

ஆனால் ஒன்று. நீங்கள் பழகிய நோக்கத்தை நான் ஆதரிக்கவில்லை.

அவள் சட்டென்று குறுக்கிட்டாள்.

. . . நான் இப்போது மாறி விட்டேன் நரேன்.

அதைச் சொன்ன வேகத்தில் எழுந்து உட்கார்ந்தாள்.

- மாறினால் நல்லது ஸ்வப்நா. உங்களுடன் எதனாலோ பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாகவே இன்று வந்திருக்கிறேன். இப்போது விடை பெறுகிறேன். அதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

அவன் சொன்ன விதத்தில் அவளுக்கு எதுவோ புரிவது போலிருந்தது. உடனே ஒரு தவிப்பும் எழுந்தது.

. . . நரேன் இதோ இந்தக் கணத்தில் பேசுகிறானே, இந்த ஸ்வப்நா தூய்மையானவள். இயற்கையிலே அவள் தூய்மையாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் வாழ்க்கையில் பல புயல்கள் ஏற்பட்ட பிறகே அவள் தூய்மையாகியிருக்கிறாள். அவளது நெஞ்சத்தில் இப்போது ஒரே ஒரு பிம்பம்தான் விழுந்திருக்கிறது. அது உங்கள் பிம்பம்தான். உங்கள் பிம்பம்தான் நரேன்.

அவள் எழுவதற்கு முயன்றாள். அடுத்த கணம் ஆ வென்று வலியுடன் படுக்கையில் சரிந்தாள். நரேன் திடுக்கிட்டு நின்றான். ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று அவள் கூறினாள். வேலைக்காரி அவளைப் பிடித்துக் கொண்டாள். நரேன் விடைபெற்றான். கடைசியாக ஸ்வப்நா அவனைப் பார்த்த பார்வை அவனை ஏதோ செய்தது.

வெளியே வரும்போது, இவள் இதயத்தில் உண்மையில் எதுவோ நிகழ்ந்திருக்கிறது என்று நினைத்தான் அவன்.



மறுதினம் வெள்ளி. அது விரைவில் ஓடி சனிக் கிழமையும் வந்தது.

நரேனால் எந்த வேலையும் செய்யமுடியவில்லை மனத்தில் எந்த நினைவும் சீராக ஓடவில்லை. வீட்டில் அங்கும் இங்கும் உலாவினான். உணர்ச்சிகளின் அடர்த்தியால் தலையில் பெரிய வலியே ஏற்பட்டது.

காலை நேரம் விரைவாக ஓடியது. கண்களைத் திறந்து, எதையும் பார்க்க முடியவில்லை. அவ்வளவுக்கு ஒரு வெம்மை உள்ளே எரிந்து கொண்டு இருந்தது. படுக்கையில் அமிழ்ந்து தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

நேரம் ஆக ஆக நரம்புகள் தெறித்துக் கொண்டிருந்தன. இரு காதுகள் அருகிலும் நெருப்பு எரிவது போலிருந்தது. திடீரென்று ஏதாவது நடந்து அவர்கள் திட்டமே நின்றுவிடக்கூடாதா என்று தோன்றியது. அப்போதுதான் இந்த அவஸ்தைகள் நின்று விடும் என்று தோன்றியது.

ஆனால் மறு கணம் ரமியை நினைத்தால் மனம் இளகியது. எங்கேயோ ஏதோ ஒரு ஊரில் அவளும் அவனும் வாழப் போகும் தனியான வாழ்வை நினைத்தால் மனம் அதன்மீது தாவி ஓடியது.

இரவு எட்டு மணிக்கு ரமி தனது அறையில் மேஜை முன் உட்கார்ந்தாள். தலையும் உடம்பும் கலைந்திருந்தன. ஒரு வாரத்துக்குள் மிகவும் இளைத்திருந்தாள். மேஜை விளக்கின் பாலான வெளிச்சத்தின் முன் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

அன்புள்ள சியாமுக்கு,

நான் இவ்விதம் செய்வேன் என்று கனவிலும் எதிர்பாத்திருக்க மாட்டீர்கள். இப்படியெல்லாம் எனக்குப்

பின்னணியில் ஒரு வாழ்க்கை இருந்ததா என்றுகூட நினைத்திருக்க மாட்டீர்கள்.

எனினும் நான் இதைச் செய்யவேண்டியிருக்கிறது. நான் உங்களை விட்டு விலகிச் செல்கிறேன். எங்கே போகிறேன், எதற்குப் போகிறேன் என்றெல்லாம் கேட்காதீர்கள். இது என் வாழ்க்கையில் ஒரு விபத்து. இதை முழுதுமாகச் சொல்லி உங்கள் மனத்தைக் குழப்ப எனக்கு விருப்பமில்லை. என் வாழ்க்கையில் ஏதோ மறைந்திருக்கிறது என்பதை மட்டும் நீங்கள் புரிந்து கொண்டால் போதும்!

உங்களுடன் வாழ்ந்து விட்டு, உங்களுக்கு அநீதி இழைக்கலாமா என்று என் மனமே என்னைக் கேட்கிறது. அதற்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். பூரணமாக நேசிக்கிறீர்கள். பூரணமாக நம்பியிருக்கிறீர்கள். அந்த நம்பிக்கைக்கு நான் உகந்தவளா என்று நினைக்கும்போது என் நெஞ்சம் வெடித்துவிடுகிறது. நீங்கள் உயர்ந்தவர். உங்களுடன் வாழ்வதையே ஒரு பெண் லட்சிய இன்பமாகக் கருத வேண்டும். நானும் கருதினேன். ஆனால் இப்போது. . . .

இப்போது முடியவில்லை. அதன் காரணம் உங்களுக்கு என் மீதுள்ள அன்போ, அக்கறையோ குறைந்துவிட்டது என்பதால் அல்ல. எனக்கு எதுவோ நேர்ந்துவிட்டது. அது என் கல்லூரி வாழ்க்கையின் தொடர்ச்சி அவ்வளவுதான்.

சியாம் என்னை மன்னிப்பீர்களா? நீங்கள் மிக்க நல்லவர் பண்புடையவர். உங்களை விட்டுப் போகிறேன் என்றால் வேறு வழி எதுவும் எனக்கில்லை என்பதால்தான். போகாமல் இருந்தால் என் வேதனையே என்னை இங்கே கொன்றுவிடும். அல்லது என் வேதனையைக் கொல்வதற்காக என்னையே நான் கொல்ல வேண்டியிருக்கும். உதார குணமுள்ள நீங்கள், நான் எங்கேயாவது



வாழ வேண்டும் என்றுதான் விரும்புவீர்கள், அதனால்தான் போகிறேன்.

என்னைப் பற்றி அதிகம் கவலைப்படாதீர்கள். உங்கள் வாழ்க்கையில் இப்படி ஒரு களங்கம் விளைவித்தேன். என்பதற்காக என்னை மன்னித்து விடுங்கள்.

உங்கள் பாதங்களில் விநயத்துடன் விழுந்து வணங்குகிறேன். விடை பெறுகிறேன்.

உங்கள்,

ரமி.

கடிதத்தை படிக்கும்போது அரவம் கேட்டது. வெளி வராந்தாவில் காலடி ஓசைகள். கண்களை விரைவாகத் துடைத்துக் கொண்டு எறிட்டுப் பார்த்தாள். வெளி வாயிலில் அவளது கணவர் சியாம் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்.

. . . நீங்களா என்றாள் தடுமாறியவாறு. கடிதத்தைச் சட்டென்று டிராயரில் திணித்தாள். அதை அவர் கவனிக்கிறாரா என்று கூர்ந்து கவனித்தாள்.

. . . நீங்கள் சீக்கிரம் வருவீர்கள் என்று எதிர் பார்க்கவில்லை. . . அதுதான், அதுதான் என்று குழறினாள்.

. . . ஏதாவது எழுதிக் கொண்டிருந்தாயா என்று சாவதானமாகக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் அவர். அவர் கண்கள் மேஜைமீது விழுந்தன. அதை உணர்ந்ததும் திறந்து வைக்கப்பட்டிருந்த பேனாவைச் சட்டென்று அவள் மூடினாள் . . . ரமி! ஏன் ரமி? உடம்பு சரியில்லையா? என்றார் அவர்.

அவளது திகைப்பே அவளை நடுக்கியது. கண்களில் வரும் நீரை சிரமத்துடன் அடக்கினாள்.

. . . ரமி! உடம்பு சரியில்லையா?

மேலும் நெருங்கி வந்தார் அவர்.

* * *

## 21

ரமியின் அருகில் வந்தார் சியாம். அவளது முகமும் கண்களும் கலங்கியிருப்பதைப் பார்த்தார். . . என்ன ரமி என்று ஆதரவுடன் கேட்டார்.

. . . ஒன்றுமில்லை என்று திக்கியவாறு ரமி கூறினாள்.

. . . கீழே உன் சிநேகிதிகள் வந்திருக்கிறார்கள் என்றார் சியாம். ரமி தன்னைச் சமாளித்துக் கொண்டாள் . . . . இதோ வரேன் என்று சொல்லி முன்னாள் போனாள். சியாம் அவளைப் பின் தொடர்ந்தார்.

கீழே இரண்டு சிநேகிதிகள் அவளுக்காகக் காத்திருந்தார்கள் நித்யாவும், பிரேமலதாவும். ரமியைப் பார்த்ததும் புன்னகையோடு எழுந்தார்கள்.

. . . ஏது, இந்த நேரத்தில் என்றாள் ரமி. சிநேகிதிகள் அவசரமாய் எழுந்து அவளருகே வந்தார்கள். விஷயத்தைச் சொன்னார்கள்.

ஹெலன் என்பவள் அவர்களது மற்றொரு சிநேகிதி. அவள் உடம்பு சரியில்லை. கவலைக்கிடம். நினைவு வருகிற போது ரமியைப் பார்க்க வேண்டும் என்றாள். ரமியை அழைத்துப்போக வந்திருந்தார்கள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும், ரமிக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. ஆனால் அவசியம் போக வேண்டும் என்றும் தோன்றியது. அதைத் தட்டிக் கழிக்க முடிய வில்லை. கழிப்பதற்குக் காரணமும் தெரியவில்லை.



கணவரைப் பாத்தாள். . . போய் வா என்றார் அவர். புறப்பட்டாள்.

ஆர். டி. கிளினிக்கை அடைந்தபோது மணி ஒன்பதரை. ஹெலனுக்கும் பாதி நினைவு. டாக்டரிடம் விசாரித்ததில் விவரங்கள் தெரிந்தன. ஹெலன் எங்கேயோ செயற்கை அபார்ஷன் செய்து கொண்டிருக்கிறாள். அதையடுத்து உடம்பில் வேறு கோளாறுகள் தோன்றி விட்டன. அதனால் சிநேகிதிகள் அவளை இந்த கிளினிக்கில் சேர்த்திருக்கிறார்கள் . . . இதெல்லாம் என்ன? என்று நித்யாவைத் தனியாக அழைத்துக் கேட்டாள் ரமி.

. . . அந்த ரங்க் செய்த வேலை.

ரமி புரிந்து கொண்டாள். ரங்க் என்பவன் ஹெலனுடைய காதலன். இருவரும் பிரெஞ்சு வகுப்பில் நெருங்கிப் பழகியவர்கள். அதனால் ஏற்பட்டவைதான் இவை. . .

இருவருக்கும் திருமணம் ஆகவில்லை. அதனால் வீட்டுக்குத் தெரியாமல் சிநேகிதிகள் இந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹெலனுக்கு நினைவு வர 11 மணி ஆகியது. ஆத்திரத்தில் - ஐ ஹேட் ஹிம்! ஐ ஹேட் ஹிம் என்று ரங்க்கைக் குறித்து வீறிக்கொண்டு கத்தியது பரிதாபமாக இருந்தது. அவளை எல்லோரும் சமாதானப் படுத்தினார்கள்.

ரமி தவித்துக் கொண்டிருந்தாள். மனம் எதிலும் ஈடுபடவில்லை. ஹெலன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு அழுதபோதுகூட அவள் மீது கவனம் ஓடவில்லை.

கிளினிக்கிலிருந்து வெளிவரும்போது இரவு பன்னிரண்டு. இன்னும் சில மணி நேரங்கள்தான் பாக்கி.

காலை நாலு மணிக்கு நரேனைச் சந்திக்க வேண்டும். பிறகு இருவரும் இந்த ஊரைவிட்டு, உற்றார்களை துறந்து. . .

வீடு உறங்கிக் கொண்டிருந்தது. வேலைக்காரி கதவைத் திறந்துவிட்டாள். அவசரமாக உள்ளே போனாள். மாடிப் படிகளில் விரைவாக ஏறினாள். அறைக்குள் ஓடி விளக்கை அழுத்தி மேஜையைப் பரபரப்புடன் திறந்தாள். அவள் வைத்திருந்த கடிதத்தைப் பார்த்தாள். அவள் வைத்திருந்த மாதிரி இருக்கிறதா, இல்லையா?. . . கடிதத்தைப் பார்க்கும்போது யாரோ திறந்திருக்கிறார்கள் என்று உள்ளுணர்வு தோன்றியது. மடிப்புகள் கலைந் திருந்தன.

அவர் பார்த்திருப்பாரா என்று நினைத்தாள். யோசனை செய்தாள். எதுவும் ஓடவில்லை. இதெல்லாம் வீண் பிரமை என்று தோன்றியது. அதிக நேரம் விளக்கை எரிக்கவும் பிடிக்கவில்லை. விளக்கை அணைத்தாள். காலைப் பயணத்துக்கு இரண்டு சாரிகளை எடுத்துக் கொள்ள விரும்பினாள். இனி அடுத்த அறைக்குச் செல்ல விரும்பவில்லை. ஏதாவது சப்தம் கேட்டால் சியாம் எழுந்து விடுவார்.

பதைக்கும் நெஞ்சத்துடன் படுத்துக் கொண்டாள். ஒவ்வொரு மணியாக ஓடியது. மனம் பல விதமாகக் கலங்கியது. நெஞ்சில் ஒரு தழல் சீராக எரிந்தது.

நான்கு மணி அடித்தது. எழுந்து உட்கார்ந்தாள். உடம்பு நடுங்கியது. சுவரைப் பிடித்தவாறு எழுந்தாள். முகத்தை துணியால் துடைத்தாள். விளக்கை ஏற்றாமல் பீரோ வரை சென்று ஒரு பையை மட்டும் எடுத்துக் கொண்டாள். அதில் ஒரு டவலையும், கர்சீப்புகளையும் திணித்தாள். பிறகு அறைக் கதவைத் திறந்து மெதுவாக வெளியே வந்தாள்.



காரிடோரில் மிக மெல்லிய வெளிச்சம். வெறும் நட்சத்திர வெளிச்சம். நெஞ்சு படபடத்தது.

*சியாம்! சியாம்!*

*உள் மனம் அழைத்தது.*

எங்கும் மிருதுவான அமைதி. சிறிதுகூடச் சலனம் இல்லை. *சியாம்! சியாம்! என்னை மன்னித்து விடுங்கள். நான் செய்வது சரியோ தவறோ! என்னை மன்னித்து விடுங்கள்!*

மாடிப்படிகளில் இறங்கினாள். ஹாலின் கதவைத் திறக்கும்போது சிறிது சப்தம். பயத்துடன் நின்றாள். பிறகு மெதுவாக அடி வைத்து மேலே நடந்தாள்.

தோட்ட வழியில் நடந்தாள். உடம்பில் குளிர் பட்டது. மனம் திக் திக் என்று அடித்தது. முகத்தைத் திருப்பி வீட்டைப் பார்த்தாள். வெறுப்பும் தோன்றியது, இரக்கமும் தோன்றியது.

பெருமூச்சு விட்டவாறு மேலே நடந்தாள். ஏதோ நிழல். திடுக்கிட்டாள். யாரோ எதிரே நின்று கொண்டிருந் தார்கள் பயத்தில் கூவி விடுவோமோ என்று நினைத்தாள்.

மறுகணம் உருவத்தைப் பார்க்கும்போது குரல் அடைத்தது.

*சியாமா அவர்?*

*சியாம்தானா?*

அவர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அவள் வெலவெலத்து நின்றாள். உடம்பு படபடத்தது. காற்றில் அப்படியே கரைந்துவிட மாட்டோமா என்று நினைத்தாள். விக்கித்துப் போய் நின்றாள்.

அவர் மெள்ள நடந்து வந்தார். அவள் அருகில் வந்து நின்றார். பேசவில்லை. அவளையே பார்த்தார்.

அவளுக்கு அழுகை வந்தது. அடக்கிக் கொண்டாள். கையிலிருந்து பை நழுவியது. இழைந்தவாறு அவர் முன் நின்றாள்.

. . . சியாம். . .

குரல் திணறி வந்தது. சப்தம் நடுங்கியது. அவரிடமிருந்து பெருமூச்சு வந்து கொண்டிருந்தது.

. . ரமி! . . . மி. . . (குரல் தடுமாறியது), பையை எடுத்துக்கொள்.

அவள் கண்களில் சட்டென்று நீர் வந்தது.

. . . இல்லை, சியாம்! நேரம் தெரியவில்லை. எழுந்து விட்டேன் என்று குழறியவாறு நிறுத்தினாள்.

அவர் முகத்தில் சோகமான புன்னகை வந்தது.

அந்த வெளிச்சத்தில் அவர் கண்ணில் நீர் வருவது தெரிந்தது. அவராகவே குனிந்தார். பையை எடுத்தார். அவளிடம் கொடுத்தார்.

. . . . சியாம் என்றாள் அவள் அழுகையுடன்.

. . . . அழாதே, ரமி! அமைதியாயிரு?

அவளது முதுகில் லேசாகத் தட்டினார். கனிவுடன் அவளைப் பார்த்தார்.

. . . ரமி.

. . . சியாம்.

. . . அழாதே. ரமி உன் அமைதிதான் முக்கியம். அமைதியுடன் போய் வா!

. . . நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

. . . போய் வா என்று சொல்கிறேன். ரமி!



. . . சியாம்! (அவள் இரைந்தாள்) நீங்கள் அதை (கடிதத்தை)ப் படித்தீர்களா!

அவர் பேசவில்லை. கண்ணை மட்டும் துடைத்தார். அவள் முகத்தை நேராகப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பினார்.

. . . . அதைப் படித்தீர்களா?

. . . . அதைப் படித்தீர்களா?

அவர் பேசவில்லை.

. . . சொல்லுங்கள்!

மெதுவாக அவர் தலையைக் குனிந்தார், அவளுக்குப் புரிந்துவிட்டது.

. . . சியாம் என்றாள் அழுகையுடன். கீழே தழைய முயன்றாள்.

. . . அழாதே, ரமி! அழாதே!

அவர் அவளைத் தூக்கி நிறுத்தினார். . . அழாதே, ரமி! நீ அழக்கூடாது.

. . . . சியாம்! என்னால் இதைத் தாங்கமுடியவில்லை. (அழுகையில் கரைந்தாள்)

அவர் பேசவில்லை.

. . . சியாம். பேசுங்கள்!

அவர் தலை நிமிர்ந்தார். . . நான் என்ன செய்வேன், ரமி! நீ தைரியமாக வாழவேண்டும். அமைதியாக வாழ வேண்டும். இங்கே இருந்தால் மட்டுமல்ல, எங்கே இருந்தாலுந்தான்! அவள் திடுக்கிட்டாள். . . . சியாம்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்றாள்

... நினைப்பதைத்தான் சொல்கிறேன். மனதாரச் சொல்கிறேன்.

... சியாம்!

... பதட்டமடையாதே. ரமி!

... நான் காண்பது கனவில்லையே?

- கனவில்லை, நினைவுதான்! நான்தான் சொல்கிறேன்.

தைரியமாக வாழ வேண்டும். அமைதியாக வாழ வேண்டும். இனிதாக வாழ வேண்டும்.

... சியாம். (அவள் முகத்தைக் கைகளால் மூடினாள்.) நான் ஏன் வாழ்கிறேன். சியாம். நான் இந்தக் கணமே இறந்துவிடக்கூடாதா?

அவர் அவள் தோள்களை மீண்டும் தட்டினார்.

... நீ ஏன் இறக்க வேண்டும் ரமி! வாழ்வு என்பது நமக்குக் கிடைத்துள்ள பரிசு! மகத்தான பரிசு! அதை நாம் வாழ்ந்தே தீரவேண்டும். எந்த விதத்திலாவது வாழ வேண்டும். துக்கமில்லாது அமைதியாக வாழ்ந்தால் நல்லது. இறக்க வேண்டும் என்று மனத்தில் சிறிதுகூட நினைக்காதே! நன்றாக உன்னால் வாழ முடியும். உன் மனத்தைப் பொறுத்ததுதான் வாழ்வு. வாழ்வை இழந்தோம் என்று எப்போதும் நினைக்காதே! எங்கேயாவது எவ்விதத்திலேயாவது புது வாழ்வு உனக்கு இனிதாக பரிணமிக்கும். வாழ்வின் மீது நம்பிக்கை வை! இங்கே இல்லாவிட்டாலும் வேறு எங்கேயாவது அமைதியாக வாழ்ந்துகொள். இனிதாக வாழ்ந்துகொள்!

... சியாம்! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?

... நான்தான் பேசுகிறேன் ரமி!



... உங்கள் மனைவியிடமா இப்படிப் பேசுகிறீர்கள்.

- இதில் என்ன தவறு இருக்கிறது ரமி! நீ ஒரு சாதாரண மனைவியல்ல! என் கண்களுக்கு ஒரு உன்னதமான மனைவி. நீ என்னுடன் வாழ்ந்த ஒவ்வொரு கணத்திலும் அதை நிரூபித்திருக்கிறாய்! அதை நான் உணர்ந்திருக்கிறேன். இதோ, இந்த இரவில்கூட நீ ஒரு நல்ல பெண் என்பதை நிரூபித்திருக்கிறாய். மனத்தில் எதையோ மறைத்து வைத்துக் கொண்டு போலி அன்பை என்னிடம் நீ காட்டவில்லை. அப்படிக் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டதை உணர்ந்ததும் உண்மையை விளக்கி எழுதிவிட்டு வெளியேறுகிறாய். ரமி! நீ நல்லவள்! என் கண்களுக்கு மிக நல்லவள். உன்னை மனதார வழியனுப்ப வேண்டுமென்றுதான் இங்கே வந்து நிற்கிறேன். உனக்கு விடை கொடுக்கத்தான் நிற்கிறேன். என்னை மன்னித்து விடு...

கண்களை அவர் துடைத்துக் கொண்டார். கீழே தலையைக் குனிந்தார்.

... சியாம்.

அழுகையில் உடைந்தாள் அவள். சிறிது நேரம் வரை பேசவில்லை. இயலவில்லை.

... சியாம் ... இவ்வளவு சிறந்த குணம் உடையவரா நீங்கள்! உங்களுக்கா நான் இந்த அநீதி இழைக்கிறேன்? நான் நல்லவளே அல்ல; பாவி.

... பாவி என்று சொல்லாதே ரமி!

... இல்லை. சியாம்! நான் பாவிதான்.

- இல்லவே இல்லை ரமி! மனத்தில் எப்போதோ, எதனாலோ தங்கிவிட்ட நினைவுகள் தவறானவை என்று சொல்லவே முடியாது. அது தவறானால் உலகில்

சுத்தமாயிருப்பவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். இளம் வயசுகளில் நம் மனங்களில் என்னென்னவோ விழைவுகள், ஆசைகள், தோன்றிவிடுகின்றன. இது மனித இயற்கைதான். இந்த விருப்பங்களில் சில நிலைத்தும் நின்று விடுகின்றன. இதை நம்மால் குறை சொல்லவே முடியாது. குறை சொல்லக் கூடாது. அப்படி ஒரு நினைவு உன் மனத்தில் நின்றிருந்தால் அது மிகவும் இயற்கைதான் ரமி! அதைக் குறை சொல்ல முடியாது! குறை சொல்ல நான் தகுதி பெற்றவனும் அல்ல! ஏனெனில் அந்த வயசுகளில் என் மனத்திலும் எத்தனையோ விருப்பங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவை அந்த நாளிலேயே மடிந்துவிட்டன. நிலையாக நிற்கும்படி எந்த நினைவுக்கும் என் வாழ்வில் முக்கியத்துவம் இல்லாது போய்விட்டது. என் வாழ்வு அப்படி அமைந்துவிட்டது. உன் வாழ்வு அப்படி அமையவில்லை. அதற்காக என்னால் அதைக் குறை சொல்ல முடியாது. பழைய நினைவு உன் மனத்தை எவ்வளவு பாதித்திருந்தால், நீ இவ்விதம் செய்ய முற்படுவாய் என்பதை நான் அறிவேன் ரமி! கவலைப் படாதே. உன்னை நான் தவறாக நினைக்கவில்லை. உண்மையில் மன இயல்புகளை ஒருவன் அறிந்தவனாக இருந்தால். இதைத் தவறாகவே நினைக்கக்கூடாது.

. . . சியாம் என்று இடைமறித்தாள். அவள். . . ஏற்கனவே என் மனத்தில் வேதனை நிறைந்திருக்கிறது. இப்போது உங்கள் பேச்சு என்னை மேலும் துன்புறுத்து கிறது சியாம்! நான் ஏன் இந்த ஜென்மம் எடுக்க வேண்டும்?

- ரமி. . . ரமி. . . அழாதே! நீ என் மனைவியானாலும் ஒரு தனி ஜீவன். சமயங்களில் நீ ஒரு குழந்தையாகக்கூடத் தோன்றுகிறாய்; நீ எதற்குமே கவலைப்படாதே! என்னைப் பற்றிக்கூட கவலைப்படாதே! மனமில்லாமல் ஒரு வாழ்வை



நீ வாழ விரும்பவில்லை. நானும் அதை ஆமோதிக்கிறேன். நானே ஆமோதிக்கும்போது நீ ஏன் கவலைப்படுகிறாய்? தைரியமாகப் போய் வா? இந்தா பையை சரியாக வைத்துக் கொள். . . பையில் கனமில்லையே! எடுத்துக் கொண்டதெல்லாம் போதுமா!. . .

அவள் பெரிதாக ஒருதரம் விம்மினாள். . . சியாம்! தயவுசெய்து மேலும் இது மாதிரி பேசாதீர்கள். என்னால் தாங்கமுடியவில்லை என்றாள். பிறகு விசிக்க ஆரம்பித்தாள். நேரம் ஓடியது. ஒரே மௌனம் அங்கே நிலவியது. சியாம் அவளை இரக்கத்துடன் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார்.

நாழிகை சென்றது. விம்மலுடன் அவள் திரும்பினாள்.

- சியாம்!

- என்ன ரமி,

- ஒன்று கேட்கட்டுமா?

- கேள்.

- நான் எங்கே போகிறேன், எதற்காகப் போகிறேன், என் பழைய வாழ்க்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பவில்லையா?

- ஏன் தெரிந்துகொள்ள வேண்டும். ரமி! உன் முடிவு மட்டும் தெரிந்தால் போதாதா? மற்ற விவரங்களை வேறு தெரிந்து கொண்டு துக்கப்பட வேண்டுமா?

- நீங்கள் துக்கப்படுவீர்களா, சியாம்?

. . . மாட்டேனா ரமி! விவரங்கள் தெரிந்தால் என் மனம் மேலும் வருத்தமடையாதா? உன்னிடம் நான்

என்னதான் சமாதானம் சொல்லிவிட்டாலும், ஒரு நல்ல மனைவியை இழந்ததற்கு நான் வருந்தமாட்டேனா, ரமி!

- சியாம்!

... ஆமாம், ரமி! நீ போய்விட்டால் நான் துடிப்பேன், வருந்துவேன், கண்ணீர் விடுவேன், உன் நினைவிலேயே வாழ்வைக் கழிப்பேன். ஏனெனில் நீ அவ்வளவு நல்ல மனைவியாக இருந்தாய்! என் வாழ்வை இன்பத்தால் நிரப்பினாய். நீ எனக்களித்த இனிமைகளுக்காக உன்னை வாழ்நாள் முழுதும் நினைத்திருப்பேன் ரமி! இது உறுதி!

... சியாம். (அவள் குரல் கதறியது)

... வருந்தாதே ரமி. என் துக்கத்திற்காக நீ வருந்தக் கூடாது. வாழ்க்கைப் பிரயாணத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் உன் மனத்திலிருந்து நான் இறங்கிவிட்டேன். அவ்வளவுதான் ரமி.

- இல்லை சியாம்! என் மனத்திலிருந்து இறங்க வில்லை. உங்களை இறக்கவுமில்லை. உன்னதமான பீடத்தில் இருக்கிறீர்கள்.... சியாம்! நீங்கள் உன்னதமானவர்.

கதறியவாறு அவள் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டாள், - சியாம், சியாம் என்று தேம்பியவாறு கீழே சாய்ந்தாள்.

* * *

## 22

ரமி கீழே சாயும்போது சியாம் பிடித்துக் கொண்டார். மயங்கிவிட்டாள் என்று நினைத்தார். மார்பு மீது சாய்த்துக் கொண்டார். என்ன செய்யலாம் என்று



யோசிப்பதற்குள் அவள் கண்கள் மெள்ளத் திறப்பது தெரிந்தது. மெதுவான சுவாசங்களுடன் அவள் எழுந்தாள்.

நேரம் சென்றது.

- ரமி என்றார் அவர்.

கலக்கத்துடன் அவள் திரும்பினாள். பேசவில்லை. கண்களை மூடியவாறு அப்படியே நின்றாள்.

- ரிக்ஷாவை அழைக்கவா?

- எதற்கு?

- புறப்பட வேண்டாமா?

அவள் தலை குனிந்தாள், உதடுகளை லேசாக அசைத்தாள்,

- என் பிரயாணம் முடிந்துவிட்டது என்றாள்.

சியாம் திடுக்கிட்டு அவளைப் பார்த்தார்.

- ஆமாம், சியாம். வீட்டை விட்டு இவ்வளவு (சிறிது) தூரந்தான் பிரயாணம் செய்தாலும், மனத்தில் வெகு தூரம் செய்துவிட்டேன். வாருங்கள் என்றாள்.

மெள்ள நடந்து வராந்தாவை நோக்கிப் போனாள். சியாம் அவளைப் பின் தொடர்ந்தார்.

படிகள் ஏறியதும் நின்றாள். - சியாம் என்று சொல்லித் திரும்பினாள்.

- என்ன?

- வீட்டுக்குள் நான் போகலாமா? உங்கள் அனுமதி எனக்குக் கிடைக்குமா?

- ஏன் ரமி இப்படிக் கேட்கிறாய்? (அவர் குரல் கரகரத்தது). நீ இங்கே இருப்பதானால் இந்த வீடு எவ்வளவு சந்தோஷப்படும் தெரியுமா?

அவள் நகரவில்லை. அவரது கைகளைப் பற்றினாள். கண்களில் நீர் சலசலத்து வந்தது - என்னை மன்னியுங்கள் சியாம் என்னை மன்னியுங்கள் என்று விம்மலோடு கூறினாள். மீண்டும் அவர் கைகளில் மயங்கி விழுந்தாள்.

இரண்டு மூன்று தினங்கள் வரை நரேன் ஒரே கலக்கமாக இருந்தான். உள்ளூர ஏதோ அரித்துக் கொண்டிருந்தது. ஒரு மாற்றத்தை ஆவலுடன் எதிர் பார்த்து அது இல்லாமல் போனதின் நிராசை அவனைப் பெரிதும் பாதித்தது. எதிலும் நினைவு ஓடாமல் பிரமை பிடித்தவன் போல் இருந்தான்.

ஆனால் மனத்தில் ஒரு தெளிவு அந்த நிகழ்ச்சி நடக்காமல் போய்விட்டது. அதனால் மனத்தில் - அப்பாடா என்ற ஒரு உணர்ச்சி. பாரம் நீங்கினாற் போல் ஒரு தளர்ச்சி நடக்க நினைத்து நடவாமல் போனதிலேயே ஒரு அமைதி.

ஒரு வாரமும் சென்றது. ரமியிடமிருந்து ஒரு செய்தியும் வரவில்லை. அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும்? ஒரு வேளை உடம்புக்கு ஏதாவது வந்திருக்குமோ? அல்லது அவளே இந்தப் பிரயாணத்தை நிறுத்தி யிருப்பாளோ?

மேலும் இரு தினங்கள் சென்றன. மூன்றாம் நாள் இரு கடிதங்கள் வந்தன. ஒன்று ஊரிலிருந்து வந்திருந்தது. பிரித்துப் பார்த்தான். அம்மா எழுதியிருந்தாள். அறுவடை சமயத்தில் ஊரில் ஒருவாரம் தங்கிவிட்டுப் போகும்படி எழுதி இருந்தாள்.

அடுத்த கடிதத்தை எடுத்தான். ரமியின் கையெழுத்தைப் பார்த்ததும் பரபரப்பு. அவசரமாகப் பிரித்தான்.

- நரேன்,



ஏமாற்றமா? வாழ்க்கையில் ஏதோ செய்யத்தகாத ஒன்றைச் செய்யத் துணிந்துவிட்டு அது ஏதோ ஒரு விதத்தில் தடைபட்டு நின்றதும் உங்கள் மனத்தில் நிம்மதிதானே ஏற்பட்டிருக்கிறது, இல்லையா?

அல்லது. . .

நான் செய்தது உங்களுக்குத் தீராத துயரத்தைக் கொடுத்துவிட்டதோ?

நரேன், என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களுக்குத் துன்பத்தையே தருகிறேன். உங்களது இந்த நிலைக்கு நானே காரணம். உங்கள் வாழ்வில் குறுக்கிட்ட திலிருந்து உங்களுக்கு நான் நிம்மதி தரவேயில்லை. உங்களுக்கு நான் இழைத்த அநீதிகளை நீக்குவதற்கு நான் பல ஜென்மங்கள் எடுக்க வேண்டும்.

நரேன்! ஒரு நாள் முழுதும் உங்கள் மனைவியாக வாழவேண்டும் என்றீர்கள்; இணங்கினேன்.

அதுவரை மனத்தில் உங்கள் நினைவை அதிகம் வரவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த ஒரு நாள் என் மனத்தை மாற்றிவிட்டது. முற்றிலும் மாற்றிவிட்டது.

அதுவரை கட்டுப்பாட்டோடு இருந்த என் மனம் அன்று முதல் உங்கள்மீது தாவிப் பறக்க ஆரம்பித்தது. வீட்டில் நிலை கொள்ளவே இல்லை. அடைந்தால் உங்களைத்தான் அடைவது இல்லாவிடில் உயிர் துறப்பது என்று நினைத்தேன். பிக்னிக்கில் உங்களைச் சந்தித்ததும் மனத்தை உடைத்துக் கூறினேன். தயக்கம் காட்டிய உங்களை என் திட்டத்திற்கு இணங்க வைத்தேன்.

ஆனால் என்ன நடந்தது?

நம் திட்டப்படி அன்று அதிகாலையில் உங்களைச் சந்திக்கப் புறப்பட்டேன். ஆனால் என் வீட்டுக் கேட்டைத் தாண்டு முன் ஒரு விபத்து நேர்ந்துவிட்டது.

விபத்துதான் அது. மனத்தில் நேர்ந்த விபத்து நரேன்! வாழ்க்கையில் நாமாக உண்டாக்கிக் கொண்டதுதான் சமூகம். அதன் வரையறைகளை எதிர்க்கத் துணிந்தேன். ஆனால் எனக்குக்கூட பலவீன இதயந்தான். எதிர்க்க முடியவில்லை. எனவே அந்த வரையறைகளின் பிணைப்புகள் என்மீது மீண்டும் விழுந்து இறுகியது ஒரு விபத்துதானே.

வாசல்வரை வந்தேன். நின்றுவிட்டேன். மேலே அடி வைக்க முடியவில்லை. சமூகத்தின் பிணைப்புகள் என்னைப் பின்னுக்கு இழுத்தன. மேலே நகர முடியவில்லை. திரும்பி விட்டேன்.

மீண்டும் வீட்டுக்குள் சென்றேன். மனத்திலிருந்து பெரிய பாரம் நீங்கியது போலிருந்தது. கலக்கம் தோன்றினாலும் அப்போது ஏற்பட்ட அமைதி என்னை மிகவும் கவர்ந்துவிட்டது.

நரேன், என்னை மன்னிப்பீர்களா? உங்கள் மனநிலை எனக்குத் தெரியாது. எனினும் உங்களுக்கு நான் இழைத்த கடைசி அநீதிதான் இது என்று தோன்றிவிட்டது. நீங்கள் எவ்வளவு துடித்திருப்பீர்கள். எவ்வளவு விரக்தி அடைந்திருப்பீர்கள் என்று என்னால் உணர முடியும் நரேன். என்னை மன்னிப்பீர்களா?

ஆனால் ஒரே ஒரு ஆசை. அன்று நமது திட்டத்தை நான் நிறைவேற்றாமல் போனது என்னைப் போலவே உங்களுக்கும் ஒரு அமைதியைத் தந்திருக்கக் கூடாதா என்பதுதான் என் ஒரே ஒரு ஆசை. அப்படி உங்களுக்கும் அமைதி ஏற்பட்டிருந்தால் எனக்கு எவ்வளவு நிம்மதியாக இருக்கும்?



பல நினைவுகளை ஒரே சமயத்தில் தன்னுள் நிரந்தரமாகத் தேக்கி வைத்துக் கொள்ளும் சக்தி, நம் மனங்களுக்கு இருக்கும்வரை நான் உங்களை மறக்க மாட்டேன்.

தங்கள்,

ரமி.

கடிதம் அழுகையும் தந்தது. அமைதியும் தந்தது. அதைப் படித்து விட்டுப் பிரமை பிடித்ததுபோல் வெகு நேரம் நின்றான்.

சில தினங்கள் வரை எதுவும் ஓடவில்லை. பிறகு ஒரு நாள் விடுமுறை எடுத்துக்கொண்டான். கிராமத்தை நோக்கிச் சென்றான்.

அப்பாவுக்குச் சிறிது தேவலை; ஆனால் நடமாட்டமில்லை. படுக்கையிலே கிடந்தார்.

இரண்டு நாட்கள் இருந்தான். பிறகு புறப்பட்டபோது இன்னும் சில நாட்கள் இருக்கலாம் என்று அம்மா வற்புறுத்தினாள். அவன் கேட்கவில்லை.

விடைபெற்றபோது அப்பா அவனை ஏறிட்டுப் பார்த்தார். என்னவோ பேசுவதற்குத் துடிப்பு. பேசவில்லை - அப்பா பேசேன், பேசேன் என்று அவன் உருக்கமாகக் கூறினான். அவர் மெதுவாகப் பேசினார்.

- இது என் கடைசி நாட்கள்! ஊருக்கு ஏன் போறே? வேலை உனக்கு எதுக்கு? சொத்து உனக்கு வேணும்கிற அளவுக்கு இருக்கு. நீ ஒரு உத்தமமான பிள்ளைனு இப்போதான் தெரியறது. என் பக்கத்திலேயே நீ இருக்கனும்டா. அவருக்குச் சமாதானங்கள் கூறினான். அடிக்கடி வருகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான். மனத்தில் பலமாய் ஒரு காற்று வீசியது.

தூணைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு கண்ணைத் துடைத்துக் கொண்டு விருட்டென்று புறப்பட்டான்.

சென்னை வந்த பிறகு அந்தச் சூன்யம் அவனைச் சூழ்ந்து கொண்டது. உலகம் எல்லாம் வெறுமை. வெறும் பாழ். யாரும் அவனுக்கு இல்லை. யாருக்கும் அவன் இல்லை.

வெறும் காலை வெளிச்சங்கூட எந்தவித சாரமும் இல்லாமல் இருந்தது. ஆபிஸ், தெருக்கள், ஜனங்கள் யாவரும் வெறும் நிழல்களாகத் தோன்றினார்கள். வெளியே ஆபீஸ் போய் வருவதுகூட அர்த்தமில்லாத இயக்கமாகத் தோன்றியது. சென்னை போய்ச் சேர்ந்த மறுநாள் ஸ்வப்நாவிடமிருந்து கடிதம் வந்தது. அவள் வீட்டுக்கு வரும்படி கெஞ்சி எழுதி இருந்தாள். அவன் பொருட்படுத்தவில்லை.

ஒரு நாள்.

ஆபீசுக்கு ஸ்வப்நா போன் செய்தாள். - நரேன் உங்களை அவசியம் பார்க்க வேண்டும் என்றாள். பிறகு உடம்பில் ஏற்பட்டுள்ள கோளாறுகளையும் நோய் களையும் விவரித்தாள். உம் என்று கேட்டுக் கொண்டே யிருந்தான் நரேன். அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை. ஸ்வப்நா மீது இரக்கமும் தோன்றவில்லை. யாரோ எங்கேயோ தொலை தூரத்தில் கஷ்டப்படுவதுபோல் தோன்றியது.

அடுத்த ஞாயிறு வந்தது. மாலை நான்கு மணி. வாசலில் பஸ்ஸர் ஒலித்தது. கதவைத் திறந்தான். ஸ்வப்நாவைக் கண்டதும் திடுக்கிட்டான்.

தள்ளாடியவாறு அவள் நின்றாள். முகமெல்லாம் வற்றி இருந்தது. கழுத்து வளைவுகளில் எலும்புகள் தெரிந்தன. உதடுகள் துடிதுடிக்க ஆர்வத்தோடும், பயத்தோடும் அவனைப் பார்த்தாள்.



- என்ன என்றான் அவன், உணர்ச்சி எதுவும் இல்லாமல்.

. . . நரேன், உள்ளே வருகிறேன். உங்கள் அனுமதியுடன் வருகிறேன் என்றாள் அவள்.

மெள்ள நடந்து உள்ளே வந்தாள். அவள் உடம்பிலே ஏதோ வலியிருப்பதை அவனால் உணர முடிந்தது.

சோபா மீது அமர்ந்தாள். . . நரேன் என்றாள்.

கட்டிலின் மீது அவன் உட்கார்ந்தான்.

. . . என்னை வெறுக்காதீர்கள், நரேன் என் மீது கோபங் கொள்ளாதீர்கள். என் கடைசிக் காலத்தில் நான் இருக்கிறேன் என்றாள் அவள்.

அவன் பேசவில்லை.

. . . நரேன்; உலகில் எத்தனையோ ஆண்களைச் சந்தித்திருக்கிறேன், பேசியிருக்கிறேன். பழகியிருக்கிறேன். அவர்களில் நிறைப் பேர் உங்களைவிட அழகு மிகுந்தவராக இருப்பார்கள். ஆனால் ஒன்றே ஒன்று! உங்களைப்போல் மன அழகு படைத்தவரை நான் இதுவரை கண்டதில்லை. ஏன்? கேள்விப்பட்டதும் இல்லை. அதனால்தான் நரேன் உங்கள் மீது ஒரு அலாதியான அன்பு எனக்கு ஏற்படுகிறது. அலாதியான கவனம் ஏற்படுகிறது. அது கேவலம், என் உடலை மட்டும் இழுக்கும் கவனம் அல்ல. என் ஆன்மாவையே இழுக்கும் கவனம். அந்தக் கவனம் ஏற்படுவதால்தான் இப்படி உங்களை மறக்க முடியாமல் ஒதுக்க முடியாமல் தவிக்கிறேன். அல்லல் படுகிறேன்.

அவன் நிமிர்ந்தான் - அதற்கு என் அனுதாபம் ஸ்வப்நா என்றான்.

. . . நன்றி நரேன்! உண்மையில் என் வாழ்வில் எந்த ஒரு ஆணையும் நான் கெஞ்சியது கிடையாது. அவர்கள்தான் என்னைக் கெஞ்சுவார்கள். (நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கண்களை இறுக மூடினாள்) ஆனால் நான் கெஞ்சும் அளவுக்கு நீங்கள் மகத்தான மன அழகு படைத்தவர். வாழ்க்கையில் உங்களை அடைவதற்கான என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்யலாம்.

தொடர்ந்து இருமினாள் அவள். முகமெல்லாம் வலியில் கோணியது.

. . . ஸ்வப்நா என்றான் அவன் வருத்தத்துடன்.

. . . நரேன் என்றாள் அவள் பற்களைக் கடித்தவாறு. வலி அவளை எங்கேயோ சுண்டி இழுத்தது. நரேன் (உதடுகளைத் துணியால் துடைத்தாள்) உங்களை. . . உங்களை வாழ்வில் அடையலாம் என்று நினைத்தேன். அது பகற் கனவாகப் போய்விட்டது. நீங்கள் உயர உயரப் போய்விட்டீர்கள் உங்களை அடைய முடியாது என்று தோன்றிவிட்டது. உங்களை அடைவேன் என்ற நம்பிக்கை சிறிதளவு இருந்தால்தான் நான் உயிர் வாழ சம்மதிப்பேன். என் நோய்களுடன் போராடுவேன்.

. . . உங்கள் நோய் குணமாகவில்லையா, ஸ்வப்நா?

. . . குணமா? ஏது? எப்படி ஏற்படும்? சாதாரண நோயல்ல அது. என் கெட்ட வழிகளால் என்னை வந்த அடைந்த நோய் மருத்துவத்தையும் மீறி அது என்னைத் தாக்குகிறது. வஞ்சத்துடன் தாக்குகிறது. சீக்கிரத்தில் உடம்பு ஒரு நோய்க் கூடமாக மாறிவிடும் என்று உணர்கிறேன். நிச்சயமாக உணர்கிறேன். இப்போதே அதன் சின்னங் களைக் காண முடிகிறது.

மீண்டும் இருமல் அவளை உலுக்கியது. மெல்ல அவள் எழ முயன்றாள்.



. . . நரேன், மருத்துவத்தில் என் நம்பிக்கை குறைந்து விட்டது. நான் இந்த நோய்களை அகற்றப் போராட வேண்டுமானால் அதை ஒரு காரணத்துக்காகத்தான் செய்ய வேண்டும். வாழ்க்கையில் உங்களை அடைய முடிவதாக இருந்தால் போராட வேண்டும். இல்லாவிட்டால் ஏன் செய்யவேண்டும்.

எழுந்து நின்றாள்.

பிறகு அவனை நோக்கி நடந்தாள் அருகில் போனாள். அவன் அவளை அதிசயத்துடன் பார்த்தான்.

சட்டென்று அவள் அவனருகே உட்கார்ந்து இமைப்பதற்குள் அவன் தோள் மீது கைகளைப் போட்டாள். பிறகு அவனை முத்தமிட்டபோது - ஸ்வப்நா இது என்ன என்று சட்டென்று விலக்கினான் நரேன்.

அவள் கண்களில் நீர்.

. . . நரேன் இது எனது கடைசி ஆசை! கடைசி ஆசை நரேன்! என்னை விலக்காதீர்கள்.

ஒருவித ஆவேசத்துடன் அவள் பேசினாள்.

- நரேன்! ப்ளீஸ் பர்மிட் மீ டு கிஸ் யு! டு ஹக் யு! டு எம்ப்ரேஸ் யு!

நரேன் அவளைத் தடுத்தான்.

- நரேன்! திஸ் இஸ் மை லாஸ்ட் விஷ். லாஸ்ட் விஷ்! இன் எ ஃப்யூ மோமன்ட்ஸ் ஐ'ல் பி நோ மோர்.

அவன் திடுக்கிட்டான். அவள் கண்கள் செருகிக் கொண்டிருந்தன.

. . . எஸ் நரேன்; லெட் மீ ஹேவ் த லாஸ்ட் எக்ஸ்டஸி.

அவனைக் கட்டிலில் தள்ளினாள்.

. . . ஸ்வப்நா! ஆர் யு க்ரேஸி.

- இல்லை! நரேன்! ஐ ஆம் இன் மை லாஸ்ட் த்ரோஸ்.

அவன் மேலும் திடுக்கிட்டான். அவள் வாயிலிருந்து ஒரு நெடி அடித்துக் கொண்டிருந்தது.

- ஸ்வப்நா! என்றான் நடுக்கத்துடன்.

- எக்ஸ்க்யூஸ்மீ நரேன்! . . (அவள் திணறினாள் அவனது தோள்களை வளைத்துக் கொண்டாள்.) நரேன். நரேன் நான் மாத்திரைகளை விழுங்கி . . யிருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில். . . .

- என்ன மாத்திரைகள்? திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

- தூக்க மாத்திரைகள்? தூக்கம் வருவதற்கு. மீளாத் தூக்கம் வருவதற்கு. நரேன், (நரேன் என்று பிதற்றிக் கொண்டே அவன் உதடுகளைத் தேட முயன்றாள்) நரேன் என்னைக் காப்பாற்ற முயலாதீர்கள். இங்கே வருவதற்கு முன் மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டேன். ஒன்லி எ ஃப்யூ மோமண்ட்ஸ் மோர். தென் ஐ'ல் பி லாஸ்ட் ஃபார் எவர். அவனது உதடுகளைத் தேடி முத்தமிட்டாள். அவளது வெம்மையான சுவாசமும், நெடியும் அவன் முகத்தில் விழுந்தோடியது. அவன் அவளைத் தள்ள முயன்றான்.

அதற்குள் அவள் கண்கள் செருகின. சுவாசம் நிலை மாறியது. உணர்வில்லாமல், அவன் மீது சட்டென்று சாய்ந்தாள்.

* * *



## 23

அது எல்லாம் விரைவில் நடந்துவிட்டது. ஸ்வப்நாவின் மூடிய கண்கள் திறக்கவேயில்லை. நரேன் விலகியிருந்து அவளைப் பார்த்தான். நடந்த சம்பவங்கள் யாவும் கனவாகத் தோன்றின.

அவள் இறந்துவிட்டாளா?

மாத்திரைகளை அவள் விழுங்கியது உண்மையா?

தாமதிக்கவில்லை. சுவாசத்தைப் பார்த்தான். நாடியைப் பார்த்தான். எல்லாம் மௌனம். ஸ்வப்நா உதட்டில் மட்டும் சின்ன முறுவல்! ஆனால் முகம் முழுவதிலும் சோகம். சட்டென்று வெளியே போனான். நான்கு தெருக்களைத் தாண்டி ஒரு டாக்டர். அவரை அழைத்து வந்தான்.

டாக்டர் வயசானவர். ஸ்வப்நாவைச் சோதித்து விட்டு மேலே பார்த்தார். - போயிடுத்து தம்பி! என்பது போல் பார்வை.

பிறகு எழுந்து - இவளுக்கு என்ன உடம்பு? என்று கேட்டார், கையில் தோல் பையைத் தூக்கியவாறு நரேனைப் பார்த்தபோது திடுக்கிட்டார். உறைந்து போய் அவன் நின்று கொண்டிருந்தான். கண்களில் வெறிப் பார்வை.

இப்படி ஒரு உன்மத்தமா?

- டாக்டர் என்று முனகினான் அவன். - அவளைக் கொன்றுவிட்டேன் என்றான்.

டாக்டர் வெலவெலத்தார். அறையை முழுவதும் பார்த்தார். அவனையும் பார்த்தார். மேலே பேசவில்லை. ஒருவித அவசரத்துடன் வெளியே போனார்.

கணங்கள், நிமிடங்கள், மணிகள் ஓடின. அப்படியே நரேன் நின்றான். உணர்வு இருக்கிறதா, இல்லையா?

ஏதோ மணி அடிப்பது குழம்பியவாறு கேட்டது. மெள்ள அசைந்தான். கட்டில் பக்கம் வந்தான். ஸ்வப்நா துவண்டு கிடந்தாள். முகத்தில் சோகம் - அபிரிமிதமான சோகம். கீழே தரையில் மண்டியிட்டு அமர்ந்தான். கட்டிலில் கையை வைத்து அவள் முகத்தைப் பார்த்தான்.

கண்களில் அழுகை! ஸ்வப்நாவின் பழைய அழகு இப்போது இல்லை. ஆனால். . .

மன அழகு என்று அவள் சொன்னது இப்போது அவள் தோற்றத்தில் தெரிந்தது. ஒருவித கனவுபோல், உரு வெளிபோல் அவளது மன அழகு ஒரு தெய்வீக ஒளியுடன் தெரிந்தது. வாழ்க்கை முழுவதும் மற்றவர்கள் முயன்று முயன்று அடையும் மன அழகை அவள் தன் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் சுலபமாக அடைந்திருந்தாள்.

- ஸ்வப்நா! என்றான் மிருதுவாக, - சிலர் தங்கள் மனத் தூய்மைகளை நிரூபிப்பதற்கு மரணத்தையே ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீ அதை ஏற்றுக்கொண்டு விட்டாய். நீ அதை ஏற்றிராவிட்டால் இவ்வளவு மன மாற்றம் பெற்றிருக்கிறாய், மனத்தூய்மை பெற்றிருக்கிறாய் என்பதை நான் உணர்ந்திருக்கவே மாட்டேன். . . - ஸ்வப்நா, ஸ்வப்நா என்று முனகினான்.

பல மணி நேரங்கள் அவன் எதுவும் செய்யவில்லை. சன்னல் அருகே ஒரு நாற்காலியில் அமர்ந்து வெளிப் புறத்தை வெறுமையாகப் பார்த்தான். அடிக்கடி அவளது சோகமான முகத்தையும் பார்த்தான்.

- நான் அவளைக் கொன்றுவிட்டேன். இதயத்தில் தாமாக எழுந்த வார்த்தைகள் அவை. எவ்வளவு



உண்மையானவை அவை! அவனது உதாசீனந்தானே அவளைக் கொன்றுவிட்டது? அவளைப் புறக்கணிக்காமல் இருந்திருக்கக் கூடாதா? கடமைக்காக அவளை மனைவி யாகக்கூட ஏற்றிருக்கலாமே? மனத்தில் அவனையே நினைத்திருக்கிறாள்; அவனுக்காகவே மாய்ந்திருக்கிறாள்.

- நான் அவளைக் கொன்றேன்.

அதே நினைவு மீண்டும் மீண்டும் வேகத்துடன் வந்தது. நேரம் செல்லச் செல்ல - கொன்றேன் என்ற நினைவு ஒரு உண்மை போலத் தோன்ற ஆரம்பித்தது. உண்மைதான் அது. அவளது மரணத்துக்கு மறைமுகத் தொடர்பு அவன்தான் என்று நினைத்தான்.

முன்பு சசியைக் கொன்றேன். இப்போது ஸ்வப்நாவைக் கொன்றிருக்கிறேன். முன்பு கொன்றதற்கு சிறை சென்றேன்? இப்போது.

ஒரு கணத்தில் உலகம் ஒரு சிறையாகத் தோன்றியது. சிறைதான். பெரிய சிறை. நிஜச் சிறையில் இருந்த காலத்தில் கூட நிம்மதி இருந்தது. இந்தப் பரந்த சிறைக்குள் வந்த பிறகு நிம்மதி ஓடிவிட்டது. உண்மைச் சிறை இதற்கு எவ்வளவோ மேல்.

மேலும் ஒரு மணி ஓடியது. கடைசியாக எழுந்த போது, அவன் மனம் பெரிதாக மாறியிருந்தது. நான் சிறைக்குப் போகப் போகிறேன் என்று முனகியவாறு எழுந்தான்.

ஸ்வப்நாவின் அருகில் வந்தான். இரவும், தனிமையும், இறந்துகிடந்த அவளது உடலும் அவனிடம் இனம் தெரியாத உணர்ச்சிகளை உண்டாக்கின. பிரமை பிடித்தது போல் நின்றான்.

நான் ஏன் இன்னும் இப்படியே இருக்கிறேன் என்று நினைத்தான். மேலே செய்யவேண்டியதைக் கவனிக்க வேண்டாமா?

தட தடவென்று மாடிப்படிகளில் இறங்கினான்.

அதன் பிறகு அவன் செய்தவை எல்லாம் அவன் சுயநினைவோடு செய்தவையா என்று சந்தேகப்படும்படி இருந்தன.

இரவில் அரவமில்லா நேரத்தில் போலீஸ் நிலையம் ஒன்றில் அவன் நின்றான்.

- சார் நான் ஒரு கொலை செய்துவிட்டேன் என்றான் இன்ஸ்பெக்டரிடம்.

- என்ன?

- ஆமாம், சார்! ஒரு பெண்ணை விஷமிட்டுக் கொன்றுவிட்டேன்!

ஸ்டேஷனில் பரபரப்பு. இன்ஸ்பெக்டர் உடனே விசாரணை தொடங்கினார். எல்லாக் கேள்விகளுக்கும் நரேன் தடுமாறியவாறு பதிலளித்தான். இன்ஸ்பெக்டருக்கு ஆச்சரியம்! நரேன் பாதுகாப்பில் வைக்கப்பட்டான்!

அவன் இப்படிச் செய்வதால் சிறைவாசம் கிடைக்கும் என்று அவனுக்குத் தெரியும். அதைத்தான் அவன் விரும்பினான். ஆவலோடு எதிர்பார்த்தான்.

ஒரு வேளை மரண தண்டனை கிடைத்தால். . .

அதையும் வரவேற்க வேண்டியதுதான். முன்பு கிடைக்க வேண்டியது இப்போது கிடைத்துவிட்டது என்று நினைத்துக் கொள்ளுவேன். அது பெரிய நிம்மதி.

நாலைந்து தினங்கள் வரை போலீசுக்கு சரியான வேலை. ஒரு கேஸ் அவர்கள் மேல் திணிக்கப்பட்டது போலிருந்தது. அது விசித்திரமாகவும் இருந்தது.

கடைசியில் ஸ்வப்னா போலீசாருக்குத் தன் கைப்படவே எழுதிய கடிதம் அவர்களுக்கு கிடைத்தது.



அதில், தானே தன் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் வேறு யாரும் அதற்குப் பொறுப்பாளியல்ல என்றும் எழுதியிருந்தாள். அதைப் பார்த்ததும்தான் போலீசுக்கு மேலும் குழப்பங்கள் ஏற்பட்டன. விசாரணைகள் மீண்டும் தொடர்ந்தன.

முடிவில் நரேன் குற்றவாளியில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டிவந்தது.

ஆறாவது தினம் ரிமாண்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டு வெளியே நரேன் வந்தான்.

வெளி உலகமே இப்போது விசித்திரமாகப் பட்டது. ஜனங்கள், அவர்கள் பேச்சுக்கள், இயக்கங்கள் எல்லாமே வெறுமையாகத் தோன்றின. எதிலும் பற்றோ பாசமோ தோன்றவில்லை. நடந்து கொண்டே வீட்டை அடைந்தான். ஒரு வாரம் வீட்டில் இல்லாததால் தூசியும் புழுதியும் உள்ளே நிறைந்திருந்தன.

கதவைத் திறந்து உள்ளே போனதும் ஒரு கடிதம். அசிரத்தையாக அதைப் பார்த்தான். கீழே குனிந்து எடுக்க கூட மனம் இல்லை.

கண்ணீர் மள மளவென்று வந்தது. எனக்கு என்ன நேர்ந்துவிட்டது? இப்படி எதிலும் பற்று இல்லாமல் இருக்கிறேனே என்று யோசித்தான். அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அரை மணி நேரத்திற்குப் பிறகு கடிதம் இருக்குமிடத்திற்கு வந்தான். குனிந்தபோது ரமியின் கையெழுத்தைக் கண்டதும் திடுக்கிட்டான். அவசரமாக எடுத்துப் பிரித்தான்.

நரேன்,

வேதனையுடன் இதை எழுதுகிறேன். உங்களுக்கு மேலும் வேதனை தருகிறேன்.

என் வாழ்வின் நிலவாய் இருந்தீர்கள். இப்போது அதை நினைத்தாலும் புல்லரிக்கிறது.

விதி என்னை வேறு இடத்தில் ஒதுக்கிவிட்டது. மன வருத்தத்துடன் அந்த வாழ்வை எடுத்துக் கொண்டேன். ஆனால் உங்கள் நினைவு என்னை எரித்து விடவே என் வாழ்க்கையைப் பிய்த்துக் கொண்டு உங்களை வந்தடைய விரும்பினேன். அதிலும் விபத்து ஏற்பட்டுவிட்டது. பின் வாங்கினேன்.

ஆனால், எப்படி உங்கள் நினைவைத் தவிர்க்க முயன்றாலும், அது முடியாது என்று தோன்றிவிட்டது. உங்களைப் பற்றிய எத்தனையோ நிகழ்ச்சிகள், சம்பவங்கள் எல்லாம் மனத்தின் முன் வந்து நிற்கின்றன. என்னை வளைத்துச் சுற்றி என் மனத்தை உன்மத்தமாக்குகின்றன.

முக்கியமாக நீங்கள் இதே ஊரில் எங்கேயோ தனியாக இருந்து வருகிறீர்கள் என்ற நினைவு என்னை எரித்து வருகிறது. தனியாக இருப்பது மட்டுமல்ல; என்னையும் நினைத்துக் கொண்டிருப்பீர்கள் என்ற நினைவை என்னால் தாங்க முடியவில்லை. நரேன், அந்த நினைவை நினைக்கும்போதே உங்களை ஓடி வந்து பார்க்க விரும்புகிறேன். - நரேன், இதோ இருக்கிறேன் என்று ஆர்வத்தோடு கூறி உங்கள் முன் குதிக்க விரும்புகிறேன்.

இந்த நினைவுகள் போகப் போக என் அமைதியைப் பாதிக்குமோ என்று பயப்படுகிறேன். நரேன், என் இனிய நரேன், இந்த மாதிரி பாதிப்புகளால் என் மனம் மீண்டும் சஞ்சலம் அடையுமோ என்று அஞ்சுகிறேன்.

அதனால்தான் நரேன். இந்த முடிவுக்கு வந்துள்ளேன். இந்த ஊரில் இருந்தால் உங்களைப் பற்றிய நினைவால் மேலும் மேலும் துன்புறுவேன் என்று தெரிந்துதான் இதை விட்டுப் போய்விட நினைத்திருக்கிறேன்.



என் கணவரிடம் கேட்டுக் கொண்டு அவர் வேலையில் மாற்றல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தேன். அதுதான் நான் செய்யக்கூடிய ஒரே வழி என்று தோன்றியது.

மாற்றல் கிடைத்துவிட்டது. நாங்கள் இருவரும் வருகிற வெள்ளிக்கிழமை பன்னிரண்டு மணி ரயிலில் பம்பாய் போகிறோம்.

நரேன், உங்களை விட்டுப் பிரிகிறேன் என்றால் அது உங்கள் நன்மைக்காகவும் என் நன்மைக்காகவும்தான். அதை மறவாதீர்கள்.

எனினும் கடைசிமுறை என் கண்களால் மனதார உங்களைப் பார்க்க விரும்புகிறேன். வெள்ளியன்று ரயில் நிலையத்தில் என்னைச் சந்திப்பீர்களா?

கடமைக்காகவே உங்களை
விட்டுப் பிரியும்,

ரமி.

அவன் கண்களில் நீர் வழிந்தது. காலண்டரைப் பார்த்தான். அன்று வெள்ளிக்கிழமை. மணியைப் பார்த்தான் 11-45.

திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான். ஒரு பரபரப்பு. கதவை இழுத்து மூடினான். மாடிப்படிகளில் விரைவாக இறங்கினான். தெருவில் விறுவிறுக்க ஓடினான். அவனது அவசரத்தையும் கோலத்தையும் கண்டு பல பேர் திரும்பிப் பார்த்தார்கள். டாக்ஸியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நாழி ஆகியது. ரயில் நிலையத்திற்குப் பறந்தான்.

ரமி, உன்னைக் கடைசி முறை பார்ப்பேனா? அந்த நினைவு அவனை எரித்தது.

டாக்ஸியின் வேகம் அதிகமாகத் தெரியவில்லை - சீக்கிரம், சீக்கிரம் என்றான்.

நிலையத்தை அடைந்தபோது சரியாக மணி பன்னிரண்டு. அவசரமாக இறங்கினான். பத்து ரூபாயை டிரைவரிடம் விட்டெறிந்து விட்டு ஓடினான்.

கூட்டம்! ஒரே கூட்டம்! ப்ளாட்பாரம் முழுவதும் நெரிசல். ரயில் நகர்ந்து கொண்டிருந்தது. அவனுக்கு ஒரே அழுகை, ஆத்திரம் பரபரப்புடன் கூட்டத்தின் இடையே ஓடினான். ரயிலின் வேகம் அதிகரித்தது. அவனும் ஓடத் தொடங்கினான். வழியில் பிரயாணிகள், அவர்கள் நண்பர்கள், மூட்டை முடிச்சுகள், டிராலிகள், பார்சல்கள் விலகி விலகி ஓடினான்.

பிளாட்பாரம் முழுதும் ஓட்டம், அப்படியும் கடைசிப் பெட்டியைத்தான் பிடிக்க முடிந்தது. எட்டத்தில் போகும் முதல் வகுப்பில் ஒரு தோற்றம். முகம் சரியாகத் தெரியவில்லை. நிழலாகத் தெரிந்தது. அந்தத் தோற்றத்தில் கைகள் மட்டும் அவனை நோக்கி ஆடிக்கொண்டிருந்தன. அது ரமியின் கைதான். அவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் கண்களுக்கு மட்டும் அந்தத் தோற்றத்தின் கூந்தலிலிருந்து ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுவது தெரிந்தது.

வேகத்தை அதிகமாக்கினான். எங்கேயோ தடுக்கியது. கீழே விழுந்தான். மீண்டும் எழுந்து ஓடினான்.

பிளாட்பாரம் முடிந்துவிட்டது; வெறும் தரை வந்தது. மேலும் ஓடினான். அந்தத் தோற்றம் மறைந்து விட்டது. ரயிலின் வேகம் கூடிவிட்டது. அவன் ஓடிக் கொண்டே இருந்தான்.

தடாலென்று ஒரு கல்லின்மீது மோதல். பக்கத்தில் தோண்டப்பட்டிருந்த பள்ளத்தில் சாய்ந்தான். கண் மூடியது. காதுகளில் சிவ்வென்று சப்தம். ஓட்டம் நின்றது; பரபரப்பு நின்றது; எல்லாம் நின்றன.

அரை மணி ஆகியிருக்கும். எழுந்தான். வெட்ட வெளி, வெட்ட வெளிச்சம். உடம்பை உதறினான்.



கண்ணும் முகமும் எரிந்தன. பிரமை பிடித்தவன்போல் சுற்றிவரப் பார்த்தான்.

நரேனின் மனத்தில் நிகழ்வது என்ன? இனி அவன் ஒரு புதிய மனிதனா?

மனத்தில் ஏதோ மாறுதல்! பெரிய மாறுதல்! அதை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. யார் யாரோ மகான் களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்படும் மாறுதல்.

அது மனத்தெளிவா, ஞானமா, விரக்தியா? எல்லாம் கலந்த ஒரு உணர்ச்சியா?

அவன் மாறிவிட்டான். ரமியும், ஸ்வப்நாவும் அவன் மனத்தைப் புடங்களாக எரிந்துவிட்டார்கள். அந்த புடங்களின் வெம்மையால் வாழ்வைச் சாதாரணமாக, மிகவும் சாதாரணமாக வெறுப்பில்லாமல் விருப்பில்லாமல் நோக்கும் அரிய சக்தி அவனுக்குக் கைகூடிவிட்டது. இனி ரமிகளும், ஸ்வப்நாக்களும் அவனை வாழ்வில் எதுவும் செய்துவிட முடியாது. எல்லாவற்றையும் கடந்த ஒரு நிலைக்கு அவன் வந்துவிட்டான்.

அவனது வாழ்நாளை, அவன் இனி எப்படிக் கழிக்கப் போகிறான்?

அவன் மனத்தின் அடித்தளத்திலிருந்து ஏதோ ஒரு உருவம் வெளியே வர எப்போதும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதை நினைக்கும் போதெல்லாம், அவன் கண்கள் நீராகிக் கொண்டிருந்தன.

ஆமாம், மீனுதான் அந்த உருவம். அவளுக்காக அவன் வாழலாம் ராம்நகரில் வாழ்ந்து கொண்டு அவளுக்கு உதவி புரியலாம். அவளை ஒரு இனிய சகோதரியாகப் பாவித்து அவளது அமைதிக்காகவே, பாடுபடலாம் ஒரு வேளை அதன் மூலம் அவனுக்கும் ஒரு நிம்மதியும் ஏற்படலாம்.

அவன் வாழ்வில் அவனுக்கு அமைதியும் ஆறுதலும் தரத்தக்க ஒரே வழிதான் அது.

அவன் அதைத்தான் இனிப் பின்பற்றுவான்.

ஆனால் அவன் எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும் ஒரு ஊதாப்பூ அவன் மனத்தில் கண் சிமிட்டிக்கொண்டேயிருக்கும். அதன் குளுமையான ஒளியில் அவனுக்கு ஒரு சோகமான சுகம் இருந்து கொண்டேயிருக்கும்.

★

36391 / 6384216